Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 127 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஆகஸ்ட் 15 2026




புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்






































## விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


# ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது **https://Thuyarpakirvu.com** இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு

**437 345 4203**

thuyarariviththal@gmail.com

**Thuyarpakirvu.com**

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**உண்மையில் எமது போராட்டத்தின் வெற்றி உலகத்தின் கையில் தங்கியிருக்கவில்லை; எமது வெற்றியானது எமது கையில், எமது பலத்தில், எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியிருக்கிறன்றது. நீதியும் நியாயமும் எமது பக்கமாக இருந்தால் மட்டும் போதாது; நாம் வலிமை பெற்றவர்களாக இருக்கவேண்டும்; தளராத உறுதி பெற்றவர்களாக இருக்கவேண்டும்.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.com

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# களத்தில் ஒரு காட்டாறு

## லெப். கேணல்

# பரிபாலினி




அன்றைய நாள், நாம் எதிர்பார்த்ததிற்கு முற்றிலும் மாறான களநிலைமை அது. எதிரி உசாரடைந்து, எமது நகர்வுகளையே அவதானித்துக்கொண்டிருக்க வேண்டும். நாலா புறமும் கவச வாகனங்களையும், கனரக ஆயுதங்களையும் நிலைப்படுத்திக் காத்துக் கிடந்தவரின் குகைக்குள் புகுந்த எமதணிகளை நோக்கி வாய் பிளந்தன இரும்புக் குழல்கள். எங்கும் நெருப்பு மழை, அந்த அக்கினிக் குழம்புகளுக்கு மத்தியில் இருந்து ஒலித்த அந்தக் குரல் தொலைத் தொடர்புக் கருவியூடாக எல்லோர் செவிகளிலும் ஒலித்துக் கொண்டிருந்தது. நீண்ட நெடு நேரம், அந்தத் தன்னம்பிக்கையான, உறுதியான, தெளிவான குரலை ஒலிபரப்பிக் கொண்டிருந்த தொலைத் தொடர்புச் சாதனம் அமைதியானது.

“பரி... பரி... பரி...”
“பரி... பரி...”

என அனைத்துக் கருவிகளும் அலற அந்தப் பெயருக்குரியவள், அந்தக் குரலுக்குரியவள் அடங்கிப் போனாள்.

1990 காலப்பகுதியில் பயிற்சிப் பாசறைகள் நோக்கி படையெடுத்த பெண்களில் இவளும் ஒருத்தி. எப்போதுமே அமைதியாகக் காணப்படும் இவள் எல்லோராலும் ‘நல்லூர் நோனா’ என அழைக்கப்பட்டவள். மணியடித்தால் சாப்பாட்டிற்கு முன்னின்று, வகுப்புக்குப் பின்நின்று, பயிற்சிக்கு முன்னின்று லெப். கேணல் மாதவியால் புடம் போடப்பட்டு, பரிபாலினியாக வெளிவந்த இவள் 1992 முற்பகுதி வரை பலாலி, பத்தமேனி, தட்டுவன்கொட்டி என பல முன்னணிக் காவலரண்களிலும், வரலாற்றுச் சிறப்புமிக்க ஆகாய கடல்வெளிச் சமர், மின்னல் எனவும் பல சிறு சிறு சண்டைகளிலும் ஒரு போராளியாகவே தடம் பதித்தவள்.

1992 ஆரம்பகாலம், எமது இதயபூமியான மணலாற்றை எதிரியின் ஆக்கிரமிப்புக்களிலிருந்து பாதுகாக்கும் பணியில் பெண் போராளிகளையும் ஈடுபடுத்துவதற்கென புதிய அணியொன்று உருவாக்கப்படுகின்றது. பத்தே பத்துப் போராளிகளுடனும், இருநூற்றைம்பது பயிற்சி எடுக்காத புதிய போராளிகளுடனும் மணலாறு சென்ற அந்த அணி, அவர்களைப் பயிற்றுவித்தே தமது பணியைத் தொடங்க வேண்டும். பொறுப்பாகச் சென்றவருக்கு தன்னுடன் வந்த பத்துப் போராளிகளும் என்ன நிலையில் இருக்கின்றனர் என்பதே தெரியாது. அவர்களில் பரிபாலினியும் ஒருவர்.

இவள் அங்கே பயிற்சிக்கான துணை ஆசிரியராக நியமிக்கப்படுகின்றாள். பயிற்சிக்கான ஒழுங்குகள் செய்து, பயிற்சியும் ஆரம்பமாகி ஆறே ஆறு நாட்கள்.

கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து நாயாறு வரை மும்முனைகளில் முன்னேறி கரையோரப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதன் மூலம், தமிழர் தாயகத்தை துண்டாடுவதுடன், வடக்கிலிருந்து கிழக்கிற்கான எமது விநியோகப் பாதையைத் துண்டிப்பதற்காகவும், மூவாயிரம் சிங்களப் படைகள் ‘கஜபார’ கட்டம் ஆறு (ஒப்பரேசன் சிக்கர் கஜபார) என்ற பெயருடன் பெரும் எடுப்பிலான நகர்வை மேற்கொண்டபோது, வழிமறித்து நடந்த சண்டைக்குக்காவும் குழுவாகச் செல்லத் தயாராகின்றனர். எல்லோருக்குமே காடு புதிது, புதிய போராளிகள் வேறு. எவருக்குமே ‘கொம்பாஸ்’ தெரியாது. மூன்று நாட்களில் ‘கொம்பாஸ்’ பயின்று, பரிபாலினியுடன், இன்னுமொரு போராளியுடனும் புதிய போராளிகள் களம் இறங்கினர்.

ஆறு நாட்களே பயிற்சி எடுத்த போராளிகள், காட்டு அனுபவங்களும், சண்டை அனுபவங்களும் குறைந்தவர்கள். சீனத்தயாரிப்பு டாங்கிகளும், கவச வாகனங்களும், பீரங்கிகளும், விமானங்களும், உலங்கவானூர்திகளும், கடல் பீரங்கிப் படகுகளும் குண்டு மழை பொழிய, அந்த அடர்ந்த காடுகளுக்கூடாகவும், திறமையாகத் தனது பணிகளைச் செய்து, ஆண்டாள் என்ற ஒரு புதிய போராளியை இழந்து, அவர்களின் பணிக்கு பரிசாகக் கிடைத்த ஐந்து ஏ.கே.யுடன் ஒரு ஏ.கே.எல்.எம்.ஜீ உடனும் முகாம் திரும்பியது அந்த அணி. பரிபாலினியின் சந்தோசத்திற்கு அளவேயில்லை.

‘பாத்தீங்களா, நாங்கள் சண்டைக்குப் போகாமல் சப்பிளைக்குப் போயே அஞ்சு ஏ.கே.யும், ஒரு எல்.எம்.ஜீ.யும் எடுத்திட்டம்’ என்று சொல்லிச் சொல்லி துள்ளித் திரிந்தாள். அன்று ஆறு நாட்களே பயிற்சி எடுத்த அந்தப் போராளிகளின் முதுகெலும்பாக நின்று செயற்பட்டவளே இவள்தான்.

எந்தவொரு இக்கட்டான நிலையிலும் சற்றேனும் பதட்டம் இருக்காது இவளிடம். அன்றிலிருந்து இன்றுவரை இது அவளிடம் ஒன்றிவிட்ட ஒன்று. இந்தப் பழக்கம்தான் பொறுப்பாளர்களிடம் பரிபாலினியை இனங்காட்டியது.

இரண்டரை மாதப் பயிற்சிக்காலங்களில் துணைப் பயிற்சியாசிரியராக இருந்தது மட்டுமல்லாமல், முதல் பயிற்சியிலேயே எதிரியை எப்படிக் குறிபார்த்துச் சுடுவது என்பதைப் பயிற்றுவித்து, இடையிடையே நடக்கும் பதுங்கித் தாக்குதல்களுக்கு அவர்களுடன் சென்று மீண்டு, மீண்டும் பயிற்சியைத் தொடர்ந்து... ஐந்து இராணுவத்தைத் தாக்குவது என்றாலும் அதற்கும் இவர்கள் சென்று... எண்ணிக்கையில் அடங்காத பதுங்கித்தாக்குதல்கள்.

“தலைவர் அடிக்கடி சொல்லுவார், ‘ஆயிரம் முயல்களை ஒரு சிங்கம் வழி நடத்தலாம். ஆயிரம் சிங்கத்தை ஒரு முயல் வழி நடந்த ஏலாது’ என்று. அதேமாதிரி புதிய போராளிகளைக் கொண்டு செய்யிறது என்பது, அதுவும் காட்டுச் சண்டை, சண்டைச் சூழலே பிள்ளைகளுக்குத் தெரியாது. பரிபாலினியில் இருந்த நம்பிக்கையில்தான் முழுப் பிள்ளையளையும் விடுறம்” என்றார் மணலாற்றின் ஆரம்பகால மகளிர் பொறுப்பாளர் சீத்தா அவர்கள்.

பயிற்சிகள் முடித்து இரு அணிகளாகப் பிரிக்கப்பட்ட படையணியில் ஒரு அணி பரிபாலினியின் தலைமையில் களம் இறங்குகின்றது. நூறு பேர் கொண்ட ஒரு அணிக்குப் பொறுப்பாளராகவும், அதே நேரம் இருநூறு பேரைக் கொண்ட முழு அணிக்கும் துணைப்பொறுப்பாளராகவும், நியமிக்கப்பட்ட பரியின் நிலை தர்மசங்கடமாகிப் போனது. தான் சண்டைக்கு முதலில் போக முடியாதே என யோசித்தவள், ஐம்பது பேர் கொண்ட அணியைப் பொறுப்பெடுத்து முதலில் நகர்ந்துவிட்டாள்.

‘ஒப்பரேசன் செவன்பவர்’ (ஏழு சக்திகள்)

**‘ பாதை நெடியது,**
**பயணம் கொடியது,**
**என்றாலும் இவர்கள் இலக்குத் தவறாது**
**தூரம் கொஞ்சம் அதிகம்தான்,**
**ஆனாலும் கைகளிற் கிட்டாத தொடுவானமல்ல.**
**தோள்களிற் கிடப்பது சுமையல்ல வெளிச்சம் தரும் கருவி.**
**பாதை பிசகாது,**
**சூரியத்தலைவன் வழிகாட்டி.**
**இடையில் இருள் வந்தாலும்...**
**தளர்ச்சியில்லை**
**கைகளில் வெளிச்சம் இருக்கின்றது’**




முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து முல்லைத்தீவு கொக்கி ளாய் பிரதான வீதியூடாகச் செம்மலை, குமுழமுனை ஆகிய பகு திகளை நோக்கி முன்னேறிய இராணுவத்தினருக்கு உதவி யாக செம்மலை, அளம்பில் கடல் பிரதேசங்களூடாக தரை யிறக்க முனைந்த இராணுவத்தினரை, கரையோரம் நின்ற பரிபாலினியின் அணி எதிர்கொண்டது. ஒரே நேரத்தில் மூன்று கடல்கலங்கள் சரமாரியாக குண்டுகளை வீசியவாறு கரையை நோக்கி வருவதும், இவர்களின் துப்பாக்கிகள் சடசடக்க பின் வாங்குவதும் பின் வருவதும் போவதும், வருவதும் போவது மாகத் திணறிய கலங்கள் இறுதியில் ஓடியேவிட்டன.

மணலாற்றின் வரலாற்றுச்சமர்களில் பெரும் எதிர்ச்சமரான இந்தச் சமரில், எதிரியின் கடல்வழி விநியோகத்தைத் தடுத்து நிறுத்திய பெரும் பணியில் எமது இன்றைய தளபதியான இவளின் பங்கும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே இருந்தது.

அன்றொருநாள் சண்டை முடிந்து அனைத்து அணிகளும் திரும்பிக்கொண்டிருந்தது. பரியைக் காணவில்லை. 'எமது எதிர்காலத் தளபதியை இழந்து விட்டோமா' என எல்லோர் மனங்களும் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது. 'பரிபாலினி வீரச்சாவாம்' என்ற செய்தியும் வந்துவிட்டது. ஆனால் மனங்கள் மட்டும் ஏற்க மறுத்தது. காயமடைந்தும், வீரச்சா வடைந்தும் வரும் ஒவ்வொருவரையும் ஓடி ஓடிப் போய்ப் பார்த்தார்கள். ஒவ்வொரு முறையும் ஏமாற்றம். மனமும் சோர்ந்து போய்க் கொண்டிருந்த அந்தக் கணத்தில் நான்கு பேர்களின் தோள்களில் ஒரு 'ஸ்ரெச்சர்' ஒரு நப்பாசையுடன் ஓடிப்போய்ப் பார்த்தால் பரிபாலினி. சீராக மூச்சு வந்து கொண் டிருந்தது. உயிர் பிரியவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டோம். கால்கள், வயிறு, ஒருபக்கத் தாடை எனப்பிய்ந்து தொங்கக் கட்டுப்போட்டபடி... பல மைல்களுக்கப்பால் உள்ள கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமை நோக்கி நடையாய் நடந்து, பல இராணுவ அரண்களை தாக்கியழித்த அந்தச் சமரில் இவள் படுகாயமடைய, சிலர், 'வீரச்சாவு' எனக்கூற, சிலர் 'இல்லை'யென, 'இவ்வளவு தூரம் கொண்டு போகிறதுக் கிடையில் ஆள் முடிஞ்சிடும்' என்று இன்னொருவர் சொல்ல, அவள் வளர்ந்த குஞ்சுகளின் தோள்களில் மூச்சுப்பேச்சற்ற நிலையில் எதுவுமே அறியாதவளாய் வந்து சேர்ந்தாள்.

காயங்கள் ஆறி, மீண்டும் கானகம் வந்தவளை எல்லோருமே கிண்டலடிப்பார்கள் அவளின் ஆறு பற்களையும் இழந்த வாயைப்பார்த்து. இவளுக்கும் சிரிப்பு வரும். ஆனால் சிரிக்க முடியாதவளாக கைகளால் மூடி சிரமப்பட்டுச் சிரிப்பாள்.

தொடர்ந்தும் கானகம் அவளைக் களம் நோக்கி அழைத்தது. கடும் பயிற்சி, கோட்டைக்கேணிக்கும் கொக்குத்தொடு வாய்க்கும் இடையில் ரோந்துவரும் இராணுவத்தினரை மறைந்திருந்து தாக்க வேண்டும். அந்த முகாமிலிருந்து இந்த முகாமுக்குக் கையசைத்தால் தெரியும். இரண்டு முகாம்களுக் கிடையில் உள்ள வெட்டை வெளியில் புல்லோடு புல்லாக இவர்கள். 8.30 மணிக்கு அவ்வழியால் வரும் இராணுவம் வர வில்லை. இவர்கள் திரும்பவும் வழியில்லை. இருட்டிய பின்னர் தான் அசையலாம். அதிகாலை 4.00 மணிக்கு நிலையெடுத் தவர்கள் 'குளுக்கோஸ்' பக்கற்றும், தண்ணீர் பக்கற்றும்தான் ஆளுக்கொன்று கொண்டு சென்றார்கள். அதுதான் அன்றைய சாப்பாடு. மாலை 5.00 மணி அவர்கள் காத்துக்கிடந்த இரைகள் கிடைத்தன. நல்ல சண்டை, கைப்பற்றிய ஆயுதங் களுடன் திரும்பினர்.

"மணலாற்றிலிருந்து வந்த இவ்வளவு வருடங்களாகியும், இன்றும் சகபோராளிகளிடம் பரிபாலினியின் செயற்பாடுகளை குறிப்பிட்டுக்கொள்கிறேன் என்றால், அதற்குக் காரணம் அவரின் திறமையான செயற்பாடுகள்தான்" என்றார் முன்னாள் மணலாறு மாவட்டத் துணைத் தளபதி பாண்டியன் அவர்கள்.

அடிக்கடி பதுங்கித் தாக்குதல்கள், பதுங்கித் தாக்குதல்கள் என விரிந்த களம் இதயபூமி – 01 உடன் அவளுக்கு முற்றுப்பெற்றது.

'பரி அக்கா உங்களை பிள்ளைகளுக்கு வகுப்பு எடுக்கட்டாம்' என்றால் அந்த ஏரியாவுக்குள்ளேயே பரிபாலினியைக் காண முடியாது. படிப்பதென்றால் பச்சைக்கள்ளி. அப்படிப்பட்டவள் கல்விப்பிரிவுக்கென அனுப்பப்படுகிறாள். அந்தக் காலப்பகுதியில் தான் மணலாறு மாவட்டச் சிறப்புத் தளபதி லெப். கேணல் அன்பு வீரச்சாவடைய பரிபாலினி அழுத அழுகை. அன்றுதான் அவள் அழுததை எல்லோரும் பார்த்திருக்கின்றோம். அவரின் வித் துடலுக்குக்கூட அஞ்சலி செலுத்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இன்றுவரை அவளுக்கு அது அழியாத கவலை.

இவளுக்கு ஒரு அறை, ஒரு மேசை, கதிரை, அறை எப் பொழுதுமே பளிச்சென்று இருக்கும். மேசையில் ஒழுங்காக உறைகள் இட்டு அடுக்கப்பட்ட கொப்பிகள், நேரே சுவரில் நாளி தழில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட அன்பண்ணையின் படம் ஒவ்வொரு நாளும் முற்றத்தில் இருந்த மல்லிகையில் பூக் கொய்து படத்துக்கு வைத்து அஞ்சலி செய்து, அவளை போரி யலில் வளர்த்த ஆசான் அல்லவா லெப். கேணல் அன்பு.

> **"என்ர சண்டை அனுபவங்களைக் கொண்டு துர்க்காவுக்கு உதவியா நின்று, படையணியை நன்றாகவளர்த்து, அண்ணை பிள்ளையள எப்படியெல்லாம் வளர்க்க வேணும் என்று நினைக்கிறாரோ அதற்கெல்லாம் நாங்கள் செயலுருவம் கொடுக்க வேணும்"**

இந்தக் காலங்களில் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும் என்று இவர்களுக்குக் கட்டளை. முகாமில் ஒரே 'கஸ்புஸ்'தான். அரை வாசித்தமிழ் அரைவாசி ஆங்கிலம்.

'சிஸ்ரர் நவணி... வோட்டர் டாங்..' நிரப்பும்படி சைகையில் முடிப்பாள் பரி.

பூச்செடிகளுக்கு தண்ணீர் உற்றும் போது யாரும் வந்து 'என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டால் பரி ஒருமுறை சுற்றும் முற்றும் பார்த்து முழுசிவிட்டு, 'பிளவர் நீ வோட்டர்' மிகுதி சைகையில்.

கலை நிகழ்ச்சி என்றால் பரிக்கு சரியான விருப்பம். ஆனால் மேடையில் ஏறி எல்லோர் முன்னாலும் செய்வதென்றால் பயம், கூச்சம் இங்கேயோ செய்துதான் ஆகவேண்டும் என்ற கட் டாயம். என்ன செய்வது? அன்று மேடை ஏறிய பரி எல்லோரை யுமே வாய்பிளக்க வைத்தாள். "அதிசயத்தின்மேல் அதிசயம். பரிபாலினியா இப்படி நடித்தாள்" என்று அனைவருமே ஆச் சரியப்பட்டனர். ஏனென்றால் இந்தப் பரிக்குள் இப்படியொரு கலைத்திறன் இருக்குமென்று எவருமே நம்பவில்லை.

ஒருநாள் இவர்களின் தமிழ் ஆசிரியர் எல்லோரையும் தூய தமிழில் ஆக்கம் ஒன்று எழுதும்படி கூறினார். பரியின் பெரும் முயற்சியில் சிறுகதை ஒன்று உருப்பெற்றது.

அதை இன்னொருத்தியிடம் வாசிக்கும்படி கொடுத்தாள், அவ ளும் இலேசுப்பட்டவள் அல்ல நடிப்பதென்றால் அவளுக்குக் கை வந்த கலை. பரியின் சிறுகதையை ஏற்ற இறக்கங்களுடன் பெரிதாக வாசிக்கத் தொடங்கினாள்.

"அந்தப் பெண்ணின் கண்களிலிருந்து சிறுநீர் வழிந்தது"

எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர். பரிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. 'ஏனப்பா, ஏனப்பா என்ன எல் லோரும் சிரிக்கிறீங்கள்' என்றவளிடம் 'சிறுநீர் என்றால் என் னப்பா?' 'சிறிய நீர், சொட்டு நீர்' என விளக்கியவள் தன் பிழை விளங்கவும் எல்லோருடனும் சேர்ந்து தானும் சிரித்து... சேர்ந்து படித்து... போராளிகளுக்கு வகுப்பெடுத்து... புதிய போராளிகளை இணைத்து...

வெளியில் சிறுபிள்ளைத் தனத்துடன் காணப்படும் இவளிடம் முழுமையான ஒரு ஆளுமைத்தன்மையும், தன்னம்பிக்கை யும் இன்னும் இன்னும் நிறையவே செய்ய வேண்டுமென்ற வெறித்தனமும் நிறையவே இருந்தது. இவளின் உருவத் திற்கும், செயல்பாடுகளுக்கும் எந்த ஒரு சம்பந்தமுமே இல்லை என்பது மாதிரியான ஒரு தோற்றம். இவளின் செயல்பாடுகளின் வெற்றிகளே இதற்கான சான்றுகள்.

மீண்டும் பரிபாலினியின் சண்டைக்களங்கள் விரியத் தொடங்கியது.

1996 இல் புதிதாகப் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளி வந்த ஒரு அணிக்குப் பொறுப்பாளராக, அரசியல்துறை மகளிரணியாக... அந்த அணி களம் இறங்குகின்றது. அவர்கள் எதிர்கொண்ட சிக்கல்களோ எண்ணிலடங்காதவை. நீண்ட காலமாகச் சண்டைகளில் பங்குபற்றாது வெளி வேலைகளில் ஈடுபட்டிருந்த போராளிகள். இவர்களுடன் புதிய போராளிகள், இவர்கள் நல்லமுறையில் சண்டை பிடிப்பார்களா? என்ற கேள்வி ஏனைய தாக்குதல் அணிகளுக்கு எனினும் 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கைக்கு எதிராக நின்று போரிட்டது இவர் களின் அணியும்.

பரந்தன் – ஆனையிறவு மீதான தாக்குதல் ஒன்றுக்கு பல அணிகள் பயிற்சி எடுத்தது. யார் யார் எந்தப் பகுதிகளுக்கென அவ் அணிகள் பிரிக்கப்பட்டபோது, ஒரு அணிக்கு உதவி அணி யாக இவர்கள் பிரிக்கப்பட்டனர். ஆனால் இவர்களின் அணியை அவர்கள் "தமக்கு வேண்டாம்" எனக்கூறிவிட்டனர். பரிபாலினி, மேஜர் நித்தியா, கப்டன் ஜெயஜோதி உட்பட அனைத்துப் போராளிகளும் இறுகிப் போயினர். "இவங்களுக்குச் செய்து காட்டுறம்" என்ற சாவாலோடு களமிறங்கியவர்கள் சண்டை யிட்டனர். காலையிலேயே விழுப்புண்ணடைந்த பரிபாலினி மாலை வரை களத்திலிருந்து வெளியேற மறுத்துவிட்டாள். பின்

னரும் கட்டாயப்படுத்தியே வெளியேற்றப்பட்டாள்.

தொடர்ந்து 'ஜெயசிக்குறுய்' களம், முன்னர் இவர்களை மறுத்தவர்கள், சளைக்காது போரிட்ட இவர்களைக் கேட்டுப் பெறும் அளவுக்கு வளர்ச்சிகண்டு… ஓயாத உழைப்பும், கடுமையான பயிற்சியும்… எல்லாவற்றிற்கும் அடிநாதமாய் பரிபாலினி…

ஓமந்தை இராணுவ முகாம் மீதான தாக்குதலுக்கு தாமே தடையுடைத்து, ஏனைய அணிகளுடன் தமது அணி ஒன்றுடன் பரிபாலினியும் உள்நுழைந்து, பல இராணுவக் காவலரண்களைத் தாக்கியழித்து மீண்டபோது, கப்டன் ஜெயஜோதியுடன் இன்னும் சில போராளிகள் திரும்பவில்லை. ஆனால் இவர்களைப் பாராட்டாத தளபதிகளே இல்லை. புளியங்குளத்தில் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக நின்று புளியங்குளத்தை 'புலிகள் புரட்சிக் குளமாக' மாற்றியதில் இவளின் பெரும் உழைப்பும் உள்ளது என்றால் மிகையானது.

அந்தச் சமருக்குப் பொறுப்பாக நின்ற தளபதி பிரிகேடியர் தீபன் அவர்கள் கூறும்போது, "பரிபாலினியைப் பொறுத்த வரையில் குறிப்பாக நல்ல விசயங்களைப் பார்த்தனான், நல்ல ஒரு நிர்வாகி, துணிச்சலான சண்டைக்காரி மற்றது எல்லாத்திலேயும் ஒரு ஆர்வம் உள்ளவர் இந்த மூன்றையும் நான் அவளிடம் நேரடியாகப் பார்த்தனான்" என்றார்.

"ஜெயசிக்குறுய்" களமுனையில் இருந்து எடுக்கப்பட்ட அரசியல் துறை மகளிர் அணியின் போராளிகள் ஒவ்வொருவரும் அவரவரின் முன்னைய பணிகளைத் தொடரும்படி கூறிய தலைவர், பரிபாலினியை சமராய்வு பகுப்பாய்வுப் பிரிவுக்குத் தெரிவு செய்கின்றார்.

சண்டையில் நிற்கும் ஒவ்வொரு போராளிகளினதும் திறமைகளையும், செயல்பாடுகளையும், நிலமைகளுக்கேற்ப முடிவெடுக்கும் தன்மைகளையும், சண்டையின் வெற்றி தோல்விகளுக்கான காரணிகளையும், பகுப்பாய்வு செய்வதுமே இதன் நோக்கமாகும். ஆரம்பகாலத்தில் பரிபாலினியின் பொறுப்பில் பெண்போராளிகளே செயல்பட்டு வந்தனர். இந்தப் பணிகளில், எள் எனும் முன் எண்ணெய்யாக நிற்பாள் பரிபாலினி. கனவிலும் நினைவிலும் "அண்ணை எங்கள நம்பி விட்டிருக்கிறார். நாங்கள் திறமையாகச் செயற்பட வேண்டும்" என்பதே அவளின் தாரகமந்திரமாக இருந்தது.

01.02.1998 இல் ஆனையிறவு பரந்தன் சண்டையில் ஆரம்பமாகி 1999 இல் ஆண் போராளிகளையும் இணைத்து பிரிகேடியர் சொர்ணம் தலைமையில், எந்த மூலை முடுக்குகளில் நடைபெறும் சிறு சிறு தாக்குதல்கள் என்றாலும் அங்கெல்லாம் பரியும் சென்று வந்தாள். போகும் போது பாதை மாறி எதிரியின் பிரதேசங்களுக்கு முன்னால் சென்று மீண்ட சம்பவங்கள் பல.

ஓயாத அலைகள் மூன்றின் ஆரம்ப நடவடிக்கையின் போது சமராய்வு பகுப்பாய்வுப் பிரிவினரைக் கொண்டு களமிறங்கி மீட்கப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாக்கும் பணியில் மணலாற்றில் ஈடுபட்டு, மீண்டும் பகுப்பாய்வு வேலைகள் செய்து…

தொடரும் ஓயாத அலைகளின் வீச்சால் எமது களமுனைகள் விரிவடைய, விரிவடைய தற்காலிகமாக சமராய்வு பகுப்பாய்வுப் பிரிவிலிருந்த ஒவ்வொருவரும் வெவ்வேறு படையணிகளுடன் இணையுமாறு பணிக்கப்பட, இவளின் பயணம் சோதியா படையணியை நோக்கித் தொடர்ந்தது.

"என்ர சண்டை அனுபவங்களைக் கொண்டு துர்க்காவுக்கு உதவியா நின்று, படையணியை நன்றாக வளர்த்து, அண்ணை பிள்ளையள எப்படியெல்லாம் வளர்க்க வேணும் என்று நினைக்கிறாரோ அதற்கெல்லாம் நாங்கள் செயலுருவம் கொடுக்க வேணும்" என்று கூறிச் சென்றவளை முதல் சமரிலேயே நாம் இழந்துவிட்டோம்.

01.04.2000 நள்ளிரவு கடந்த விடிகாலை இயக்கச்சி இராணுவத்தளம் புகுந்து திரும்பாத தோழிகளுள் பரிபாலினியும் ஒருத்தியாக…

பரிபாலினி மணலாற்றுக் காட்டின் மரவேர்களில் காவலிருந்து. காட்டுப் பறவைகளையும் விலங்குகளையும் நேசித்து, பொதிகள் பல சுமந்து, ஆழக்கிணறுகள் வெட்டி, பலம் மிக்க பாசறைகள் அமைத்து, உரமேறிய கைகளுடன் எதிரியுடன் பொருதி, பல துறைகளிலும் வளர்த்து தலைவனின் பெரும் கனவுகளுக்கேற்ப பிரகாசிக்கத் தொடங்கிய ஒரு இளம் தளபதி…

அடிக்கடி ரவைகளால் துளைக்கப்பட்டு, குண்டுச் சிதறல்களால் பிய்க்கப்பட்டு, இரத்தம் கொட்டி, வீரத் தழும்புகளால் நிறைந்த அவள் உடல்…

தனது சொத்தி வாயை நெளித்து, 'இஞ்சேருமப்பா இஞ்சேருமப்பா…' என்று எம்மைச் சுரண்டும் அந்த அழகான சின்ன உருவம்…

ஓ… அவள் ஓயவில்லை. இன்னும் எம்முன் நிழலுருவமாக உலாவிக் கொண்டிருக்கிறாள்.

நினைவுப்பகிர்வு: உலகமங்கை. நன்றி – களத்தில் இதழ் (31.08.2000).






**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# தமிழீழச் செய்திகள்



## ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல்

01.08.2026

ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய நாள் சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் நிலக்சனின் உருவ படத்திற்கு மலர் மாலை அணியப்பட்டு, மலர்வணக்கம் செலுத்தப்பட்டு, சுடரேற்றப்பட்டது.

யாழ்.பல்கலை கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடக கற்கை மாணவனும், சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும், யாழ், மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி அவரது வீட்டில் இருந்த வேளை, அவரது வீட்டிற்கு அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுதாரிகள் நிலக்சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர்கள் முன்னிலையில் சுட்டுப்படுகொலை செய்தனர்.




## யாழ். வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள காணி விடுவிப்பை வலியுறுத்தி யாழ். வயாவிளான் சந்தியில் கவனயீர்ப்பு போராட்டம்

02.08.2026

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வசாவிளான் மக்களும் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில்



ஈடுபட்டுள்ளனர்.











வலிகாமம் வடக்கில் இருந்து 1990ஆம் ஆண்டு யூன் மாதம் வெளியேற்றப்பட்ட மக்கள் 36 வருடங்கள் கடந்தும், அவர்களின் சொந்த இடங்களுக்கு மீள திரும்ப அனுமதிக்கப்படவில்லை.

குறித்த பகுதிகள் சிறீலங்கா இராணுவ உயர்பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அப்பகுதி மக்கள் தமது சொந்த காணிகளுக்கு திரும்ப முடியாத நிலையில், வாடகை வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வருகின்றனர்





யுத்தம் முடிவடைந்து 17 வருடங்களாக தம்மை தமது சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்குமாறு கோரி போராடி வருகின்றனர்.

இந்நிலையில் வலி - காமம் வடக்கை சேர்ந்த மூன்று கிராம மக்கள் தமது காணிகளை விடுக்க கோரி போராட்டங்களை

அந்த வகையில், மயிலிட்டி கிராம மக்கள் பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் பலாலி மக்கள் பிரதி ஞாயிற்றுகிழமைகளிலும் போராடி வரும் நிலையில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை முதல் வசாவிளான் மக்களும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இதுவரையிலான கால பகுதியில் யாழ்.மாவட்டத்தில் சுமார் 60 ஏக்கர் காணியே விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# திருகோணமலை சிவில் செயற்பாட்டாளர் ஸ்ரீஞானேஸ்வரன் பயங்கரவாதத்தடுப்பு விசாரணைக்கு அழைப்பு!

02.08.2026

திருகோணமலையினை சேர்ந்த சிவில் செயற்பாட்டாளர் இ.ஸ்ரீஞானேஸ்வரன் பயங்கரவாதத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் செவ்வாய்கிழமையன்று கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் தலைமையகத்திற்கு வாக்குமூலமொன்றை வழங்க வருமாறு அவருக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2025ஆம் ஆண்டு நீர்கொழும்பில் நடைபெற்ற முள்ளி வாய்க்கால் நினைவேந்தலில் இனப்படுகொலை தொடர்பாக அவர் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வு மற்றும் உரை தொடர்பாக ஏற்கனவே கத்தோலிக்க குரு வண. செராட் மற்றும் அருட்சகோதரி ரசீக்கா ஆகியோரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பன்னாட்டுக்குற்றங்கள் நூலின் எழுத்தாளர் இ.ஸ்ரீஞானேஸ்வரன் என்பது குறிப்பிடத்தக்கது.



# கடந்த அரசாங்கங்கள் தமிழர்களுக்கு எதைச் செய்தார்களோ அதையே நடைமுறை அரசாங்கமும் செய்கின்றது!

## யாழ். வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

02.08.2026

ராஜபக்ஷாக்கள் தமிழர்கள் விடயத்தில் எதைச் செய்தார்களோ அதையே அநுர அசாங்கமும் தமிழர்களுக்குச் செய்கின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு வசாவிளான் மக்கள் தமது மீள் குடியேற்றத்தினை வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தின் முதல் நாள் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தொவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தம் என ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மக்களின் உரிமைகளை ஏற்க மறுக்கின்றது. ஆட்சியில் இருப்பவர்களும் கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த ராஜபக்சாக்களையோ அல்லது மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஏனைய அரசாங்களையோ ஒத்ததாக தாங்களும் சளைத்தவர்கள் இல்லை என்பதை வெளிப்படுத்தி வருகின்றது.

வசாவிளானில் அமையப் பெறும் இராணுவ வைத்திய சாலை பொதுமக்களின் காணிகளை இராணுவ அதிகாரங்களை பயன்படுத்தி அங்கு வாழ்ந்த பூர்வீக கிராம மக்களை வலோத்காரமாக வெளியேற்றி விட்டு அந்த மக்கள் வீடற்றவர்களாக முகாம்களில் வசிக்கும் போது ஆக்கிரமித்து கட்டப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், தற்பொது அமைக்கப்பட்டு வரும் சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்க புறம்பான இந் இராணுவ வைத்திய சாலையை அகற்ற வேண்டும் என மாவட்ட அபிவிருத்திக்குழுவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தினை நானே வழிமொழிந்தேன். அவ்விடயம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அறிக்கையிலும் எனது பெயரை கோடிட்டுக்காட்டி சகல திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டது.

ஆனால் போயா தினங்களில் கூட அங்கு வீரியமான முறையில் கட்டிடம் அமைக்கப்படுகின்றது. ஆகவே இங்கே நடப்பவற்றை பார்க்கும் போது சொல்லலவில் அரசாங்கம் பலவற்றை பேசினாலும் செயலளவில் ராஜபக்சாக்களை ஒத்ததாகவே இருக்கின்றது. நாட்டில் இலஞ்சத்தினையும் ஊழலையும் ஒழிக்கின்றார்கள் அதனை நாம் வரவேற்கின்றோம். ஒரு இனத்தின் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அரச அராஜகள், படுகொலைகள், இராணுவ மயமாக்கம் பற்றி நடவடிக்கை எடுக்கின்றீர்கள் இல்லை. காரணம் இந் நாட்டில் தமிழர்கள் என்றால் எதையும் செய்ய முடியும் என்ற சிங்கள பேரினவாத மனநிலை இன்றைய ஆட்சியாளர்களின் உள்ளங்களுக்குள்ளும் உள்ளதா எனக் கேள்வி எழுப்புகின்றோம் என்றார்.



# யாழ். பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலய வீதி சிறீலங்கா இராணுவத்தால் மீண்டும் மூடல்!

03.08.2026

சிறீலங்கா இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்கு செல்லும் நிரந்தர வீதி திருவிழாவிற்காக திறக்கப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் மூடப்பட்டது.

ஏற்கனவே கடந்த ஆண்டு ஆலய பகுதி விடுவிக்கப்பட்ட போதும் மக்கள் செல்லும் வீதி மக்களின் காணியூடாக தற்காலிகமாக திறக்கப்பட்டதுடன் பின்னர் நிரந்தர பாதை மூடப்பட்டது. எனினும் சில நாட்களில் அப்பகுதியில் உள்ள மக்கள் தங்கள் காணியை சுற்றி வேலியை அமைத்ததால் மக்கள் ஆலயத்துக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

பின்னர்ஆலய நிர்வாகத்தினர் இராணுவத்தினரிடமும் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனிடமும் கோரிக்கை வைத்தனர். இது குறித்து இராணுவத்தினருடன் கலந்துரையாடியதையடுத்து நிரந்தர பாதை திருவிழாவை முன்னிட்டு தற்காலிகமாக திறக்கப்பட்டது.



இதையடுத்து ஆலயத்துக்கு வருபவர்கள் அடையாள அட்டை இலக்கம் பதியப்பட்ட பின் வீதியால் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறான நிலையில் திருவிழா முடிந்தமையால் பாதை மீண்டும் மூடப்பட்டுள்ளது.

இதேவேளை பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு செல்லும் வீதியை ஒரு மாதத்திற்குள் நிரந்தரமாக விடுவிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

“கடந்த காலத்தில் மக்கள் கோரிக்கை முன்வைத்தமைக்கு அமைவாக திருவிழாவுக்காக தற்காலிகமாக அந்த பாதை திறந்து வைக்கப்பட்டது. குறித்த பாதையானது நிரந்தரமாக திறந்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன”.

“அந்தவகையில் ஒரு மாத்திற்குள் அந்த பாதை நிரந்தரமாக திறக்கப்படும். மேலும், இரண்டு மாதத்திற்குள் குறித்த வீதிக்கு கிழக்கு பக்கமாக உள்ள பெருமளவான காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன” என்று ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

**எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும், எதிரியானவன் தனது இயலாத் தன்மையால், வெகுசனம் மீது மூர்க்கமாகப் பழிதீர்த்து கொள்ளத் தயங்குவதில்லை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

# இந்திய இராணுவம் நிகழ்த்திய வல்வைப் படுகொலையின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல்!

02.08.2026

வல்வெட்டித்துறை நகரில், தமிழ்த் தேசிய கட்சி, தமிழ்த் தேசியப் பேரவையினரின் ஏற்பாட்டில் வல்வைப் படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நடத்தப்பட்டது.



1989.08.02 அன்று இந்திய இராணுவத்தினரால் வல்வெட்டித் துறை பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டின்போது பொது மக்களில் 72 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

குறித்த நிகழ்வு இன்று: (02 . 08 . 2026) ஞாயிற்றுக்கிழமை மாலை 05:30 மணியளவில் வல்வெட்டித்துறைச் சந்திப் பகுதியில் இடம்பெற்றது.










# பண்டாரவன்னியன், பால்ராஜ் போன்றோரை நினைவு கூருவது வரலாற்று கடமை!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

03.08.2026

தமிழர்களின் வீரத்தினைப் பறைசாற்றுகின்றவகையிலான வரலாற்றினையுடைய வன்னி மன்னன் பண்டாரவன்னியன், பால்ராஜ் போன்றவர்களை நினைவுகூருவது தமிழர்களின் வரலாற்றுக் கடமை என வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



அத்தோடு கடந்த மேமாதம் இலங்கை பாராளுமன்றில் பால்ராஜ்ஜிற்கு தாம் அஞ்சலி செலுத்தியமைக்கு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், பெரும்பான்மை இனத் தவர்கள் பலரும் கடுமையாக எதிர்வினையாற்றியிருந்ததாகச் சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், இவ் வாறான எதிர்ப்புக்களைக் கண்டு தாம் அஞ்சப்போவதில்லை எனவும் இவ்வாறான நினைவுகூரல்களும், அஞ்சலிகளும் தம்மால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமெனவுந் தெரிவித் துள்ளார்.

முல்லைத்தீவு - முற்றவெளி மைதானத்தில் நேற்று (02) இடம் பெற்ற தமிழர் பாரம்பரிய வீரக்கலை வீரர்களின் மதிப்பளிப்பு நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே பாராளு மன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நிகழ்வில் எனக்குமிகவும் கவர்ந்த விடயம் என்ன வெனில், கேடயத்தைத் தாங்கியவாறு இடம்பெற்ற வாள்ச் சண்டையாகும்.

கடந்த 1803ஆம் ஆண்டு, கிட்டத்தட்ட 223ஆண்டுகளுக்கு முன்னர் இதேபோன்றதொரு ஆகஸ்ட் மாதத்தில் முல்லைத் தீவில் நிலைகொண்டிருந்த ஆங்கிலேயப்படைகள்மீது மாவீரன் பண்டாரவன்னியன் தாக்குதல்களை மேற் கொண்டு ஆங்கிலேயப் படைகள் நிலைகொண்டிருந்த ஒல் லாந்தக் கோட்டைக்குள் புகுந்து ஆங்கிலேயரின் பீரங் கிகளைக் கைப்பற்றினான்.

ஆங்கிலேயப் படைகள் பீரங்கிகளுடனும், துப்பாக்கிகளுட னும் மிகவும் பலமாக எமது மண்ணில் நிலைகொண் டிருந்த போதும், இவ்வாறான வாள்களையும், கேடயங் களையும், ஈட்டிகளையும் பயன்படுத்தியே மாவீரன் பண்டாரவன்னியன் தனது தமிழர் படையுடன் இணைந்து ஆங்கிலேயரது கோட்டைக்குள் புகுந்து தாக்குதல் நடாத் தினான். அன்னியப் படைகளை வென்று வாகை சூடினான் என்று வரலாறுகள் கூறுகின்றன.

எமது வன்னி மன்னன் பண்டாரவன்னியன் வெற்றி கொண்ட அந்த ஒல்லாந்தக் கோட்டையின் சிதைவுகள் தற்போதும் முல்லைத்தீவு மாவட்டசெயலக வளாகத்தில் காணப்படுகின்றன.

மாவீரன் பண்டாரவன்னியனின் இந்த வீரதீரச் செயற்பாட்டை ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி தொடர்ச் சியாக நினைவுகூர்ந்து வருகின்றோம்.

இதை ஏன் இங்கு தெரிவிக்கின்றேன் என்றால், வீர விளை யாட்டுக்களில் யாரும் தமிழர்களைக் குறைத்து மதிப்பிட முடியாது.

இவ்வாறாக எமது பூர்வீகப் பரம்பரைகள் எவ்வாறு வீரம் செறிந்திருந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக வரலாறுகள் பல காணப்படுகின்றன.

அதன் பின்னரான விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த வர லாற்றினையும் அனைவரும் அறிவீர்கள். உலகநாடுகளே வியந்துபார்க்கும் அளவில் அவர்களின் வீரதீர செயற்பாடுகள் இருந்தன.

அத்தகைய பரம்பரைவழியில் வந்த எம்மவர்களிடமும் வீர எண்ணங்களே குடிகொண்டிருக்கும். அவர்களும் வீரம் செறிந்தவர்களாகவே இருப்பார்கள்.

மேலும் தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கம் தமிழ் மக்களின் அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் பாராளுமன்றில் கடந்த மே மாதம் எங்களுடைய மண்ணின் மைந்தன் பால்ராஜ் அவர்களுக்கு பாராளுமன்றில்





வீரவணக்கத்தையும், அஞ்சலிகளையும் செலுத்தியிருந்தேன்.

அதற்கு எதிர்க்கட்சியைச் சேரந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடுமையாக எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தனர். ஆனால் ஆளும் தரப்பினர் அதற்கு எவ்வித எதிர்வினைகளை யும் ஆற்றியிருக்கவில்லை என்பதையும் இந்த இடத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வீரஞ் செறிந்த வரலாறுகளையுடைய எம்மவர்களையும், அவர் களின் வீரதீர செயற்பாடுகளையும் நினைவுகூரவேண்டியது எமது வரலாற்றுக் கடமையாகும். நினைவுகூரல் என்னும் எமது வரலாற்றுக் கடமையினை நாம் தொடர்ந்தும் முன்னெடுப் போம்.

யாருடைய கூச்சலுக்காகவும் பயந்துகொண்டு, இத்தகைய நினைவுகூரல்களைச் செய்யாமல் அடங்கி ஒடுங்கி இருக்க மாட்டோம்.

அத்தோடு தற்போது இந்த வீரவிளையாட்டுக்கள் இடம்பெறும் இந்த முற்றவெளி மைதானத்தில்தான் அன்று விடுதலைப் புலிகளின் காலத்தில், கடற்புலிகளின் ஏற்பாட்டில் சனத்திரள் களின் மத்தியில் மிகவும் சிறப்பான முறையில் எழுச்சிப்பாடகர் தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்வு இடம்பெற்றது. அத னையும் இந்த நேரத்தில் மீட்டிப் பார்க்கின்றேன். இவ்வாறாக முல்லைத்தீவு மண்ணிற்குப் பல பெருமைகள் உண்டு.

இப்படியாக எம்மவர்கள் தமிழர்களின் வீரக் கலைகளை கற்றுக் கொண்டு, அவற்றை வெளிப்படுத்திக்காட்டும்போது மிகவும் மனமகிழ்வாக உள்ளது - என்றார்.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மழை அங்கியுடன் அடையாளம் காணாப்பட்ட சிறுவரின் எலும்புக்கூடுகள் மீட்பு!

04.08.2026

செம்மணி மனித புதைகுழிக்குள் மழை அங்கியுடன் அடையாளம் காணப்பட்ட சிறுவர் ஒருவருடைய எலும்புக்கூடு முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.





செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 42ஆவது நாளான கடந்த 24ஆம் திகதியுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட நிலையில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்நிலையில் இன்றைய தினம் 43ஆம் நாள் அகழ்வு பணி யின் போது, 04 எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப் பட்டுள்ள நிலையில் , ஏற்கனவே அடை யாளம் காணப்பட்ட 2 எலும்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட் டுள்ளது. அத்துடன் ஒரு மனித எலும்புக் கூட்டு தொகுதி அடை யாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை மழை அங்கியுடன் அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடு அகழ்ந்து



எடுக்கப்பட்டுள்ளது. மழை அங்கியும், அதனுடன் மீட்கப்பட்ட பொத்தான்களும், காலுறையும் சான்று பொருளாக அடையாளப்படுத்தப்பட்டு, நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளது.

செம்மணி புதைகுழியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன் றாம் கட்டம் என இதுவரையில் 97 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 483 எலும்புக்கூடுகள் அடை யாளம் காணப்பட்டுள்ள நிலையில் 481 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

# யாழில் இடம்பெற்ற மூதூர் 17 மனிதநேயப் பணியாளர்களின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல்

04.08.2026

2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 04 அன்று திருகோணமலை மூதூரில் "வறுமைக்கு எதிரான அமைப்பு" (ACF) நிறுவனத்தில் பணியாற்றி, கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட 17 தமிழ் நிவாரணப் பணியாளர்களின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று (04.08.2026) மாலை 5.00 மணிக்கு கொக்கு வில் அமைந்துள்ள எமது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் மதிப்பிற்குரிய செல்வராசா கஜேந்திரன் அண்ணா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,கட்சியின் உறுப் பினர்கள் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட 17 உறவுகளுக்கும் சுடரேற்றி, மலர்வணக்கம் செலுத்தி அக வணக்கம் செலுத்தப்பட்டது.

20 ஆண்டுகள் உருண்டோடினாலும் எமது மண்ணில் நிகழ்த் தப்பட்ட அநீதிகளுக்குச் சர்வதேச நீதி கிடைக்கும் வரை எமது போராட்டம் ஓயாது!




# 'ஏக்கிய ராஜ்ய' அரசியலைமைப்பு உருவாக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுங்கள்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

05.08.2026

தற்போதைய அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள 'ஏக்கிய ராஜ்ய' அரசியலமைப்பு உருவாக்கப்படுவதைத் தடுப் பதற்கும், இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை மையை ஒழிப்பதற்கும், தமிழ்த்தேசத்தை அங்கீகரித்து அதன் தனித்துவமான இறையாண்மையை அடிப்படையாகக் கொண்ட கூட்டாட்சி அரசியலமைப்பை உருவாக்கவும் நட வடிக்கை எடுக்குமாறு கோரி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யின் சார்பில் அதன் தலைவர் பா.உ கஜேந்திரகுமார் பொன்னம் பலம் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரியிடம் மகஜரொன்றைக் கையாளித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புதன் கிழமை (5) நாட்டுக்கு வருகைதந்த இந்திய வெளியுறவு செய லாளர் விக்ரம் மிஸ்ரிக்கும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு புதன்கிழமை (5) பி.ப 2.00 மணியளவில் கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அவர்களது நிலைப்பாடுகள் அடங்கிய கடிதத்தை விக்ரம் மிஸ்ரியிடம் கையளித்தார். அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையில் கடந்த 77 ஆண்டுகளாக இனப்பிரச்சினைக்கு முகங்கொடுத்துவரும் ஈழத்தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றைப் பெற்றுத்தருவதில் இந்தியாவின் தலையீட்டைக் கோருகிறோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வாக இலங்கை அரசாங்கம் தற் போது புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. அந்த அரசியலமைப்பில் ஈழத்தமிழ் மக் களின் அரசியல் அபிலாஷைகள் பிரதிபலிக்கப்படுவது இன்றி யமையாததாகும். அந்த நோக்கத்துடன் தமிழ்நாட்டிலுள்ள எமது உறவுகளின் ஆதரவுடனும், தமிழக முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாட்டு அரசின் ஒத்துழைப்புடனும் இந்திய அரசின் தலையீட்டை நாடிவந்துள்ளோம்.

ஈழத்தமிழ் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இந்தியாவின் தலையீட்டின் விளைவாக 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அந்த உடன்படிக்கை யில் தமிழர்கள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந் தியங்களில் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த மக்கள் என அங் கீகரிக்கப்பட்டதுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த ஒரே நிர்வாக அலகாக இருந்து சுயாட்சியை அனுபவிக்கவேண்டும் என்ற கொள்கையும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. இருப்பினும் இலங்கை அரசு அந்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதாகக் கூறி, அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்தி, ஒற்றையாட்சிக் கட்ட மைப்புக்குள் மாகாணசபை முறைமையை நிறுவியது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் உண்மையான நோக்கத் தையும் ஈழத்தமிழ் மக்களின் சுயாட்சிக்கான அரசியல் அபி லாஷைகளையும் பலவீனப்படுத்தும் நோக்கத்திலேயே மாகாணசபை முறைமை திட்டமிட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. ஒற்றையாட்சி அரசில் மத்திய அரசே அனைத்து அரச கட்ட மைப்புக்களுக்கும் மேலான உயர்வான சட்ட அதிகாரத்தைக் கொண்டுள்ளது. பிரிக்கப்படமுடியாத இறையாண்மையே ஒற்றையாட்சி அரசின் அடிப்படை அம்சமாகும். அதாவது மத்திய அரசின் அதிகாரங்கள் எவ்வகையிலும் வரையறுக்கப்



படாதவையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் 2015 - 2019 வரையான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட 'ஏக்கிய ராஜ்ய' அரசியலமைப்பு வரைவை நிறைவுசெய்து, நடைமுறைப் படுத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாக அறிவித்துள்ளது. இந்நிலை யில் முன்மொழியப்பட்டுள்ள 'ஏக்கிய ராஜ்ய' அரசியலமைப்பு உருவாக்கப்படுவதைத் தடுப்பதற்கும், இலங்கையின் ஒற்றை யாட்சி அரசியலமைப்பு முறைமையை ஒழிப்பதற்கும், தமிழ்த் தேசத்தை அங்கீகரித்து அதன் தனித்துவமான இறையாண் மையை அடிப்படையாகக்கொண்ட கூட்டாட்சி அரசிய லமைப்பை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

www.sangathamil.com

# யாழ். செம்மணியில் மீண்டும் 08 எலும்புக்கூடுகள் மீட்பு; 500 எலும்புக்கூடுகளை அண்மிக்கிறது செம்மணி மனிதப் புதைகுழி!

05.08.2026



யாழ். செம்மணி மனிதப் புதைகுழி 44 ஆம் நாள் அகழ்வு பணிகளின் போது புதிதாக 8 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதேவேளை இதுவரை 489 எலும்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட 44 ஆம் நாள் அகழ்வுப் பணிகள் இன்றைய தினம் புதன் கிழமை நீதவான் நீதிமன்றக் கண்காணிப்பில் முன்னெடுக்கப் பட்ட நிலையில், புதிதாக 08 மனித எலும்புக் கூடுகள் அடை யாளம் காணப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 08 எலும்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக் கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை 56 நாட்கள் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு நீதி மன்றம் உத்தியோகபூர்வ அனுமதி வழங்கியிருந்தது. அதற் கமைய, 44 ஆம் நாளான இன்றைய தின அகழ்வுப் பணியின் போது, ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந்த 8 எலும்புக் கூடுகள் சான்றுப் பொருட்களாக உத்தியோகபூர்வமாகத் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இன்றைய தின அகழ் வுச் நடவடிக்கைகளின் போது புதிதாக மேலும் 08 மனித எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன் றாம் கட்டங்கள் என இதுவரையில் மொத்தம் 98 நாட்கள் அகழ் வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இக் காலப்பகுதியில் மொத்தமாக 491 மனித எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 489 எலும்புக் கூடுகள் உத்தியோகபூர்வமாக முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செம்மணி எலும்புத் தொகுதிகள் ஆய்வு செய்யப்பட வேண்டும்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

05.08.2026



செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்படுகின்ற எலும்புக்கூடுகளின் தரவுகளோடு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் மரபணு மாதிரிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யவேண்டிய சட்டத் தேவைப்பாடு இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களின் மர பணுக்களை அவர்களின் ஒப்புதலுடன் சேகரித்து, அவற்றை பன்னாட்டு மேற்பார்வையுடன் பாதுகாக்கின்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத் தியுள்ளார்.

பாராளுமன்றில் இன்று (5) உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சபையில் அவர் மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் செம் மணி மனிதப் புதைகுழியின் மூன்றாங்கட்ட அகழ்வாய்வுப் பணிகள் ஒகஸ்ட் 4ஆம் திகதி நேற்றைய தினம் மீண்டும் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாய் வுகளில் இதுவரை மொத்தம் 483 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 481 மனித எலும் புக்கூடுகள் இதுவரை முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட் டுள்ளன.

எனவே வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஒப்புத லுடன் அவர்களின் மரபணுக்களைச் சேகரித்து, அவற்றை பன்னாட்டு மேற்பார்வையுடன் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்பு கின்றேன்.

மனிதப் புதைகுழி விடயத்தில் அடையாளம் காணப்பட்ட எலும்புத்தொகுதிகளை நிலத்திலிருந்து அகழ்ந்தெடுப்பது என்பது முதற்கட்ட செயற்பாடாகும்.

அதன் பிற்பாடு என்புமாதிரிகளை அறிவியல்பூர்வமாக ஆய்வு செய்வது இரண்டாவது நடவடிக்கையாகும். அதனைத் தொடர்ந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட என்புத்தொகுதிகளின் கால எல்லை தொடர்பில் தொல்லியல் திணைக்களம் அறிவியல் அறிக்கை ஒன்றினை சமர்ப்பிப்பார்கள்.

மூன்றாவது கட்டமாகவே காணாமல்போன உறவுகள் தொடர்பான தேடுதல் விவகாரங்கள் ஆரம்பமாகும்.

யாராவது தங்களுடைய உறவினர்கள் குறிப்பிட்ட காலத்தில் காணாமல்போனதாகவோ அல்லது கைதுசெய்யப்பட்டதன் பிற்பாடு இருப்பிடம் தெரியவில்லை என்றோ முறைப்பாடு வழங் கியிருந்தால், தொல்லியல் திணைக்களம் கணித்துள்ள காலப் பகுதியோடு அந்தத் தரவுகளை ஒப்பிட்டு பாதிக்கப்பட்ட உறவு களின் மரபணு மாதிரிகளை ஆய்வு செய்யவேண்டிய சட்டத் தேவைப்பாடு உள்ளது.

ஆனால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் மர பணுக்களைச் சேகரித்து அதனைப் பாதுகாக்கும் காப்பகம் எது வும் இதுவரை உருவாக்கப்படாத நிலையே காணப்படுகிறது. எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் மரபணுக்களை அவர்களின் ஒப்புதலுடன் சேகரித்து, அவற்றை பன்னாட்டு மேற்பார்வையுடன் பாதுகாக்கின்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

மனிதப் புதைகுழி அகழ்வாய்வுகளில் பங்கேற்கின்ற சட்டத் தரணிகளில் ஒருவரான ரனித்தா ஞானராசா அவர்களும் அண் மையில் இதுதொடர்பில் வலியுறுத்தியிருக்கிறார். எனவே இது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் என இந்த உயரிய சபையைக் கோருகின்றேன் என்றார்.

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.com**

# வடக்கு மக்களின் காணிப் போராட்டத்தின் நியாயத்தை தெற்கு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்

**சம உரிமை இயக்கம்**

05.08.2026

வட பகுதி மக்களின் காணி போராட்டம் எத்துணை நியாய மானது என்பதை தெற்கு மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் என சம உரிமை இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

சம உரிமை இயக்கத்தின் காரியாலயத்தில் திங்கட்கிழமை (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவ்வியக்கத்தின் அமைப்பாளரும் முன்னிலை சோசலிசக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரு மான இந்திரானந்த டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் பலாலி, மயிலிட்டி மற்றும் முல்லைத்தீவின் கேப்பாப் புலவு உள்ளிட்ட பல பகுதிகளில் 36 ஆண்டுகளுக்கு மேலாக இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட மக்களின் பூர்வீக நிலங்கள் இதுவரை மீள ஒப்படைக்கப்படவில்லை. இதனால் கேப்பாப்புலவில் தொடர் சத்தியாகிரகப் போராட்டமும், பலாலி யில் ஆர்ப்பாட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியின் பணிப்பாளர் நாயகம் தர்மசிறி கமகேவை, வட பகுதி மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேரில் சந்தித்து நிலைமைகளை விளக் கியுள்ளனர்.

1950 ஆம் ஆண்டளவில் வழங்கப்பட்ட சட்டப்பூர்வ உறுதிப்பத் திரங்கள் நில உரிமையாளர்களிடம் உள்ளன. 1980 ஆம் ஆண்டு முதல் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் 330 ஏக்கர் நிலங்கள் முதற்கட்டமாக பெறப்பட்ட நிலையில், பின்னர் 1990 ஆம் ஆண்டு இரண்டாம் ஈழப்போரின் போது மேலும் பெரு மளவு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன.

யுத்தம் நிறைவடைந்து 17 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் நிலங்களை விடுவிக்க அரசாங்கத்திடம் முறையான திட்ட மில்லை. ஒரு வருடத்துக்கு முன்னர் யாழ். மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுர குமார திசா நாயக்க குறிப்பிட்ட அளவிலான காணிகளை விடுவிக்குமாறு உத்தரவிட்டும் இதுவரை எதுவுமே விடுவிக்கப்படவில்லை.

இச்சந்திப்பின் போது ஜனாதிபதியின் பணிப்பாளர் நாயகம் வட மாகாண ஆளுநருடன் தொடர்பு கொண்டபோது, மீண்டும் இரா ணுவத்தினரின் ஆலோசனையையே நாடுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. இராணுவ முகாம்களுக்கு கோடி கணக்கில் பணம் செலவிடப்பட்டுள்ளதாகக் கூறி பாதுகாப்புத் தரப்பினர் காணி- களை விடுவிக்க மறுக்கின்றனர்.

மேலும், யுத்தம் முடிந்த பின்னர், குறிப்பாக 2010 ஆம் ஆண்டில் 11 கோவில்கள் வரை தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. 350 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட நிலத்தில் இராணுவ உயர் அதிகாரி யின் பங்களா மட்டுமே இயங்கி வருகின்றதுடன், இராணுவப் பகுதிக்குள் அமைந்துள்ள கோவில்கள் மற்றும் தேவாலயங் களுக்குச் செல்ல இன்னமும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இதேவேளை, இராணுவத்தினரும் சிவில் பாதுகாப்புப் படை யினரும் அரசாங்க நிதியைப் பயன்படுத்தி இலவச ஆட்கூலி யுடன் உற்பத்தி செய்யும் பொருட்களை, சந்தையில் குறைந்த விலைக்கு பல்பொருள் அங்காடி வலையமைப்புகளுக்கு விற் பனை செய்கின்றனர். இதனால் அப்பகுதி சாதாரண விவசா யிகளின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

සම අයිතිය ව්‍යාපාරය
சம உரிமை இயக்கம்
Movement for equal rights

வடக்கு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து பாராளு மன்ற பிரதிநிதித்துவத்தையும் வழங்கிய போதிலும், அவர் களின் நம்பிக்கையை அரசு வீணடித்து வருகின்றது. எனவே, தெற்கிற்குப் பரப்பப்படும் தவறான இராணுவக் கண்ணோட்டங் களைத் தாண்டி, வட பகுதி மக்களின் நியாயமான போராட் டத்துக்கு தெற்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் இணைந்து சம உரிமை இயக்கம் வலியுறுத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# முல்லை. கேப்பாபிலவில் 45ஆவது நாளாகத் தொடரும் போராட்டம்

06.08.2026

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட் பட்ட கேப்பாப்பிலவு பகுதியில், இராணுவத்தினரால் ஆக்கிரமிக் கப்பட்டுள்ளதாக கூறப்படும் தமது பூர்வீகக் காணிகளை விடு விக்க வலியுறுத்தி அப்பகுதி மக்கள் முன்னெடுத்து வரும் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் இன்று (06) வியாழக்கிழமை இரண்டாவது கட்டத்தின் 45வது நாளை எட்டியுள்ளது.




கேப்பாப்பிலவு பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டிலே உள்ள 55 குடும்பங்களுக்கு சொந்தமான 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணிகளை முதற்கட்டமாக விடுவிக்க கோரி தொடர் போராட் டம் மேற்கொண்டு வருகின்றனர்.

தமக்குச் சொந்தமான காணிகளை மீள ஒப்படைக்குமாறு வலி யுறுத்தி, காணி உரிமையாளர்கள் தொடர்ச்சியாக அமைதி யான முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். தமது பூர்வீக வாழ்விடங்களில் மீளக் குடியேறுவதற்கான உரி மையை உறுதிப்படுத்தி, காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதே அவர்களின் பிரதான கோரிக்கையாகும்.

இந்நிலையில், போராட்டம் 45வது நாளைக் கடந்துள்ள போதி லும் இதுவரை அதிகாரிகளிடமிருந்து எவ்வித நிரந்தரத் தீர்வும் எட்டப்படாத நிலையில், போராட்டம் தொடர்ந்து முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

இதன்போது போராட்டக்காரர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும் போது, இன்று இரண்டாம் கட்டத்தின் 45 வது நாளாக போராடிக்கொண்டு இருக்கின்றோம். இன்றுவரை சாதகமான முடிவுகள் எவையும் எட்டவில்லை. எமது பூர்வீக காணிகள் கிடைக்கும் வரை இந்த போராட்டத்தை கைவிடப்போவதில்லை என்ற எதிர்பார்ப்புடனே இவ்விடத்தில் இருக்கின்றோம். கடும் வெப்பமான நிலையிலும் இவ்விடத்திலே போராடி வருகின் றோம். எதிர் காலத்தில் மழை இருந்தாலும் போராட்டத்தை கைவிடுவதில்லை என்ற உறுதிப்பாட்டுடனே போராடி வருகின் றோம்.

ஆளுனரோ, அரசாங்க அதிபரோ, பிரதேச செயலாளரோ இது வரை எமது தார்ப்பரியமான நிலையை பார்த்ததும் இல்லை மாற்று வழி தேடியதும் இல்லை. கடந்த வாரம் பிரதி செயலாளர் வருகை தந்து காணியை விடுவிப்பதற்கு குழு அமைத்து அதனை பரிசீலனை செய்து காணி விடுவிப்பதற்கான ஏற்



பாடுகள் செய்வதாக கூறி சென்றிருக்கின்றார். சாதகமான பதில் கிடைக்கும் என எதிர் பார்த்து இருக்கின்றோம்.

இவ்வாறிருக்கையில் எமது தொடர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நாளையதினம்மெசிடோ நிறுவனத் தின் ஒழுங்குபடுத்தலில் மன்னார் மக்களின் ஆதரவுடன் மன் னாரில் மாபெரும் போராட்டத்தின் ஊடாக ஆதரவினை வழங்க வுள்ளார்கள். மன்னார் மாவட்டம் மட்டுமல்ல ஏனைய மாவட்ட மக்களும் எமது காணி விடுவிப்பு போராட்டத்திற்கு வலு சேர்க் கும் முகமாக தாங்களும் போராட்டத்தை முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளார்கள். எங்களுடைய காணி மீட்பிற்கு இலங்கை பூராகவும் உள்ள சிவில் அமைப்புக்கள் வலு சேர்த்து எமது காணியை விரைவில் மீட்டெடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதனை கேட்டு நிற்கின்றோம் என கருத்து தெரிவித்தனர்.

# யாழ். செம்மணி 99 நாட்கள் அகழ்வுப்பணியில் 499 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது!

06.08.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 45ஆவது நாளான இன்றைய நாள் வியாழக்கிழமை 08 என்பு கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப் பட்ட 5 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாணய குற்றி ஒன்றும், சிறுவர்களுடைய ஆடை களின் பொத்தான்களும் சான்று பொருட்களாக மீட்கப்பட் டுள்ளன.

அதன் அடிப்படையில் செம்மணி புதைகுழியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் என இதுவரையில் 99 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 499 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 494 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது

நாளைய தினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு 100 ஆவது நாள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது













# அம்பாறை திராய்க்கேணி படுகொலையின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல்!

06.08.2026

அம்பாறை மாவட்டத்தின் தமிழ்க் கிராமமான திராய்க் கேணியில் 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலையின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட் டுள்ளது.







குறித்த நிகழ்வு நேற்றைய தினம் (06) அக்கிராமத்தில் உணர்வுப்பூர்வமாக இடம்பெற்றது.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி திராய்க்கேணி கிராமத்தில் இடம்பெற்ற மிலேச்சத்தனமான தாக்குதலில் 54 தமிழ் மக்கள் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.

இதன்போது உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து அந்த கிராம மக்களால் வருடாந்தம் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக, இம்முறையும் படுகொலை இடம்பெற்ற ஆலய முன்றலில் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது.









# யாழ். தையிட்டி பாவனி வீதியை விடுவிக்க முயன்றால் கைது செய்வோம்: வலிகாமம் வடக்கு தவிசாளரை நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து மிரட்டிய சிறீலங்காப் பொலிசார்

07.08.2026

யாழ். தையிட்டி விகாரதிபதியினால், சட்டவிரோதமான முறையில் அடாத்தாக கையகப்படுத்தப்பட்டுள்ள, வலிகாமம்வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை விடுவிக்க முற்பட்டால், கைது செய்வோம் என தவிசாளரை சிறீலங்காப் பொலிசார் மிரட்டியுள்ளனர்.



தையிட்டியில் சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணிக்குள் கையகப்படுத்தப்பட்டுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வீதியினை மீட்கும் நடவடிக்கையை பிரதேச சபை கைவிட வேண்டும் என பலாலி பொலிசார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கினை மன்று நேற்றைய தினம் வியாழக் கிழமை தள்ளுபடி செய்துள்ளது.

அத்துடன் வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோரையும் மன்று வழக்கில் இருந்து முற்றாக விடுவித்துள்ளது.

அந்நிலையில் தவிசாளர் நீதிமன்றுக்கு வெளியே வந்த போது, காங்கேசன்துறை பிரிவுக்கான உதவி பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், வீதியை விடுவிக்கும் முயற்சியை கைவிட வேண்டும். மீறி அதற்கான நடவடிக்கையை எடுத்தால், கைது செய்வோம் என தவிசாளரை மிரட்டியுள்ளனர்.

பொலிசார் தொடர்ந்த வழக்கினை நீதிமன்றம் தள்ளுபடி செய்து, எதிர் தரப்பினரை வழக்கில் இருந்து விடுவித்த போதிலும், நீதிமன்றுக்கு வெளியே தவிசாளரை குறித்த வழக்கு தொடர்பில்



மிரட்டியுள்ளமை, நீதிமன்ற அவமதிப்பாகவும், நீதித்துறையில் பொலிசாரின் தேவையற்ற தலையீடு தொடர்பில் விசனம் எழுந்துள்ளது.

அதேவேளை தன்னை மிரட்டிய சம்பவம் தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் விரைவில் வீதியினை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம் என தவிசாளர் தெரிவித்துள்ளார்.

# யாழ். சிந்துபாத்தி மயான சுற்று மதிலுக்கு வெளியேயும் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்படவுள்ளது சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன்

07.08.2026

யாழ். செம்மணியில் தற்போது அகழ்வு பணிகள் முன்னெடுக் கப்படும் பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களிலும் புதைகுழிகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் புதைகுழியை அண்மித்த பகுதிகளில் இரு இடங்களில் எழுமாற்றாக அகழ்வு பணிகளை முன்னெடுக்கவுள்ளதாக சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணியில் தற்போது அகழ்வு பணிகள் இடம்பெறும் பகுதிக்கு மேலதிகமாக மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனும் சந்தேகத்தில் எழுமாற்றாக இரு இடங்களில் தொல்பொருள் பேராசிரியர் ராஜ் செமதவா வினால் அகழ்வு பணிகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

அதில் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டால் நிலத்தை




ஊடுருவி பரிசோதிக்கும் "GPR" (Ground-penetrating Radar) பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு , அகழ்வு பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டுமா எனும் முடிவுக்கு வருவதற்காகவே இரு இடங்களில் எழுமாற்றாக அகழ்வு பணிகள் இடம் பெறவுள்ளன.

அதேவேளை, தற்போது அகழ்வு பணிகள் இடம்பெறும் சிந்து பாத்தி மயானத்தின் சுற்றுமதில்கள் அண்மைய காலத்தில் தான் கட்டப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் இதொரு வெட்ட வெளியாக இருந்தமையால், அகழ்வு பணிகள் நான்கு சுற்று மதில்களுக்கு இடையில் நடைபெறாது, அதன் வெளியேயும் நடைபெற வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் செய்மதி படங்களின் அடிப்படையில் ஏதெனும் சந்தேகமான இடங்கள் அடையாளம் காணப்பட்டால், அந்த இடங்களிலும் எழுமாற்றாக அகழ்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பிலான இறுதி தீர்மானங்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள வழக்கின் பின்னர் தீர்மானிக்கப்படும் என மேலும் தெரிவித்தார்

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

# தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை உடனடியாக ஒப்படைக்கக் கோரி மன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம்

07.08.2026

“சிறீலங்கா அரசே! எமது பூர்வீக நிலங்களை உடனடியாக எம்மிடம் ஒப்படையுங்கள்!”

நீண்டகாலமாக தமது பூர்வீக காணிகளை மீட்டெடுப்பதற்காக அமைதியான மற்றும் ஜனநாயக வழிகளில் தொடர்ந்து போராடி வரும் மக்களின் நீதியான கோரிக்கைகளுக்கு ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்தும் நோக்கில், 2026 ஆகஸ்ட் 7 ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணியளவில் மன்னார் நகர சுற்றுவட்டத்திற்கு முன்பாக ஜனநாயக கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வு காணி இழந்த மக்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றதுடன், MSEDO (Mannar Social and Economic Development Organization) அமைப்பின் ஒருங்கிணைப்பு மற்றும் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டது. மனித உரிமைகள், காணி உரிமைகள், சமூக நீதி மற்றும் ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் பல்வேறு சிவில் சமூக அமைப்புகள், மக்கள் அமைப்புகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களது ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்தினர்.

இந்தப் போராட்டம், யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு, முல்லைத்தீவு கேப்பாப்புலவு, மற்றும் மட்டக்களப்பு மயிலத்தமடு-மாதவனை ஆகிய பகுதிகளில் பல ஆண்டுகளாக தமது பூர்வீக நிலங்களை மீட்டெடுக்க இடையறாது போராடி வரும் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தமது வாழ்வாதாரம், அடையாளம் மற்றும் வரலாற்று மரபுகளுடன் தொடர்புடைய பூர்வீக நிலங்களை மீட்டெடுப்பதற்காக பல ஆண்டுகளாக போராடி வரும் மக்களின்







உரிமைக் குரலுடன் மன்னார் மக்களும் இணைந்து நின்றனர். காணி உரிமை என்பது வெறும் சொத்து உரிமை மட்டுமல்ல அது மனித உரிமை, வாழ்வுரிமை, சமூக நீதி மற்றும் மக்களின் கண்ணியத்துடன் நேரடியாக இணைந்த அடிப்படை உரிமையாகும் என்பதைப் பங்கேற்பாளர்கள் வலியுறுத்தினர்.

போராட்டத்தின் போது பங்கேற்பாளர்கள் பதாகைகள் மற்றும் பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு அமைதியான முறையில் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தினர். அவற்றில் குறிப்பிடத்தக்க சில:

“நிலம் எங்கள் உரிமை – நீதி எங்கள் இலக்கு!”
“எமது காணி – எமது உரிமை!”
“காணி உரிமை ஒரு மனித உரிமையாகும்!”
“காணியே எமது வாழ்க்கையும் அடையாளமும்!”
“எமது காணி – எமது குரல்!”
“மக்கள் பசியால் தவிக்கையில் மக்களின் காணிகளில் படைகள் பயிரிடுவதா?”
“வலிகாமம் வடக்கு மக்களின் காணி அபகரிப்பிற்கான உயர் பாதுகாப்பு வலயத்தை எப்போது நீக்குவீர்கள்?”
“வலிகாமம் வடக்கு மக்களின் நில மீட்பு போராட்டத்திற்கு மன்னார் மக்களின் ஆதரவு!”
“முல்லைத்தீவு கேப்பாப்புலவு மக்களின் காணி விடுவிப்பு போராட்டத்திற்கு மன்னார் மக்களின் ஆதரவு!”
“மட்டக்களப்பு மயிலத்தமடு-மாதவனை மக்களின் நீண்டகால நில உரிமைப் போராட்டத்திற்கு மன்னார் மக்களின் ஆதரவு!”
“சிறீலங்கா அரசே! பூர்வீக காணிகளை உடனடியாக உரிய மக்களிடம் ஒப்படையுங்கள்!”

இந்த அமைதியான ஜனநாயகப் போராட்டம், நிலத்தை இழந்த மக்களின் நீதி, உரிமை, கண்ணியம், பாதுகாப்பு, வாழ்வாதாரம் மற்றும் வரலாற்று அடையாளம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்ட ஒரு முக்கியமான சமூக நீதிப் போராட்டமாக அமைந்தது.

இந்தப் போராட்டத்தின் ஊடாக, அரசாங்கம் மக்களின் நீண்டகால காணி உரிமைப் பிரச்சினைகளுக்கு நீதியான மற்றும் நிலையான தீர்வை வழங்க வேண்டும்; இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள பொதுமக்களின் பூர்வீக காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த நிலங்களில் பாதுகாப்புடனும் கண்ணியத்துடனும் மீளக் குடியமர்வதற்கான நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் காணி உரிமைகள் தொடர்பான அனைத்து தீர்மானங்களும் மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பன வலியுறுத்தப்பட்டன.

ஒன்றிணைவோம் – உரிமைக்காக குரல் கொடுப்போம்.

நிலம் என்பது வெறும் மண் அல்ல அது மக்களின் வரலாறு, அடையாளம், வாழ்வாதாரம் மற்றும் எதிர்காலம்.























# விடுதலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு தமிழ் அரசியல் கைதிகளும் சிறையிலேயே உள்ளார்கள்!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் மு. கோமகன்

08.08.2026

தமிழ் அரசியல் கைதிகள் இருவருக்கு பிணை வழங்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டதான செய்தி ஒன்று அண்மையில் வெளிவந்தது. ஆனால் அவர்கள் இன்னமும் சிறைக்குள்தான் இருக்கின்றார்கள் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் மு.கோமகன் தெரிவித்துள்ளார்.

அதில் இருவருக்கு பிணை வழங்குவதற்கான மேன்முறையீட்டு வழக்கில் பிணை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு வழக்கிற்கான பிணையே வழங்கப்பட்டது. அவர்களுக்கு எதிராக வேறு நீதிமன்றங்களில், வேறு வழக்குகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

அந்தவகையில் அந்த வழக்குகளுக்கும் பிணை வழங்கப்பட்டால் மட்டுமே அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். அந்த வழக்குகளுக்குரிய திகதிகள் எதிர்வரும் 10ஆம் மாதமே உள்ளதால் அவர்கள் தொடர்ந்தும் சிறையிலேயே இருக்கின்றாகள். எனவே அவர்கள் இன்னமும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்படவில்லை என்றார்.



# யாழ். செம்மணி அகழ்வில் 507 மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

07.08.2026

யாழ். செம்மணி புதைகுழியில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் 100ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், இதுவரை 507 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.













அகழ்வாராய்ச்சியின் 100ஆவது நாளில் மேலும் எட்டு மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டதையடுத்து, மொத்த எண்ணிக்கை 507 ஆக அதிகரித்துள்ளது.

இவற்றில் 501 மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் இதுவரை முழுமையாக அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டு மீட்கப்பட்டுள்ளன.

நேற்று 2 காப்புகள், 1 சட்டை ஊசி மீட்புகப்பட்டுள்ளன. தொடரும் பணிகள், புதிய சோதனைக் குழியிலும் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளதால் அகழ்வுப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

# யாழ். வலிகாமம் வடக்கு காணிகளை விடுவிக்க வலியுறுத்தி 16ஆவது வாரமாகத் தொடரும் போராட்டம்

08.08.2026

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு காணிகளை விடுவிக்க வலியுறுத்தி 16 வாரமாக போராட்டம் தொடர்கிறது.

எமது போராட்டத்தின் வடிவை மாற்றி அரச தரப்பு மக்கள் பிரதிநிதிகளின் அலுவலகங்களையும் அரச திணைக்களங்களின் செயற்பாடுகளையும் முடக்கி எமக்கான தீர்வைக் கோரவுள்ளதாக மயிலிட்டி மீள் குடியேற்ற அபிவிருத்திக்குழு தெரிவுத்துள்ளது.

வலி வடக்கு, மயிலிட்டி பகுதியில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சிறீலங்கா இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்க வலியுறுத்தி, காணி உரிமையாளர்களினால் பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் உள்ள இராணுவத்தினரின் “கொமாண்டோ ” பங்களா முன்பாக 16 ஆவது






வெள்ளிக்கிழமையாகவும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# செம்மணியில் மனிதப் புதைகுழி; 101 நாட்களின் அகழ்வுப் பணியில் 515 மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

08.08.2026

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 47 ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய நாள் சனிக்கிழமை (8) நடைபெற்றது.














இதன்போது 8 மனித எலும்புக்கூடு இன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை அடையாளம் காணப்பட்டதில் 5 மனித எலும்புக்









# யாழ். பலாலிச் சந்தியில் காணி விடுவிப்பை வலியுறுத்தி 8ஆவது வாரமாகப் போராட்டம்!

09.08.2026

யாழ்.வலிகாமம் வடக்கு, பலாலிச் சந்தியில் காணி விடுவிப்பை வலியுறுத்தி தொடர்ந்து 8ஆவது வாரமாக இன்று 09.08. 2026 ஞாயிற்றுக்கிழமை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சொந்த நாட்டில் நாம் அகதிகளாக வாழவேண்டுமா?
எமது பலாலியில் காணிகளை எம்மிடம் ஒப்படை!
எங்கள் நிலம் எங்கள் உரிமை!

போன்ற பல்வேறு சுலோகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் தமது உரிமைக் குரலை ஓங்கி ஒலித்தனர்.

தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் ஒரு குறிப்பிட்ட மக்களே தமது உரிமைக்காகப் குரல் எழுப்பி வரும் நிலையில் பலரும் எமது மக்களின் துயரங்களை மறந்து சுகபோகங்களிலும் விடுமுறையைக் களிப்பதிலும் குறியாக இருந்துகொண்டு, பலர் சிங்கள அரசோடு ஒட்டி உறவாடி வருவதே எமது தமிழ் மக்களின் இழிநிலைக்குக் காரணமாக இருந்து வருகின்றது.

இவ்வாறு போராடும் மக்களோடு இணைந்து அனைவரும் குரல் கொடுத்தாலே எமக்கு விடிவு கிடைக்கும் என்பதே நிச்சயம்.









# திருக்கோணமலை மூதூரில் இடம்பெற்ற 17 தன்னார்வத் தொண்டர்களின் படுகொலையின் 20ஆவது ஆண்டு நினைவேந்தல்!

09.08.2026

2006ஆம் ஆண்டு மூதூரில் இடம்பெற்ற 17 தன்னார்வ தொண்டு நிறுவன ஊழியர்களின் படுகொலைச் சம்பவத்தின் 20வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை (08) மூதூரிலுள்ள தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது.





சர்வதேச அமைப்பான Action Against Hunger நிறுவனத்தில் பணியாற்றிய 17 தன்னார்வ தொண்டர்களின் நினைவாக, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.







இதன்போது உயிரிழந்த 17 பேரின் உருவப்படங்களுக்கு மலர் தூவி, சுடர் எற்றி உணர்வுபூர்வமாக நினைவு வணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஶ்ரீநேசன், வைத்தியர் ஶ்ரீநாத், வேலன் சுவாமிகள், மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தினர், அருட்தந்தை, சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தினர்.




# செம்மணியைச் சூழவுள்ள பகுதிகளிலும் மனிதப் புதைகுழித்தடம் நீள்கின்றது

10.08.2026

செம்மணி புதைகுழிக்கு அருகில் எழுமாற்றாக அகழப்பட்ட சுமார் ஒரு அடி ஆழமான குழிக்குள் தலையில்லா முண்டமாக மனித எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.அவ்வகையில் செம்மணி மனித புதைகுழியின் பரப்பளவு மேலும் பெரிதாக இருக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.






இதனிடையே 102 ஆவது நாள் அகழ்வு பணிகள் இன்றைய தினம் திங்கட்கிழமை முன்னெடுப்பட்டன.

இதுவரையிலான முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணியில் 524 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 513 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 48ஆவது நாளான இன்றைய தினம் திங்கட்கிழமை 09 என்பு கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் , ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 07 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாட்டின் காலில் அடிக்கப்பட்டும் லாடம் ஒன்றும், கை வளையல் ஒன்றும் சான்று பொருளாக மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் புதைகுழிக்கு அருகில் எழுமாற்றாக அகழப்பட்ட சுமார் ஒரு அடி ஆழமான குழிக்குள் தலையில்லா முண்டமாக மனித எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளதனை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி உறுதிப்படுத்தியுள்ளார்.

















# யாழ். கைதடியில் சிறீலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட கூட்டுறவு பணியாளர்களின் 42ஆவது நினைவேந்தல்

13.08.2026

யாழ்ப்பாணம், கைதடி பகுதியில் சிறீலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட கூட்டுறவுப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் 42 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்றைய தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.







கைதடியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில், சுடர் ஏற்றி மலர்தூபி வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கூட்டுறவுப் பணியாளர்கள், இறந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

1984 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13 திகதி தென்மராட்சி மேற்கு, கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் வைத்து சிறீலங்கா சிங்கள இராணுவத்தால், கூட்டுறவுப் பணியா ளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் 10 பேர் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

அதனைத் தொடர்ந்து அவர்களை நினைவு கூரும் முகமாக கடந்த 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் கைதடி சந்திப் பகுதியில் நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்பட்டு வருடந் தோறும் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றுவருகிறது.

www.thuyarpakirvu.com

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் தாயத்தும், ஒரு ரூபாய் நாணயமும் மீட்பு!

11.08.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் போது, எலும்புக்கூடென்றின் இடுப்பு பகுதியில் இருந்து தாயத்து ஒன்று மீட்கப்பட்டுள்ளதுடன், ஒரு ரூபாய் நாணய குற்றி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.




செம்மணி மனிதப் புதைகுழியின் 103 ஆவது நாள் அகழ்வு பணிகள் திங்கட்கிழமை (11) முன்னெடுப்பட்டன.

முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தில் இதுவரையிலான 103 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணியில் 539 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 524 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.



செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 49ஆவது நாளான இன்றைய நாள்




செவ்வாய்க்கிழமை 5 குழந்தைகளுடைய எலும்புக்கூடுகள் உட்பட 15 எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 11 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் இதுவரை 544 மனித எலும்புக்கூடுகள் அடையாளம்!

11.08.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகின்றன.
செம்மணி புதைகுழி அகழ்வின் மூன்றாம் கட்டத்தின் 50 நாளில் 304 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

முதலாம் கட்டமான 09 நாட்களும், இரண்டாம் கட்டமான 45 நாட்களுமான 54 நாட்களில் 240 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இன்றைய தினம் புதன்கிழமை 50ஆவது நாளில் 304 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தின் இதுவரையிலான 104 நாட்களில் 544 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மனிதப் புதைகுழியை அண்மித்த பகுதிகளில் அகழப்பட்ட சோதனைக்குழிகளுக்குள்ளும் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டு வருவதனால், புதைகுழியில் அளவு மேலும் விஸ்தரிக்கப்பட்டவுள்ளது.

இந்நிலையில் மேலும் பல எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்படும் சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளது.

இதனிடையே செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 50 ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய தினம் (12) நடைபெற்றபோது 05 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதேவேளை அடையாளம் காணப்பட்டதில் 06 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 544 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 530 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.












**அரச ஒடுக்குமுறை கட்டுக்கடங்காமல் உக்கிரம் அடைந்து; அதன் தாங்க முடியாத கொடுமைகளை எமது மக்கள் சந்தித்தபோதுதான்; வரலாற்றின் தன்னியல்பான விதியாக எமது விடுதலை இயங்கம் பிறப்பெடுத்தது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# 30.08.2026 ஆம் திகதி யாழில். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சர்வதேச மாநாடு: யாழ். பல்கலைக்கழக மாணவர் ஆதரவு!

12.08.2026

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தில் யாழில் நடைபெறவுள்ள சர்வதேச மாநாட்டிற்கான ஆதரவை திரட்டும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளை வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் நேற்றைய தினம் புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமான ஆகஸ்ட் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் சர்வதேச மாநாடு நடைபெறவுள்ளது.

இதற்கான முழுமையான ஆதரவை பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் திரட்டும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய அறையில் மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளுடன் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினார்.




# யாழ். செம்மணியில் மூன்றாம் கட்டத்தின் 51 நாளில் 321 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது!

13.08.2026

யாழ். செம்மணி புதைகுழியில் மூன்றாம் கட்டத்தில், இன்றைய நாள் வியாழக்கிழமை வரையிலான 51 நாட்கள் மேற்கொள்ளப் பட்ட அகழ்வு பணிகளில் 312 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை, செம்மணியில் இதுவரையில் 105 நாட்கள் மேற் கொள்ளப்பட்ட அகழ்வு பணியில் 552 எலும்புக்கூடுகள் அடை யாளம் காணப்பட்டுள்ளன.


















செம்மணியில், முதலாம் கட்டத்தின் 09 நாட்களும் , இரண்டாம் கட்டத்தில், 45 நாட்களுமாக 54 நாட்கள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளின் போது, 240 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

இந்நிலையில், மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதி மன்றம் 56 நாட்களுக்கு அனுமதி வழங்கிய நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி மூன்றாம் கட்ட பணிகள் ஆரம்பிக் கப்பட்டது.

அதன் அடிப்படையில், மூன்றாம் கட்டத்தின் இன்றைய நாள் வியாழக்கிழமை 51 ஆவது நாள் அகழ்வு பணிகள் முன்னெடுக் கப்பட்ட போது, புதிதாக 08 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 10 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டு, நீதிமன்ற கட்டுக்காவலுக்கு ஒப்படைக் கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் செம்மணியில் இதுவரையில் மேற்கொள்ளப் பட்ட முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தின் இது வரையிலான 105 நாட்கள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணி களின் போது, 552 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப் பட்டுள்ளன. அவற்றில் 540 என்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.
















**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# தென் தமிழீழம் அம்பாறை வீரமுனைப் படுகொலையின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல்

13.08.2026

அம்பாறை மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வீரமுனைக் கிராமத்தில், 1990ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 36ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு, நேற்று (12.08.2026) வீரமுனை நினைவுத் தூபியில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.





1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பகுதியில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக, சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்புக்காக வீரமுனை திரு சிந்தாயாத்திரைப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர். அவ்வாறு தஞ்சமடைந்திருந்த அப்பாவிப் பொதுமக்கள் மீது, 1990 ஆகஸ்ட் 12 மற்றும் 13ஆம் திகதிகளில் சிறீலங்கா அரச படைகளினால் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் 180-க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டதுடன், கிராமமும் தீக்கிரையாக்கப்பட்டது.

இக்கொடூரச் சம்பவத்தின் 36ஆவது ஆண்டு நினைவையொட்டி, இன்று காலை வீரமுனை நினைவுத் தூபியில் சிறப்பு நினைவு வணக்க நிகழ்வுகள் அமைதியான முறையில் நடைபெற்றன. இந்நிகழ்வின் போது, படுகொலை செய்யப்பட்ட அப்பாவிகளின் நினைவாக நினைவுத் தூபியில் ஈகைச் சுடரேற்றப்பட்டு, மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. இதில் பெருந்திரளான மக்களும், உயிரிழந்தவர்களின் உறவினர்களும் கலந்துகொண்டு உணர்வுபூர்வமாக தங்களது வணக்கம் செலுத்தியதுடன், உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்காக சிறப்புப் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டனர்.







# யாழ். ஆனைக்கோட்டையில் வரலாற்று சிறப்புமிக்க தொல்பொருட்கள் காட்சிப்படுத்தல!

13.08.2026

யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டை பகுதியில் அண்மையில் தொல்லியல் அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க தொல்பொருட்கள் இன்றைய தினம் (13) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.





ஈழத்தின் பண்டைய வரலாறு கண்காட்சியில் எமது முன்னோர் பயன்படுத்திய அரிதான பொருட்கள், பண்டைய பண்பாட்டு எச்சங்கள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் பலவும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

இக்கண்காட்சி ஈழத்தின் பண்டைய வரலாற்றினையும் ஆனைக்கோட்டைப் பிரதேசத்தின் தொன்மை சிறப்பையும் நேரில் கண்டுகொள்ளும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டுள்ளதுடன், அதனை தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம் இணைத்தல் என்பன இடம்பெற்றிருந்தன.

இதன்பின்னர் தொல்லியல் ஆய்வுத் தளமானது உத்தியோகபூர்வமாக நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து விருந்தினர்களது உரைகள், பேராசிரியர்கள் - விரிவுரையாளர்களது உரைகள் என்பன இடம்பெற்றன.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மத குருக்கள், வாழ்நாள் பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா, தொல்லியல் பேராசிரியர் ராஜ்சேமதேவா, யாழ். பல்கலைக்கழக வரலாற்று துறை தலைவர் அனித்தா சசிதரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், களனி பல்கலைக்கழக மாணவர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், மக்கள் என பலரும் கலந்துகொண்டு தொல்லியல் சின்னங்களை பார்வையிட்டுள்ளனர்.



www.sangathamil.com

# செஞ்சோலைப் படுகொலையின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல்!

14.08.2026

முல்லைத்தீவு - வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில், கடந்த 2006.08.14 அன்று சிறீலங்கா விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டுவீச்சுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 53மாணவியர்களுக்கும், நான்கு பணியாளர்களுக்குமான 20ஆம்ஆண்டு நினைவேந்தல் 14.08.2026 இன்று உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.













அந்தவகையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் சி.குகநேசனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வானது, படுகொலை இடம்பெற்ற வள்ளிபுனம் இடைக்கட்டு பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக சுடரேற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர்தூவி உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நினைவு வணக்க நிகழ்வுகளில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை தவிசாளர் வே.கரிகாலன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர்களான சி.குகநேசன், இ.கிரிதரன், அ.சற்குணதாஸ், த.தர்மலவன், ஜீ.ராதிகா, சு.வளர்மதி, மு.கஜேந்தினி, முன்னாள் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் ச.ஜீவராசா, சமூகசெயற்பாட்டாளர் த.யோகேஷ்வரன், பொது மக்கள் எனம் பலரும் பங்கேற்றிருந்தனர்

# மட்டக்களப்பு மற்றும் யாழில் செஞ்சோலை படுகொலையின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல்

14.08.2026

ஈழத் தமிழர் வரலாற்றின் ஆறா வடுவான செஞ்சோலைப் படுகொலையின் 20-ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று மட்டக்களப்பு YMCA மண்டபத்திலும், யாழ். சுதுமலையில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு, படுகொலை செய்யப்பட்ட எம் பிஞ்சு உறவுகளுக்கு மலர் வணக்கம் செலுத்தி, அவர்களின் நினைவுகளை நெஞ்சில் சுமந்து நினைவேந்தினர்.

20 ஆண்டுகளுக்கு முன், சிறீலங்கா வான்படை செஞ்சோலை வளாகத்தின் மீது 16 கொடூரக் குண்டுகளை வீசி, 54 பிஞ்சுப் பாடசாலை மாணவிகளையும் 7 பணியாளர்களையும் அநியாயமாகப் படுகொலை செய்தது.

20 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன... ஆனால், இந்த கொடூரக் இனப்படுகொலைக்கான நீதியும், சம்பந்தப்பட்டவர்கள் மீதான பொறுப்புக்கூறலும் இதுவரை எவருக்கும் வழங்கப்படவில்லை!

20 ஆண்டுகள் கடந்தாலும், செஞ்சோலையில் பறிக்கப்பட்ட அந்த பிஞ்சு உயிர்களின் நினைவுகள் எம் மனங்களில் என்றும் அழியாது.







மட்டக்களப்பு







யாழ்ப்பாணம்

# சோமரத்ன ராஜபக்சவை செம்மணிக்கு அழைத்து வாருங்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

14.08.2026

செம்மணி புதைகுழி தொடர்பில், பாடசாலை மாணவி கிரிசாந்தி கொலை கொலைக்குற்றவாளியான சோமரத்ன ராஜபக்சவை செம்மணிக்கு, அரசாங்கம் அழைத்து வந்து, அடையாளப்படுத்துகின்ற இடங்களைக் அகழ வேண்டும். என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை செம்மணி மனித புதைகுழியை பார்வையிட்டார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார் .

மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் பல பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களை பற்றிய உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என தொடர்ச்சியான போராட்டங்களை அவர்களின் உறவினர்கள் முன்னெடுக்கிறார்கள்.

யாழ்ப்பாண மண்ணிலே 95 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரையான இடைப்பட்ட காலப்பகுதியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டும் , படுகொலை செய்யப்பட்டும் உள்ளனர்.

இதனை நாங்கள் சொல்லவில்லை பாடசாலை மாணவியான கிரிசாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ச சொல்லியிருக்கிறார்.

எனவே சோமரத்ன ராஜபக்சவை அரசாங்கம் செம்மணிக்கு



அழைத்து வந்து, அவர் அடையாளப்படுத்துகின்ற இடங்களைக் அகழ வேண்டும். அப்பொழுதுதான் உண்மை வெளியிலே வரும் என தெரிவித்தார்.

www.thuyarpakirvu.com

# யாழ். செம்மணியில் ஆரம்பமான செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரும் "நீதியின் ஓலம் - 2" போராட்டம்

14.08.2026

யாழி.செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரும் "நீதியின் ஓலம் - 2" போராட்டம், யாழ்ப்பாணம் செம்மணி சந்தியில் இன்று (14.08.2026) ஆரம்பமானது.







தாயகச் செயலணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த போராட்டத்தின் ஆரம்பத்தில், நினைவுத்தூபியின் முன்பாகப் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது.

இப்போராட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இன்று தொடங்கிய இப்போராட்டம் செம்மணி புதைகுழிக்கு நீதிகோரி நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்த போராட்டம், எதிர்வரும், 17 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நடைபெற்று, 17ஆம் திகதி யாழ். நகர் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பித்து, பேரணியாக, நல்லூர் கோயில் வீதியிலுள்ள ஐநா அலுவலகத்தில் சென்று மகஜர் கையளிப்பதோடு நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.













**மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்வார்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# யாழ். மயிலிட்டியில் 17ஆவது வாரமாகத் தொடரும் போராட்டம்

14.08.2026



யாழ். வலிகாமம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி , காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமாண்டோ" பங்களா முன்பாக இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 17ஆவது வாரமாக போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு யூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 17ஆவது வாரமாக போராட்டத்தை முன்னடுத்தனர்

# யாழ். செம்மணியில் 06 சோதனைக்குழிகள் அகழ்வு: அவற்றில் மூன்றில் எலும்புக்கூடுகள்

## சட்டத்தரணி வி. எஸ். நிரஞ்சன்

14.08.2026



யாழ். செம்மணி மனித புதைகுழியின் 106 ஆவது நாள் அகழ்வு பணிகள் இன்றைய நாள் வெள்ளிக்கிழமை முன்னெடுப்பட்டன.

முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தில் இதுவரையிலான 106 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணியில் 02 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 07 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.நேறள

செம்மணி மனித புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 52ஆவது நாளான இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 554 எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 547 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனித எலும்புக்கூட்டு தொகுதி ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை புதைகுழிக்கு அருகில் எழுமாறாக தோண்டப்பட்ட இரு சோதனைக்குழிகளில் இருந்தும் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இன்றைய நாள் வெள்ளிக்கிழமை புதைகுழியை தவிர மேலும் 06 சோதனைக் குழிகள் அகழப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று குழிக்குள் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது

ஏற்கனவே அகழப்பட்ட இரண்டு சோதனைக் குழிகளை தவிர மேலும் 12 சோதனை குழிகள் அகழ தீர்மானிக்கப்பட்ட நிலையில் தற்போது 06 குழிகள் தோண்டப்பட்ட நிலையில், ஏனைய 06 குழிகள் அடுத்து வரும் நாட்களில் அகழப்படவுள்ளது.

எலும்புகளை ஆய்வு செய்வதாற்கான நிதி ஒதுக்கப்பட்டு, அவை நிலுவையில் உள்ளது. மேலும் நிதிகளை விடுவிக்க தயாராகவுள்ளதாக நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்நிலையில், மேலும் அகழ்வு பணிகளை மேற்கொள்வதற்கான பாதீட்டினை சமர்ப்பிக்க நீதிமன்று அறிவுறுத்தியுள்ள நிலையில், ஒக்டோபர் மாதம் மன்று கூடும் போது பாதீடு சமர்ப்பிக்கப்பட்டதும், அரசாங்கம் நிதியை விடுவிக்கும், என எதிர்பார்ப்பதாகவும், அவ்வாறு நிதிவிடுவிக்கப்பட்டால் அடுத்த கட்ட பணிகள் முன்னெடுக்கப்படும் என சட்டத்தரணி வி.எஸ் நிரஞ்சன் தெரிவித்தார்












# கனடாவில் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் பாதிப்பு!

02.08.2026

கனடாவில் தொடர்ச்சியாக நிலவி வரும் வாழ்க்கைச் செலவு உயர்வு மற்றும் பணவீக்கம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் பாதித்து வருகிறது.

இந்நிலையில், "நாரடிவ் ரிசர்ச்" அமைப்பினால் நடத்தப்பட்ட புதிய தேசிய அளவிலான ஆய்வின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களில் 76 சதவீதத்தினர், உணவு மற்றும் மளிகைப் பொருட்களின் அதிகப்படியான விலையேற் றமே தங்களது குடும்பப் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித் துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

47 சதவீதத்தினர் எரிபொருள் விலையேற்றத்தை இரண்டாவது பெரிய நிதி நெருக்கடியாகக் குறிப்பிட்டுள்ளனர்.

33 சதவீத மக்கள் வீடுகளுக்கான அடமானக் கடன் மற்றும் வாடகையைத் தங்களின் முக்கிய நிதிச் சுமையாகக் கருது கின்றனர்.

இது தவிர, மின்சாரக் கட்டணம், வீட்டு பராமரிப்புச் செலவுகள் மற்றும் வெப்பமூட்டும் செலவுகளும் கனடா மக்களுக்கு அதி களவு நிதி பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

மளிகைப் பொருட்கள் மற்றும் எரிபொருள் போன்ற அன்றாடச் செலவுகளில் வாழ்க்கைச் செலவு உயர்வு ஏற்படுத்தியுள்ள தாக்கம் மிகவும் திடுக்கிட வைப்பதாக உள்ளது, என "நாரடிவ் ரிசர்ச்" அமைப்பின் முதன்மை செயல்பாட்டு அதிகாரி மார்கரெட் சாப்மேன் குறிப்பிட்டுள்ளார்.

விலையேற்றம் தொடர்வதால், கனடா மக்கள் தங்களுக்கு



எதிர்காலத்தில் நிதி நிவாரணம் கிடைப்பது கடினம் என்றும், இந்த உயர் விலைகளே நிலையாகத் தொடருமோ என்றும் கவலையும் சோர்வும் அடைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

# ஒன்ராரியோ அரசு சென்டினரி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு விரிவாக்கத்திற்காக 82 மில்லியன் டொலர் முதலீடு செய்கிறது!

06.07.2026

கடந்த செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 4 அன்று, ஸ்காபரோ ரூஜ் பார்க் சட்டமன்ற உறுப்பினரும் சுகாதார இணை அமைச்சரு மான விஜய் தணிகாசலம் அவர்கள், துணை முதல்வரும் சுகா தார அமைச்சருமான சில்வியா ஜோன்ஸ் மற்றும் ஸ்காபரோ சட்டமன்ற உறுப்பினர்கள் ரேமண்ட் சோ, டேவிட் ஸ்மித் ஆகி யோருடன் இணைந்து, ஸ்காபரோ சுகாதார வலையமைப்பின் சென்டினரி மருத்துவமனையில் புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணிகளை அதி காரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார்.




ஒன்ராரியோ அரசின் 82 மில்லியன் டொலருக்கும் அதிகமான முதலீட்டின் ஆதரவுடன் அமைக்கப்படும் இந்த புதிய அவசர சிகிச்சைப் பிரிவு, தற்போதைய அவசர சிகிச்சைப் பிரிவை விட 36,000 சதுர அடிக்கும் அதிகமாக விரிவுபடுத்தப்படவுள்ளது. இதன் மூலம் வேகமாக வளர்ந்து வரும் ஸ்காபரோ மக்கள் தொகைக்கு விரைவான, வசதியான மற்றும் உயர்தர அவசர மருத்துவ சேவைகளை அவர்களின் வீட்டிற்கு அருகிலேயே வழங்குவதற்கான திறன் அதிகரிக்கப்படுவதுடன், இப்பகுதியில் சுமார் 400 நல்ல ஊதியமுள்ள வேலைவாய்ப்புகளும் ஆதரிக் கப்படும்.

"ஸ்காபரோ தொடர்ந்து வளர்ந்து வரும் நிலையில், எமது சமூ கத்தின் தேவைகளுக்கு ஏற்ப சுகாதார சேவைகளையும் உட்கட்டமைப்பையும் விரிவுபடுத்துவது மிகவும் முக்கிய மானது. சென்டினரி மருத்துவமனையின் இந்த புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு, குடும்பங்கள் அவர் களுக்கு தேவையான நேரத்தில், வீட்டிற்கு அருகிலேயே விரை வான மற்றும் உயர்தர சிகிச்சையைப் பெற உதவும். ஸ்காபரோ மக்களுக்காக இந்த முக்கியமான முதலீட்டை முன்னெடுப்பதில் நான் பெருமையடைகிறேன்," என சுகாதார இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்தார்.

இந்த முதலீடு, ஸ்காபரோ சுகாதார வலையமைப்பின் ஜெனரல் மற்றும் சென்டினரி மருத்துவமனைகளில் 27 புதிய இரத்த சுத் திகரிப்பு அலகுகளை ஆதரித்தல், ஜெனரல் மருத்துவமனையில்




நவீன நோயறிதல் படமெடுப்பு மையத்தை திறத்தல் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு புதுப்பிப்பு நிதியை 50 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்தல் உள்ளிட்ட ஒன்ராரியோ அரசின் தொடர்ச்சியான முதலீடுகளின் அடுத்த கட்டமாக அமைகிறது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விரிவாக்கத்தின் மூலம், ஸ்காபரோ குடும்பங்களுக்கு தலைமுறைகள் கடந்தும் தேவை யான உயர்தர மருத்துவ சேவைகளை அவர்களின் சமூகத் திற்கு அருகிலேயே வழங்கும் வலுவான மற்றும் நவீன சுகா தார அமைப்பை உருவாக்குவதில் ஒன்ராறியோ அரசு தொடர்ந்து முன்னேறி வருகிறது.

**RECOGNISE LIBERATION TIGERS OF**

**THAMIL EELAM**

**AS A LIBERATION ORGANISATION**



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# கனடாவில் ஈ-பைக் பயன்பாடு அதிகரிப்பு; ஆபத்தும் அதிகரிப்பு

13.08.2026

கனடாவில் ஈ-பைக் பயன்பாடு அதிகரிப்பு



மின்சார ஸ்கூட்டர் மற்றும் மின்சார பைக் பயன்பாடு கனடாவில் வேகமாக அதிகரித்து வரும் நிலையில், அவற்றுடன் தொடர்புடைய விபத்துகள், உயிரிழப்புகள் மற்றும் போக்கு வரத்து விதிமீறல்களும் கணிசமாக உயர்ந்துள்ளது தீவிர கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஹாலிஃபாக்ஸ் நகரின் மையப்பகுதியில் ஈ-ஸ்கூட்டரை வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்தும் கிறிஸ் மில்லிகன் என்பவர் கூறுகையில், “வெயில் காலத்தில் நடப்பதை விட ஈ-ஸ்கூட்டரில் செல்வது மிகவும் சௌகரியமாகவும், குறைந்த செலவிலுமே அமைகிறது” என்று தெரிவித்தார்.

இருப்பினும், இந்த வசதிக்கு மத்தியில் ஆபத்துகளும் அதிகரித்து வருகின்றன. கனடிய குழந்தை மருத்துவ சங்கம் வெளியிட்டுள்ள சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, 2025 ஆம் ஆண்டில் ஈ-ஸ்கூட்டர் விபத்துகளால் 57 பேர் படுகாயமடைந்தனர்.

இதில் 18 வயதுக்குட்பட்ட 10 சிறுவர்கள் உயிரிழந்தனர் என்பது அதிர்ச்சியளிக்கும் தகவலாகும்.

மேலும், கனடிய சுகாதார தகவல் நிறுவனத்தின் தரவுகளின்படி, 2023 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் 498 பேர் ஈ-ஸ்கூட்டர் விபத்துகளால் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

விபத்துகளைக் கட்டுப்படுத்த கனடாவின் பல்வேறு நகரங்கள் தீவிர நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன: ரொரான்ரோ காவல் துறை நடத்திய இரண்டு வார போக்குவரத்து பாதுகாப்பு பிரச்சாரத்திற்கு முன்பாகவே, ஈ-ஸ்கூட்டர் மற்றும் ஈ-பைக் விதிமீறல்களுக்காக 447 அபராத செல்லான்கள் மற்றும் எச்சரிக்கைகளை வழங்கியுள்ளது.

வரும் இலையுதிர் காலம் (Fall) முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஈ-பைக் ஓட்டுவதற்குத் தடை விதிக்கப்படுவதாக நோவா ஸ்கோஷியா மாகாணம் அறிவித்துள்ளது. 2022 ஆம் ஆண்டிலேயே ஈ-ஸ்கூட்டர்களுக்கு இந்த வயதுக் கட்டுப்பாடு அமல்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து நோவா ஸ்கோஷியா பொதுப்பணித்துறை அமைச்சர் ஃப்ரெட் டில்லி கூறுகையில், “பாரம்பரிய மிதிவண்டிகளை விட இவை மணிக்கு 30 முதல் 32 கி.மீ அல்லது அதற்கு மேற்பட்ட வேகத்தில் செல்லக்கூடியவை. எனவே இவற்றைக் கையாள கூடுதல் முதிர்ச்சி தேவைப்படுகிறது” என்றார்.

14 வயதுக் கட்டுப்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்த கிறிஸ் மில்லிகன், “எனக்கும் அந்த வயதில் குழந்தைகள் உள்ளனர் 14 வயது என்பது சரியான எல்லைதான்” என்றார்.





**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளரர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு 437.345.4203**


## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# தமிழ் நாட்டுச் செய்திகள்



## தமிழ் நாடு
## கீழடியில் புதிய ஆதாரம்: உலகில் மூத்த குடிகள் தமிழர்களே!

08.08.2026

சங்க காலத் தமிழர்களின் வாழ்க்கை முறை, பண்பாடு மற்றும் நகர நாகரிகம் ஆகியவை வெறும் இலக்கியக் கற்பனைகள் அல்ல, அவை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட வரலாற்று உண்மைகள் என்பதை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மரபியல் துறை ஆய்வுக்கூடம் வெளியிட்டு வரும் புதிய ஆய்வுகள் தெள்ளத் தெளிவாக உறுதிசெய்துள்ளன.

கீழடி, கொந்தகை, ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை ஆகிய தொல்லியல் தளங்களில் கண்டெடுக்கப்பட்ட பழங்கால மனித எலும்புக்கூடுகளில் இருந்து 75,000க்கும் மேற்பட்ட மரபணு குறியீடுகள் (Genetic Markers) வெற்றிகரமாகப் பிரித்தெடுக்கப்பட்டு, மரபணு வரிசைமுறை பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இது தெற்காசிய வரலாற்றிலேயே மிக முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட இந்த பிரம்மாண்டமான DNA பகுப்பாய்வு, பழந்தமிழர்களின் மரபணுத் தொடர்ச்சியை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளது.

உலகளாவிய மனித மரபணு மாறுபாடுகளின் தொகுப்பான '1000 Genomes Project' தரவுகளுடன் இந்த முடிவுகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன.

அதில், 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய பழந்தமிழர்களின் மரபணுக்கள், இன்றைய தென்னிந்தியர்கள், இலங்கைத் தமிழர்கள் மற்றும் ஒட்டுமொத்த தெற்காசிய மக்களுடன் மிக நெருங்கிய மற்றும் நேரடி மரபணுத் தொடர்பைக் கொண்டிருப்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், தலைமுறை தலைமுறையாக இந்த மண்ணில் வாழ்ந்து வரும் மக்களின் மரபணுத் தொடர்ச்சி எவ்வித இடைவெளியுமின்றித் தொடர்வது உறுதியாகியுள்ளது.

மரபணு ஆய்வுகளுக்கு இணையாக, இங்கிலாந்தின் Liverpool John Moore பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கொந்தகையில் கண்டெடுக்கப்பட்ட மனித மண்டையோடுகளைக் கொண்டு டிஜிட்டல் முறையில் அவர்களின் முக அமைப்பை மறு உருவாக்கம் (Facial Reconstruction) செய்துள்ளனர்.

இதன்மூலம் சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் தோற்றம் எப்படி இருந்தது என்பதை நாம் நேரடியாகக் காணும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

மேலும், தொல்லியல் பானை ஓடுகளில் கண்டறியப்பட்ட புரதங்கள் மற்றும் உயிர்வேதியியல் படிவுகள் (Biochemical residues), அவர்களின் தினசரி உணவு முறையையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளன.

பானைகளில் கண்டறியப்பட்ட Cholesterol படிவுகள் அவர்கள் உணவில் இறைச்சி முக்கியப் பங்கு வகித்ததைக் காட்டுகின்றன.

மேலும், பழந்தமிழர்கள் பல வகையான நெல் ரகங்களையும், தினை போன்ற சிறுதானியங்களையும் பயிரிட்டுப் பயன்படுத்தியுள்ளனர்.

பானை எச்சங்களில் கண்டறியப்பட்ட நெய், பருப்பு, கீரை, பால், வெள்ளரிக்காய், நிலக்கடலை மற்றும் தேங்காய் ஆகிய கரிம மூலக்கூறுகள், சங்க இலக்கியங்களான குறுந்தொகை, புறநானூறு, அகநானூறு மற்றும் பொருநராற்றுப்படை ஆகிய நூல் களில் விவரிக்கப்பட்டுள்ள உணவு முறையோடு நூற்றுக்கு நூறு கச்சிதமாகப் பொருந்துகின்றன.

இலக்கிய வரிகளுக்கு அறிவியல் சான்றுகள் உயிர்கொடுத்துள்ள இந்த அரிய கண்டுபிடிப்புகள், விரைவில் சர்வதேச அறிவியல் இதழ்களில் விரிவான ஆய்வுக் கட்டுரைகளாக வெளியாகவுள்ளன.

கீழடியில் கண்டறியப்பட்ட செங்கல் கட்டடங்கள், கழிவுநீர் வடிகால் அமைப்புகள் மற்றும் தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புகள்



ஆகியவை அன்றைய தமிழர்களின் உயர்ந்த நகர நாகரிகத்தைச் பறைசாற்றுகின்றன.

அதேபோல, சிவகளையில் கண்டெடுக்கப்பட்ட இரும்புப் பொருட்கள் கி.மு. 3345-ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என Carbon Dating மூலம் தெரியவந்துள்ளது.

இது உலகிலேயே மனிதன் இரும்பை உருக்கிப் பயன்படுத்திய மிகப்பழமையான காலக்கட்டங்களில் ஒன்றாகும்.

இன்றைய நவீன அறிவியல் தொழில்நுட்பங்கள், மரபணு ஆய்வுகள் மற்றும் தொல்லியல் சான்றுகள் அனைத்தும் ஒன்றிணைந்து உரக்கச் சொல்லும் உண்மை ஒன்றுதான், தமிழினம் வெறும் பழமையான இனம் மட்டுமல்ல, உலக நாகரிகங்களின் விடியலிலேயே தன் முத்திரையை பதித்த தொன்மையான இனம்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிடப்பட்ட நகர-மைப்பு, உயர்ந்த நெசவுத் தொழில், இரும்புத் தொழில்நுட்பம், எழுத்தறிவு மற்றும் வளமான வாழ்வியலைக் கொண்டு வாழ்ந்த பழந்தமிழர்களே, இப் பூவுலகின் மூத்த குடிகள் என்பதும், மனித குல நாகரிகத்தின் ஆதித் தொட்டில் தமிழ் மண்ணே என்பதும் இந்த மரபணுப் புரட்சியின் மூலம் ஆணித்தரமாக நிலைநாட்டப்பட்டுள்ளது.

## காவிரிப் பள்ளத்தாக்கு அதிகார அமைப்பு நிறுவப்படவேண்டும்

### உவகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்

12.08.2026

**காவிரிப் பள்ளத்தாக்கு அதிகார அமைப்பு நிறுவப்படவேண்டும்!**
**அப்போதுதான் தமிழகத்திற்கு உரிமையான நீர் கிடைக்கும்**

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கை,

காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் அவசரக் கூட்டம் தில்லியில் நடைபெற்று, அதையடுத்து காவிரியிலிருந்து தமிழகத்திற்கு "கர்நாடகம் நாளொன்றுக்கு 1டி.எம்.சி. வீதம் 15 நாட்களுக்கு 15டி.எம்.சி. நீரைத் திறந்துவிட ஒழுங்காற்றுக்குழு பரிந்துரைத்தது. இதைத் தொடர்ந்து காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கூடி அதை உறுதி செய்து அவ்வாறே 15டி.எம்.சி. நீரைத் தமிழகத்திற்குத் திறந்துவிடுமாறு கர்நாடகத்திற்கு ஆணைப் பிறப்பித்தது.

ஏற்கெனவே சூலை 28ஆம் நாள் கூடிய காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் அவசரக் கூட்டத்தில் தமிழகத்திற்கு 15 நாட்களுக்கு நாளொன்றுக்கு 3,500கன அடி வீதம் மொத்தம் 4டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிட கர்நாடகத்திற்கு ஆணையிட்டது. அந்த ஆணையை கர்நாடகம் நிறைவேற்ற மறுத்தது.

இப்போது 15டி.எம்.சி. தண்ணீரை அளிக்குமாறு காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவை "அணைகளில் தண்ணீர் இருப்பை கருத்தில் கொண்டு தண்ணீர் திறந்துவிடுவது தொடர்பாக முடிவெடுக்கப்படும்" என்று கர்நாடக முதலமைச்சர் டி.கே. சிவக்குமார் செய்தியாளர் கூட்டத்தில் அறிவித்திருக்கிறார். மேலும், "கர்நாடக விவசாயிகளைப் பாதுகாக்கவே மக்கள் எங்களை ஆட்சி அதிகாரத்தில் அமரவைத்துள்ளனர். எந்த காரணத்திற்காகவும் எந்தவொரு விவசாயிக்கும் இன்னல் நேரிட நாங்கள் விடமாட்டோம்" என அறிவித்திருப்பதின் மூலம் தமிழகத்திற்குத் தண்ணீர் தர முன்வருவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

1974ஆம் ஆண்டு நவம்பர் இறுதியில் தில்லியில் கூடிய தமிழக முதல்வர் மு. கருணாநிதி, கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்சு, கேரள முதல்வர் அச்சுதமேனன் ஆகிய மூன்றுபேரும் கூடிப் பேசி காவிரிப் பள்ளத்தாக்கு அதிகார அமைப்பு ஏற்படுத்தும் யோசனையை ஒப்புக்கொண்டார்கள். ஆனால், அந்த அமைப்பு அமைக்கப்படுவதற்கு முன்னரே இந்திய அரசு தானே இப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதாக கூறியதால், முதல்வர்களிடையே கொள்கையளவு உடன்பாட்டுடன் இந்தப்பேச்சுகள் நின்றன. அதன்பிறகு இந்திய அரசு காலம் கடத்தியதே தவிர, காவிரிப் பிரச்சனையைத் தீர்க்க முன்வரவில்லை. தொடர்ந்து வந்த பிரதமர்களும் அவ்வாறே செய்தனர். பிரதமராக பி.வி. நரசிம்மராவ் இருந்தபோது, மூன்று மாநில முதல்வர்களும் ஒப்புக்கொண்டபடி, காவிரிப் பள்ளத்தாக்கு அதிகார அமைப்பை அமைக்காமல் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் என எந்த அதிகாரமும் இல்லாத அமைப்புகளை நிறுவி பிரச்சனையை நீர்த்துப்போக வைத்தார்.

காவிரிப் பள்ளத்தாக்கு அதிகார அமைப்பு அமைக்கப்பட்டால் அதனுடைய முழு கட்டுப்பாட்டில் காவிரி தொடர்பாக இந்த மூன்று மாநிலங்களிலும் உள்ள அணைகள் பாசனக் கால்வாய்கள் அனைத்தும் அதன் அதிகார வரம்பிற்குள் சென்றுவிடும். எந்த மாநிலத்திற்கும் அணைகளின் நீரைத் திறந்துவிடுவதோ அல்லது மூடுவதோ அனைத்தும் அதனுடைய கட்டுப்பாட்டில் இருக்கும். அணையில் நீர் இல்லை நாங்கள் என்ன செய்வது? என்று கர்நாடகம் நாடகம் ஆடுவதுபோன்ற செயல்கள் நடைபெற முடியாது. அனைத்து அதிகாரமும் படைத்த அமைப்பாக அது விளங்கும்.

காவிரி நீர் மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவை கர்நாடகம் மதிக்க மறுக்கும்போது, யாரும் எதுவும் செய்ய முடிய



வில்லை. தமிழகம் மீண்டும் உச்ச நீதிமன்றத்தின் கதவைத் தட்டவேண்டிய நிலைமையில்தான் இருக்கிறது. காவிரிப் பள்ளத்தாக்கு அதிகார அமைப்பை நிறுவினாலொழிய காவிரிப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது. தமிழகத்திற்கு நியாயம் கிடைக்கும். இல்லாவிட்டால் அதுவரை தமிழகம் காவிரியில் பெருகிவரும் வெள்ள நீரைத் தவிர தனக்கு உரிமையான நீரை உரிய காலத்தில் பெறவே முடியாது

அன்புள்ள,

(பழ. நெடுமாறன்)

www.sangathamil.com




# மொராக்கோவில் இருந்து ஸ்பெயினுக்குள் கடல் வழியாக நுழைய முயன்ற 70,000க்கும் மேற்பட்ட அகதிகள்

01.08.2026

மொராக்கோவில் இருந்து ஸ்பெயின் நாட்டின் சியூட்டா எல்லைக்குள் பல்லாயிரக்கணக்கானோர் நுழைய முயன்றபோது ஏற்பட்ட தள்ளுமுள்ளு நிகழ்வு, நெரிசல், கடலில் மூழ்கியதில் 34 பேர் உயிரிழந்துள்ளனர்.



ஐரோப்பிய ஒன்றியத்தில் அமைந்துள்ள ஸ்பெயினும், ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள மொராக்கோ நாடும் அருகருகே அமைந்துள்ளன. இரு நாடுகளுக்கு இடையிலான மிகக் குறைந்த தூரமே, அதாவது 13 கிலோ மீட்டர் இடைவெளி மட்டும்தான். ஸ்பெயினில் உள்ள சியூட்டா தான் மொராக்கோவுக்கு அருகிலுள்ள எல்லைப் பகுதி ஆகும்.

முஸ்லிம் நாடான மொராக்காவில் வறுமை, வேலையின்மை போன்றவை காரணாக ஏராளமானோர் புலம்பெயர்ந்து ஸ்பெயினுக்குள் வருகின்றனர். கடந்த ஒரு வாரமாக மொராக்கோ நாட்டு மக்கள் சட்டவிரோதமாக ஸ்பெயினுக்குள் புலம் பெயர்ந்து வருகின்றனர்.

மொராக்கோ மக்களை உடனடியாக திருப்பி அனுப்பக் கூடாது என்று ஸ்பெயின் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் ஸ்பெயின் அரசு உள்ளது.

இதனிடையே, மொராக்கோ நாட்டின் ஃபனிடெக், பெலியூன் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து சுமார் 70,000 பேர் நேற்று தரை மற்றும் கடல் வழியாக ஸ்பெயின் எல்லையான சியூட்டாவை நோக்கி ஒரே நாளில் குவிந்து விட்டனர்.

ஸ்பெயின் நாட்டு உச்ச நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பு தங்களுக்கு சாதகமாக இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு ஒரே நாளில் ஏராளமான மக்கள் சியூட்டா வழியாக ஸ்பெயினுக்குள் நுழைய முயன்றனர். பொலிசாரின் கட்டுப்பாட்டையும் மீறி அவர்கள் கடல்வழியாக நுழைந்தனர். நிலைமையைக் கட்டுப்படுத்த ஸ்பெயின் அரசு எல்லைப் பகுதியில் இராணுவ வீரர்களையும், பொலிசாரைம் அதிக அளவில் குவித்திருந்தது.

ஸ்பெயின் எல்லைக்குள் வரும் மொராக்கோ மக்கள் மீது தண்ணீரைப் பீய்ச்சியடித்து பொலிசார் விரட்ட முயன்றனர். இருந்தபோதும் 64,000-க்கும் அதிகமானோர் சியூட்டா எல்லையைக் கடந்து ஸ்பெயினுக்குள் சென்றுவிட்டதாக ஸ்பெயின் நாட்டின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளு, நெரிசல், கடல் நீரில் மூழ்கியது போன்ற காரணங்களால் மொராக்கோவைச் சேர்ந்த 34 பேர் உயிரிழந்து விட்டனர். உயிரிழந்தவர்களின் சடலங்களை பொலிசார் மீட்டு மருத்துவமனைகளுக்கு அனுப்பியுள்ளனர். மேலும், மொராக்கோவில் இருந்து சியூட்டா வழியாக ஸ்பெயினுக்குள் நுழைவதைத் தடுக்க ஸ்பெயின் அரசு தீவிர கண்காணிப்பை ஏற்படுத்தியுள்ளது.



எல்லைப் பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. சியூட்டா பகுதியை நோக்கி வரும் பொதுமக்களைத் தடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# இசுரவேலின் இனப்படுகொலையில் இந்தியாவும் பங்காளி

## அனைத்துலக மன்னிப்புச் சபை

03.08.2026

காசாவில் “பாலஸ்தீனர்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடைபெற்று வரும் இனப்படுகொலையில்” பயன்படுத்தப்படக்கூடிய “கணிசமான ஆபத்து” இருந்தபோதிலும், இந்தியா இசுரவேலுக்கு ஆயுதங்களை தொடர்ந்து வழங்கி வருவதாக அனைத்துலக மன்னிப்புச் சபை (Amnesty International) தெரிவித்துள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த இந்த அமைப்பு, இந்தியா எவ்வாறு “இசுரவேலின் பாதுகாப்புத் துறையுடன் நெருக்கமான மற்றும் லாபகரமான கூட்டாண்மையை உருவாக்கியுள்ளது” என்பதையும், “இசுரவேலின் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் விநியோகச் சங்கிலிகளில் ஒரு முக்கிய பங்களிப்பாளராக மாறியுள்ளது” என்பதையும் வியாழக்கிழமையன்று (30) ஆவணப்படுத்தியது.

“அக்டோபர் 7, 2023 முதல் (காசா மீதான இசுரவேலின் மிகப்பெரிய தாக்குதல் தொடங்கிய நாள்) இந்தியாவிலிருந்து இசுரவேலுக்கு அனுப்பப்பட்ட ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் உதிரிபாகங்கள் அடங்கிய 2,596 சரக்கு ஏற்றுமதிகளை அனைத்துலக மன்னிப்புச் சபை ஆய்வாளர்கள் பகுப்பாய்வு செய்தனர்” என்று ‘இசுரவேலுக்கான ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் விநியோகம்’ என்ற தலைப்பிலான அந்த அறிக்கை தெரிவித்தது.

அந்த அறிக்கையின்படி, இந்திய நிறுவனங்கள் குறைந்தது 390,516 சிறிய ரக இராணுவ ஆயுதங்களுக்கான பாகங்கள், 564,970 வெடிபொருள் சார்ந்த பாகங்கள் (ட்ரோன் போர் முனைகள் மற்றும் பீரங்கி குண்டுகளின் உறைகள் போன்றவை) மற்றும் 298 இராணுவ வாகனங்களுக்கான உதிரி பாகங்களை இசுரவேலிய இராணுவ விநியோகஸ்தர்களுக்க




வழங்கியுள்ளன. சிவிலியன் பயன்பாட்டிற்காக (பொதுமக்கள் பயன்பாட்டிற்காக) அனுப்பப்பட்டிருக்கக்கூடிய சரக்குகளைத் தங்கள் ஆராய்ச்சியாளர்கள் “முறையாக விலக்கிவிட்டதாக” அந்த மனித உரிமை அமைப்பு கூறியது.

“காசாவில் நடைபெறும் இனப்படுகொலை பல ஆண்டுகளாக ஏறக்குறைய தினமும் உலகம் முழுவதும் ஒளிபரப்பப்பட்டு வரும் நிலையிலும், இசுரவேலிய இராணுவம் மற்றும் பாதுகாப்புத் துறைக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிப்பதை” தங்கள் அமைப்பின் அறிக்கை வெளிப்படுத்துவதாக அம்னஸ்டி இன்டர்நேஷனலின் பொதுச் செயலாளர் ஆக்னஸ் கல்லா மார்ட் கூறினார்.

RECOGNISE LIBERATION TIGERS OF
THAMIL EELAM
AS A LIBERATION ORGANISATION

# 17 தொண்டு நிறுவன ஊழியர்கள் படுகொலை விவகாரம்: ஐ.நா. நிபுணர்கள் கேள்வி!

05.08.2026

திருகோணமலை - மூதூரில் 17 நிவாரணப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உண்மையையும் நீதியையும் இழப்பீட்டையும் காலதாமதமின்றி உடனடியாக வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி, சிறீலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் தீவிரமடைந்திருந்த சூழலில், மூதூரில் பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தின் அலுவலக வளாகத்தில் 17 நிவாரணப் பணியாளர்கள் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதில் பெரும்பான்மையானோர் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அக்காலகட் டத்தில் அப்பகுதி மக்களுக்கு அத்தியாவசிய குடிநீர் மற்றும் சுகாதார சேவைகளை வழங்கி வந்த ஒரே சர்வதேச தொண்டு நிறுவனமாக ஏசிஎப் (ACF) மாத்திரமே தொழிற்பட்டு வந்தது.

இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஐ.நா நிபுணர்கள், கொல்லப்பட்டவர்கள் எவரும் ஆயுதம் ஏந்திய போராளிகள் அல்ல எனவும், அவர்கள் ஆயுத மோதலில் சிக்கிய பொதுமக்க ளுக்கு உயிர்காக்கும் உதவிகளை வழங்கி வந்த மனிதநேயப் பணியாளர்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நிவாரணப் பணியாளர்கள் மீதான இத்தாக்குதலானது சர்வ தேச மனிதநேய விதிகளுக்கு எதிரானது மட்டுமன்றி, மோத லால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்குச் சென் றடைய வேண்டிய அத்தியாவசிய உதவிகளையும் முற்றாக முடக்கியதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின இலங்கை பற்றிய விசா ரணை அறிக்கை உட்பட பல்வேறு சர்வதேச விசாரணைகள், இப்படுகொலைக்கு சிறீலங்காப் பாதுகாப்புப் படையினரே பொறுப்பு என நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருப்ப தாகத் தெரிவித்துள்ளன. இருப்பினும், இலங்கையின் உள் நாட்டு விசாரணை ஆணைக்குழுக்கள் போதிய சாட்சியங் களின்மை, சாட்சிகளுக்கான பாதுகாப்பின்மை மற்றும் அர சியல் தலையீடுகள் காரணமாக தோல்வியடைந்தன. குறிப்பாக, 2008 ஆம் ஆண்டு இந்த விசாரணைகளைக் கண்காணித்த சர்வதேச சுயாதீன புகழ்பெற்ற நபர்கள் குழு (IIGEP), சிறீலங்கா அரசிடம் அரசியல் விருப்பமின்மை நிலவுவதாகக் கூறி விசா ரணைகளில் இருந்து விலகிக்கொண்டதை ஐ.நா நிபுணர்கள் நினைவுகூர்ந்துள்ளனர்.

கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்ட போதிலும், இப் படுகொலைக்கு காரணமானவர்கள் இதுவரை கைது செய் யப்படவோ, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவோ இல்லை. இந்தத் தொடர்ச்சியான தண்டனையின்மையானது பாதிக்கப்பட்ட குடும்பங்களின் ஆறாத் துயரத்தை மேலும் நீட் டிப்பதுடன், நாட்டின் சட்டத்தின் ஆட்சியின் மீதான நம்பிக்கை யையும் சீர்குலைத்துள்ளதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

இப்படுகொலையின் விளைவாக காந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் மற்றும் கிணறுகள் சீரமைப்பு உள்ளிட்ட பணிகள் தடைப்பட்டதால், அப்பகுதியில் இருந்த 3,25,000க் கும் அதிகமான இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பற்ற குடிநீர்,



ஊட்டச்சத்தின்மை மற்றும் நீரினால் பரவும் நோய்களுக்கு ஆளாகினர்.

அத்துடன், இத்தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட அச்ச சூழ் நிலையால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து 2,000க்கும் மேற்பட்ட நிவாரணப் பணியாளர்கள் வெளி யேறியதுடன், 2009 ஆம் ஆண்டு போர் முடியும் வரை நிவாரணப் பணிகளுக்கான இடைவெளியும் பெருமளவில் சுருங்கியது.

உலகளவில் நிவாரணப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வரும் தற்போதைய சூழலில், மூதூர் படுகொலை போன்ற கொடூரச் சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூறல் இல் லாமல் இருப்பது ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என எச்சரித்துள்ள ஐ.நா நிபுணர்கள், மூதூர் படுகொலை தொடர்பில் உடனடியாக சுயாதீனமான, நடுநிலையான மற்றும் நம்பிக்கையான விசாரணைகளை மீள ஆரம்பிக்குமாறும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய இழப்பீட்டை வழங்கு மாறும் சிறீலங்கா அரசை வலியுறுத்தியுள்ளனர்.

# போர்க் குற்றமான மூதூர் படுகொலைகள் குறித்து புதிதாக விசாரணைகளை ஆரம்பியுங்கள்

## பட்டினிக்கு எதிரான இயக்கம்

07.08.2026

மூதூரில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றது மிகக் கொடூரமான படுகொலை மாத்திரம் அல்ல. மாறாக அது ஒரு போர்க்குற்றமும் சர்வதேச சட்ட மீறலுமாகும். எனவே இவ்விவ காரத்தில் 20 ஆண்டுகால தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் ஏற்றவாறு புதிதாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ‘அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்’ அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சிறீலங்கா இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக் கும் இடையிலான மோதல்கள் தீவிரமடைந்திருந்த வேளை யில், 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 ஆம் திகதியன்று ‘அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்’ (பட்டினிக்கு எதிரான இயக்கம்) அமைப் பின் 17 தன்னார்வத் தொண்டுப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இச்சம்பவம் இடம்பெற்று 20 வருடங்கள் கடந் திருக்கும் நிலையில், இன்னமும் அதற்குப் பொறுப்பானவர்கள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்தப்படவில்லை.

இதுகுறித்து அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப் பதாவது,

மூதூர் படுகொலை மனிதாபிமானப் பணியாளர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மிகமோசமான குற்றங்களில் ஒன்றாகும். இச் சம்பவம் குறித்த விசாரணைகளில் தொடக்கத்தில் இருந்தே பகிரங்கமான அரசியல் தலையீடு இருந்தது. ஆரம்பத்தில் இந்தப் படுகொலைக்கு விடுதலைப்புலிகளே காரணம் என சிறீலங்கா அரசாங்கம் பழிசுமத்தியது. இருப்பினும் இரா ணுவத்தினால் வழங்கப்பட்ட தகவல்களில் காணப்பட்ட முரண்பாடுகள் சுமார் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக நீடித்த மேலதிக விசா ரணைகளுக்கு வழிகோலின.

அதற்கமைய எமது அமைப்பினால் நடாத்தப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் கண்டறியப்பட்ட விடயங்கள் அடங்கிய அறிக்கை 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதில் இப் படுகொலைகளின் பொறுப்பாளிகள் படையினரே என்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டது. அதேபோன்று 2015 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் வெளியிடப்பட்ட விசா ரணை அறிக்கையிலும் அவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் நாம் இன்று வரை நீதிக் காவும், இப்படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதற்காகவும் தொடர்ந்து போராடிவருகிறோம். இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது குடும்பத் தினருக்கும் நீதி வழங்குவதற்கு கடந்த 20 ஆண்டுகளாக சிறீலங்கா அரசு தவறிவிட்டது.

மூதூரில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றது மிகக் கொடூரமான படுகொலை மாத்திரம் அல்ல. மாறாக அது ஒரு




போர்க்குற்றமும் சர்வதேச சட்ட மீறலுமாகும்.

இவற்றின் அடிப்படையிலேயே 20 ஆண்டுகால தண் டனைகளிலிருந்து விடுபடும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைப் பதற்கும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஏற்றவாறு புதிதாக விசாரணைகளை ஆரம் பிக்குமாறு நாம் கோருகிறோம் என அவ்வறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

**முக்கிய அறிவித்தல்**

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# போராட்ட வடிவங்கள் மாறலாம்; ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



**சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழ வேண்டும்; தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழ வேண்டும்; பயந்து பயந்து பதற்றத்துடன் வாழ வேண்டும்; படிப்படியாக அழிந்து போக வேண்டும்.**

போராட்ட வடிவங்கள் மாறலாம்; ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.

அறப்போரிலும் சரி ஆயுதப் போரிலும் சரி, எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது; மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கின்றது.

இந்திய இராணுவம் எமது தாயக மண்ணில் காலடியெடுத்து வைத்த தினத்தையே எமது போராட்டத்தின் இருண்ட நாளாக நான் கருதுவேன்; எமது போராட்டத்தில் இந்திய இராணுவம் தலையீடு செய்தது, ஒரு இருண்ட அத்தியாயம் என்றே சொல்ல வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டத்தின் பளுவை அடுத்த பரம்பரை மீது சுமத்த நாம் விரும்பவில்லை; எமது கடின உழைப்பின் பயனை அவர்கள் அனுபவிக்க வேண்டும். எமது வாழ்நாளில் எமது இலட்சிய நிறைவேறாது போகலாம்; அப்படியாயின் அடுத்த தலைமுறைக்குப் போராட்டத்தைக் கையளிக்கும் தெளிந்த பார்வை எமக்குண்டு.

சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழ வேண்டும்; தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழ வேண்டும்; பயந்து பயந்து பதற்றத்துடன் வாழ வேண்டும்; படிப்படியாக அழிந்து போக வேண்டும்.

ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

எமது மக்களின் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் நிலை நாட்டவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம்; அந்தச் சுதந்திரமும் கௌரவமும் நிலைநாட்டப்படாதவரை எமது போராட்டமும் தொடரும் என்பதை, தெட்டத்தெளிவாக எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

என்றோ ஒருநாள், எதிரியானவன் எமது சமாதானக் கதவுகளைத் தட்டுவானாக இருந்தால், நாம் எமது நேசக்கரங்களை நீட்டத் தயாராக இருக்கின்றோம்.

வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.



Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




பிரான்ஸ், பாரிசில்
ஐங்கரன்
விக்கினேஸ்வராவின்
நூல்கள்
வெளியீட்டு விழா!
57, Boulevard de
Belleville, Paris-75011
மெட்ரோ: Couronnes
(M2) / Belleville (M11)
2026 செப்டம்பர் 05 -
சனிக்கிழமை
மாலை 17:00
அனைவரையும் அன்புடன்
அழைக்கிறோம்....




★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu



# ஊமைநிலவும் உப்பளக்காற்றும் உன்னை அறியும்

ஆனையிறவும்
வெற்றிலைக் கேணியும்
அடுத்தடுத்திருந்த காவலரண்களும்
ஊமைநிலவும் உப்பளக்காற்றும்
உன்னை அறியும்.
களத்தில் நீ புலியாக மட்டுமல்ல
புயலாகவும் நின்றாய்
நீ போராடியதை நான் பார்க்கவில்லை
"வோக்கிடோக்கி"யில்
உன் குரலைக் கேட்டேன்
பிறந்த பலனை என் செவிகள் பெற்றன.
நீயும் உன் தோழர்களும் புகம் வரை
எதிரி பாடிக்கொண்டு தான் இருந்தான்
இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறான்
ஈராக் மீது தொடுத்த போரில்
சவூதியில் நின்று படைகள் நடத்திய
அமெரிக்கத் தளபதி யாரெனக் கேட்டால்...
உலகம் அவனின் பெயரைச் சொல்லும்.
ஆனையிறவு உப்பள முகாமின்
உள்ளே புகுந்த புலிகளின் பெயரை
சொல்லுக் என்றால்,
எத்தனை பேர்கள் எடுத்துரைப்பார்கள்?
பரவாயில்லை.
பேர்வரும் என்றா புலிகள் விழுந்தனர்?
இல்லையே,
ஆனையிறவும்
வெற்றிலைக்கேணியும்
அடுத்தடுத் திருந்த காவலரண்களும்
ஊமைநிலவும் உப்பளக் காற்றும்
உன்னை அறியும்!



*புதுவை இரத்தினதுரை*
*எரிமலை ஆவணி 1994*

**RECOGNISE LIBERATION TIGERS OF**
**THAMIL EELAM**
**AS A LIBERATION ORGANISATION**




# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சுதுமலைப் பிரகடனம்! 04.08.1987

1987ம் ஆண்டு யூலை மாதத்தில் 'ஒப்பரேஷன் பூ மாலை' நடவடிக்கை இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையில் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளத் தயாராகியிருந்தன.

தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அழர்கள் அப்பொழுது ஈழமண்ணில் தமது தலைமையகத்தை அமைத்து, ஈழ மண்ணிலேயே நிலைகொண்டிருந்தார்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றி பிரபாகரன் அவர்களுக்கு அறிவித்து அவரது ஒப்புதலையும் எப்படியாவது பெற்றுவிடுவதற்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி திட்டம் தீட்டினார். அந்த ஒப்பந்தம் பற்றி தமிழீழத் தேசியத் மேதகு வே. பிரபாகரனுடன் நேரடியாகப் பேசுவதற்காக மேதகு வே. பிரபாகரனை புதடில்லிக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். இந்தியாவின் உதவிப் பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு சென்ற ஹர்தீப் பூரி, கப்டன் குப்தா என்ற இந்திய தூதரக அதிகாரிகள் மூலமாக இந்த அழைப்பு மேதகு வே. பிரபாகரனுக்கு விடுக்கப்பட்டிருந்தது

இலங்கை அரசிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படப்போகின்றது என்றும், 'விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்' என்பதை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், அந்த ஒப்பந்தம் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனுடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே கைச்சாத்திடப்பட உள்ளதாகவும் அந்த இந்திய அதிகாரிகள் புலிகளிடம் தெரிவித்தார்கள்.

தமிழீழத்தை கைவிடும் எந்தவொரு தீர்வுக்கும் புலிகள் சம்மதிக்கமாட்டார்கள்; என்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.

19.07.1987 இடம்பெற்ற இந்த சந்திப்பைத் தொடர்ந்து, பல தடவைகள் இந்திய அதிகாரிகளுக்கும் புலிகளின் தலைவருக்கும் இடையிலாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. தவிர்க்க முடியாமல் இந்திய நேரடித் தலையீடுகள் ஈழப் பிரச்சனையில் ஏற்பட்ட பின்னர், அதனை எப்படியாகிலும் எதிர்கொண்டேயாக வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு இருந்தது. அதனால் இந்திய பிரதமரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு இந்தியா பயணமாக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் இறுதியில் தீர்மானித்தார்.

இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நீண்டகால விரோதத்திற்கு வித்திட்ட ஒரு பயணமாக விமர்சகர்களால் கருதப்பட்ட தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் அந்த இந்தியப் பயணம், 1987ம் ஆண்டு யூலை மாதம் 24ம் திகதி இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள சுதுமலை அம்மன் கோவிலடி வயல்வெளியில் வந்திறங்கிய இந்திய உலங்குவானூர்தி மூலம் தமிழீழத் தேசியத் தலைவர் புதுடில்லி அழைத்துச் செல்லப்பட்டார்.

புதுடில்லி அழைத்துச் செல்லப்பட்ட தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான குழுவினர், இந்தியாவின் தலைநகர் புதுடில்லி யில் உள்ள 'அஷோகா' ஹோட்டலில், 518ஆம் இலக்க விடுதியில் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள் என்று கூறுவதை விட, 'சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்' என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

புலிகளின் தலைவர்கள் இருந்த விடுதியின் வெளியே இந்தியாவின் 'கறுப்புப் பூனைகள்' பாதுகாப்பு கடமைகளை மேற்கொண்டிருந்தார்கள். அறையில் இருந்த தலைவர்கள் வெளியே நடமாட இந்தக் 'கறுப்புப் பூனை' பிரிவைச் சேர்ந்த வீரர்கள் அனுமதி மறுத்திருந்தார்கள். புலிகளின் தலைவர்கள் வெளியில் எவரையும் தொடர்புகொள்ளவும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. விடுதியின் உள்ளே இருந்த தொலைபேசியின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. பேச்சுவார்தைக்கு என்று கூறி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர்கள், ஒருவகையில் சிறைவைக்கப்பட்டது போன்றே நடத்தப்பட்டார்கள்.



இந்திய அரசினதும், பிரதமர் ராஜீவ் காந்தியினதும் நேர்மையில் புலிகளைச் சந்தேகம் கொள்ளவைத்த மற்றுமொரு சம்பவமாக இந்த 'அஷோக்கா ஹோட்டல்' சிறைவைப்புச் சம்பவம் அமைந்திருந்தது.

இந்தியா மீது புலிகளுக்கு இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் சிதறடித்த ஒரு சம்பவமாக இந்த சிறைவைப்புச் சம்பவம் அமைந்திருந்தது.

இந்தியாவை நம்பி அதன் விருந்தினராக வந்திருந்த புலிகளின் தலைவரை கைதுசெய்து சிறைவைத்தது போன்று நடந்துகொண்ட இந்தியாவின் நம்பிக்கைத் துரோகச் செயலே, இந்தியா பற்றிய ஒரு எதிர் நிலைப்பாட்டை புலிகள் பிற்காலத்தில் எடுப்பதற்கும் காரணமாக அமைந்தது என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காண்பிக்கின்றார்கள்.

இந்தியாவிற்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும், இந்தியாவின் முகத்தில் கரிபூசவேண்டும் என்று ஒவ்வொரு ஈழத்தமிழனையும் நினைக்கவைத்த ஒரு சம்பவமாக இந்தச் சம்பவத்தை பல இராணுவ ஆய்வாளர்கள் அடையாளப்படுத்துகின்றார்கள்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களை அடைத்துவைத்து, பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஒப்பந்தத்தை அவர் மீது திணித்த இந்திய அரசின் அடாவடித்தனத்தையும், எதேச்சாதிகாரத்தையும், நம்பிக்கைத் துரோகத்தையும், ஈழத் தமிழர்கள் இன்றுவரை மனதினில் நிறுத்தியபடிதான் இருக்கின்றார்கள்.

24ஆம் திகதி முதல் 'அஷோகா' ஹோட்டலில் அடைத்து வைக்கப்பட்டிருந்த புலிகளின் தலைவர்களை, 28ஆம் திகதியே இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சந்தித்தார்.

புலிகளின் தலைவர்கள் வெளித் தொடர்புகள் எதுவும் இன்றி அடைத்து வைக்கப்பட்டிருந்ததால், 'புலிகள் ஒப்பந்தத்திற்குச் சம்மதித்துவிட்டார்கள்' என்று இந்திய தரப்பினரால் வெளி உலகிற்கு கூறப்பட்ட பொய்யையும் மறுப்பதற்கு எவருமே இல்லாமல் போயிருந்தது.

சிறைவைக்கப்பட்டிருந்த நிலையில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனைச் சந்தித்த ராஜீவ் காந்தி,



பலவாறான நெருக்குதல்களையும், மிரட்டல்களையும் பிரயோகித்து புலிகளை அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்தித்தார்.

வெறும் கலந்துரையாடல்களுக்கு என்று கூறி அழைத்துச் செல்












லப்பட்டிருந்த தமிழீழ தலைவர்கள் மீது இந்தியா அழுத்தங் களைப் பிரயோகித்ததானது, ஈழப் பிரச்சனையில் இந்தியாவின் மன்னிக்கமுடியாத துரோகத்தை ஈழத் தமிழருக்கு வெளிப்படுத் தியிருந்தது.

இந்தியத் தலைவருடனான சந்திப்பின் போதான அந்தச் சந்தர்ப் பத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் காணப்பட்ட மனநிலை பற்றி, அப்பொழுது தி.மு.கா. வின் 'போர் வாள்' என்று அழைக்கப்பட்டவரும், தற்போதைய ம.தி.மு.கவின் தலைவரும்,, ஈழ விடுதலை பற்றி பேசி 'பொடா' சட்டத்தின் கீழ் கைதாகி சிறை சென்றவருமான வை.கோபால சாமி (வைகோ) பின்னர் ஒரு தடவை நினைவு கூர்ந்திருந்தார்.

அஷோகா ஹோட்டலில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மீதான கடும் பாதுகாப்பு தளர்த்தப்பட்ட பின்னர், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் வை. கோபாலசாமியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசி யிருந்தார். அப்போது தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தன்னிடம் தெரிவித்ததை வை.கோபாலசாமி இவ்வாறு நினைவு கூர்ந்திருந்தார்,

அவரது குரல் இப்பொழுதும் எனது நினைவுகளில் பசுமையாக உள்ளது. பிரபாகரன் என்னிடம் கூறினார்: நாங்கள் இந்திய அர சாங்கத்தினாலும், பிரதமர் ராஜீவ் காந்தியினாலும் ஏமாற்றப் பட்டுவிட்டோம். எனது முதுகில் குத்தப்பட்டுவிட்டது. என்னிடம் சயனைட் கழுத்தில் தொங்குகின்றது. தற்கொலை செய்து விடலாமோ என்றுகூட நினைத்தேன். ஆனால், பல்லாயிரக் கணக்கான எனது சகோதர சகோதரிகளை நினைத்து என் னால் அந்த முடிவை எடுக்கமுடியவில்லை. இவ்வாறு திரு.பிர பாகரன் தெரிவித்ததாக வைகோ நினைவுகூர்ந்திருந்தார்.

இந்திய அரசினதும், பிரதமர் ராஜீவ் காந்தியினதும் இந்த துரோக நடவடிக்கையே, பின்னாளில் இந்தியாவிற்கு எதிராக பல நடவடிக்கைகளை புலிகள் எடுக்கக் காரணமாக அமைந் திருந்தன.

இந்தியத் தலைவருக்கு எதிரான துன்பியல் சம்பவம் இடம் பெறவும், இந்திய அரசின் இந்த நம்பிக்கைத் துரோகச் செயலே பிரதான காரணமாக அமைந்தது என்று ஆய்வாளர்கள் குறிப் பிடுகின்றார்கள்.

இப்படியெல்லாம் இந்தியாவால் நெருக்கடிக்குள்ளான நிலை யில் அந்த ஒப்பந்தத்தை ஏற்றதாகக் கூறி 02.08.1987 அன்று யாழ்ப்பாணம் திரும்பிய தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்கள் 04.08.1987 அன்று சுதுமலை அம்மன் ஆலய முன்றலில் ஓர் உரையை நிகழ்த்தினார்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழப் பொதுமக்கள் முன்னிலையில் நிகழ்த்திய முதலாவது உரை என்று அந்த உரை பிரசித்தி பெற்றிருந்தது.

தலைவர்.பிரபாகரன் அவர்களது அந்த உரை சுதுமலைப் பிர கடனம் என்றே வரலாற்றில் பதிவாகியுள்ளது. 'வட்டுக்கோட் டைத் தீர்மானம்', 'திம்புக் கோட்பாடு', என்பது போன்று சுதுமலையில் புலிகளின் தலைமை ஆற்றிய உரை 'சுதுமலைப் பிரகடனம்' என்றே அழைக்கப்படுகின்றது.

இந்தியாவால் ஏமாற்றப்பட்ட நிலையில், இந்தியாவால் முதுகில் குத்தப்பட்ட நிலையில், இந்தியாவால் புலிகள் நிராயுத பாணிகளாக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், விடு தலைப் புலிகளின் ஆயுதக் களைவுத் திகதிகள் தீர்மானிக்கப் பட்ட நிலையில், இன்னும் குறிப்பாகக் கூறுவதானால் இந்தியப் படைகளுக்கு எதிராகப் போராடுவது என்று புலிகள் தீர்மானம் எடுத்துவிட்ட பின்னர்தான், புலிகளின் தலைவரது சுதுமலைப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## புலிகளது சுதுமலைப் பிரகடனத்தின் தலைப்பு

**'நாங்கள் இந்தியாவை நேசிக்கின்றோம்" –இதுதான் விடுதலைப் புலிகளின் சுதுமலைப் பிரகடனத்தின் தலைப்பு.**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர் களால் மேற்கொள்ளப்பட்ட அந்த சுதுமலைப் பிரகடனத்தின் சில வாக்கியங்களை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்:

எமது அரசியல் தலைவிதியை இந்தியா என்கின்ற எமது வல் லமைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவு செய்திருக்கும் நிலையில் எம்மால் என்ன செய்ய முடியும்?

இந்தியப்பிரதமர் எனக்கு சில உறுதிப்பாடுகளை வழங்கினார். எமது மக்களின் பாதுகாப்பிற்குரிய உறுதியினையும் அவர் வழங்கினார்.

இந்தியப் பிரதமரின் ஒளிவுமறைவற்ற நேர்மையில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. அவரளித்த உறுதியிலும் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. பேரினவாத சிங்கள அரசாங்கம் மீண்டும் தமிழின ஒழிப்பைத் தொடங்குவதற்கு இந்தியா அனுமதியமளிக்க மாட்டாது என்று நாம் நம்புகின்றோம்.

இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்திய அமைதிப் படையிடம் எமது ஆயுதங்களை ஒப்படைக்கத் தீர்மானித்துள் ளோம்.

ஆயுதங்களை நாங்கள் ஒப்படைக்கவில்லையானால் நாம் இந்தியப்படைகளுடன் மோதுகின்ற சூழ்நிலை உருவாகும். இது எமக்குத் தேவையில்லை.

நாம் இந்தியாவை நேசிக்கின்றோம். இந்திய மக்களை நேசிக் கின்றோம். இந்தியப் படைகளுக்கு எதிராக நாம் எமது ஆயதங் களைப் பயன்படுத்தும் கேள்விக்கே இடமில்லை.

எமது எதிரிகளிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப் பினை இந்தியப்படைகள் ஏற்கின்றன.

எமது ஆயுதங்களை நாம் இந்தியப்படையினரிடம் ஒப்படைப் பதன் மூலம் ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரது உயிருக்கும் முழுப் பாதுகாப்பை வழங்கும் பொறுப்பினை இந்திய அர சாங்கம் ஏற்கின்றது என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்தியா எடுத்துக்கொண்ட முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கு வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை. இந்த வாய்ப்பினை அவர்களுக்கு வழங்குவோம்.

மேலே குறிப்பிடப்பட்ட வாக்கியங்கள் அனைத்துமே இந்தி யாவை நேசிக்கின்றோம் என்ற தலைப்பில் 04.08.1987 அன்று சுதுமலை அம்மன் ஆலய முன்றலில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் பல்லாயிரக்கணக் கான மக்களின் முன்னிலையில் மேற்கொண்ட சுதுமலைப் பிரகடத்தில் உள்ளடக்கப்பட்ட வாக்கியங்கள்.

திரு.பிரபாகரன் அவர்கள் இந்தச் சுதுமலைப் பிரகடனம் மேற் கொள்ளும் முன்னதாக மற்றொரு கசப்பான சம்பவத்தையும் அவர் இந்தியாவினால் எதிர்கொண்டிருந்தார்.

1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதி களில் பெங்களூரில் நடைபெற இருந்த தெற்காசிய பிராந்திய ஒத் துளைப்பு (சார்க்) மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை யின் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்தியா வருவதாக இருந்தது. அவரது இந்திய விஜயத்தின் போது புலிகள் மற்றும் தமிழ் நாட்டில் தங்கியிருந்து செயற்பட்டுக்கொண்டிருந்த தமிழ் போராட்ட இயக்கங்கள் தரப்பில் இருந்து ஜே.ஆருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படக்கூடும் என்று இந்தியாவின் புலனாய்வுத் துறை இந்தியப் பிரதமரை எச்சரிக்கை செய்திருந்தது.

அப்பொழுது ஈழப் போராட்ட அமைப்புக்களுக்கு எதிராக இந்தியா தனது நகர்வை ஆரம்பித்திருந்த காலம். ஆகவே, சார்க் மாநாட்டை அடிப்படையாக வைத்து புலிகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்க ராஜீவ் காந்தி எண்ணினார்.

1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி அதிகாலை தமிழ் நாட்டிலிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம்கள் ஒன்றுவிடாமல் முற்றுகையிடப்பட்டு அவர்களது ஆயுதங்கள் தமிழ் நாட்டுப் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டன. சுமார் 40 கோடி ரூபாய் பெறுமதியான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதத் தொகுதியினுள், SAM-7 (Surface to Air Missile) விமான எதிர்ப்பு ஏவுகணைகளும், சக்தி வாயந்த தொலைத்தொடர்பு கருவிகளும் அடங்கி இருந்ததாக அப்பொழுது செய்திகள் வெளியாகி இருந்தன.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் தமிழ் நாடு பொலிசார் கைது செய்தார்கள். பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்ட புலிகளின் தலைவரை தமிழ் நாடு பொலிசார் புகைப்படம் எடுத்ததுடன், அவரை அங்கு அவமானப்படுத்தும் விதத்திலும் நடந்துகொண்டார்கள்.

இந்தியாவின் பேச்சை மீறினால் இப்படியான இன்னல் களையெல்லாம் சந்திக்க நேரிடும் என்பதை புலிகளுக்கு உணர்த்தவே இந்தியா இந்த நகர்வை எடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து புலிகளின் தலைவர் பிரபாகரன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை சென்னையில் இருந்த புலிகளது அலுவலகத்தில் ஆரம்பித்ததைத் தொடர்ந்து, இந்தியப் பொலிகாரால் கைப்பற்றப்பட்டிருந்த புலிகளின் ஆயு தங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் என்பனவற்றை புலி களிடம் ஒப்படைக்கும்படி தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜீ.ஆர். உத்தரவு பிறப்பித்தார்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் முதற் தடவை யாக ஒரு சாத்வீகப் போராட்டத்தை நடாத்தும்படியான சந்தர்ப் பத்தை ஏற்படுத்தியிருந்த இந்தச் சம்பவமே, இந்தியா மீது புலி களை பகைகொள்ள வைத்த முதலாவது சம்பவம் என்று அர சியல் ஆய்வாளர்கள் விமர்சிக்கின்றர்கள்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்துதான் இந்தியா மீது முற்றாக நம்பிக்கை இழந்த நிலையில் புலிகளின் தலைவர் 1987ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழுப்பாணம் திரும்பினார்.

அதாவது இந்தியா மீது விடுதலைப் புலிகள் முற்றாகவே நம் பிக்கை இழந்த நிலையில், இந்தியா மீது விடுதலைப் புலிகள் மிக மோசமாகப் பகை கொண்ட நிலையில், இந்தியாவை நம்பி இனிப் போராட்டம் நடாத்துவதில்லை என்று புலிகளின் தலைமை நிலைப்பாடு எடுத்த நிலையில், இந்தியா ஆயதக் களைவு செய்ய முற்படும்பொழுது இந்தியப்படைகளுடன் மோது வதென்று புலிகள் தீர்மானம் எடுத்தபின்பு, இந்தியாவுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டும் என்று புலிகளின் தலைமை முடிவு செய்த பின்னர்தான், இந்தியாவை நேசிக்கின்றோம் என்ற தலைப்பில் பலிகளின் தலைமை சுதுமலைப் பிரகடனத்தை மேற்கொண்டிருந்ததை இங்கு சுட்டிக்காண்பிக்க விரும்பு கின்றேன்.

இன்னும் குறிப்பாகக் கூறுவதானால், இந்தியாப் படைகளுடன் மோதுவதற்கு முடிவெடுத்த நிலையில், சுதுமலைப் பிரகடனம் ஊடாக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் இந்தியாவை சிறிது காலத்திற்கு கையாள முயன்றார் என் பதைத்தான் நாம் இங்கு கவனகத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திடுதிப்பென்று இந்தியப் படைகள் வந்திறங்கிவிட்டன. வந்ததும் வராததுமாக புலிகளிடம் ஒரு ஆயுதக்களைவை இந்தியப் படைகள் செய்ய இருந்தன. ஈழத்தமிழர்களும் இந்தியாவை தமது காவல்தெய்வங்களாக நினைத்து கிட்டத்தட்ட பூசை செய்யும் நிலையில் நின்றுகொண்டிருந்தார்கள். தமிழ் நாட்டு தமிழர்களும் ஈழத் தமிழர்களைக் காப்பாற்றவே இந்தியா அங்கு சென்றுள்ளதாக நம்பிக்கொண்டிருந்தார்கள்.

தமிழ் மக்களின் மனங்களில் இந்தியாவின் உண்மையான முகத்தை தோலுரித்துக் காட்டவேண்டிய தேவை புலிகளுக்கு இருந்தது.



லெப். கேணல் திலீபன் தலைமையிலான அரசியல் பிரிவினர் அந்தக் காரியத்தைச் செய்து முடித்தனர்.









www.sangathamil.com




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வ

# 1977ஆம் ஆண்டு இனப்படுகொலை ஆகஸ்ட் 12-22

1977ஆம் ஆண்டு யூலை மாதம் இருபத்தோராம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின் விளைவாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தது. அந்தப் பொதுத் தேர்தலில் இலங்கையில் மொத்தம் 168 தொகுதிகளில் நூற்றுநாற்பது தொகுதிகளை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கைப்பற்றியது. இது 5/6 பங்கு. இந்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி இருபத்துநான்கு தொகுதிகளில் போட்டியிட்டு பதினெட்டு ஆசனங்களைக் கைப்பற்றியது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி எட்டு ஆசனங்களைக் கைப்பற்றிப் படுதோல்வி அடைந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி தாம் பதவிக்கு வந்தால், தமிழீழ தேசிய மன்றத்தைக் கூட்டுவதாகவும், தமிழீழத்தைப் பெறுவதற்கான சகல நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் கூறியிருந்தார்கள். தமிழ் மக்களும் அதனை ஏற்றுக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆணை பிறப்பித்தார்கள். இது சிங்கள ஆட்சியாளர்களிற்குப் பேரிடியாக அமைந்தது. அவர் இனக்கொலையொன்றைத் தூண்டுவதற்கான வாய்ப்பொன்றை எதிர்பார்த்திருந்தனர். அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று 1977ஆம் ஆண்டு காலகட்டத்தில் அவர்களுக்குக் கிடைத்தது.

இக் காலகட்டத்தில் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. இக் கண்காட்சிக்கு சிவில் உடையில் வந்த யாழ்ப்பாணம் காவற்றுறை நிலையத்தைச் சேர்ந்த சிறீலங்காக் காவற்றுறையினர் அங்கு வந்திருந்த பெண்களோடு பாலியற் சேட்டைகளில் ஈடுபட்டார்கள். இதனால் ஆத்திரமடைந்த யாழ்ப்பாணப் பொதுமக்களுக்கும் காவற்றுறையினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு அது கைகலப்பில் முடிந்தது. பொதுமக்களது எதிர்ப்புக்கு அஞ்சி சிவில் உடையில் நின்ற காவற்றுறையினர் ஓடித் தப்பினார்கள்.

யாழ்ப்பாணம் காவற்றுறை நிலையத்திற்குச் சென்ற அவர்கள் ஆயுதபாணிகளாகப் பல நூற்றுக்கணக்கான காவற்றுறையினரை இறக்குகளிலும், ஜீப் வண்டியிலும் ஏற்றிக் கொண்டு மீண்டும் பொருட்காட்சி நடைபெற்ற இடத்திற்கு வந்து குழப்பத்தில் ஈடுபடலானார்கள். பதிலுக்கு யாழ்ப்பாணப் பொதுமக்களும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடலானார்கள். யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியிலுள்ள மதுபானக் கடையை காவற்றுறையினர் உடைத்துவிட்டு மது போதையில் ஆடிப் பாடினார்கள். யாழ்ப்பாண நகருக்குத் தீமூட்டி எரித்தார்கள். இதனால் இச்சம்பவம் ஏற்பட்டது.

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிங்கள மாணவர்களும் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதற்காக யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் அவர்களை தென்னிலங்கைக்கு அனுப்பிவைத்தது. யாழ்ப் பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்த இரவுத் தொடருந்து அனுராதபுரம் தொடருந்து நிலையத்தில் தரித்து நின்றபோது, அதில் பயணம் செய்த சிங்கள மாணவர்கள், பௌத்த பிக்கு மாணவன் ஒருவனை இருக்கையில் படுக்கவைத்து வெள்ளைத் துணியால் மூடி விட்டு அதன் மீது சிவப்பு மையை ஊற்றி தமிழர்கள் புத்த பிக்குவைக் கொன்று விட்டார்கள் என்றும் யாழ்ப்பாணத்தில் நயினா தீவுப் புத்த விகாரையை உடைத்து விட்டார்கள் என்றும் சத்தமிட்டு முழக்கமெழுப்பினர். இதனால் அந்தத் தொடருந்தில் பயணம் செய்த தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள்.

இதேவேளையில் கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்த இரவுத் தபால் தொடருந்து அநுராதபுரம் தொடருந்து நிலையத்தில் தரித்து நின்றபோது, அந்தத் தொடருந்தும் சிங்களவரால் தாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் நாடு பூராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டன. திருகோணமலை, வவுனியா, பதுளை, இரத்தினபுரி, கொழும்பு போன்ற பகுதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

இந்த இனக்கொலை பற்றிய விபரங்களை நாடாளுமன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எடுத் துக் கூறினார்கள். ஆனால், ஜே.ஆர். ஜெயவர்த்தன எதை யும் கேட்க வில்லை. அவசரகாலச் சட்டத் தைப் பிரகடனப் படுத்தவும் இல்லை. ஊரடங்குச் சட்டத் தை அமுலாக்கவும் இல்லை. மாறாகத் தமக்கு முன்னைய அரசாங்கம் போல்



அவசரகாலச் சட்டத்திற்கு நாட்டை ஆள விருப்பமில்லை என்றும் மாறாக சாதாரண சட்டத்தின் கீழேயே நாட்டை ஆளப்போவதாக கூறியதோடு "போரா? சமாதானமா?" என்ற போர்ப்பிர கடனம் ஒன்றையும் வெளியிட்டார். அதாவது தமிழ் மக்களைப் பார்த்து "நீங்கள் போருக்குத் தயார் என்றால் நானும் போருக்குத்தயார். உங்களுக்குச் சமாதானம் தேவை என்றால் நானும் சமாதானத்திற்குத் தயார். இதை தான் எமது மக்கள் சொல்கிறார்கள்" என்று நாடாளுமன்றத்திற்குள்ளேயே சன்னதம் போட்டார்.

இதன் விளைவு சிங்களக் காடையர்களுக்குத் தமிழ்மக்களைக் கொல்லவும், தமிழர் சொத்துக்களைச் சூறையாடவும் தமிழர் வீடுகளுக்குத் தீ வைக்கவும் ஜே.ஆர் அரசினால் வழங்கப்பட்ட வெளிப்படையான உரிம மாகவே கருதப்படலாயிற்று. 1977ஆம் ஆண்டு இனக் கொலையைத் தொடர்ந்து, இக்காலம் பற்றி விசாரணை செய்வதற்காக இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் சன்சோனி தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை ஜே.ஆர். நியமித்தார். விசாரணை முடிவில் சன்சோனி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிடுகையில், இந்த இனக்கொலைக்கு காவற்றுறையின் பொறுப்புணர்ச்சியற்ற போக்கும், அரசியல்வாதிகளின் பேச்சுக்கள், வதந்தி என்பனவே காரணமென அடையாளப்படுத்தினார்.

இந்த இனக்கொலையில் எல்லாமாக முன்நூறு வரையிலான தமிழர்கள் கொல்லப்பட்டதாக எடுத்துச் சொன்னார். ஆனால் வேறு அரசசார்பற்ற நிறுவனங்களினால் சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக தெரியவருகின்றது. பல நூற்றுக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர் என்றும் கத்திக்குத்து, கத்திவெட்டு, இரும்புக் கம்பிகள், பொல்லுகள் என்பனவற்றால் இவை ஏற்படுத்தப்பட்டவை என்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் அறிக்கை வெளியிட்டன. இனக்கொலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும்படி விசாரணைக்குழு பரிந்துரை செய்த போதும், எத்தகைய நட்டஈடும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசால் வழங்கப்படவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# சாம்பல்தோட்டப் படுகொலை 1984

வவுனியா நகரின் மன்னார் ரோட்டிலிருந்து மூன்று கி.மி.ல் உள்ளது, சாம்பல் தோட்டம் கிராமம். இன்று இவ்விடம், நாவலர் பாணி என்று அழைக்கப்படுகிறது.

1984 திம்பு பேச்சு வார்த்தைக்கு முன்னர் இங்கு நடைபெற்ற படுகொலையைப்பற்றி அவ்வூரைச்சேர்ந்த பெயர் சொல்ல விரும்பாத ஒரு மங்கை கூறியாது,

"ஒரு திருமண நிகழ்ச்சி முடிவுற்று தனியாருக்க சொந்தமான ஒரு பேருந்திருந்தில் 70 தமிழர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். அப் பேருந்தை பம்மைமேடு என்ற இடத்தில் சிங்கள இராணுவம் தடுத்து நிறுத்தி, அதிலிருந்த அனைவரையும் தேக்கவத்தை என்ற இடத்திலுள்ள தேக்கு மரத்தோப்புக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் 15 பெண்களையும், குழந்தைகளையும் தனியே பிரித்து அழைத்துச் சென்றனர். மீதமிருந்த ஆண்களை தேக்கு மரத்தைப் பார்க்கச் சொல்லி விட்டு, தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து கண்முடித்தனமாய் சுட்டு தள்ளினார்கள்.

சிங்கள இராணுவம், அங்கு குண்டடிபட்டு கிடந்த உடல்களை பூட்ஸ் காலால் உதைத்து புரட்டிப் பார்த்து, எவரேனும் உயிருடன் இருக்கின்றனரா, என சோதனையிட்டனர். அங்கு ஏவராவது வலியால் புலம்பும் சப்தம் கேட்டால், திரும்பவும் அவர்கள் சாகும்வரை சுட்டனர். ஆரம்பத்தில் துப்பாக்கியால் சுட்டபோது, ஒருவர் மயக்கமுற்று கீழே விழுந்து விட்டதால், அவருக்கு குண்டு எதுவும் பாயவில்லை. ஆனால் குண்டடிபட்ட வேறு நபர்கள் இருவர் இவர் மீது இரத்த வெள்ளத்தில் விழுந்தனர். இதனால், மயக்கமுற்றிருந்தவர் உடல் மீது இரத்தம் படிந்தது. இராணுவத்தினர் மயக்கமுற்றிருந்தவரை உதைத்த போது, அவர் ஏதும் சப்தம் எழுப்பாதினால், மயக்கமுற்றவரும் இறந்திருப்பார் என எண்ணி சென்று விட்டனர். இராணுவம் அங்கிருந்து சென்றது தெரிந்தவுடன், எழுந்து அருகில் உள்ள தாலம்பொக்காணை என்ற கிராமத்திற்கு ஓடினார். அக்கிராமத்தில் தமிழர்களின் நண்பராகவும் விடுதலைப்புலி ஆதரவாளராகவும் ஒரு இஸ்லாமிய தலைவர் ஒருவர் இருந்தார். அந்த தலைவர் ஒரு கடை வைத்திருந்தார். தப்பி வந்த தமிழர், நடைபெற்ற சம்பவம் குறித்து அந்த இஸ்லாமிய தலைவரிடம்



சொல்லிவிட்டு, அக்கிராமத்திலிருந்த காவல் துறைக்கு சொல்ல பயந்து, யாழ்ப்பாணதிற்கு சென்றுவிட்டார். இஸ்லாமியரும் கிராம மக்களும் படுகொலை நடந்த இடத்திற்கு சென்று பார்த்தனர், செய்தி காட்டுத் தீயாய் பரவியது.

தப்பி வந்த அந்த தமிழருக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டு பாதுகாப்பாய் அனுப்பிவைக்கப்பட்டார். நாங்கள் படுகொலை நிகழ்ந்த இடத்திற்கு சென்று பார்த்தோம். எங்கள் இருப்பிடம் அருகிலேயே இது நடந்துள்ளது. படுகொலை நடந்த இடத்தில் பெண்களின் உடல்கள் காண முடியவில்லை. அப்பெண்கள் எங்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்பதும், அவர்களின் கதி என்ன என்பதும் தெரியவில்லை என தப்பி வந்தவர் கூறினார்."

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலை கள் (1956-2008)

# 1977 ஆகஸ்ட் மாதம் தமிழின அழிப்பின் புகைப்பட காட்சிகள் யாழ்ப்பாணம்


ஆரம்பம் : எரிந்த பனையோலைக் கூடகம்


தீயில் கருகிய ஜீப் வண்டி


கொள்ளையடிக்கப்பட்ட 'லக்சலா'


(மேல்) அடையாளம் காணப்படாத உயிர்ப்பலி.
(கீழ்) உதாரணத்துக்கு ஒரு சைக்கில்.


எரிந்து... உடைந்து ... சிதறி....


பாவிகள் இட்ட தீயில் பாழடைந்த தையல் கடைகள்


எரிந்து முடிந்த பழைய மாக்கற்


அடித்து நொருக்கப்பட்ட மோட்டார் வண்டி.



வலது காலை இழந்த வரதராசன்



வந்து சேர்ந்த அகதிகளில் ஒரு பகுதியினர்



தொடைகளைத் துளைத்த சன்னங்கள் - எதிர்வீரசிங்கம்



துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான இளைஞர்கள்
பாக்கியராசா (ரவி) - ஆனந்தவேல்.



வான் நோக்கும் வள்ளுவர் - நிலம் நோக்கும் ஔவை



சிதைந்து கவிழ்ந்த சிவகுமாரன் - சோமசுந்தரப் புலவர்

# 1977 ஆகஸ்ட் மாதம் தமிழினப் படுகொலை புகைப்பட காட்சிகள் யாழ்ப்பாணம்



# துவரங்காடு வரோதயநகர் படுகொலை 17.08.1985

திருகோணமலை நகரிலிருந்து நான்கு மைல் தொலைவில் வரோதயநகரக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்திற் பெரும் பாலானவர்கள் விவசாயிகளும் கூலித் தொழிலாளர்களும் ஆவர். 17.08.1985 அன்று நண்பகல் 12.30 மணியளவில் ஆயுதம் தரித சிங்களக் குழுவினர் வெள்ளை வாகனத்தில் கிராமத்திற்குள் நுழைந்து அப்பகுதி மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் பத்துப் பேர் உயிரிழந்தனர். எட்டுப் பேர்படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01 இரத்தினம் குபேந்திரராசா - குழந்தை - 01
02 கந்தன் மாணிக்கம் - முதியவர் - 70
03 கதிர்காமு நாகேஸ்வரி - தொழிலாளி - 42
04 குணராசா மதியழகன் - மாணவன் - 08
05 குணராசா கெங்காதேவி - தொழிலாளி - 33
06 குணராசா வசிகரன் - குழந்தை - 01
07 தேசிங்கம் இன்பமலர் - சிறுமி - 06
08 தேசிங்கம் ஜெயந்தி - தொழிலாளி - 12
09 வெள்ளையன் திருச்செல்வம் - தொழிலாளி - 32
10 சீனியர் மாணிக்கம் - தொழிலாளி - 67

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# வயலூர் படுகொலை 24.08.1985

1972ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவிற் பிரதேச செயலர் பிரிவில் காணி இல்லாதிருந்த ஏழை மக்களுக்கு வயலூர்ப் பிரதேசத்தில் காணியினை வழங்கி அம்மக்களைக் குடியேற்றியதன் மூலம் இக்கிராமம் உருவாகியது. வயலூர்க் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் விவசாயத்தையே தமது பிரதான தொழிலாக மேற்கொண்டார்கள். இக்கிராமம் எத்தகைய அபிவிருத்திகளும் இன்றி வறிய மக்கள் வாழும் பிரதேசமாகும்.

1985.08.24 ஆம் திகதி அதிகாலையில் வயலூர்க் கிராமத்தினைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீடுகளில் இருந்த பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண்களைக் கைதுசெய்து தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். தமது கணவன்மாரை இராணுவத்தினர் கைதுசெய்து கொண்டு செல்ல அவர்களின் பின்னால் மனைவிமாரும் பிள்ளைகளும் சென்றார்கள். குமரன்குளம் நோக்கி காட்டுப் பாதையூடாக கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட ஆண்களின் பின்னால் சென்ற பெண்களை சிறிது தூரம் சென்றதும் திரும்பிப் போகுமாறு இராணுவத்தினர் பயமுறுத்தியதுடன், ஆண்கள் தங்களுக்கு பாதை காட்டிவிட்டுத் திரும்பி வருவார்கள் எனவும் கூறினார்கள்.

ஐம்பது பேர் வரையான ஆண்கள் இராணுவத்தினராற் குமரன்குளம் நோக்கி அழைத்து செல்லப்பட்டார்கள். இவர்களில் ஒரு சிலரே தப்பி மீண்டும் வயலூர்க் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்ட உடல்கள் குமரன்குளம் பகுதி முழுவதும் காணப்பட்டன. காயத்துடன் தப்பிய இருவரில் ஒருவருக்கு வாயினுள் துப்பாக்கியை வைத்துச் சுட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து வயலூர்க் கிராமத்து மக்கள் உடுத்த உடுப்புடன் இடம் பெயர்ந்து வேறு ஊர்களுக்குச் செல்ல வயலூர்க் கிராமம் மக்களற்ற சூனியப் பிரதேசமாக மாறியது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# நெல்லியடிச் சந்தைப்படுகொலை 29.08.1990

யாழ். குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியில் நெல்லியடி, கரவெட்டிப் பிரதேசங்கள் அமைந்துள்ளன. இது யாழ் - பருத்தித்துறை வீதியில் பருத்தித்துறையிலிருந்து மூன்று மைல் தூரத்தில் அமைந்துள்ளது. வடமராட்சியின் தெற்கு மற்றும் மேற்குப் பிரதேசங்களுக்கு மையமாக நெல்லியடி நகரமும் வடமராட்சியின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு மையமாக பருத்தித்துறை நகரும் அமைந்துள்ளது. நெல்லியடிப் பிரதேசத்தில் வாழ்கின்ற இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் தேவைகளை நிறைவு செய்வதாக நெல்லியடிச் சந்தை உள்ளது.

29.08.1990 காலை 9:30 மணியளவில் வழமைபோல தமது அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்யும் முகமாக நெல்லியடி மத்திய சந்தைக்குப் பல தரப்பட்ட கிராமத்திலிருந்தும் மக்கள் ஒன்று கூடியிருந்தார்கள். வடமராட்சி வான் பரப்பிற்குள் பிரவேசித்த இரண்டு பொம்பர் விமானங்களும் ஒரு அவ்ரோ விமானமும் இணைந்து நெல்லியடி மத்திய சந்தைப் பகுதியை நோக்கி குண்டுத் தாக்குதலை நடத்தின. காலைவேளையில் சந்தையில் பொருட்களை வாங்குவதற்கும் விற்பதற்குமென வந்த மக்களில் சிறுவர்கள், பெண்கள் உட்பட பதினாறு பேர் சம்பவ இடத்தில் உயிரிழக்க இருபத்துநான்கு பேர் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசையா புஸ்பவதி - வியாபாரம் - 50
02. ஜப்பான் - 50
03. நாகராசா ஆனந்தரவி - வியாபாரம் - 20
04. கிட்டினன் ஞானரூபன் - மாணவன் - 12
05. மகேசன் சண்முகேஸ்வரமூர்த்தி - கமம் - 36
06. முருகையா நிர்மலேஸ்வரன் - கமம் - 18
07. அப்புத்துரை குணரட்ணம் - வியாபாரம் - 54
08. பொன்னம்பலம் சோமஸ்காந்தசிவம் - அத்தியட்சகர் - 58
09. பொன்னையா மகேந்திரன் - அதிகாரி - 48
10. சோமாஸ்கந்தசிவம் மங்களநாயகி அம்மை - அதிபர் - 58
11. செல்வன் - மாணவன் - 14
12. சந்திரசேகரம் வல்லிபுரம் - கமம் - 70

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மண்டைதீவில் காணாமற்போனோர் 25.08, 23.09 1990

யாழ். நகரத்திற்குத் தெற்காக வேலணைப் பிரதேசசேயலகப்ப பிரிவினுள் ஆயிரத்து இரு நூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மண்டைதீவுப் பிரதேசம் அமைந்துள்ளது.

25.08.1990 அன்று சிங்கள இராணுவத் தினர் ஊர்காவற் துரையிலிருந்து மண்டை தீவு நோக்கி இராணுவ நடவடிக்கையை மேற் கொண்டனர். இந்நடவடிக்கையின் போது மக்களைப் பாதுகாப் புக்கருதி ஆலயங்களிற் தங்குமாறு முதல் நாள் உலங்குவானூர் தியி லிருந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கி மக் களுக்கு அறிவித்தனர். இதன்படி மண் கும்பான், அல்லைப்பிட்டி போன்ற கிராமத்து மக்கள் மண்கும்பான் அந்தோனியர் தேவா லயத்திலும், அல்லைப்பிட்டி பிலிப் நேரியார் ஆலயத்திலும் அகதிகளாகத் தஞ்சம் புகந் தனர்.

24.08.1990 அன்று மண்கும்பான் அந் தோனியார் ஆலயத்திலும், இருபத்தைந்தாம் திகதி அதிகாலை அல்லைப்பிட்டி பிலிப் நேரியார் கோயிலிலும் தஞ்சமடைந்த மக் களில் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர்களை சிங்கள இரா ணுவத்தினர் கைதுசெய்தனர். இதில் ஒரே குடம்பத்தைச் சேர்ந்த மூவர், இருவர் என மண்டைதீவில் இருபத்தெட்டுப் பேரும், அல்லைப்பிட்டியில் முப்பதிரண்டு பேரும், மண்கும்பானில் பத்துப்பேருமாக மொத்தம் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.

28.08.1990 இல் கைதுசெய்தவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டனர். பின்பு 23.09.1990 சிங்கள இராணுவத்தினரும், துணைக் குழுக் களும் சேர்ந்து மண்கும்பான் அ.த.க பாட சாலையிலிருந்து பதினெட்டு மாணவர்களைக் கைது செய்தனர். எல்லாமாக மூன்று கிராமத் திலும் எண்பத்தெட்டுப் பேர் கைது செய்யப் பட்டனர். ஆனால் இவர்கள் எவரும் இன்று வரை விடுதலையாகவில்லை.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த விஜயரட்ணம், சுகிர் தரட்ணம், பிரேமரட்ணம் ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான யேசுரட்ணத் திடம் இது தொடர்பாகக் கேட்ட போது:






“கைது செய்யப்பட்ட என் பிள்ளைகளின் நிலை தொடர்பாக 1991 ஆம் ஆண்டு முதல் வாரத் தில் நாங்கள் சீறிதர்வீதியில் இருக்கும் ஈ.பி. டி.பி செயலகத்திற்குச் சென்று டக்ளஸ் தேவா னந்தாவிடம் கேட்டோம். அப்போது அவர் அநேகமாக மூன்று பிள்ளைகள் என்றால் ஒன்றும் நடந்திருக்காது நான் அநுராதபுரம் போய்வந்து சொல்கிறேன் என்றார். அப்போது நாங்கள் பிள்ளைகளின் ஆவணங்களைக் கொடுத்தபோது அதைப் பிரதி பண்ணித் தரும் படிகேட்டார். அதன்படியே நாங்கள் அடுத்த நாள் அவரிடம் கையளித் தோம். அதன் பின்பு கூட்டுப்படைத் தள பதியாக இருந்த டென்சில் கொப் பேகடுவ அவர்களிடம் மனு செய் தோம். நேரிலும் அவரிடம் பல தடவைகள் கேட் டோம். ஒவ்வொரு முறையும் டக்ளஸ் தேவானந்தா வோடுதொடர்பு கொண்டீர்களா என்று தான் கேட்பார். கடைசி முறையாக 13.05. 1992 நானும், அப்போதைய கல்விப்பகுதி பிரதி அமைச்சர் இராஜ மனோகரி புலேந்திரன் அவர்களும் டென்சில் கொப்பேகடுவ அவர் களைக் கேட்டபோது, அவர் நான் இம்முறை தீவுப் பகுதிக்குப் போய்வந்து உங்கள் பிள்ளை களைக் காட்டுகிறேன் என்றார். அதன்பின்னர் 1992 ஆனி மாதம் இறுதி வாரத்தில் கொழும்பு பார்க் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்தில் டக்ளஸ் தேவானந் தாவைக் கேட்டோம். அவரும் தான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய் வந்து சொல்லுவதாகக் கூறினார். 14.08. 1992 திருமலை சீ.சீ.எம்.பி சிறையில் எமது பிள்ளைகள் உட்பட எண்பது பேர் மதிய உணவின் பின்னர் பாது காப்பாக வெளியே கொண்டு செல்லப்பட்டனர் என தகவல் கிடைத்தது. அதன் பின்னர் 23.12.1994 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமார துங்கவிடம் மனு பண்ணினோம். அப்போது அவர் ஆணைக்குழு விசாரணை செய்யப் போவதாகவும், அதற்கு எங்களை விண்ணப் பம் பண்ணும்படியும் சொன்னார். அதன் படியே ஆணைக்குழு விசாரணைக்கு விண் ணப்பித்தோம். 12.06.1996 இல் ஆணைக் குழு விசாரணைக்கு வரும்படி அழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஆணைக்குழுவினர் உங்கள் பிள்ளைகளைப் பற்றி டக்ளஸ் தேவானந்தாவிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் கேட்க முடியாது நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று கூறினோம். அதன்படி தாங்கள் கேட்டுச்சொல் லுவதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை எவ்வித பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை.”

சிறீலங்கா இராணுவத்தினராலும் துணைக் குழுக்களாலும் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களில் பலர் சித்திரவதைகளின் பின் உயிரிழந்ததாகவும், அவர்களது உடல்களை மண்டைதீவில் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றிற் போட்டதாக ஊர் மக்கள் தெரி வித்தனர். இவர்களிற் சிலரின் எலும்பு கூடு களும் மீட்கப்பட்டன. இவ்வாறு காணாமற் போய் உயிரிழந்தவர்களின் நினைவாக மண்டைதீவில் நினைவுக்கல் கட்டப்பட் டுள்ளது.

25.08.1990 - 23.09.1990 வரை மண்டை தீவில் கைது செய்து காணமற் போனவர்கள் விபரம்:

1. சூசைப்பிள்ளை செல்வ நாயகம் (35)
2. இ. சுதாகரன் (20)
3. இ. விபுலானந்தர் (30)
4. இரட்ணம் ஜெயசீலன் (23)
5. உதயகுமார் (-)
6. ந. குகானந்தராசா (24)
7. பாலசிங்கம் (30)
8. பத்திநாதர் டயஸ் (22)
9. பத்திநாதர் சென்யூட் (27)
10. பழனித்துரை சத்திய பாலன் (34)
11. பி.தவம் (18)
12. பி. ஜெயச்சந்திரன் (18)
13. பி. சதீஸ்வரன் (-)
14. பி. பத்மராசா (20)
15. ரி. இருதயராசா (26)
16. ரி. ஆரோக்கியநாதன் (23)
17. ரி. அருள்நேசன் (22)
18. ரி. யோகராசா (18)
19. ரி. ஞானேந்திரன் (25)
20. ரி. செல்வரட்ணம் (20)
21. ரி. சுந்தரலிங்கம் (24)
22. ரி. சாந்தலிங்கம் (20 )
23. ரி. சிமோன் (20 )
24. ரி. ராஜ்குமார் (32)
25. ரி. ராதாகிருஸ்ணன் (-)
26. ரி. ரவீந்திரன் (21)
27. வை. எட்வேட் (21)
28. த. பாலரட்ணம் (20)
29. திரநாயகம் சட்டநாத பிள்ளை (32)
30. மா. தவசீலன் (24)
31. மடுதீன் ஸ்ரானிக் (21)
32. மிசேல் ஸ்ரானிக் (19)
33. மிசேல் சில்வஸ்ரார் (32)
34. அ. அழகராசா (19)
35. அ. ஜெயசீலன் (23)
36. அன்ரன் அசில்லாஸ் (28)
37. அன்ரன் அருள்தாஸ் (26)
38. அந்தோனி ஆரோக்கிய ராசா (23)
39. அந்தோனி றொபேட் (20)
40. ஆர். முருகானந்தன் (21)
41. ஆர். ரவீந்திரன் (20)
42. அலம்பின் றொபேட் (18)
43. ஜெயக்குமார் (22)
44. ஜோர்ச் சில்வஸ்ரார் (20)
45. ஜேசுதாஸ் (-)
46. யோ. விஜயபாலன் (21)
47. நோபேட் ரமேஸ் (19)
48. கே. இந்திரகுமார் (21)
49. கே. இராசசேகரன் (21)
50. கே. பிரமாதீஸ்வரன் (22)
51. கே. பீற்றர்போல் (17)
52. கே. விஜயகுமார் (19)
53. பொ. காந்தலிங்கம் (24)
54. செ. சுவக்கிப்பிள்ளை (30)
55. சொர்ணலிங்கம் லிங்கேஸ்வரன் (21)
56. ச. சதானந்தராசா (28)
57. சாள்ஸ் அன்ரனி அன்ன தாஸ் (27)
58. சி. அரவிந்தன் (20)
59. சி. சந்தியசீலன் (29)
60. சி. விமலதாஸ் (20)
61. சிவபாலசிங்கம் (28)
62. வி. டொன்போஸ்கோ (19)
63. விஜயரட்ணம் ரவி (23)
64. வில்பிரேட் தேவராசா (25)
65. எஸ். விறேமரட்ணம் (16)
66. எஸ். திருச்செல்வம் (-)
67. எஸ். மகேந்திரன் (20)
68. எஸ். அன்பழகன் (19)
69. எஸ். அருள்நேசன் (28)
70. எஸ். செல்வநாதன் (21)
71. எஸ். சுகிர்தரட்ணம் (19)
72. எஸ். சிவரூபன் (16)
73. எஸ். சிவகுமார் (19)
74. எஸ். சிவபாலன் (19)
75. எஸ். ரஞ்சித்குமார் (19)
76. எஸ். ரவீந்திரன் (15)
77. எஸ். லிங்கேஸ்வரன் (22)
78. என். இரட்ணசிங்கம் (21)
79. என். ஜேசுதாஸ் (45)
80. எம். சிந்தாத்துரை (28)
81. என். விஜயரட்ணம் (35)

வேறு நாட்களில் காணாமற் போனவர்களின் விபரம்

1. நிசோலஸ் டயஸ் எட்வின் (17) - 17.07.1996
2. பி. வரோதயநாதன் (18) - 25.05.1993
3. தாவீது பென்ஜமீன் (25) - 1992 ஓகஸ்ட்
4. என. சச்சிதானந்தராசா (24) - 1986
5. வி. பாலரஞ்சன் (39) - 1991 பெப்ரவரி

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனை வரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# வவுனிக்குளப் படுகொலை 26.09.1996, 15.08.1997

வடக்குக் கிழக்கில் காடுகளால் அதிகம் சூழப்பட்டுள்ள மாவட்டமான முல்லைத்தீவின் தென்மேற்குப் பகுதியை அண்டிய மாந்தை கிழக்குப் பிரதேசெயலர் பிரிவினுள் வவுனிக்குளம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் அமைந்துள்ளது.

வவுனிக்குளத்திலுள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் அமைந்துள்ளது. 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் வவுனிக்குளக் கிராமதத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற பலவேறு பகுதிகளிலு மிருந்து உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து தற்காலிக இருப்பிடங்களை அமைத்து நெருக்கடிக்குள் வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் மீது 26.09.1996 அன்று பிற்பகல் 02:10 மணியளவில் சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சம்பவ இடத்தில் உடல் சிதறி உயிரிழந்ததுடன், பன்னிரண்டு பேர் வரையில் காயமடைந்தனர்.

1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் வவுனியாவின் ஓமந்தைப் பகுதியூடாக "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கை ஒன்றினை கண்டி வீதியினை பிரதான நகர்வு மையமாகக்கொண்டு மேற்கொண்டு வந்தனர். இந்த நடவடிக்கையின் போது இராணுவத்தினர் ஏவிய எறிகணைகளும், துப்பாக்கிச் சன்னங்களும், விமானக்குண்டுகளும் பொதுமக்களைத் தாக்கின. இரா ணுவ நடவடிக்கையினாற் பயந்த மக்கள் கோயில்களிலும், தேவாலயங்களிலும், பாட சாலைகளிலும் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு தஞ்சம் புகுந்த மக்களில் வவுனிக்குள மக்களும் உள்ளடங்குவர்.

15.08.1997 அன்று ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்குப் பயந்து வவுனிக்குள மக்கள் தமது பகுதியில் அமைந்துள்ள கிறித்தவ தேவாலயம் ஒன்றினுள் தஞ்சம் புகுந்தனர். இவர்களில் குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்களென பலதரப்பட்டவர்களும் காணப்பட்டனர். இதைவிட ஏனைய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களும் இவ்வாலயத்தினுள்ளேயே தஞ்சம் புகுந்தனர். இவர்கள் அனைவருமே கர்த்தரே எம்மைக் காப்பாற்றுங்களென மனதாலும், வார்த்தைகளாலும் மன்றாடிய வண்ணமே இருந்தனர்.

15.08.1997 அன்று காலை 9 மணியளவில் விமானப்படையின் இரண்டு "கிபீர்" குண்டு வீச்சு விமானங்கள் பொதுமக்கள் இருந்த தேவாலயத்தின் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இந்தக் குண்டுத் தாக்குதல் களினால் பதினொரு பொதுமக்கள் அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். பதினாறிற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தேவாலயமும் பலத்த சேதத்திற்குள்ளானது. படுகாயமடைந்த மக்களை உயிர் பிழைத்த மக்கள் மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள மல்லாவி வைத்தியசாலைக்கு வாகனத்திலும், மோட்டார் சைக்கிள்களிலும் கொண்டு சென்றனர். கொண்டு செல்லப்பட்டவர்களில் ஒருவர் 18.08.1997 அன்று வைத்தியசாலையில் இறந்தார்.

அன்றைய தினம் மீண்டும் மு.ப 11.00 மணியளவில் அப்பகுதியில் அதே விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் எட்டுப் பொது மக்கள் படுகாயமடைந்தனர். இவர்களும் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் 20.08.1997 அன்று வைத்தியசாலையில் இறந்தார். இவ்வாறாக வவுனிக்குள கிறித்தவ தேவாலயம் மீதான விமானக்குண்டு தாக்குதலில் எல்லாமாகப் பதினொரு பொதுமக்கள் உயிரிழந்ததுடன், இருபதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சின்னத்தம்பி வடிவேலு - விவசாயம் - 51
02. பெரியதம்பி சின்னராசா - விவசாயம் - 67
03. சின்னராசா புஸ்பமாலா - மாணவி - 20
04. வல்லியர் சின்னத்தம்பி - தொழிலாளி - 55
05. சந்திரசேகரம் இராஜேஸ்வரி - 32
06. இரத்தினசாமி சிவஞானசுந்தரம் - ஓய்வூதியம் -69
07. பழனியாண்டி மாரிமுத்து - மாணவர் - 18
08. இரத்தினம் இராசகுமாரி - வீட்டுப்பணி - 24
09. குணரத்தினம் சண்முகராசா - தொழிலாளி - 23
10. அருளானந்தம் விமலானந்தம் - சுய தொழில் - 30
11. தேசிங்கராஜா தங்கமணி - 48
12. தேசிங்கராஜா வசந்தகுமாரி - மாணவன் - 17
13. நடராசா புஸ்பமலர் - 41
14. நடராசா கஜன் - 04
15. அன்னமலர் - 40
16. துரைரெட்ணம் பரமேஸ்வரி - 46
17. நவரத்தினம் சாந்தி - வீட்டுப்பணி - 21

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சுனில் - 60
02. சின்னராசா கேதீஸ்வரன் - 16
03. சின்னராசா ரவிமாலா - மாணவி -12
04. சிவஞானசுந்தரம் ஜசேசன் - 22
05. தமலிங்கம் - மாணவி - 6
06. சுனில் ஜெய்சன் - 22
07. சுனில் கிளி - 24
08. நடராசா பூரணம் - 52
09. நடராசா பிரபு - 24
10. அம்பிகாவதி இந்துமதி - மாணவி - 14
11. அம்பிகாவதி கங்கையமரன் - மாணவன் - 11
12. சின்னராசா வசந்தமாலா - 24
13. எஸ்.நாகபூரணி - 32
14. பொன்னுத்துரை சுரேஸ் - 27
15. எஸ்.யோகமோகன் - 18
16. ஜெயச்சந்திரன் - மாணவன் - 15
17. ஆர்.பாஞ்சாலி - 32
18. ஜெ.மதுசன் - குழந்தை - 02
19. எம். இராசமலர் - 55
20. கௌரி - 22
21. நாகசாந்தி - மாணவி - 13
22. வி.தயானி - 18
23. வி.தர்மினா - மாணவி - 09
24. எஸ்.விஜயராஜா - 16
25. எஸ்.சந்தனம் - 59
26. எஸ்.செல்வராணி - 22
27. எஸ்.ஸ்ரீதரி - குழந்தை - 3
28. எஸ்.காணிக்கைராஜா - 38

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# புதுமுறிப்பு இடம் பெயர்ந்தோர் மீது செல்வீச்சு 30.08.2008



2006ம் ஆண்டு நடுப்பகுதியில் மன்னாரில் ஆரம்பித்துத் தொடர்ந்த மக்கள் இடப்பெயர்வு ஆகத்து 2008 இல் நெருக்கடி நிலையை அடைந்தது. அச்சமயம் வன்னியிலிருந்து அண்மையில் இடம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை 150,000 வரை எட்டிவிட்டிருந்தது. ஆகத்து 2008 இல் கிளிநொச்சி மாவட்டத்தின் புதுமுறிப்பில், இடம் பெயர்ந்த மக்கள் தொகை மிக நெரிசலாகக் காணப்பட்டது. மன்னார் மாவட்டத்தின் பரப்புக்கடந்தான் கிராமத்திலிருந்த மூன்று இளங்குடும்பத்தினர் ஆகத்து 2007 அளவில் இடம்பெயர ஆரம்பித்திருந்தனர். முதலில் மன்னாரிலுள்ள கள்ளியடிக்கும், பின்னர் அங்கிருந்து முல்லைத்தீவிலுள்ள பாலியாற்றுக்கும் அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவிலுக்கும் அதன் பின்னர் அதே மாவட்டத்தின் வன்னேரிக்குளத்துக்கும் இக் குடும்பத்தினர் இடம் பெயர்ந்திருந்தனர். அவர்கள் மீதான ஷெல் தாக்குதல் இடம் பெறுவதற்கு பத்து நாட்களின் முன்பதாகவே அவர்கள் கிளிநொச்சி மாவட்டதிலுள்ள புதுமுறிப்புக்கு இடம் பெயர்ந்திருந்தனர்.

30 ஆகத்து அன்று சிறீலங்கா இராணுவம், இந்த மூன்று குடும்பங்களும் ஒரு காணியில் அமைத்திருந்த மூன்று இருப்பிடங்களின் மத்தியில் ஷெல்களை வீசியது. இதன் விளைவாக, இன்னமும் பெயரிடப்படாத ஒரு மாதக் குழந்தை, மேலும் ஒரு குழந்தை உட்பட, இந்த மூன்று குடும்பங்களையும் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டனர். இப் படுகொலைகளின் தாக்கம் இந்த இளம் பெற்றோரையும் குழந்தைகளையும் மிக மோச மாகப் பாதித்துள்ளது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. விசுவநாதன் திலகேஸ், 35
02. கருப்பையா ஆனந்தராசா, 28
03. ஆனந்தராசா கௌதம், 02
04. குழந்தை,0



நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)








International Colloquium to Remember Tamil Victims of Enforced Disappearance and to Observe the
INTERNATIONAL DAY OF THE DISAPPEARED
அனைத்துலக காணாமல்போனோர் நாள்
SEARCHING FOR THE UNKNOWN
Feeling the Piercing Scream of the Disappeared in Sri Lanka
AUG
30
THE UN RANKS
SRI LANKA AS THE COUNTRY
WITH THE SECOND HIGHEST
NUMBER OF DISAPPEARED
IN THE WORLD
சங்கத்தமிழ்




# இலங்கையின் மகாவம்ச வரலாற்றைப் புரட்டிப்போட்ட கந்தரோடைத் தொல்லியலும் ஆதி இரும்புக்கால அறிவியல் ஆய்வுகளும்

## பகுதி – 3

### பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரீகம்



கொழும்பு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பொம்பரிப்புத் தாழி (முன்னர். ராஜா டி. சில்வாவின் 1956 அகழ்வில் பெறப்பட்டது)

**திருப்புமுனை ஆறு**

கலாநிதி விமலா பெக்லி: பொம்பரிப்பில் இரும்புக்கால பெருங்கற் தாழிப்புதையல்கள்



கலாநிதி விமலா பெக்லி

BEGLEY, VIMALA (1967): Archaeological Exploration in Northern Ceylon> Expedition Summer 1967, University of Pennsylvania, Philadelphia.

BEGLEY, VIMALA (1973): 'Protohistoric Material From Sri Lanka (Ceylon) and Indian Contacts', Ecological Backgrounds of South Asian Prehistory, ed. Kenneth A.R. Kennedy and Gregory Possehl, South Asian Occasional Papers and Thesis, Cornell University, pages 190-196.

BEGLEY, VIMALA (1981): Excavations of Iron Age Burials at Pomparippu 1970, Ancient Ceylon, No. 4: 49-95.

இந்தியாவில் நியூ டெல்லியைப் பிறப்பிடமாகக் கொண்ட விமலா சஹானி அங்கே இளமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்ற பின்னர் அமெரிக்காவின் பிலடெல்பியா பல்கலைக்கழகத்தில் தொல்லியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். பின்னர் 1965 முதல் 1967 வரை அதே பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகவும், பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் உதவிக் காப்பாளர் பதவியிலும் பணியாற்றினார். அதே பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய கலாநிதி வேய்ன் எடிசன் பேக்லியைத் (Dr. Wayne Edison Begley) திருமணம் செய்து கொண்ட பின்னர் தனது பெயரை விமலா பெக்லி என மாற்றிக்கொண்டார். தமிழ் நாட்டில் அரிக்கமேட்டில் நீண்டகாலம் அகழ்வுகளை மேற் கொண்டிருந்தார். இலங்கையில் பொம்பரிப்பு, கந்தரோடை ஆகிய தொல்லியல் தலங்களில் அகழ்வாய்வுகளை மேற் கொண்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறார். (04 May 1931 - 22 March 2000).

## அறிமுகம்

இலங்கையின் தொல்லியலில் இடைக்கற்காலத்திற்கும் ஆதார பூர்வமாக எழுதப்பட்ட வரலாற்றுக் காலத்திற்குமிடையே நீண்டதொரு கலாசார மற்றும் காலவரிசை இடைவெளி காணப் படுகிறது. இலங்கையின் பிந்திய இடைக்கற்காலத்தைப் பற்றி கணிசமான அளவு ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அதைத் தொடர்ந்த ஐயாயிரம் ஆண்டுக்கால தொல்லியல் ஆதாரங்கள் அளவிலும், தரத்திலும் அருகியே காணப் படுகின்றன. அதற்கு இலங்கை வரலாற்றின் இயல்பு, வரலாற்றுப் பதிவுகள், தொல்லியலாய்வுகளின் நோக்குநிலை என்பனவே காரணமாகும்.

இலங்கைக்கு தேரவாத பௌத்தம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு மக்கள் தொகையில் பெரும் பகுதியினரால் தழுவிக்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக இலங்கையின் கல்விசார் ஆராய்ச்சி பௌத்தமத இலக்கியங்களினது ஆய்வு மற்றும் பொருள் விளக்கம் பற்றியும், அவை எழுதப்பட்ட மொழியின் (பாளி) கற்கையிலும் மையமாக அமைந்தது. இலங்கையின் ஆய்வுகளில் காணப்பட்ட கல்வெட்டுகள் மற்றும் தொல்லியல் ஆதாரங்கள் இலக்கியங்களைச் சார்ந்து விளக்கப்பட்டன அல்லது முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன. உண்மையில் இலங்கையின் வரலாற்றாசிரியர்கள் இந்த நாட்டின் ஆதி வரலாற்றை பாளி மொழியிலுள்ள நிகழ்ச்சித் தொடர்கதையான (Chronicle) மகாவம்சத்திலிருந்தே எடுத்துரைக்கிறார்கள். மகாவம்சம் மதிப்புமிக்க ஒரு பதிவேடாக இருந்த போதிலும், ஒரு வரம்பிற்கு உட்பட்டு, பழைய காலத்து நிகழ்வுகளை புராணக்கதை போல உரைக்கிறது (Begley, V. 1981: p. 53).

இலங்கையின் இடைக்கற்கால ஆய்வுகள் விரிவாக முன்னெடுக்கப்பட்டாலும், தேசிய மற்றும் வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களைச் சுத்திகரிப்பதிலும், புனரமைப்பதிலுமே அதிக கவனம் செலுத்தப்படுகிறது. மாறாக, ஆதி மனிதர்களின் வரலாறு அல்லது அவர்களின் வாழ்வியல் கூறுகளைக் கற்றுக்கொள்வதற்கான நோக்குநிலை புறக்கணிக்கப்படுகிறது. இதன் காரணமாக இலங்கையில் தொல்லியலுக்கும் அதனைச் சார்ந்த, தொடர்புடைய துறைகளுக்கும் ஒரு பெரிய செயற்பாட்டுப் பணி காத்திருக்கிறது (Begley, V. 1981: p. 53).

இலங்கையின் இடைக்கற்காலத்திற்கும் வரலாற்றுப் பதிவுகள் ஆரம்பமான காலத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு பரவலான கருத்து நிலவுகிறது. அதாவது, வேட்டையாடி உணவு சேகரிக்கும் முறை மிக நீண்ட காலம் தொடர்ந்தது என்றும், விவசாயச் சமூகங்களின் உருவாக்கம் மற்றும் நாகரிக வளர்ச்சி என்பது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்திய இந்தோ-ஐரோப்பிய மொழியினரின் வருகைக்குப் பின்னரே நிகழ்ந்தது என்றும், அதன் தொடர்ச்சியாக இரு நூற்றாண்டுகள் கழித்து பௌத்த மதம் பரவிய பிறகே இவை முழுமை பெற்றன என்றும் ஆதாரமற்ற ஒரு நம்பிக்கை நிலவி வருகிறது. இந்தோ-ஐரோப்பிய மொழிகளும், பௌத்த மதமும் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் கலாசாரப் பண்புகள். இந்நாட்டின் வளர்ச்சிக்கும், நாகரிகத்திற்கும் அவை பெரும் உத்வேகத்தை அளித்திருக்கின்றன. ஆனாலும் மற்றைய பங்களிப்புக் காரணிகளான மக்கள் தொகைப் பரவல், சுற்றுச்சூழல், பொருளியல் கூறுகள் போன்ற அம்சங்கள் தீவிரமாக வரையறுக்கப்படவுமில்லை, அல்லது ஆய்வு செய்யப்படவுமில்லை. மக்கள் ஆதியில் மட்பாண்டங்களை உபயோகிக்க ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று உபயோகப்படுத்தும் மட்பாண்டங்கள் வரையான வரிசை (Ceramic Sequence) உபயோகமான வரலாற்றுத் தகவல்களைத் தருகிறது. இலங்கையில் அதன் கற்கைக்கான அடித்தளம் அமைக்கும் பணி இதுவரை முயற்சிக்கப்படவில்லை (Begley, V. 1981: p. 53).





இலங்கையின் இடைக்கற்காலத்திற்கும், வரலாற்றுக் காலத்திற்கும் இடையிலான இடைவெளி நிகழ்வுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையே ஒழிய அக்காலத்தில் ஒன்றும் நடைபெறவில்லை என்று அர்த்தம் அல்ல. சில சமூகங்களில் இடைக் கற்காலம் நவீன காலம் வரை நீடித்திருக்கிறது. இலங்கையின் வேடர் சமூகத்தைப் பொறுத்தவரை 'உயர் நாகரிகமும்', 'பழமையான கலாசாரங்களும்' அருகருகே ஒரே சமயத்தில் இயங்கி வந்திருக்கின்றன. இது இலங்கையில் மட்டுமல்ல, தென்னாசியாவின் வரலாற்றில் ஒரு பொதுவான அம்சம்.

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகாலம், வரலாற்று தயகாலம் என்பன தீபகற்ப இந்தியாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்று தயகாலம் என்பனவற்றுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் ஊகிக்கக்கூடிய வரையில் தீபகற்ப இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்திருக்கிறான். புத்தமத காலத்திலிருந்து தொடர்ச்சியாக இந்தியாவிற்கும் இலங்கைக்கும் தொடர்புகள் இருந்து வந்திருப்பது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படியான தொடர்புகளும், கருத்துகளின் பரிமாற்றங்களும், மக்களின் இடப்பெயர்வும் புத்தமதம் வருவதற்கு முந்திய ஆண்டுகளிலும் நடைபெற்றிருக்கும். புவி இயற்பியல் மற்றும் கலாசாரத் தொடர்புகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்டகாலமாக நடைபெற்றிருக்கும் என்பதை மறுக்க இயலாது. ஆனால், அக்



# 1970 பொம்பரிப்பு அகழ்வில் கண்ட முழுமையான தாழி

Image Source - Bennet Bronson

காலகட்டம் பற்றிய பதிவுகள் எதுவும் காணப்படவில்லை. இலங்கையின் பண்பாட்டுப் பரிணாமமானது அதன் வரலாறு நெடுகிலும் ஒரு தனித்துவமான போக்கைக் கொண்டுள்ளது. எங்களது ஆய்வுகளில் ஆதிகால வடஇந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறுதியான தொல்லியல் தொடர்புகளைக் காட்டும் சான்றுகள் ஏதும் இதுவரை காணப்படவில்லை. ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களின் பண்பாட்டுக் காலக்கணிப்பிற்கு அவற்றைத் தென்னிந்திய மட்பாண்டங்களின் தொடர்வரிசையுடன் ஒப்பிடுவதே மிகவும் பொருத்தமானதாக இருந்தது (Begley, V. 1981: p. 54).

இலங்கையின் வரலாற்றாய்வில் இடைக்கற்காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடையிலான காலப்பகுதி மிகக் குறைவாக ஆய்வு செய்யப்பட்டிருப்பது மிகவும் வெளிப்படையாகவே தெரிகிறது. எங்களது ஆய்வின் குவிமையம் இந்தக் காலப்பகுதியைக் கொண்டிருந்தது. இதன் தொடக்கப்புள்ளியாக எங்கள் ஆய்வுகளுக்கு நாங்கள் இலங்கையின் வடக்குப் பிராந்தியங்களையே தேர்ந்தெடுத்தோம். இந்தப் பகுதியைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று: இலங்கையின் வடமேற்குப் பகுதித் துறைமுகங்களுக்கும், தென்னிந்தியத் துறைகளுக்கும் இடையே அடிக்கடி நிகழும் கலாசார மற்றும் வணிகப் போக்குவரத்து காரணமாக இரு இடங்களுக்கும் இடையே நெருங்கிய ஒப்புமைகள் இருப்பதாக எதிர்பார்ப்பதனால், பண்பாடுகளின் ஒப்பீட்டுக் காலக்கணிப்புகளுக்கு இது தரவுகளை வழங்கும். இரண்டாவது: இந்தப் பிராந்தியம் இந்தியப் பெருநிலம் போன்ற சுற்றுச்சூழலைக் கொண்டு, ஒத்த பின்னணியைச் சேர்ந்த விவசாய சமூகங்களின் நகர்விற்கும் குடியேற்றத்திற்கும் ஏற்றதாக இருந்தது.

1967ஆம் ஆண்டில் இப்பிரதேசங்களில் மேலாய்வு ஒன்று நடத்தப்பட்டது (Begley, V. 1967). குடியிருப்புப் பகுதிகளில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கந்தரோடை, ஆய்விற்கு மிகவும் ஏற்றதாகப்பட்டது. இதற்கான காரணம் மிகப்பரந்த பகுதியில் மேற பரப்பு மட்பாண்டங்கள் சிதறிக் கிடந்தமை ஆகும். அவற்றினிடையே தென்னிந்திய வகை கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களும், றூலெட்டெட் மட்பாண்டங்களும் காணப்பட்டன. இடுகாட்டு மையங்களைப் பொறுத்த மட்டில் கோகபே, பொம்பரிப்பு இரண்டும் அகழ்விற்குப் பொருத்தமானதாகப்பட்டன.

1970 ஆம் ஆண்டில் கந்தரோடையிலும் பொம்பரிப்பிலும் சிறிய அளவில் அகழ்வாய்வுகள் நடத்தப்பட்டன. கந்தரோடையில் குடியேற்ற ஆரம்பகாலத்தையும், மட்பாண்டங்களின் பண்பாட்டுக் கால வரிசையையும் கண்டறிவது முக்கியமான நோக்காக இருந்தது. பொம்பரிப்பில் தாழியடக்க வளாகத்தின் தன்மையையும், அங்கே புதையுண்டிருக்கும் மக்களின் மானிடவியல் அம்சங்களை பேராசிரியர் கென்னெடியின் உதவியுடன் கண்டறிவதும் நோக்கமாக இருந்தது.

## பொம்பரிப்பு இடுகாட்டு வளாகம்

இலங்கையின் வடபகுதியில் மேற்குக் கரையில் புத்தளத்திலிருந்து 32 கி.மீ. வடக்கேயும், மன்னாரிலிருந்து 89 கி.மீ. தெற்கிலும் அமைந்திருக்கும் நன்கு அறியப்பட்ட வரலாற்றுதயகால இடுகாடு பொம்பரிப்பு. இத்தலம் வில்பத்து தேசிய காட்டு மிருகப் புகலிடத்தின் தெற்கு எல்லைக்குள் அமைந்திருப்பதனால் மக்கள் வசிக்காத பகுதியாக உள்ளது. எளிதில் கடல்வழியாக அடையக்கூடிய ஒரு கடற்கரையிலிருந்து இத்தலம் 6 கி.மீ. தொலைவில் உள்ளதனால் கடல் வழியாக இவ்விடத்தை சுலப மாக அடைய முடியும். முற்காலத்தில் கந்தரோடைக்கும் அநுராத புரத்திற்கும் வழித்தொடர்பு இருந்ததற்குத் தொல்லியல் சான்றுகள் உள்ளன. அது போன்று பொம்பரிப்புக்கும் அநுராத புரத்திற்கும் தொடர்புவழி இருந்திருக்கலாம்.

இந்த இடுகாட்டு வளாகத்திற்குச் சமீபமாக காலம் அறியப்படாத பழமையான குளங்கள் உள்ளன. இந்த இடுகாட்டுக்குத் தெற்கே 1.6 கி.மீ. தொலைவில் ஓடும் கலாஓயா நதி நன்னீருக் கான முக்கிய மூலமாகும். இந்த விசாலமான இடுகாடு ஏறக் குறைய 4 ஏக்கர் பரப்பைக் கொண்டிருக்கிறது. இதில் 1.5 முதல் 2 மீட்டர் தூரத்திற்கு ஒரு புதையல் குழி வீதம் 8,000 தாழிப் புதையல்கள் காணப் படுகின்றன. சராசரியாக ஒரு புதையல் குழியில் 1.6 தனிநபர்களின் படி இங்கே 10,000-12,000 மக்கள் புதைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த இடுகாட்டை உபயோகித்த மக்களின் குடியிருப்பு இந்த இடுகாட்டிற்குச் சமீபத்தில்தான் இருக்க வேண்டும். இந்த இடுகாட்டிற்குக் கிழக்கே 10 கி.மீ. தொலைவில் பழைய பௌத்த விகாரையான 'கல்கே விகாரை' காணப்படுகிறது.

இந்த இடத்தில் முதன் முதலாக 1924இல் A.M. ஹோகார்ட் ஒரு புதைகுழியைக் கண்டுபிடித்தார். 1956ஆம் ஆண்டில் தொல்லியல் திணைக்களத்தினருக்காக டாக்டர் ராஜா டி சில்வா அகழ்வுகளை மேற்கொண்டு பல தாழிகளை வெளிக்கொணர்ந்தார். அவரது ஆய்வு இவ்விடத்தில் ஏராளமான தாழிகளைக் கொண்ட தென்னிந்திய இரும்புக் காலத்துடன் தொடர்புடைய ஓர் இடுகாட்டு வளாகம் (Burial Complex) இருப்பதைக் காட்டியது (Deraniyagala, P.E.P. 1957:8; 1958: 16-17).

இலங்கையின் வரலாற்றுதய காலத்தைப் பற்றிய கற்கைக்கு இந்த இடுகாட்டு வளாகங்களைப் பற்றிய புரிந்துணர்வு இன்றியமையாததாகத் தோன்றுகிறது. 1967, 1970 ஆம் ஆண்டுகளில் நாங்கள் பார்வையிட்ட ஐந்து இடங்களில் பொம்பரிப்பு, அதனுடைய பரப்பினாலும், ஏற்கனவே அது பற்றிய தகவல்கள் இருப்பதாலும் அகழ்வாய்வு செய்வதற்குப் பொருத்தமான இடமாகப்பட்டது.

## புதையல்கள்

குழம்பியிராத புதையல்கள் உள்ள ஒரு பகுதியில் 100 மீ x 100 மீ. பரப்பு (100 சதுர மீட்டர்) அளந்து குறிக்கப்பட்டு அதனுள் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தளத் திட்டம், படங்கள் வரைதல், குழிகள் தோண்ட வேண்டிய இடங்கள் அனைத்தும் டாக்டர் பென்னெட் புரொன்ஸனால் மேற்கொள்ளப்பட்டன.

மொத்தத்தில் A முதல் N வரை குறிக்கப்பட்ட 14 புதையல்கள் அகழ்வு செய்யப்பட்டன. அவற்றில் குறைந்தது 23 பேர் புதைக்கப்பட்டிருப்பார்கள். இந்த இடுகாட்டு வளாகத்தையும், அதில் புதையுண்ட சமூகத்தையும் பற்றிய உறுதியான முடிவுகளைப் பெறுவதற்கு இது போதுமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கூற முடியும். எல்லாப் புதையல்களும் பல தலைமுறைகளைக் கொண்டிருந்த போதிலும், ஒரே பண்பாட்டு அம்சங்களையே வெளிப்படுத்துகின்றன. பொம்பரிப்பில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் A முதல் N வரை இலக்கமிடப்பட்ட 14 அகழ்வுக் குழிகளில் பெரிய தாழிகளும் அவற்றுள்ளே புதைக்கப்பட்டவர்களின் எலும்புகளும், அல்லது உடைந்த தாழிகளும் அவற்றோடு உடைந்த எலும்புத் துண்டுகளும், சிறிய பாத்திரங்களும், கறுப்பு-சிவப்பு மற்றும் பல வகையான மட்பாண்டங்களும், செப்புக் கம்பிகள், மணிகள், நெய்த பருத்தித் துணித்துண்டுகள், செப்புக் காப்புகள், செப்பு வளையல்கள், இரும்புக் கத்திகள், இரும்பு வேல் ஆகிய பல பொருட்களும் ஈமப் படையல்களாகக் காணப்பட்டன.



கல்லறையினுள் காணப்படும் தாழிப்புதையல்
இப்பன்கட்டுவ கல்லறைப் புதையல் இடுகாடு.


**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு**

**தொடர்புகளுக்கு 437.345.4203**

அடக்கம் செய்யும் நடைமுறைகளைப் பொறுத்த வரையில் ஒரு பொதுவான முறை வெளிப்படுகிறது. எல்லாப் புதைகுழிகளிலும் (புதைகுழி A ஒன்றைத் தவிர) தாழிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு குழியிலும் ஒன்று முதல் பல தாழிகள் காணப் படுகின்றன. குழிகள் அனைத்தும் சுண்ணாம்புப் பாறாங்கற் களால் மூடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பெரிய தாழியும் 40 முதல் 90 செ.மீ. விட்டம் கொண்டவை. எலும்புகளும், ஈமப் பொருட்களும் தாழியின் அடியில் வைக்கப்பட்டிருக்கின்றன. புதைக்க முன்னர் எலும்புகள் பிரிக்கப்பட்டு, முழுமையற்று இருக்கின்றன. இறந்த பின்னர் உடல்கள் சில நாட்கள் வெளியே வைக்கப்பட்டிருந்த பின்னரே புதைக்கப்பட்டிருக்கின்றன. சிறு பிள்ளைகளைப் பொறுத்த வரையில் அவர்களின் உடல்கள் தீக் கிரையாக்கப்பட்ட பின்னர், பாதி எரிந்த நிலையில் புதைக்கப்பட் டிருக்கின்றன. கபாலங்கள் தனியாக கறுப்பு-சிவப்பு மட்பாத் திரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. சில சமயங்களில் இரு வரின் எலும்புகள் ஒரே தாழியில் வைக்கப்பட்டிருக்கின்றன. தாழிகளில் எலும்புகளும், ஈமப் பொருட்களும் வைக்கப்பட் டிருக்கும் ஒழுங்குமுறை, இது திட்டமிட்டு நிதானமாக இப்படி இருக்கவேண்டுமென்றே வைக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. புதைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கிடையிலான பரஸ்பர உற வைக் கண்டுபிடிக்கக்கூடிய சான்றுகள் ஏதுமில்லை.

இத்தாழி அடக்கங்களில் சமூக பொருளாதார நிலைகளுக்கேற்ப வேறுபாடுகள் இருந்திருக்க வேண்டும். நாங்கள் அகழ்ந்த குழி களில் அதற்கான சான்றுகளை உறுதியாகக் காணமுடிய வில்லை. அடக்கக் குழிமீது மிக உயரமாக அமைக்கப்பட்ட மண்மேடுகள் சமூகத்தில் உயர்நிலைகளைக் கொண்டவர் களின் புதையல்களாக இருக்கலாம்.



வெளிப்படுத்தப்பட்ட இப்பன்கட்டுவ இடுகாட்டுக் கல்லறை

## தாழிப்புதையல் பொருட்கள்

எங்களது 1970ஆம் ஆண்டு அகழ்வில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான தாழிப்பொருட்களே கிடைத்தன. அதிக மான பொருட்கள் அணிகலன்களான மணிகள், வளையல்கள், காப்புகள், ஊசிகள் என்பனவாகும். மெல்லிய செப்புத் தண்டுகள் கோலம் பூசுவதற்காக (Kohl Sticks) உபயோகப்படுத்தப்பட் டிருக்கலாம். நாங்கள் அகழ்ந்த புதையல்கள் குறைவாக இருந் தமையால் இப்பண்பாட்டின் முழுமையான கற்கையைப் பெற முடியவில்லை.

## இரும்புப் பொருட்கள்

இந்த அகழ்வில் மூன்று இரும்புப் பொருட்கள் மட்டுமே கிடைத் தன. முழுமையான இலை வடிவான ஓர் இரும்புக் கத்தி கிடைத் தது. மற்ற இரு இரும்புப் பொருட்களும் உடைந்த துண்டுகளாக இருந்தன.

## செம்புப் பொருட்கள்

செம்பினால் செய்த, செம்புடன் உலோகக்கலவை செய்யப்பட்ட பொருட்கள் இரும்புடன் ஒப்பிடும்போது அதிகமாகக் கிடைத்தன. இவற்றில் ஏழு பொருட்களை எங்கள் பல்கலைக்கழக அருங் காட்சியக ஆய்வகத்திற்கு அனுப்பிப் பரிசோதித்ததில் செம்புடன் சிலவற்றில் தகரமும் ஈயமும், சிலவற்றில் ஈயம் மட்டும் கலக் கப்பட்டிருப்பது தெரிய வந்தது. இந்த உலோகங்களின் விகிதா சார அளவுகளைக் காட்டும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வில்லை.

## அகழ்வுகளில் கண்ட செப்புப் பொருட்கள்:

(1) செப்பு மணிகளால் செய்யப்பட்ட 23 கழுத்தணிகள்: இம் மணிகளைத் தொடுத்த நூல்கள் இன்னும் மணிகளோடு இணைக்கப்பட்டிருந்தன. மணிகள் 4 மி.மீ. நீளமும், 4 மி.மீ. விட்டமும், 2 மி.மீ. துவாரத்தையும் கொண்டிருந்தன.

(2) பல வகையான செப்பு வளையல்கள்: வெவ்வேறு தடிப் புகளில், உள் விட்டம் 45 மி.மீ. கொண்டவை. இவை தவிர உடைந்த வளையல் துண்டுகள் காணப்பட்டன.

(3) நுனிகள் தடித்த செப்புத் தண்டுகள், உடைந்த செப்புத் தண்டுகளின் துண்டுகள். இவை கோலக்குச்சிகளாக இருக் கலாம்.

(4) நீண்ட செப்பு ஊசிகள் - பல அளவுகளில்: 190 மி.மீ., 160 மி.மீ., 28 மி.மீ., 12 மி.மீ. நீளமானவை.

(5) 15 துண்டுகளாகப் போயிருந்த அடையாளம் தெரியாத செப்புப் பொருள்.

## மணிகள்

மொத்தமாக 171 மணிகள் கிடைத்தன. இவற்றில் ஒன்றைத் தவிர மிகுதி அனைத்தும் புதையல்களிலிருந்தே பெறப்பட்டன. ஏராளமான மணிகள் கிடைப்பதற்கான காரணம் தனிப்பட்ட நகைப் பொருட்களை இறந்தவர்களுடன் புதைக்க வேண்டும் என்ற செயலுக்குக் கொடுத்த முக்கியத்துவமாகும். மணிகள் சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், பச்சை, சாம்பல், பழுப்பு நிறங் களில் காணப்பட்டன.

## கற்கருவிகள்

எல்லாமாக ஏழு கல் செதில்களும், கல் கருவிகளும் காணப் பட்டன. இவற்றில் சில குழியின் அடியில் தாழிக்குடங்களுக்குக் கீழே காணப்பட்டன. கல் செதில்கள் மண்ணிற மஞ்சள் சேட் கல்லினால் (Chert) ஆனவை. இரு நுண்கற்கருவிகள் (Microliths) சேட், குவார்ட்ஸ் கற்களினால் செய்யப்பட்டவை.

நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்




www.sangathamil.com

# நெதர்லாந்தில் தீவிர குடியேற்ற எதிர்ப்புப் போராட்டங்கள்:
# எங்கள் நாட்டை எங்களிடம் திருப்பித் தாருங்கள்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

10.08.2026







உலகமயமாக்கலின் இக்காலத்தில் குடியேற்றம் என்பது வெறும் மக்கள் இடம்பெயர்வு மட்டுமல்ல; அது அரசியல், பொருளாதாரம், தேசிய அடையாளம், பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முக்கியமான விவகாரமாக மாறியுள்ளது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் கடந்த ஒரு தசாப்தமாக குடியேற்றம் தொடர்பான விவாதங்கள் தொடர்ந்து தீவிரமடைந்து வருகின்றன. அந்த வரிசையில், தற்போது நெதர்லாந்தில் உருவாகியுள்ள குடியேற்ற எதிர்ப்பு போராட்டங்கள் உலக அரசியலின் கவனத்தை ஈர்த்துள்ளன.

தற்போது நெதர்லாந்தில் உருவாகியுள்ள எங்கள் நாட்டை எங்களிடம் திருப்பித் தாருங்கள் என்ற முழக்கத்துடன் நடைபெற்று வரும் போராட்டங்கள், வெறும் அரசுக்கு எதிரான எதிர்ப்பாக மட்டும் பார்க்கப்பட முடியாது. மாறாக, அது நெதர்லாந்து சமூகத்தின் ஒரு பகுதியினரிடம் உருவாகியுள்ள எதிர்கால அச்சம், தேசிய அடையாளம் குறித்த கவலை, பொருளாதார அழுத்தம் மற்றும் அரசியல் நம்பிக்கையின்மையின் வெளிப்பாடாகக் கருதப்படுகிறது. அதே நேரத்தில், மனித உரிமைகள் மற்றும் சர்வதேச அகதிகள் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புகளை நினைவூட்டும் குரல்களும் அதே நாட்டில் வலுவாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பின்னணியில், நெதர்லாந்தின் தற்போதைய குடியேற்ற விவாதத்தை ஒரே கோணத்தில் புரிந்துகொள்ள முடியாது. பல்வேறு சமூக, அரசியல் மற்றும் பொருளாதார காரணிகள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன.

நெதர்லாந்து வரலாற்று ரீதியாக திறந்த பொருளாதாரத்தையும், பன்முக கலாச்சாரத்தையும் ஏற்றுக்கொண்ட நாடாக அறியப்படுகிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு மனித உரிமைகள், அகதிகள் பாதுகாப்பு மற்றும் சர்வதேச சட்டங்களை மதிக்கும் நாடாக அது தன்னை நிலைநிறுத்தியது. பல தசாப்தங்களாக பல்வேறு நாடுகளிலிருந்து வந்த குடியேற்ற மக்களை அது ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் சிரியா, ஆப்கானிஸ்தான், ஈராக், எரித்ரியா, யேமன் போன்ற நாடுகளில் ஏற்பட்ட போர்கள் மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக அகதிகள் எண்ணிக்கை அதிகரித்தது. இதனுடன் பொருளாதார காரணங்களால் குடியேற முயலும் மக்களின் வருகையும் உயர்ந்தது.

என்ற குற்றச்சாட்டு உள்ளது.

போராட்டங்களில் பங்கேற்ற பலர் முன்வைத்த கோரிக்கைகள் பொதுவாக எல்லைக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல், சட்டவிரோத குடியேற்றத்தை கடுமையாகக் கட்டுப்படுத்துதல், அகதி வருகையை குறைத்தல், உள்ளூர் மக்களின் வீட்டு வசதி மற்றும் சமூக சேவைகளுக்கு முன்னுரிமை வழங்குதல் போன்றவற்றைச் சுற்றியே அமைந்திருந்தன. சில இடங்களில் போராட்டங்கள் அமைதியாக நடைபெற்றாலும், சில பகுதிகளில் காவல் துறையுடன் மோதல்கள் ஏற்பட்டதாகவும் செய்திகள் வெளியாகின.

ஆனால் இந்த நிகழ்வுகளை முழு நெதர்லாந்து மக்களின் ஒருமித்த கருத்தாகக் கருதுவது சரியான அணுகுமுறை அல்ல. அதே நாட்டில் அகதிகளுக்கு ஆதரவாகவும், மனிதாபிமானக் கடமைகளை நினைவூட்டியும் பல அமைப்புகள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. போர், இனஅடக்குமுறை அல்லது அரசியல் ஒடுக்குமுறையிலிருந்து தப்பி வரும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவது சர்வதேச சட்டத்தின் அடிப்படை பொறுப்பாகும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இதனால், நெதர்லாந்தில் இன்று இரண்டு முக்கியமான அரசியல் அணுகுமுறைகள் நேருக்கு நேர் நிற்கின்றன. ஒன்று, தேசிய பாதுகாப்பு, எல்லைக் கட்டுப்பாடு மற்றும் சமூக வளங்

நிலையான கொள்கைகளை உருவாக்குவது மிகப்பெரிய சவாலாக உள்ளது. ஒருபுறம், சட்டவிரோத குடியேற்றத்தை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. மறுபுறம், உண்மையான அகதிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் சர்வதேச சட்டப் பொறுப்பும் இருக்கிறது. இந்த இரண்டிற்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்தும் முயற்சிதான் தற்போது ஐரோப்பிய அரசியலின் மையமாக உள்ளது.

நெதர்லாந்து அரசும் அண்மைக் காலங்களில் எல்லைக் கண்காணிப்பை வலுப்படுத்துவது, குடியேற்ற விண்ணப்பங்களை விரைவாக பரிசீலிப்பது, நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களை திருப்பி அனுப்புவதற்கான நடைமுறைகளை மேம்படுத்துவது போன்ற பல நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. இருப்பினும், இந்நடவடிக்கைகள் போதுமானவை அல்ல என்று சில அரசியல் கட்சிகள் வாதிடுகின்றன் மறுபுறம், அவை மனித உரிமைகளை பாதிக்கக்கூடும் என்று சில அமைப்புகள் எச்சரிக்கின்றன.

இன்றைய உலகில் எந்த நாடும் தனிமையில் வாழ முடியாது. போர்கள், காலநிலை மாற்றம், பொருளாதார சமநிலையின்மை மற்றும் அரசியல் ஒடுக்குமுறைகள் மக்கள் இடம்பெயர்வை தொடர்ந்து உருவாக்கிக் கொண்டே இருக்கும். எனவே, குடியேற்றத்தை முழுமையாக நிறுத்துவது நடைமுறையில் சாத்தியமற்றதாக இருக்கலாம். அதே நேரத்தில், கட்டுப்பாடற்ற குடி

**நெதர்லாந்தில் உருவாகியுள்ள எங்கள் நாட்டை எங்களிடம் திருப்பித் தாருங்கள் என்ற முழக்கத்துடன் நடைபெற்றுவரும் போராட்டங்கள், வெறும் அரசுக்கு எதிரான எதிர்ப்பாக மட்டும் பார்க்கப்பட முடியாது. மாறாக, அது நெதர்லாந்து சமூகத்தின் ஒரு பகுதியினரிடம் உருவாகியுள்ள எதிர்கால அச்சம், தேசிய அடையாளம் குறித்த கவலை, பொருளாதார அழுத்தம் மற்றும் அரசியல் நம்பிக்கையின்மையின் வெளிப்பாடாகக் கருதப்படுகிறது. அதே நேரத்தில், மனித உரிமைகள் மற்றும் சர்வதேச அகதிகள் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புகளை நினைவூட்டும் குரல்களும் வலுவாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன.**




இந்த மாற்றம், ஆரம்பத்தில் மனிதாபிமானக் கொள்கையாகக் கருதப்பட்ட குடியேற்ற விவகாரத்தை படிப்படியாக உள்நாட்டு அரசியல் விவாதமாக மாற்றியது. இன்று நெதர்லாந்தில் பல பொது மக்கள் எழுப்பும் முக்கியமான கேள்வி, நமது சமூக வளங்கள் அனைவருக்கும் போதுமா என்பதாகும். குறிப்பாக வீட்டு வசதி பற்றாக்குறை அந்நாட்டின் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக மாறியுள்ளது. இளம் குடும்பங்களுக்கே வீடுகள் கிடைக்க சிரமமாக இருக்கும் நிலையில், புதிய அகதிகளுக்கான தங்குமிடங்களை அரசு அமைப்பது குறித்து சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இதேபோன்று, மருத்துவமனைகள், பள்ளிகள், சமூக சேவைகள் மற்றும் உள்ளாட்சி நிர்வாகங்களின் மீது கூடுதல் அழுத்தம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் வாதிடுகின்றனர்.

வேலைவாய்ப்பு தொடர்பிலும் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. குறைந்த வருமானப் பணிகளில் போட்டி அதிகரிக்கிறது என்ற அச்சம் ஒரு தரப்பில் காணப்படுகின்றது. அதே நேரத்தில், தொழிலாளர் பற்றாக்குறையை நிரப்புவதில் குடியேற்ற மக்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்று மற்றொரு தரப்பு வாதிடுகிறது. இதனால் குடியேற்ற விவாதம் எளிய கருப்பு-வெள்ளை பிரச்சினையாக இல்லாமல், பல அடுக்குகள் கொண்ட சிக்கலான அரசியல் விவகாரமாக மாறியுள்ளது.

### எங்கள் நாட்டை எங்களிடம் திருப்பித் தாருங்கள்:

இந்நிலையில், எங்கள் நாட்டை எங்களிடம் திருப்பித் தாருங்கள் என்ற முழக்கம் பல போராட்டங்களில் ஒலித்தது. இந்த முழக்கம், தங்கள் நாட்டின் தேசிய அடையாளம், கலாச்சாரம் மற்றும் அரசியல் திசை மாறிவருவதாகக் கருதும் சில குழுக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கிறது. அவர்கள் பார்வையில், அரசுகள் தேர்தல் அரசியலை முன்னிறுத்தி குடியேற்றக் கொள்கைகளில் போதிய கட்டுப்பாடுகளை மேற்கொள்ளவில்லை

களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதைக் கூறுகிறது. மற்றொன்று, மனித உரிமைகள், அகதிகள் பாதுகாப்பு மற்றும் சர்வதேச பொறுப்புகளை மறக்கக் கூடாது என்பதைக் குறிப்பிடுகிறது.

இந்த விவாதம் நெதர்லாந்தில் மட்டும் நடைபெறவில்லை. ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், ஸ்வீடன் உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளிலும் இதேபோன்ற அரசியல் மாற்றங்கள் காணப்படுகின்றன. பல நாடுகளில் குடியேற்றக் கொள்கைகளை கடுமையாக்க வேண்டும் என்று வலியுறுத்தும் கட்சிகள் தேர்தல்களில் அதிக ஆதரவைப் பெறுகின்றன. அதே நேரத்தில், ஐரோப்பாவின் பொருளாதாரத்திற்கு குடியேற்ற தொழிலாளர்கள் இன்னமும் அவசியம் என்று பல பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### சட்டவிரோத குடியேற்ற கட்டுப்படுத்தல்

குடியேற்றம் குறித்த விவாதத்தில் உணர்ச்சிகளும் உண்மைகளும் ஒன்றோடொன்று கலந்திருப்பதால், அரசுகளுக்கு சம

யேற்றம் சமூக மற்றும் அரசியல் பதற்றங்களை உருவாக்கும் அபாயமும் உள்ளது.

இதனால், நெதர்லாந்தில் நடைபெறும் போராட்டங்கள் ஒரு நாட்டின் உள்நாட்டு நிகழ்வாக மட்டும் பார்க்கப்பட முடியாது. அவை உலகமயமாக்கலின் புதிய சவால்கள், தேசிய இறையாண்மை, மனிதாபிமானப் பொறுப்புகள், சமூக ஒற்றுமை மற்றும் ஜனநாயக அரசியலின் எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றிய உலகளாவிய விவாதத்தின் ஒரு பகுதியாகும்.

எங்கள் நாட்டை எங்களிடம் திருப்பித் தாருங்கள் என்ற முழக்கம், ஒருபுறம் தேசிய அடையாளம் மற்றும் சமூக வளங்கள் குறித்த கவலைகளை வெளிப்படுத்தினாலும், மறுபுறம் அகதிகளின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் குறித்த உலகளாவிய பொறுப்புகளையும் நினைவூட்டுகிறது. இந்த இரண்டு நிலைப்பாடுகளுக்கும் இடையில் சமநிலையை உருவாக்கும் திறனே எதிர்காலத்தில் நெதர்லாந்து மட்டுமல்ல, ஐரோப்பா முழுவதின் அரசியல் நிலைத்தன்மையையும் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக அமையும்.



# வோக்லாந்து நில அரசியலும் உதைப்பந்தாட்டமும்!

# உலகக் கிண்ணப் போட்டியில் ஆர்ஜென்டினத் தேசியம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா-

12.08.2026

2026 உலகக் கிண்ண கால்பந்து போட்டி வெறும் விளையாட்டுப் போட்டியாக மட்டுமல்லாமல; உலக அரசியலின் பல விடயங்களையும் வெளிக்கொண்டு வந்த நிகழ்வாக மாறியது. குறிப்பாக, உலகக் கிண்ண அரையிறுதியில் இங்கிலாந்தை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஆர்ஜென்டினா இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றதைத் தொடர்ந்து நிகழ்ந்த ஒரு சம்பவம் உலகளாவிய விவாதத்திற்கு வழிவகுத்தது.

போட்டி முடிந்ததும் ஆர்ஜென்டினா வீரர்களான லிசாண்ட்ரோ மார்டினஸ் மற்றும் ஜியோவானி லோ செல்சோ ஆகியோர் “Las Malvinas Son Argentinas” (மால்வினாஸ் தீவுகள் ஆர்ஜென்டினாவுக்கே சொந்தமானவை) என்று எழுதப்பட்ட பதாகையை ஏந்தி வெற்றியைக் கொண்டாடினர். ஒரு சாதாரண வெற்றிக் கொண்டாட்டமாகத் தோன்றிய இந்த நிகழ்வு, உண்மையில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் ஆர்ஜென்டினா-பிரிட்டன் நிலப்பிரச்சினையை மீண்டும் உலக அரசியல் அரங்கிற்கு கொண்டு வந்தது.

இந்தச் சம்பவம் விளையாட்டுக்கும் அரசியலுக்கும் இடையிலான உறவைப் பற்றிய பழைய விவாதத்தை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது. விளையாட்டு அரசியலிலிருந்து முற்றிலும் பிரிக்கப்பட்டிருக்க முடியுமா? அல்லது தேசிய உணர்வுகள், வரலாற்று நினைவுகள் மற்றும் அரசியல் உரிமைக் கோரிக்கைகள் தவிர்க்க முடியாத வகையில் விளையாட்டின் வழியாக வெளிப்படுகிறதா? என்ற கேள்விகள் மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## வோக்லாந்து தீவு நீண்டகால நிலப்பிரச்சினை

தென் அத்திலாந்திக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவுக்கூட்டத்தை பிரிட்டன் Falkland Islands என்றும், அர்ஜென்டினா Islas Malvinas என்றும் அழைக்கிறது. பெயரிலேயே அரசியல் மறைந்துள்ளது. எந்தப் பெயரைப் பயன்படுத்துகிறோம் என்பதே அந்தந்த நாட்டின் அரசியல் நிலைப்பாட்டை பிரதிபலிக்கிறது. 1833 ஆம் ஆண்டு முதல் இந்தத் தீவுகள் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. ஆனால் ஸ்பானிய காலனித்துவத்தின் வாரிசு நாடாகிய ஆர்ஜென்டினா, இந்தத் தீவுகள் தங்களுடைய வரலாற்று மற்றும் புவியியல் எல்லைக்குள் அடங்குபவை என்றும், பிரிட்டன் சட்டவிரோதமாக அவற்றை ஆக்கிரமித்துள்ளது என்றும் தொடர்ந்து வாதிட்டு வருகிறது.

இந்த நிலப்பிரச்சினை 1982 ஆம் ஆண்டு முழுமையான போராக வெடித்தது. அப்போது ஆர்ஜென்டினாவின் இராணுவ ஆட்சி தீவுகளை கைப்பற்ற முயன்றது. அதற்கு பதிலடியாக பிரிட்டன் மிகப்பெரிய கடற்படை மற்றும் விமானப்படை நடவடிக்கையை மேற்கொண்டது. சுமார் 74 நாட்கள் நீடித்த இந்தப் போரில் 650க்கும் மேற்பட்ட ஆர்ஜென்டினா வீரர்களும், 255 பிரிட்டிஷ் வீரர்களும் உயிரிழந்தனர். இறுதியில் பிரிட்டன் தீவுகளின் கட்டுப்பாட்டை மீண்டும் பெற்றது. இருப்பினும், இந்தத் தோல்வி ஆர்ஜென்டினாவின் உரிமைக் கோரிக்கையை முடிவுக்கு கொண்டு வரவில்லை. இன்றும் அந்த நாடு மால்வினாஸ் தீவுகள் தங்களுடைய இறையாண்மைக்குட்பட்ட பகுதி என்ற நிலைப்பாட்டைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

## கால்பந்தும் தேசிய நினைவுகளும்

ஆர்ஜென்டினா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டிகள் எப்போதும் வெறும் விளையாட்டு நிகழ்வாக மட்டுமே பார்க்கப்படுவதில்லை. 1966 உலகக் கிண்ணத்தில் ஏற்பட்ட சர்ச்சைகள், 1982 வோக்லாந்து போர், அதன் பின்னர் 1986 உலகக் கிண்ணத்தில் டியாகோ மரடோனா அடித்த “Hand of God” கோலும் “Goal of the Century” எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க கோலும் இந்த இரு நாடுகளுக்கிடையிலான போட்டிகளை அரசியல் மற்றும் வரலாற்று நினைவுகளோடு இணைத்துவிட்டன.

1986 உலகக் கிண்ண காலிறுதியில் இங்கிலாந்தை வீழ்த்திய பின்னர், மரடோனா “இது மால்வினாஸ் போருக்கான ஒரு குறியீட்டு பழிவாங்கலாக உணரப்பட்டது” என்று கூறியிருந்தார். அவரது அந்தக் கருத்து, விளையாட்டு எவ்வாறு தேசிய மனநிலையுடன் இணைக்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்தியது. அதன்பின்னர் நடைபெற்ற ஒவ்வொரு ஆர்ஜென்டினா-இங்கிலாந்து மோதலிலும் இந்த வரலாற்று நினைவுகள் மறைமுகமாகவேனும் இடம்பெற்றுள்ளன.

## 2026இல் மீண்டும் எழுந்த வரலாறு

2026 உலகக் கிண்ண அரையிறுதியில் இங்கிலாந்து முதலில் முன்னிலை பெற்றது. ஆனால் இறுதிக் கட்டத்தில் ஆர்ஜென்டினா இரண்டு கோல்களை அடித்து அபாரமான வெற்றியைப் பதிவு செய்தது. உலகக் கிண்ண இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்ற மகிழ்ச்சியில் வீரர்கள் ரசிகர்களுடன் கொண்டாடிய







போது, “Las Malvinas Son Argentinas” என்ற வாசகமுடைய பதாகையை உயர்த்திக் காட்டினர்.

ஒரு வெற்றிக் கொண்டாட்டத்தில் தேசிய உரிமைக் கோரிக்கையை வெளிப்படுத்திய இந்தச் செயல் உலக ஊடகங்களின் கவனத்தை உடனடியாக ஈர்த்தது. குறிப்பாக இங்கிலாந்து ஊடகங்கள் இதனை கடுமையாக விமர்சித்தன. அதே நேரத்தில் ஆர்ஜென்டினாவில் பெரும்பாலான அரசியல் தலைவர்களும் பொதுமக்களும் வீரர்களின் செயலை வரவேற்றனர்.

## FIFA விதிகளும் அரசியல் வெளிப்பாடுகளும்

சர்வதேச கால்பந்து சம்மேளனமான FIFA, விளையாட்டு மைதானங்களில் அரசியல், மதம், இனவெறி அல்லது பாகுபாட்டை ஊக்குவிக்கும் வாசகங்கள் மற்றும் சின்னங்களைத் தடை செய்துள்ளது. விளையாட்டு உலகளாவிய ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்பதே அதன் நோக்கம்.

இந்த நிலையில் “Las Malvinas Son Argentinas” என்ற வாசகம் ஒரு அரசியல் உரிமைக் கோரிக்கையை வெளிப்படுத்துவதால், அது FIFA விதிகளை மீறியிருக்கலாம் என்ற கருத்து எழுந்துள்ளது.

இருப்பினும், இது வெறுப்பைத் தூண்டும் வாசகம் அல்ல; மாறாக ஒரு நாட்டின் நீண்டகால நிலப்பிரச்சினை தொடர்பான அரசியல் கருத்து என்பதால், இதனை எவ்வாறு மதிப்பிடுவது என்பது சிக்கலான கேள்வியாக உள்ளது. இதனால் குஜகுயு எவ்வாறு செயல்படும் என்பது உலக விளையாட்டு வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஆர்ஜென்டினாவின் பார்வை

ஆர்ஜென்டினாவில் மால்வினாஸ் பிரச்சினை ஒரு அரசியல் விவகாரம் மட்டுமல்ல; அது தேசிய அடையாளத்தின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படுகிறது. பள்ளிப் பாடநூல்களில் இருந்து அரசாங்க ஆவணங்கள் வரை “மால்வினாஸ் எங்களுடையது” என்ற கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. ஆண்டு தோறும் ஏப்ரல் 2 மால்வினாஸ் தினம் அனுசரிக்கப்படுகிறது. அத்துடன் போரில் உயிரிழந்த வீரர்கள் தேசிய வீரர்களாக நினைவு கூரப்படுகின்றனர். எனவே, உலகக் கிண்ண வெற்றிக்குப் பிறகு வீரர்கள் அந்தப் பதாகையை ஏந்தியது, பெரும்பாலான ஆர்ஜென்டினர்களுக்கு அரசியல் நடவடிக்கையாகத் தெரியவில்லை. அது தங்கள் நாட்டின் வரலாற்று நினைவுகளுக்குச் செலுத்தப்பட்ட மரியாதையாகவே கருதப்பட்டது.

மறுபுறம், பிரிட்டன் இந்தத் தீவுகளை தனது வெளிநாட்டு பிரதேசமாக நிர்வகித்து வருகிறது. 2013ஆம் ஆண்டு நடைபெற்ற பொது வாக்கெடுப்பில் தீவுவாசிகளில் பெரும்பான்மையினர் புதிய தொடர விரும்புவதாக வாக்களித்தனர். இதனை பிரிட்டன், மக்களின் தன்னாட்சி உரிமையின் வெளிப்பாடாகக் கருதுகிறது. எனவே “மால்வினாஸ் ஆர்ஜென்டினாவுக்கே சொந்தமானது” என்ற முழக்கம், பிரிட்டனின் பார்வையில் தீவுவாசிகளின் விருப்பத்தை நிராகரிக்கும் அரசியல் அறிக்கையாகப் பார்க்கப்படுகிறது. இதனால் இரு நாடுகளும் முற்றிலும் மாறுபட்ட வரலாற்று மற்றும் சட்ட விளக்கங்களை முன்வைக்கின்றன.

## விளையாட்டு – தேசியவாதத்தின் மேடை

விளையாட்டு உலகில் தேசியக் கொடிகள், தேசிய கீதங்கள், வீரர்களின் உணர்ச்சிகள், ரசிகர்களின் பெருமிதம் ஆகியவை இயல்பானவை. ஆனால் சில நேரங்களில் தேசிய உணர்வு அரசியல் கோரிக்கையாக மாறுகிறது. ஒலிம்பிக் போட்டிகளில் இனவெறிக்கு எதிரான கை உயர்த்தல், பாலஸ்தீன ஆதரவு பதாகைகள், உக்ரைன் போருக்கு எதிரான முழக்கங்கள், ஈரான் பெண்கள் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவான வெளிப்பாடுகள் போன்ற பல நிகழ்வுகள் கடந்த சில ஆண்டுகளில் உலக விளையாட்டு அரங்குகளில் இடம்பெற்றுள்ளன.

அதாவது, விளையாட்டு என்பது அரசியலிலிருந்து முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்ட துறையாக இல்லை. மாறாக, உலக அரசியல், மனித உரிமைகள், தேசிய அடையாளம், வரலாற்று நினைவுகள் ஆகிய அனைத்தும் சந்திக்கும் பொதுவெளியாக அது மாறியுள்ளது.

## சமூக ஊடகங்களில் ஏற்பட்ட எதிர்வினைகள்

இந்தச் சம்பவம் சமூக ஊடகங்களில் கோடிக்கணக்கான மக்களால் விவாதிக்கப்பட்டது. ஆர்ஜென்டினா ரசிகர்கள் வீரர்களின் செயலை தேசியப் பெருமையாகக் கொண்டாடினர். மால்வினாஸ் எங்களுடையது என்ற வாசகம் மீண்டும் சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்பட்டது.

அதே நேரத்தில், பல சர்வதேச விமர்சகர்கள் விளையாட்டு மேடையை அரசியல் கருத்து வெளியிடும் இடமாக மாற்றுவது தவறு என்று கருத்து தெரிவித்தனர். இன்னொரு தரப்பினர், வீரர்களும் தங்கள் நாட்டின் வரலாற்று நினைவுகளையும் அரசியல் கருத்துகளையும் வெளிப்படுத்தும் உரிமை கொண்டவர்கள் என்ற வாதத்தையும் முன்வைத்தனர்.

## உலக அரசியலுக்கான ஒரு நினைவூட்டல்

2026 உலகக் கிண்ண அரையிறுதிக்குப் பிந்தைய இந்த நிகழ்வு, விளையாட்டின் பின்னணியில் வரலாறும் அரசியலும் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை மீண்டும் உலகிற்கு நினைவூட்டியுள்ளது. 1982ஆம் ஆண்டு நடந்த போர் முடிந்தாலும், அதன் அரசியல் தாக்கம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. மாறாக, புதிய தலைமுறை வீரர்களும் ரசிகர்களும் அந்த வரலாற்றை தேசிய நினைவாகத் தொடர்ந்து சுமந்து வருகின்றனர். அதனால்தான் ஒரு கால்பந்து வெற்றிக் கொண்டாட்டமே சர்வதேச அரசியல் விவாதமாக மாறியுள்ளது.

உலகக் கிண்ண அரையிறுதியில் ஆர்ஜென்டினாவின் வெற்றி, கால்பந்து வரலாற்றில் முக்கியமான சாதனையாகப் பதிவாகியுள்ளது. ஆனால் அதைவிட அதிகமாக நினைவில் நிற்கப் போவது, வீரர்கள் உயர்த்திய “Las Malvinas Son Argentinas” என்ற பதாகையாகும்.

இந்தச் சம்பவம், விளையாட்டு என்பது வெறும் கோல்களும் கோப்பைகளும் மட்டுமல்ல; அது தேசிய நினைவுகள், வரலாற்று காயங்கள், அரசியல் உரிமைகள் மற்றும் சர்வதேச உறவுகள் ஆகியவை சந்திக்கும் சக்திவாய்ந்த மேடை என்பதையும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

அரசியலும் விளையாட்டும் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்ட துறைகள் என்று பலர் கருதினாலும், வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபிப்பது வேறு ஒன்றாகும். தேசிய நினைவுகளும் அரசியல் உணர்வுகளும் மக்களின் மனதில் உயிருடன் இருக்கும் வரை, விளையாட்டு அரங்குகளும் அவற்றின் எதிரொலியை வெளிப்படுத்தும் மேடைகளாகவே தொடரும். குஜகுயு இந்த விவகாரத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமா என்பது இன்னும் தெளிவாகவில்லை. ஆனால் ஒரு உண்மை மறுக்க முடியாதது. மால்வினாஸ் அல்லது வோக்லாந்து தீவுகள் குறித்த பிரச்சினை இன்னும் முடிவுக்கு வரவில்லை. அந்தப் பிரச்சினை, 2026 உலகக் கிண்ண அரையிறுதியின் வெற்றிக் கொண்டாட்டத்தின் மூலம் மீண்டும் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.




நிர்மலாவுக்கு திருப்தியாயிருந்தது. எவ்வளவு காலமாக அம்மாவும் இந்த வயது போன காலத்தில் அப்பா இல்லாமல் இந்தக் கல்யாணத்தை ஒப்பேற்றிவிட்டாள்.

இனி அவளுக்குப் பின்னாலிருக்கும் இரண்டு தங்கைகளுக்கும் வழி விட்டுக் கொடுத்தது மாதிரித்தான்.

மேசையிலே படத்தில் சிவரூபன் சிரித்துக் கொண்டிருந்தான். என்னதான் கண்ணால் காணாவிட்டாலும் இனி அவளுடைய கணவன் அவன்.

"மச்சான் ரீயைக் குடியுங்கோவன்". மைத்துனி சுமதி கூறி விட்டுச் சென்றாள். மேசையிலே சுடச்சுட வைக்கப்பட் டிருந்த தேநீரைச் சிறிது சிறிதாக அருந்தியவளுக்கு, அழுகை தான் வந்தது.

"இனிப்போனால் எப்ப இங்கு வரப்போகிறேனோ" அம்மாவையும், தங்கைகளையும் விட்டுப் போவதென்றால் கவலையாகத் தான் இருக்கும்.

அதோட நேற்று வந்த ரவியும், சுமதியும், மாமாவும், மாமியும் தான்.

"அங்கைபோனா கைப்பிடிக்கப் போகும் சிவரூபனையும், அண்ணன் ராசனையும் பார்க்கலாம் தானே.

இருபத்தெட்டு வருட காலம் அம்மாவுடனும் தங்கைகளுடனும் பிரியாது இருந்தாகிவிட்டது. அங்கே போனால் எட்டு வருடங்களாகியும், தனக்கென ஒரு வாழ்க்கையையும் தேடிக்கொள்ளாமல் வெளிநாட்டில் உழைத்துக் கொண்டிருக்கும் அண்ணனையெண்டாலும் பார்க்கலாம் தானே.

அவளது மனம் ஓரளவு திருப்பதிப்பட்டது.

முந்தநாள் தான் நிர்மலாவுக்குத் திருமணம் நடந்தது. அதாவது மணமகன் இல்லாத திருமணம். சுவிசில் இருக்கும் சிவரூபனுக்கும், ஈழத்தில் இருக்கும் நிர்மலாவுக்கும் சீதன ஆதனங்கள் சரிபார்த்து, ஒரு மாதிரி சடங்கையும் முடித்து மாப்பிள்ளை வீட்டில் கொண்டு வந்து, சுற்றஞ்சூழ விட்டு விட்டுப் போனார்கள் நிர்மலாவின் பெற்றோர்கள். எல்லாம் சரி, இனி இவள், பார்சலில் அனுப்பப்படுவதுதான் மிச்சம்.

'அம்மி மிதித்து அருந்ததி பார்த்து கழுத்திலே கணவன் நாணேற்றும்' நாளைத்தான் அவள் எதிர்பார்த்தாள்.

ஆனால் இப்படி வெளிநாட்டு மாப்பிள்ளையுடன் போலிக் கல்யாண வீடு தனக்கும் நடக்கும் என்பதை எதிர்பார்க்க வில்லை. இந்த நிகழ்ச்சியை நினைத்தால், சில வேளை அவளுக்குச் சிரிப்புத்தான் வரும்.

இதில் விருப்பு இல்லாவிட்டாலும், அவளுக்கு வெறுப்பு வந்துவிட முடியாது. ஏனெனில் ஆறு வருடங்களாக உள்ளூர் மாப்பிள்ளை பார்த்துப் பார்த்து அம்மாவும் சரியாக அலுத்து விட்டாள். முற்றாகும் தறுவாயில் யாராவது குழப்பி விட்டுவிடுவார்கள். ஆரம்பத்தில் இதையெல்லாம் நினைத்தால் தற்கொலைதான் செய்ய வேண்டும் போலிருக்கும் அவளுக்கு.

தங்கையின் வாழ்வு எங்கே நாசமாகி விடுமோ என்ற பயமும், அம்மாவின் அழுத முகமும் ஞாபகத்தில் வரவே பேசாமல் இருந்துவிடுவாள்.

ஆம்! அவள் ஏதாவது செய்ய வேண்டுமென்றால், அந்த நான்கு வருடங்களுக:கு முன்பல்லவா செய்திருப்பாள்.

அப்பொழுதெல்லாம் மிகவும் பயங்கரமான நாட்கள். நிர்மலாவின் தங்கைகள் பாடசாலைக்குச் சென்றுவிடுவார்கள். அம்மாவும் இவளும் தனியே முழுசிக் கொண்டுதான் வீட்டிலிருப்பார்கள். அல்லது கந்தவனம் மாமாவின் வீடுதான் தஞ்சமளிக்கும். வயலுக்குள் தனித்திருக்கும் அந்த வீடு உண்மையிலேயே பயங்கரமானதுதான்.

வேலி முறிக்கும் சத்தம்.

இரவில் யன்னலடியில் நிழல் தெரிந்தால் இதயம் நின்றுவிடும் போல் துடிப்பு. எவ்வளவு கொடமையான நாட்கள் அவை.

"ஏன்தான் இந்தியன் இந்த நாட்டுக்கு வந்தானோ"

அன்று அம்மா சந்தைக்குப் போய்விட்டாள். தங்கைகளும் பாடசாலை சென்றுவிட்டனர்.அடுப்பில் வைத்த கறியை இறக்கி விட்டு கந்தவனம் மாமா வீடு செல்வதற்கிடையில், வாசலில் அரவம் கேட்டது. குசினிக்கதவால் வெளியே சென்று முற்றத்தில் நிற்பதற்கிடையில் பத்துப் பதினைந்து பேர் முற்றத்திலும், வேலிகளுக்கிடையிலும், வீட்டுக்குள்ளும் நின்றுகொண்டு இருந்தனர்.

நிர்மலாவுக்கு வயிற்றைக் கலக்கியது. அன்று அவங்களுடைய முகத்தில் ஒரே அகோரம். வீட்டுக்குள் சோதனையிட்டவன், இரவு தலையணைக்குக் கீழ் வாசித்துவிட்டு வைத்திருந்த நோட்டிசை இவளுக்கு முன்னே நீட்டினான்.

பதில் சொல்வதற்கிடையில், பிடரியை ஒரு கரம் தாக்கியது. பூரணம்மாமி ஓடிந்து பிடிப்பதற்கிடையில் மயங்கி விழுந்து விட்டாள்.

கண்விழித்துப் பார்த்தபோது, அம்மா அருகிலிருந்து அழுது கொண்டிருந்தாள். பூரணம்மாமியோ நடந்ததைப் வெரிசுபடுத்தி ஏதோவெல்லாம் வியாக்கியானம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

"நான் அப்பவே சொன்னனான் உந்தக் கண்டறியாத நோட்டீசுகளை வைச்சிராதை எண்டு. எல்லாம் அனுபவப்பட்டாத் தான் தெரியும்".

பூரணம்மாமி எரிகிற வீட்டில் எண்ணெய் ஊற்றிக்கொண்டிருந்தாள்.

அந்தச் சம்பவத்திற்குப் பின்பும் அடிக்கடி இராணுவச் சுற்றிவளைப்புக்கள், அந்த ஊரைக் கலக்கிக் கொண்டிருந்தன.

இதனால், கொஞ்ச காலம் கிளிநொச்சியில் தங்கியிருந்த பின்னர் தான் ஊருக்குத் திரும்பியிருந்தாள். அதற்கிடையில் ஊரில் இவளைப்பற்றி ஏதேதோ கதைகள் பரவியிருந்தன. முன்பு இனிக்க இனிக்கப் பேசிக்கொண்டு வரும் கந்தவனம் மாமாவின் மகன் ராஜன், இப்போதெல்லாம் இவளின் வீட்டுப் பக்கம் எட்டியும் பார்ப்பதில்லை. கூடியவரை நிர்மலாவின் கண்ணுக்குப் புலப்படாதவனாகவே இருந்தான்.

அடுத்த ஒரு வருடத்துக்குள் அவனும் வெளிநாடு போய்ச் சேர்ந்துவிட்டான்.

இதற்குப் பின்பு அம்மா பேசிய ஒவ்வொரு சம்பந்தங்களும்




**– சுத்தர் தமிழீழம்**
**களத்தில் 13.08.1993 சுந்தர் –**

முற்றாவதற்கிடையில் குழம்பத் தொடங்கின. முன்பு இவளை வலியக் கேட்டுவந்தர்களும் கையைக் கழுவிவிட்டனர்.

இரவில் தனியாக இருந்து யோசித்தால், அம்மா வந்து விம்மிக் கொண்டிருப்பாள்.

"பிள்ளை ஒண்டும் செய்து போடாதை. உனக்குப் பிறகு ரெண்டு தங்கச்சிகள் இருக்குதுகள். அதுகளின்ர வாழ்க்கையைப் பாழாக்கிப் போடாத". அம்மாவைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். "ஏனிந்த அம்மா ஏதோவெல்லாம் கற்பனை பண்ணிக் கொண்டு பயப்படுகிறா. எனக்கு என்ன நடந்து போச்சுது." சிலவேளை எரிச்சலும் வரும் அவளுக்கு.

ஒருவாறு, ஆறு வருடங்களுக்குப் பின்பு இந்த இடம் சரி வந்தது. இதையும் யாராவது குழப்பிப் போடுவார்களோ என்று பயந்து அம்மா எத்தனையோ நேர்த்திக் கடன் வைத்திருந்தளா்.

ஆலடிப் பிள்ளையாருக்கு இவளைக் கொண்டு பாற்செம்பு எடுக்கச் செய்தாள்.

இப்போது சிவரூபன் வீட்டில் நிர்மலா மணப்பெண்ணாக வந்திருக்கிறாள்.

நிர்மலாவுக்கு இன்று வீட்டுக்குப் போகவேண்டும் போலிருந்தது. ரவியோடு சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோதுதான் ராஜேசைக் கண்டாள்.

அவள் வீட்டுக்கு வந்தது அம்மாவுக்கு சந்தோசம். அம்மன் கோவிலுக்கு அர்ச்சனை செய்த குங்குமத்தை எடுத்து வந்து நெற்றியில் இட்டுவிட்டாள்.

ஊர்ப்புதினங்களை கதைத்து கொண்டிருந்தபோதுதான் ராஜேசின் கதையும் தட்டுப்பட்டது.



"அதுசரி, ராஜேசைக் கண்டனான். இப்பவெல்லோ வெளிநாட்டுக்கென்று போனவன்"

"அதையேன் கேட்கிறாய். மூன்று இலட்சம் சீதனம் குடுத்து வெளிநாட்டுக்கும் அனுப்பிவிட, பொம்பிளை சரியில்லை யெண்டு திருப்பி விட்டினமாம்".

தன்னுடைய மகளும் அப்படியானால் என்ற மனப்பயம் அவளிடம் இல்லையோ?...

அம்மாவின் அறியாமையை நினைக்க கவலையாக இருந்தது அவளுக்கு.

அம்மா ராஜேசுக்காகப் பரிதாபப்பட்டுக் கதைத்தாள்.

ராஜேசும் அண்மையில்தான் படிப்பித்தற் தொழிலைக் கைவிட்டுத் தருமணத்திற்காக வெளிநாடு சென்றவள். அம்மாவுக்கு நிர்மலாவின் வாழ்வில் நல்ல நம்பிக்கை. சிரித்துச் சந்தோசமாகவே இவளை வழியனுப்பி வைத்தாள்.

மாமி வீடு வந்த நிர்மலா யாருடனும் கதைக்கவில்லை. சாப்பாடும் தேவைப்படவில்லை. நேரத்தோடு படுக்கவும் சென்றுவிட்டாள்.

அதிகாலை வீங்கிய கண்களுடன் எழுந்து வெளியில் வந்தபோது மாமா பத்திரிகையுடன் ஈசிச்சேரில் இருந்தார். மாமியும் ரவியும் அவரைச் சூழ நின்று கொண்டு பேப்பரைத் துளாவிக் கொண்டிருந்தனர்.

முகங்கழுவிவிட்டு சுமதி தந்த தேநீரை அருந்திக் கொண்டிருந்த போதுதான் மாமி சொன்னார் "நேற்றும் இரவு கடலுக்கை அமளியாம். இப்போதைக்கு போட்டும் ஓடாதுபோலப் பிள்ளை".

"ஓமொம். நேற்று ஒரே அடியாம். சனமும் செத்ததாம். இதுதான் இப்போதைக்கு போட் ஓடாது போலக் கிடக்குது."

எல்லோருக்கும் அவளைக் கெதியாய் அனுப்புவதுபற்றித்தான் கவலை.

அவளது மனம் ஒரு நிலையில்லாது தடுமாறியது.

"அம்மா... தங்கச்சியவை..."

இதுக்குள்ள ஒவ்வொரு நாளும் கேட்கும் வெடிச்சத்தங்கள்... பழகிப்போன வாழ்க்கை...

ஆனாலும் அதில் ஏதொ ஓர் நிறைவு... இதை விட்டுவிட்டு எத்தனையாயிரம் மைல்கள்...

கோளகக்காற்றில் புழுதி வாரி அள்ளித் தெளித்தது. அவளது கண்கள் கலங்கித் தவித்தன. இருப்பத்தியெட்டு வருடங்கள் பிறந்த மண்ணோடு ஒட்டிய வாழ்க்கை...

மாமி அருகில் வந்தாள். "ஏன் பிள்ளை அழுகிறாய்? அது ஒரு கிழமையாலை போட் ஓடுந்தானே? பிறகென்ன... கிளாலி கடந்த உடனை போய்ச் சேந்திடலாம்."

அவளின் மனம் புரியாத மாமி, கதைத்து கொண்டிருந்தாள்.

நிர்மலா வெறுமையாகத் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஏதொ ஓர் உறுதி தெரிந்தது. மாமி அவளை விநோதமாகப் பார்த்தாள்.






## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com



# ஐரோப்பாவில் தொடரும் அகதிகள் நெருக்கடி!

## நெதர்லாந்து–இத்தாலி–பிரான்ஸில் எழும் அரசியல் சர்ச்சை

ஐங்ரகன் விக்கினேஸ்வரா

06.08.2026

**கடந்த வாரம் மொராக்கோவிலிருந்து ஐரோப்பியா நோக்கிய அகதிகளாக வந்த ஆயிரக்கணக்கான சட்டவிரோத குடியேற்றவாசிகளால் நெதர்லாந்து, இத்தாலி, பிரான்ஸில் புதிய அரசியல் சர்ச்சை எழுந்துள்ளது. ஐரோப்பாவில் தொடரும் அகதிகள் நெருக்கடியை எவ்வாறு கையாளுவது என்பதை எந்த ஒரு நாடும் தீர்க்கமாக முடிவெடுக்கவில்லை.**

கடந்த இரு தசாப்தமாக ஐரோப்பிய அரசியலில் மிக அதிகமாக விவாதிக்கப்படும் பிரச்சினைகளில் ஒன்று குடியேற்றமும் அகதிகள் நெருக்கடியும் ஆகும். குறிப்பாக 2015ஆம் ஆண்டு சிரியா உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து ஏற்பட்ட பெருமளவிலான அகதிகள் வருகை, ஐரோப்பிய ஒன்றியத்தின் எல்லைக் கட்டுப்பாடு, மனிதாபிமானப் பொறுப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு போன்ற பல கேள்விகளை முன்வைத்தது. அதன் பின்னரும் வட ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் சஹாரா தெற்குப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியதரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவை அடைய முயன்று வருகின்றனர்.

இந்த நீடித்த குடியேற்ற அழுத்தம் நெதர்லாந்து, இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளின் உள்நாட்டு அரசியலையும் தேர்தல் முடிவுகளையும் குறிப்பிடத்தக்க வகையில் பாதித்துள்ளது. இதன் விளைவாக, பல நாடுகளில் தேசியவாத மற்றும் குடியேற்றக் கட்டுப்பாட்டை வலியுறுத்தும் அரசியல் சக்திகள் ஆதரவைப் பெற்றுள்ளன.



மொராக்கோ, லிபியா, துனிசியா ஐரோப்பாவிற்கான முக்கிய நுழைவாயில்களாக அமைந்துள்ளன. ஆப்பிரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்குச் செல்லும் முக்கிய வழித்தடங்களில் மொராக்கோ, லிபியா மற்றும் துனிசியா முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மேற்குத் திசையில் மொராக்கோவிலிருந்து ஸ்பெயின் கரையோரங்களுக்கும், மத்திய பகுதியில் லிபியா மற்றும் துனிசியாவிலிருந்து இத்தாலியின் லம்பிடுசா தீவு மற்றும் சிசிலி பகுதிகளுக்கும் சிறிய படகுகள் மூலம் மக்கள் பயணிக்கின்றனர்.

இந்தப் பயணங்களில் ஈடுபடுபவர்கள் அனைவரும் ஒரே காரணத்திற்காக வருவதில்லை. சிலர் போரினாலும் அரசியல் ஒடுக்குமுறையாலும் தங்கள் நாட்டை விட்டு வெளியேறிய அகதிகள். மற்றவர்கள் வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் சிறந்த வாழ்க்கையை நாடும் பொருளாதாரக் குடியேற்றவாசிகள். இந்த இரு பிரிவினரையும் வேறுபடுத்தி அணுகுவது அரசுகளுக்கு ஒரு சவாலாக உள்ளது.

### நம்பிக்கையும் ஆபத்தும் சந்திக்கும் மத்தியதரைக் கடல்:

மத்தியதரைக் கடல் உலகின் மிகவும் ஆபத்தான குடியேற்றப் பாதைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. சட்டவிரோத மனிதக் கடத்தல் வலையமைப்புகள் ஆயிரக்கணக்கான மக்களிடம் பெரும் தொகை பணம் வசூலித்து பாதுகாப்பற்ற படகுகளில் கடலுக்கு அனுப்புகின்றன. ஒவ்வொரு ஆண்டும் பலர் கடலில் உயிரிழக்கின்றனர். இது மனிதாபிமான நெருக்கடியை மட்டுமல்லாமல், சர்வதேச குற்றவியல் வலையமைப்புகள், மனிதக் கடத்தல், எல்லைப் பாதுகாப்பு மற்றும் கடல்சார் மீட்பு நடவடிக்கைகள் போன்ற பல்வேறு பாதுகாப்பு சவால்களையும் உருவாக்கியுள்ளது.

2015ஆம் ஆண்டு ஐரோப்பா மிகப்பெரிய அகதி வருகையை எதிர்கொண்டது. அதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றியம் வெளிப்புற எல்லைக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல், பதிவு முறைமைகளை மேம்படுத்துதல், மனிதக் கடத்தலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மூல நாடுகளுடன் ஒத்துழைப்பை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அதே நேரத்தில், அகதிகளை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பை உறுப்புநாடுகள் எவ்வாறு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நீடித்தன. சில நாடுகள் அதிக பொறுப்பை ஏற்றுக் கொண்டதாகவும், சில நாடுகள் போதுமான பங்களிப்பு வழங்கவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

### நெதர்லாந்து – இத்தாலி அகதிகள் வருகை

நெதர்லாந்தில் குடியேற்றக் கொள்கைகள் கடந்த சில ஆண்டுகளில் தீவிர அரசியல் விவாதமாக மாறியுள்ளன. வீட்டு வசதி பற்றாக்குறை, பொதுச் சேவைகளின் மீதான அழுத்தம், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய அடையாளம் தொடர்பான அச்சங்கள் பொதுமக்களிடையே அதிகரித்துள்ளன. இந்தச் சூழ

லில் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தும் அரசியல் கட்சிகள் தேர்தல்களில் குறிப்பிடத்தக்க ஆதரவைப் பெற்றுள்ளன. அதேவேளை, மனித உரிமை அமைப்புகள் மற்றும் பல குடிமக்கள் அமைப்புகள் சர்வதேச அகதிகள் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு தேவைப்படுவோருக்கு உரிய உதவி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

இத்தாலி, குறிப்பாக லம்பிடுசா தீவு, மத்தியதரைக் கடல் வழியாக வரும் குடியேற்றவாசிகளின் முதல் நுழைவாயிலாக நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்த காரணத்தால், இத்தாலி கடல்சார் மீட்பு, எல்லைக் கண்காணிப்பு மற்றும் அகதிகள் தங்குமிட முகாம்கள் போன்ற துறைகளில் பெரும் அழுத்தத்தை எதிர்கொள்கிறது.

இத்தாலி அரசுகள் பலமுறை, குடியேற்றப் பிரச்சினை தங்கள் நாட்டின் பிரச்சினை மட்டுமல்ல; முழு ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டுப் பொறுப்பு என்றும் வலியுறுத்தியுள்ளன. இதன் விளைவாக, ஐரோப்பிய அளவில் எல்லைப் பாதுகாப்பு மற்றும் அகதிகள் பகிர்வு தொடர்பான விவாதங்கள் தீவிரமடைந்துள்ளன.

## பிரான்ஸ் சமூக பாதுகாப்பு சவால்கள்

பிரான்சில் குடியேற்ற விவகாரம் பாதுகாப்பு, மதச்சார்பின்மை, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றுடன் இணைந்து விவாதிக்கப்படுகிறது. குடியேற்றப் பின்னணியைக் கொண்ட சமூகங்களின் ஒருங்கிணைப்பு, நகர்ப்புறப் புறக்கணிப்பு மற்றும் சமூக சமத்துவமின்மை போன்ற காரணிகள் அரசியல் விவாதங்களில் முக்கிய இடம் பெற்றுள்ளன. அதேசமயம், பெரும்பாலான குடியேற்றவாசிகள் சட்டத்தை மதித்து உழைத்து சமூகத்தில் பங்களிப்பு செய்து வருகின்றனர் என்பதையும் மறுக்க முடியாது. எனவே, குடியேற்றம் தொடர்பான விவாதங்களில் பொதுமைப்படுத்தல்களைத் தவிர்ப்பது அவசியமாகிறது.

குடியேற்றப் பிரச்சினை பல ஐரோப்பிய நாடுகளில் தேசியவாத மற்றும் வலதுசாரி அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளில் ஒன்றாக அமைந்துள்ளது. எல்லைப் பாதுகாப்பு, தேசிய கலாச்சாரப் பாதுகாப்பு, சட்டவிரோத குடியேற்றத் தடுப்பு மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற கோரிக்கைகள் பல வாக்காளர்களிடம் ஆதரவைப் பெற்றுள்ளன.

மறுபுறம், இடதுசாரி மற்றும் மத்திய அரசியல் சக்திகள் மனித உரிமைகள், சர்வதேச சட்டப் பொறுப்புகள் மற்றும் மனிதாபிமான அணுகுமுறையை வலியுறுத்துகின்றன. இதனால் ஐரோப்பிய அரசியலில் குடியேற்றம் மிகவும் பிளவுபடுத்தும் விவகாரமாக தொடர்கிறது.





## மனிதாபிமானமும் தேசிய பாதுகாப்பும்

ஐரோப்பிய நாடுகள் இன்று ஒரு கடினமான சமநிலையைத் தேடுகின்றன. ஒருபுறம், போர், ஒடுக்குமுறை மற்றும் துன்புறுத்தலிலிருந்து தப்பி வரும் மக்களுக்கு சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் பாதுகாப்பு வழங்க வேண்டிய கடமை உள்ளது. மறுபுறம், எல்லைப் பாதுகாப்பு, சட்டவிரோத மனிதக் கடத்தலைத் தடுப்பது, தேசிய பாதுகாப்பு மற்றும் சமூக வளங்களின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும் அரசுகளுக்கு உள்ளது. இந்த இரண்டு நோக்கங்களுக்கும் இடையில் சமநிலையை உருவாக்குவது எளிதான காரியம் அல்ல. அதனால் தான் குடியேற்றக் கொள்கைகள் ஒவ்வொரு தேர்தலிலும் முக்கிய அரசியல் விவாதமாக மாறுகின்றன.

மொராக்கோ, லிபியா மற்றும் துனிசியா வழியாக மத்தியதரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவை அடையும் குடியேற்றப் பிரச்சினை ஒரு தனிநாட்டு சவால் அல்ல; அது உலகளாவிய அரசியல், பொருளாதார, மனிதாபிமான மற்றும் பாதுகாப்பு பரிமாணங்களைக் கொண்ட ஒரு சிக்கலான விடயமாகும்.

தற்போது நெதர்லாந்து, இத்தாலி மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் இந்தப் பிரச்சினை அரசியல் மாற்றங்களையும் தேர்தல் முடிவுகளையும் ஆழமாகப் பாதித்துள்ளது. அதேவேளை, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் எல்லைப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இடையில் சமநிலையை உருவாக்கும் முயற்சி இன்னும் தொடர்கிறது.

எதிர்காலத்தில் இந்த நெருக்கடிக்கு நீடித்த தீர்வு காண வேண்டுமெனில், எல்லைக் கட்டுப்பாட்டை மட்டும் வலுப்படுத்துவது போதுமானதாக இருக்காது. மாறாக, போர்கள், வறுமை, அரசியல் நிலையற்ற தன்மை, காலநிலை மாற்றம் மற்றும் பொருளாதார சமத்துவமின்மை போன்ற குடியேற்றத்தின் அடிப்படைக் காரணிகளை சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் எதிர்கொள்வதே நீடித்த மற்றும் மனிதநேயமான தீர்வாக அமையும்.





# புலம் பெயர் மண்ணில் தமிழின அடையாளம்: அவுஸ்திரேலியத் தமிழர் குடிசன கணக்கெடுப்பு

– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

08.08.2026

அவுஸ்திரேலியா இன்று உலகின் பல்வேறு இனங்கள், மொழிகள், பண்பாடுகள் மற்றும் சமூகங்கள் ஒன்றிணைந்து வாழும் பன்முகத்தன்மை கொண்ட நாடாக விளங்குகிறது. அந்தப் பன்முகத்தன்மையின் முக்கியமான ஒரு பகுதியாக அவுஸ்திரேலியத் தமிழ்ச் சமூகமும் கடந்த பல தசாப்தங்களாக வளர்ச்சியடைந்து வருகிறது. இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து குடிபெயர்ந்த தமிழர்களுடன், அவுஸ்திரேலியாவிலேயே பிறந்து வளர்ந்த இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறை தமிழர்களும் இன்று இந்த சமூகத்தின் ஒரு முக்கிய அங்கமாக உள்ளனர்.

இந்த நிலையில், அவுஸ்திரேலிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (Australian Census) தமிழ்ச் சமூகத்திற்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் ஒரு சமூகத்தின் உண்மையான எண்ணிக்கை, அதன் மொழிப் பயன்பாடு, பண்பாட்டு அடையாளம் மற்றும் புவியியல் பரவல் ஆகியவை அதிகாரப்பூர்வமாகப் பதிவாகும் முக்கிய வாய்ப்பாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அமைகிறது.

2021ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, வீட்டில் தமிழ் பேசுவதாகப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 95,404 ஆகும். 2016ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 73,162 ஆக இருந்தது. அதாவது ஐந்து ஆண்டுகளில் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கையில் சுமார் 30.4 விகித வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி அவுஸ்திரேலியாவில் தமிழ்மொழி பேசும் சமூகத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இது வெறும் ஒரு புள்ளிவிவரம் அல்ல. அவுஸ்திரேலியாவின் பன்முக சமூகத்தில் தமிழ் மொழி பெற்றிருக்கும் இடத்திற்கான ஒரு முக்கியமான சான்றாகும். ஒரு மொழி எத்தனை பேரால் வீட்டில் பேசப்படுகிறது என்பது அந்த மொழி சமூகத்தில் எவ்வளவு உயிர்ப்புடன் இருக்கிறது என்பதையும் வெளிப்படுத்துகிறது.

2021ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் தமிழ் பேசுபவர்களின் பிறந்த இடங்களைப் பார்க்கும்போது, இந்தியாவில் பிறந்தவர்கள் 42.5 விகிதம், அதாவது 40,518 பேர் என முதலிடத்தில் உள்ளனர். இலங்கையில் பிறந்தவர்கள் 29.6 விகிதம், அதாவது 28,222 பேர் என இரண்டாவது இடத்தில் உள்ளனர். அவுஸ்திரேலியாவிலேயே பிறந்த தமிழ் பேசும் மக்கள் 17.7 விகிதம், அதாவது 16,853 பேர் என மூன்றாவது இடத்தில் உள்ளனர். இதற்கு மேலாக மலேசியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, இங்கிலாந்து, ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் பிறந்த தமிழ் பேசும் மக்களும் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றனர்.

## தமிழ் பண்பாட்டு அடையாளம்

இந்தப் புள்ளிவிவரம் ஒரு முக்கியமான உண்மையை எடுத்துக் காட்டுகிறது. தமிழர்களின் பிறந்த நாடுகள் வெவ்வேறாக இருக்கலாம் ஆனால் தமிழ் மொழி அவர்களை ஒரு பொதுவான பண்பாட்டு அடையாளத்தின் கீழ் இணைக்கிறது.



இந்தியாவில் பிறந்த தமிழரும், இலங்கையில் பிறந்த தமிழரும், மலேசியாவில் பிறந்த தமிழரும், அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்த தமிழரும் வெவ்வேறு குடியுரிமைகளைக் கொண்டிருக்கலாம். ஆனால் தமிழ் மொழி, பண்பாடு, குடும்ப மரபு மற்றும் வரலாற்றுப் பின்னணி ஆகியவை அவர்களிடையே பொதுவான இணைப்பை உருவாக்குகின்றன.

இதனால்தான் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் மொழி மற்றும் பூர்வீக அடையாளம் ஆகிய இரண்டையும் சரியாகப் பதிவு செய்வது முக்கியமானதாகிறது. ஒருவர் வீட்டில் தமிழ் பேசுகிறாரெனில், மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் வீட்டில் ஆங்கிலத்தைத் தவிர வேறு எந்த மொழி பயன்படுத்தப்படுகிறது?” என்ற கேள்விக்கு தமிழ் எனப் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இங்கு ஒரு முக்கியமான விடயத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவர் பணியிடத்தில் ஆங்கிலம் பேசலாம். பள்ளியில் அல்லது பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமே பிரதான மொழியாக இருக்கலாம். சமூக வாழ்க்கையிலும் ஆங்கிலம் அதிகமாகப் பயன்படுத்தப்படலாம். ஆனால் வீட்டில் பெற்றோருடன்,



குடும்ப உறுப்பினர்களுடன் அல்லது உறவினர்களுடன் தமிழ் பேசப்பட்டால், அந்த குடும்பத்தில் தமிழ் பயன்படுத்தப்படும் மொழியாகும் எனவே ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடிய தமிழர்கள் தங்கள் தமிழ் மொழிப் பயன்பாட்டை கணக்கெடுப்பில் பதிவு செய்வதில் எந்த தயக்கமும் கொள்ளத் தேவையில்லை.

அதேபோன்று உங்கள் பூர்வீகம் என்ன என்ற கேள்வியும் தமிழர்களுக்கு முக்கியமானதாகும்.

பிறந்த நாடு என்பது ஒருவரின் பூர்வீக அடையாளத்துடன் எப்போதும் ஒன்றாக இருக்க வேண்டியதில்லை. ஒருவர் அவுஸ்திரேலியாவில் பிறந்திருந்தாலும், அவருடைய குடும்பப் பூர்வீகம் தமிழ் ஆக இருக்கலாம். ஒருவர் இந்தியாவில் பிறந்திருந்தாலும், அவருடைய பண்பாட்டு அடையாளம் தமிழ் ஆக இருக்கலாம். ஒருவர் இலங்கையில் பிறந்திருந்தாலும், அவர் தன்னை தமிழராக அடையாளப்படுத்திக் கொள்ளலாம். எனவே தங்களைத் தமிழர் என அடையாளப்படுத்திக் கொள்பவர்கள், தங்களுக்கு பொருந்தும் இடத்தில் தமிழ் என்ற அடையாளத்தைத் தெளிவாகப் பதிவு செய்வது முக்கியமானது.

2021ஆம் ஆண்டு தரவுகளின்படி, 54.7 விகிதம், அதாவது 52,146 பேர் தங்களை “தமிழ்” என்ற அடையாளத்துடன் பதிவு செய்துள்ளனர். மேலும் 29.5 விகிதம் பேர் இந்தியப் பூர்வீகத்தையும், 9.5 விகிதம் பேர் இலங்கைப் பூர்வீகத்தையும், 5.6 விகிதம் பேர் இலங்கைத் தமிழ் பூர்வீகத்தையும் குறிப்பிட்டுள்ளனர். இந்தப் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, தமிழ் அடையாளம் ஒரே ஒரு நாட்டின் எல்லைக்குள் அடங்காதது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

தமிழர் அடையாளம் என்பது மொழி, பண்பாடு, வரலாறு, குடும்ப மரபு மற்றும் சமூக நினைவகம் ஆகியவற்றோடு இணைந்த ஒன்று. எனவே ஒருவர் தன்னைத் தமிழராக அடையாளப்படுத்திக் கொண்டால், அந்த அடையாளம் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரத்திலும் பிரதிபலிப்பது அவசியம். இது மற்றொரு நாட்டின் அல்லது மற்றொரு இனத்தின் அடையாளத்தை மறுப்பதாக அல்ல. மாறாக, ஒருவருடைய பல அடையாளங்களில் தமிழ் என்ற மொழி மற்றும் பண்பாட்டு அடையாளத்திற்கும் உரிய இடத்தை வழங்குவதாகும்.

அவுஸ்திரேலியாவில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளும் இந்த வளர்ச்சியின் முக்கியமான சான்றுகளாக உள்ளன. நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் Wentworthville, Toongabbie, Parramatta, Westmead போன்ற பகுதிகளில் கணிசமான எண்ணிக்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றனர். Victoria மாநிலத்தில் Glen Waverley, Point Cook போன்ற பகுதிகளும் தமிழ்ச் சமூகத்தின் முக்கியமான வாழ்விடங்களாக வளர்ந்துள்ளன. தமிழர்கள் அதிகமாக வாழும் முதல் 100 புறநகர் பகுதிகளில் கணிசமான அளவு தமிழர்கள் செறிந்து வாழ்கின்றனர் என்பது சமூகத்தின் புவியியல் வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுகிறது.

இத்தகைய புள்ளிவிவரங்கள் எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகத்திற்கு பல்வேறு வகைகளில் உதவக்கூடியவை. ஒரு குறிப்பிட்ட பகுதியில் தமிழ் பேசும் மக்கள் கணிசமான எண்ணிக்கையில் இருப்பது அதிகாரப்பூர்வமாகப் பதிவானால், அந்த சமூகத்தின் தேவைகளைப் புரிந்துகொள்ள அரசாங்க நிறுவனங்களுக்கும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் சமூக நிறுவனங்களுக்கும் அது உதவியாக அமையும். தமிழ் மொழிக் கல்வி, சமூக சேவைகள், முதியோர் சேவைகள், நூலக வளங்கள், மொழிபெயர்ப்பு சேவைகள், கலாசார நிகழ்ச்சிகள், இளைஞர் திட்டங்கள், சமூக மையங்கள் போன்ற பல்வேறு தேவைகளுக்கான திட்டமிடலில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தரவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

எனவே கணக்கெடுப்பில் தமிழ் மொழியையும் தமிழ் அடையாளத்தையும் சரியாகப் பதிவு செய்வது ஒரு தனிநபரின் தகவலை மட்டும் பதிவு செய்வதல்ல. அது ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் சமூக இருப்பை அதிகாரப்பூர்வமாக வெளிப்படுத்தும் செயற்பாடாகும். குறிப்பாக இளம் தலைமுறையினருக்கு இதில் மிகப்பெரிய பொறுப்பு உள்ளது.

**அவுஸ்திரேலியாவில் தமிழ் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் நமது அடையாளத்தைப் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலமே தமிழர் அடையாளம் என்பது மொழி, பண்பாடு, வரலாறு, குடும்ப மரபு ஆகியவற்றோடு இணைந்த ஒன்றாக பேணலாம். எனவே ஒருவர் தன்னைத் தமிழராக அடையாளப்படுத்திக் கொண்டால், அந்த அடையாளம் அந்த நாட்டின் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரத்திலும் பிரதிபலிப்பது அவசியமாகிறது.**

## அவுஸ்திரேலிய சமூகத்தில் தமிழர்

அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்த தமிழ் இளைஞர்கள் இன்று அவுஸ்திரேலிய சமூகத்தின் முழுமையான அங்கங்களாக உள்ளனர். அவர்கள் ஆங்கிலத்தில் கல்வி கற்கின்றனர் பல்வேறு தொழில்களில் பணியாற்றுகின்றனர் அவுஸ்திரேலிய சமூகத்தின் பொருளாதார, கல்வி, அறிவியல், மருத்துவ மற்றும் கலாசார வளர்ச்சியில் பங்களிக்கின்றனர். அதே நேரத்தில் அவர்களின் குடும்பப் பின்னணியில் தமிழ் மொழியும் பண்பாடும் தொடர்ந்து வாழ்கின்றன.

இந்த தலைமுறையினர் தங்களது தமிழ் அடையாளத்தைத் தெளிவாகப் பதிவு செய்வது மிகவும் முக்கியமானது. ஏனெனில் இன்று நாம் பதிவு செய்யும் தரவுகள் நாளைய தலைமுறைக்கு தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றுப் பதிவாக மாறும்.

ஒரு மொழி ஒரு தலைமுறையில் மட்டும் வாழ்வதில்லை. அது அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படும்போதுதான் அதன் தொடர்ச்சி உறுதியாகிறது.

தமிழ் வீட்டில் பேசப்பட வேண்டும். தமிழ் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். தமிழ் இலக்கியம், கலை, இசை, வரலாறு மற்றும் பண்பாடு அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். அதேபோன்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் தமிழ் மொழியும் தமிழ் பூர்வீக அடையாளமும் சரியாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இங்கு மற்றொரு முக்கியமான விடயத்தையும் வலியுறுத்த வேண்டும். கணக்கெடுப்பில் சரியான தகவலை வழங்குவது எந்த அரசியல் கட்சிக்கும் ஆதரவளிப்பது அல்ல. அது எந்த ஒரு அரசியல் கருத்தையும் வெளிப்படுத்துவதுமல்ல.

மாறாக, நாம் யார், எந்த மொழியைப் பேசுகிறோம், எமது பண்பாட்டு பூர்வீகம் என்ன என்பதற்கான உண்மையான சமூகப் பதிவை உருவாக்குவதே அதன் நோக்கம்.

அவுஸ்திரேலியாவின் பன்முகத்தன்மையைப் புரிந்துகொள்வதற்கும், பல்வேறு சமூகங்களின் தேவைகளை மதிப்பிடுவதற்கும் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் அவசியமானவை.

தமிழ் அடையாளத்தைப் பெருமையுடன் பதிவு செய்ய வேண்டும். சமூக அமைப்புகள் இந்த விழிப்புணர்வை பரவலாக எடுத்துச் செல்ல வேண்டும். ஒரு சமூகத்தின் பலம் அதன் எண்ணிக்கையில் மட்டும் இல்லை; அந்த எண்ணிக்கை சரியாகப் பதிவாகியிருப்பதிலும் உள்ளது.

அவுஸ்திரேலியாவின் பன்முக சமூகத்தில் தமிழர்களின் குரல் தெளிவாக ஒலிக்க வேண்டுமெனில், நமது இருப்பு அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களிலும் தெளிவாகத் தெரிய வேண்டும். தமிழ் எமது மொழி.

தமிழ் எமது பண்பாட்டு அடையாளம்.

அந்த அடையாளம் அவுஸ்திரேலியாவின் அதிகாரப்பூர்வ பன்முகத்தன்மைப் பதிவிலும் தெளிவாகப் பிரதிபலிக்கட்டும்.

# 1965 இல் கண்ணீருடன் பிறந்த ஒரு புதிய தேசம்: சிங்கப்பூர் எழுச்சியும் லீ குவான் யூவின் தொலைநோக்கும்!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

09.08.2026

1965 ஆகஸ்ட் 9. உலக வரலாற்றில் ஒரு சிறிய தீவு தனி நாடாகப் பிறந்த நாள். இன்று உலகின் செல்வச் செழிப்பான, ஒழுங்கமைக்கப்பட்ட, நவீன நகர-தேசங்களில் ஒன்றாக விளங்கும் சிங்கப்பூர் அன்றைய தினம் எதிர்காலம் குறித்து அச்சத்துடன் தனது பயணத்தைத் தொடங்கியது.




அந்த நாளில் சிங்கப்பூரின் பிரதமர் லீ குவான் யூ செய்தியாளர் சந்திப்பில் பேசும்போது உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் விட்டார். காரணம், அவர் விரும்பிய சுதந்திரம் அது அல்ல. சிங்கப்பூர் தனித்த நாடாக உருவாக வேண்டும் என்பது அவரது ஆரம்ப கால அரசியல் இலக்கு அல்ல; மாறாக, மலேசியாவுடன் இணைந்திருப்பதன் மூலம் சிங்கப்பூருக்கும் மலாயா தீபகற்பத் திற்கும் ஒரு பாதுகாப்பான, வளமான எதிர்காலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையே அவரிடம் இருந்தது.

1963இல் சிங்கப்பூர் மலேசிய கூட்டமைப்பில் இணைந்தது. ஆனால் அரசியல், பொருளாதார மற்றும் இன உறவுகள் தொடர் பான தீவிர முரண்பாடுகள் விரைவில் உருவாகின. இறுதியில் 1965 ஆகஸ்ட் 9 அன்று சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து தனிநாடாகியது. சிங்கப்பூர் அரசின் அதிகாரப்பூர்வ சட்டமும் அந்நாளையே தனி, இறையாண்மை கொண்ட குடியரசாக மாறிய நாளாகப் பதிவு செய்கிறது.

## வளமற்ற தீவின் மிகப்பெரிய சவால்

1965இல் சிங்கப்பூர் இன்று நாம் அறிந்த உலக நகரமாக இருக் கவில்லை. சிறிய நிலப்பரப்பு. குறைந்த இயற்கை வளங்கள். குறைந்த அளவிலான உள்நாட்டு சந்தை. வேலைவாய்ப் பின்மை. வறுமை. குடிசைப்பகுதிகள். வீடமைப்பு நெருக்கடி. இனப் பதற்றங்கள். இவற்றுடன், குடிநீருக்குக் கூட அண்டை நாடான மலேசியாவைச் சார்ந்திருந்த நிலை.

எனவே, சிங்கப்பூர் தனியாக நிலைத்து நிற்குமா என்ற கேள்வி எழுவது இயல்பானதே. ஆனால் லீ குவான் யூவும் அவரது அணியினரும் சிங்கப்பூரின் மிகப்பெரிய வளம் அதன் நிலத் தடியில் இல்லை என்பதைப் புரிந்துகொண்டனர். அந்த வளம் மனிதர்களிடமே இருந்தது. இயற்கை வளம் இல்லாத நாடு மனித வளத்தை வளமாக மாற்ற வேண்டும் என்ற அடிப்படை யில் சிங்கப்பூரின் புதிய அரசியல்-பொருளாதார கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதுவே அந்நாட்டின் மிகப்பெரிய மாற்றத் தின் தொடக்கமாக அமைந்தது.

இலங்கை ஒரு காலத்தில் சிங்கப்பூருக்கான முன்மாதிரியாக இருந்தது என்றும் கூறப்படுகிறது. இங்கு இலங்கையுடனான ஒப்பீடு மிகவும் முக்கியமானது.

1956ஆம் ஆண்டு சிங்கப்பூர் அரசியலில் முக்கியத்துவம் பெற் றிருந்த லீ குவான் யூ இலங்கைக்கு விஜயம் செய்தார். அப்போது சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கை, சிங்கப்பூரைவிட மேம்பட்ட உள்கட்டமைப்பு, கல்வி, நிர்வாக அனுபவம் மற்றும் வளங்களைக் கொண்ட நாடாக அவருக்குத் தோன்றியது. பின் னாளில் தனது நினைவுக் குறிப்புகளில், சிலோன் பிரித் தானியாவின் மாதிரி காமன்வெல்த் நாடாக இருந்ததாகவும், சிங்கப்பூரைவிட அதிக வளங்களும் சிறந்த உள்கட்டமைப்பும் அதற்கிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் லீ குவான் யூவின் பார்வையில் இலங்கையின் பின் னர் ஏற்பட்ட அரசியல் மற்றும் இன முரண்பாடுகள் மிகப்பெரிய எச்சரிக்கைப் பாடமாக மாறின. பெரும்பான்மை-சிறுபான்மை உறவுகள், மொழிக் கொள்கை, அரசியல் போட்டிகள் மற்றும் இன அடையாள அரசியல் ஆகியவை ஒரு நாட்டின் பொருளா தார முன்னேற்றத்தை எவ்வாறு பாதிக்க முடியும் என்பதை இலங்கையின் அனுபவம் அவருக்கு உணர்த்தியது.

இதிலிருந்து சிங்கப்பூர் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொண்டது. பொருளாதார வளர்ச்சிக்கு அரசியல் நிலைத்தன் மையும் சமூக ஒற்றுமையும் அவசியம்.



**உலக வரலாற்றில் ஒரு சிறிய தீவு தனிநாடாகப் பிறந்த நாள் 1965 ஆகஸ்ட் 9. உலகின் செல்வச் செழிப்பான, ஒழுங்கமைக்கப்பட்ட, நவீன நகர-தேசங்களில் ஒன்றாக விளங்கும் சிங்கப்பூர் அன்றைய தினம் எதிர்காலம் குறித்து அச்சத்துடன் தனது பயணத்தைத் தொடங்கியது. ஒரு நாடு உருவாகும் போது அதன் தலைவன் மகிழ்ச்சியில் கண்ணீர் விடுவது இயல்பாக இருக்கலாம். ஆனால், ஒரு நாடு பிறந்த நாளில் அதன் தலைவன் துயரத்தில் கண்ணீர் விட்ட வரலாறு அரிதானது.**

எனவே, சிங்கப்பூர் இலங்கையைப் போல ஆக வேண்டும் என்ற ஆரம்பகால பார்வையிலிருந்து, சிங்கப்பூர் தனது சொந்த மாதிரியை உருவாக்க வேண்டும் என்ற புதிய பாதைக்கு லீ குவான் யூ நகர்ந்தார்.




## மனித வளமே நாட்டின் செல்வம்

சிங்கப்பூரின் முதல் பெரிய முதலீடு மனிதர்களில் செய்யப்பட்டது. உலகத் தரமான கல்வி, தொழில்நுட்பப் பயிற்சி, ஆங்கில மொழித் திறன் மற்றும் திறமை அடிப்படையிலான நிர்வாகம் ஆகியவை நாட்டின் வளர்ச்சியின் அடித்தளங்களாக அமைந் தன. அதே நேரத்தில் சிங்கப்பூர் தனது பல்மொழி மற்றும் பல இன சமூக அமைப்பை முற்றிலும் அழிக்கவில்லை. ஆங்கிலம் நிர்வாகம், கல்வி மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் முக்கிய மொழியாக உயர்த்தப்பட்டாலும், மலாய், மாண்டரின் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளும் அதிகாரப்பூர்வ மொழிகளாக அங்கீ கரிக்கப்பட்டன.

இதன் மூலம் உலக பொருளாதாரத்துடன் இணைவதற்கான கதவு திறக்கப்பட்டது அதே நேரத்தில் பல்வேறு இனக் குழக் களின் மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்களுக்கும் இடம் வழங்கப்பட்டது. வீடமைப்பை சமூக ஒருமைப்பாட்டின் கருவி யாக மாற்றியதால் சிங்கப்பூர் வளர்ந்தது.

சிங்கப்பூரின் மற்றொரு முக்கியமான வெற்றி வீடமைப்புத் துறையில் ஏற்பட்டது. Housing & Development Board (HDB) மூலம் பெருமளவில் அரச வீடுகள் கட்டப்பட்டன. இதன் மூலம் குடிசைப்பகுதிகளில் வாழ்ந்த மக்களை திட்டமிட்ட குடியிருப் புகளுக்கு மாற்ற முடிந்தது.

ஆனால் சிங்கப்பூர் வீடமைப்பை வெறும் பொருளாதாரத் திட்ட மாக மட்டும் பார்க்கவில்லை. அது சமூக ஒருமைப்பாட்டை உருவாக்கும் கருவியாகவும் பயன்படுத்தப்பட்டது.

1989ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட Ethnic Integration Policy (EIP), வெவ்வேறு இனக் குழுக்கள் தனித்தனி குடியிருப்பு பகுதிகளாகப் பிரிந்து வாழ்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் HDB குடியிருப்புகளில் இன விகிதங்களை நிர்ணயித்தது. இதன் நோக்கம் இன அடிப்படையிலான குடியிருப்பு “Enclaves” உரு வாகாமல் தடுத்து, பல்வேறு சமூகங்கள் ஒன்றோடு ஒன்று வாழும் சூழலை உருவாக்குவதாகும். இதன் மூலம் “சீனர்”, “மலாய்”, “இந்தியர்” என்ற அடையாளங்களுக்கு மேலாக “சிங் கப்பூரியர்” என்ற பொதுவான தேசிய அடையாளத்தை வலுப் படுத்த முயற்சி செய்யப்பட்டது.

## வலுவான இராணுவ நாடு

1965இல் சிங்கப்பூர் தனிநாடானபோது அதன் பாதுகாப்பு மிகப் பெரிய கேள்வியாக இருந்தது. அப்போது சிங்கப்பூரிடம் இன்று இருப்பதைப் போன்ற வலுவான ஆயுதப்படை கிடையாது. எனவே, புதிய நாட்டின் பாதுகாப்புக்காக உடனடியாக இராணு வக் கட்டமைப்பு உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இங்கு இஸ்ரேலின் பங்கு குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட உரையொன்றில், 1965 சுதந்திரத்துக்குப் பிறகு இஸ்ரேல் சிங்கப்பூர் ஆயதப் படையை உருவாக்குவதற்கு உதவியதாகவும், இஸ்ரேலிய இராணுவ ஆலோசகர்கள் இரகசியமாக “Mexicans” என்ற பெயரில் சிங்கப்பூருக்கு வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களின் வழிகாட்டுதலில் சிங்கப்பூர் தனது தொழில்முறை இராணுவ அமைப்பை உருவாக்கத் தொடங்கியது. இதன் விளைவாக, சிறிய நிலப்பரப்பைக் கொண்ட சிங்கப்பூர் தனது தேசிய பாதுகாப்பை மிகவும் தீவிரமாக அணுகும் நாடாக மாறியது.

ஊழலுக்கு எதிரான கடுமையான அணுகுமுறையை லீ குவான் யூவின் அரசியல் தத்துவத்தில் மற்றொரு முக்கிய அம்சமாக நிர்வாகத் தூய்மை பெற்றது. அரசாங்கம் ஊழலில் சிக்கினால் பொருளாதார வளர்ச்சி நீண்ட காலம் நிலைக்காது என்ற புரிதல் அவரிடம் இருந்தது. அதனால் அரசாங்க அதிகாரிகளுக்கான கடுமையான ஒழுங்கு, சட்டத்தின் அமுலாக்கம் மற்றும் ஊழல் எதிர்ப்பு அமைப்புகள் வலுப்படுத்தப்பட்டன.

அரசுப் பணியாளர்களின் திறமைக்கும் நேர்மைக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தனிநபர் விருப்பத்தை விட நிறுவனங்களின் செயல்திறன் முக்கியமானதாகக் கருதப்பட்டது. இதே அணுகுமுறையே பின்னர் சிங்கப்பூரை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நம்பகமான நாடாக மாற்ற உதவியது.

## உலகப் பொருளாதார மையம்

இயற்கை வளமற்ற சிங்கப்பூர் தனது புவியியல் அமைப்பையே ஒரு பொருளாதார வளமாக மாற்றிக் கொண்டது. ஆசியாவின் முக்கிய கடல் வர்த்தகப் பாதைகளுக்கு அருகிலுள்ள அதன் இடம், துறைமுக வளர்ச்சி, சர்வதேச வர்த்தகம், நிதிச் சேவைகள், உற்பத்தித் தொழில், தொழில்நுட்பம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஏற்ற முதலீட்டு சூழல் ஆகியவை ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டன.




இதனால் சிங்கப்பூர் ஒரு சிறிய தீவு என்ற வரம்பைத் தாண்டி உலக பொருளாதாரத்தில் ஒரு முக்கிய முனையமாக வளர்ந்தது.

சிங்கப்பூரின் வரலாற்றை வெறும் “லீ குவான் யூ என்ற ஒரே மனிதரின் வெற்றி” என்று விளக்குவது முழுமையான பார்வையாக இருக்காது.




அவருடன் இணைந்து செயல்பட்ட அரசியல் தலைவர்கள், நிர்வாகிகள், பொறியாளர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் சாதாரண மக்கள் அனைவரும் இந்த மாற்றத்தின் பங்காளிகள்.

ஆனால் லீ குவான் யூவின் தனித்துவம் என்னவென்றால், அவர் ஒரு சிறிய நாட்டின் பலவீனங்களை மறைக்க முயலவில்லை. அவற்றை நேரடியாக ஏற்றுக்கொண்டு, அவற்றுக்கான நடைமுறைத் தீர்வுகளை உருவாக்கினார். எண்ணெய் இல்லை – மனித வளத்தை உருவாக்கு.

நிலம் குறைவு – திறமையான நகரத் திட்டமிடலை உருவாக்கு. சந்தை சிறியது – உலக சந்தையுடன் இணை. இன வேறுபாடு உள்ளது – தேசிய அடையாளத்தை உருவாக்கு. இராணுவம் இல்லை – பாதுகாப்பை கட்டியெழுப்பு. வளங்கள் குறைவு – திறமையை வளமாக்கு. இதுவே சிங்கப்பூர் மாதிரியின் மையக் கருத்து.

## கண்ணீரில் தொடங்கி நம்பிக்கையில் முடிந்த பயணம்

1965 ஆகஸ்ட் 9 அன்று சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து தனி இறையாண்மை கொண்ட நாடாகியது. அந்த நாளின் கண்ணீர் மகிழ்ச்சியின் கண்ணீர் அல்ல; எதிர்பாராத பிரிவின் வேதனையுடன் கலந்த எதிர்கால அச்சத்தின் கண்ணீர். ஆனால் அந்தக் கண்ணீருக்குப் பின்னால் ஒரு தீர்மானம் இருந்தது.

நாம் தோல்வியடையக் கூடாது அந்தத் தீர்மானமே அடுத்த பல தசாப்தங்களில் சிங்கப்பூரின் அரசியல், பொருளாதாரம், கல்வி, வீடமைப்பு, பாதுகாப்பு மற்றும் நிர்வாக அமைப்புகளை வடிவமைத்தது. இன்று 1965இல் பிறந்த அந்தச் சிறிய நாடு உலகின் முக்கிய நிதி, வர்த்தக, துறைமுக மற்றும் தொழில்நுட்ப மையங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

சிங்கப்பூரின் கதை நமக்கு சொல்லும் மிகப் பெரிய உண்மை இதுதான். ஒரு நாட்டின் உண்மையான செல்வம் அதன் நிலத்தடியில் புதைந்திருக்கும் தங்கத்திலும் எண்ணெயிலும் மட்டும் இல்லை. அதன் மக்களின் அறிவிலும், கல்வியிலும், ஒழுக்கத்திலும், நிறுவனங்களின் வலிமையிலும், அரசியல் தலைமைத்துவத்தின் தொலைநோக்குப் பார்வையிலும் இருக்கிறது.




www.sangathamil.com



# ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தனித்துவமும் வளர்ச்சியும்!

சு. லோஜிதன்

13.08.2026

தமிழ் இலக்கியப் பரப்பில், ஈழத்துத் தமிழ் இலக்கியம் தனக்கென மிகத் தனித்துவமான, ஆழமான அடையாளத்தையும் வரலாற்றையும் கொண்டது. தமிழகத் தமிழ் இலக்கியத்தோடு மொழியால் பிணைக்கப்பட்டிருந்தாலும், புவியியல் சூழல், அரசியல் போராட்டங்கள், சமூகக் கட்டமைப்பு மற்றும் வரலாற்றுத் திருப்புமுனைகள் காரணமாக ஈழத்து இலக்கியம் ஒரு தனித்துவமான திசையிலும் வேகத்திலும் வளர்ச்சி பெற்றுள்ளது.

## 1. ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தனித்துவங்கள்

ஈழத்து இலக்கியத்தைப் பிற பிராந்திய இலக்கியங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் முதன்மையான கூறுகள்:

- ***மண்ணின் மணமும் மொழி வழக்கும்:*** ஈழத்தின் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம், வன்னியன் நிலம் என ஒவ்வொரு பகுதிக்கும் உரிய தனித்துவமான பேச்சுத் தமிழும் (வட்டார வழக்கு), பண்பாட்டுச் சொற்களும் ஈழத்து இலக்கியங்களில் இயல்பாகப் பதியப்பட்டுள்ளன.

- ***போராட்டமும் விடுதலைக் கோஷமும்:*** ஈழத்து நிலப்பரப்பு சந்தித்த தசாப்த கால ஆயுதப் போராட்டங்கள், இடப்பெயர்வுகள், இழப்புகள் மற்றும் வலிகள் ஈழத்து இலக்கியத்தின் பிரதான உணர்வாக மாறின. "போர்க்கால இலக்கியம்" (War Literature) என்ற புதிய தளத்தை தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியது ஈழமே.

- ***சமூக விழிப்புணர்வும் சாதியெதிர்ப்பும்:*** ஈழத்துச் சமூகத்தில் நிலவிய சாதியக் கொடுமைகளுக்கும் நிலப்பிரபுத்துவ அமைப்புகளுக்கும் எதிராக ஈழத்து எழுத்தாளர்கள் மிகக் காரசாரமான படைப்புகளை உருவாக்கினர்.

- ***புலம்பெயர் இலக்கியம்*** (Diaspora Literature): போரின் காரணமாக உலகம் முழுதும் சிதறிப்போன ஈழத் தமிழர்கள், தங்களின் தாய்நில ஏக்கம், அந்நியச் சூழலில் சந்திக்கும் அடையாளச் சிக்கல்கள் மற்றும் அகதி வாழ்வின் வலிகளை "புலம்பெயர் இலக்கியம்" என்ற வடிவில் உலகின் கவனத்திற்குக் கொண்டு சென்றனர்.

## 2. ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் வரலாற்று வளர்ச்சி

ஈழத்து தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியைப் பிரதானமாக ஐந்து காலகட்டங்களாகப் பிரிக்கலாம்:

### அ] பழங்காலமும் பண்டித மரபும் [ஆரம்ப காலம்]

ஈழத்தில் தமிழ் இலக்கியம் செய்யுள் வடிவில், சமய மற்றும் இலக்கணச் செழுமையுடன் தொடங்கியது.

- *சரசோதி மாலை, செகராசசேகரம்* போன்ற மருத்துவ, வானியல் நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன.

- *ஆறுமுக நாவலர்* (19ஆம் நூற்றாண்டு): தமிழ் உரைநடையின் தந்தையாகப் போற்றப்படும் ஆறுமுக நாவலர், பதிப்புத் துறைக்கும் உரைநடை வளர்ச்சிக்கும் ஆற்றிய தொண்டு ஈழத்து இலக்கிய வரலாற்றின் மிக முக்கிய திருப்பமாகும்.

- *சி. வை. தாமோதரம்பிள்ளை* பழந்தமிழ் ஏடுகளைத் தேடிக் கண்டுபிடித்துப் பதிப்பித்து தமிழ் அன்னைக்குச் சூட்டினார்.

### ஆ] மறுமலர்ச்சிக் காலம் [20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி]

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாவல், சிறுகதை போன்ற நவீன இலக்கிய வடிவங்கள் ஈழத்தில் தடம் பதித்தன.

- *சைமன் காசிச்செட்டி* (தமிழ் போதகம்), *சரவணமுத்து* ("மோகனாங்கி" நாவல்) போன்றோர் ஆரம்பகால நாவல் முயற்சிக்கு வித்திட்டனர்.

- பத்திரிகைகளின் வருகை (ஈழகேசரி, ஈழநாடு) சிறுகதை மற்றும் கட்டுரை வடிவங்களுக்கு பெரும் ஊக்கம் அளித்தது.

### இ] முற்போக்கு இலக்கியக் காலம் [1950 – 1970கள்]

ஈழத்து இலக்கிய வரலாற்றின் பொற்காலம் என்று இக்காலத்தைக் குறிப்பிடலாம். தேசிய இனப்பிரச்சினை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக எழுத்தாளர்கள் திரண்டனர்.

- ***முற்போக்கு எழுத்தாளர் சங்கம்:*** இச்சங்கத்தின் வருகை இலக்கியத்தை மக்களின் பக்கமாகக் கொண்டு சென்றது.

- ***முக்கியப் படைப்பாளிகள்:*** கே. டானியல் (சாதியெதிர்ப்பு நாவல்கள்), டொமினிக் ஜீவா (மல்லிகை இதழ் மூலம்), செங்கை ஆழியான், கே. கணேஷ், அந்தனி ஜீவா (மலையக இலக்கியம்), மஹாகவி, முருகையன், நிலாவணன் (கவிதை).

- இக்காலகட்டத்தில் தான் ஈழத்துத் தமிழ், இந்தியத் தமிழின் நிழலிலிருந்து விடுபட்டு தனக்கான தனித்துவமான அடையாளத்தை உரக்கப் பேசியது.

### ஈ] போர்க்கால இலக்கியம் [1980 – 2009]

1983 கறுப்பு ஜூலை நிகழ்வுகளுக்குப் பிறகு ஈழத்தின் சூழல் முற்றிலும் மாறியது. யுத்தம், அழிவு, மரணம், இடப்பெயர்வு போன்றவை இலக்கியத்தின் மையப்பொருளாக மாறின.

- ***கவிதை:*** புதுக்கவிதையும் விடுதலைக் கவிதைகளும் வீறுகொண்டு எழுந்தன. சேரன், வ. ஐ. ச. ஜெயபாலன், புதுவை இரத்தினதுரை, மேமன்கவி, ஆழியாள் போன்றோரின் கவிதைகள் உலக அளவில் காயத்தை ஏற்படுத்தின.

- ***உரைநடை & நாவல்:*** போரின் கொடூரத்தைப் பதிவு செய்தல், பெண்களின் போராட்டம் மற்றும் அமைதி வாழ்வுக்கான ஏக்கம் ஆகியவை நாவல்களாகவும் சிறுகதைகளாக வும் மலர்ந்தன. ஷோபாசக்தி, குணா கவியழகன், பாலமனோகரன் போன்றோர் இதில் குறிப்பிடத்தக்கவர்கள்.

### உ] புலம்பெயர் மற்றும் தற்கால இலக்கியம் [2009க்குப் பின்]

2009 முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பிறகு, ஈழத்து இலக்கியம் ஒரு புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது.

- தாயகத்தில் வாழும் மக்களின் அமைதியான அமைதியற்ற வாழ்வு, போருக்குப் பிந்தைய உளவியல் தாக்கம், காணாமல் போனோர் பற்றிய தேடல் போன்றவை எழுதப்படுகின்றன.

- ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் (எ.கா: அ. முத்துலிங்கம், அந்தோணிதாசன், சாருநிவேதிதா போன்றோருடன் இணைந்த தொடர்புகள்) சர்வதேச அளவில் ஈழத்து இலக்கியத்தை மொழிபெயர்ப்புகள் மூலம் கொண்டு சேர்க்கின்றனர்.

## முடிவுரை

ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்பது வெறும் பொழுதுபோக்கிற்கான கற்பனை உலகம் அல்ல; அது ஒரு இனத்தின் வரலாறு, வலி, எதிர்ப்பு மற்றும் வாழ்வியலின் நேரடிப் பதிவு. பண்டிதர்களின் செய்யுள்களில் தொடங்கி, ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக மாறி, போர்க்களத்தின் சாட்சியமாக நின்று, இன்று உலகளாவிய தளத்தில் பரந்து விரிந்து நிற்கும் ஈழத்து தமிழ் இலக்கியம், தமிழ் மொழியின் வளத்திற்கும் வரலாற்றுப் பதிவிற்கும் ஈடு இணையற்ற பங்களிப்பை வழங்கியுள்ளது.

# வட இலங்கையின் தொன்மை வரலாற்றை வெளிக்கொணரும் ஆனைக்கோட்டை தொல்லியல்அகழ்வாய்வு மற்றும் பாரம்பரிய சமூக விழிப்புணர்வு!

யாழ். பல்கலைக்கழக தொல்லியல் சிரேஸ்ட விரிவுரையாளர் சிவரூபி சமிதரன்

13.08.2026

**ஊடக அறிக்கை**

வட இலங்கையின் தொன்மை வரலாறு, பண்பாடு, சமூக வளர்ச்சி மற்றும் கடல்சார் தொடர்புகளை அறிவியல் அடிப் படையில் ஆராயும் நோக்குடன், யாழ்ப்பாணம் ஆனைக் கோட்டை தொல்லியல் மையத்தில் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி முதல் தொல்லியல் அகழாய்வுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் தொல் லியல் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவரூபி சயிதரன் அவர்களின் தலைமையிலும், களனிப் பல்கலைக்கழக தொல்லியல் பட் டப்பின்படிப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோம தேவ அவர்களின் இணைத் தலைமையிலும் இவ்வகழாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், களனிப் இத்திட்டத்தில் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களின் ஆய்வு ஒத்துழைப்பும் பங்களிப்பும் இடம் பெற்று வருகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் ஆசிரியர்கள், வாழ்நாள் பேராசிரியர் கிருஷ் ணராஜா, பல்கலைக்கழகத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு தொல்லியல் மாணவர்கள், களனிப் பல்கலைக்கழக தொல்லியல் பட்டப்பின்படிப்பு மாணவர்கள், கேரளப் பல்கலைக் கழக ஆய்வாளர்கள் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பழைய மாணவர்கள் ஆகியோர் இவ்வாய்வில் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

**ஆனைக்கோட்டையின் தொல்லியல் முக்கியத்துவம்**



ஆனைக்கோட்டை வட இலங்கையின் ஆரம்ப வரலாற்றுக் காலத்தைப் புரிந்துகொள்வதற்கான முக்கியமான தொல்லியல் மையங்களில் ஒன்றாகும்.

1980களிலும், 2024 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள், ஆனைக்கோட்டையின் தொன்மை, பண்பாட்டு வளர்ச்சி மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிக்கொணர்ந்துள்ளன. இவ்வாய்வுகளின்போது கருப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள், இரும்பு உருக்குத் தொழில்நுட்பத்திற்கான சான்றுகள், குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், நாணயங்கள், மணிகள், விலங்கு எலும்புகள், மீன் எச்சங்கள், நண்டு மற்றும் சங்கு ஓடுகள் உள்ளிட்ட பல்வேறு தொல்லியல் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன.

குறிப்பாக “கோவேத” எனும் வாசகத்துடன் தொடர்புடைய முத்திரை/எழுத்துச் சான்று, வட இலங்கையின் ஆரம்பகால எழுத்தறிவு, சமூக அமைப்பு மற்றும் அரசியல்-பொருளாதார வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளுக்கு முக்கியமான ஆதாரமாகக் கருதப்படுகிறது.

ஆனைக்கோட்டையின் புவியியல் அமைப்பும் அதன் தொல் லியல் முக்கியத்துவத்தை அதிகரிக்கிறது. யாழ்ப்பாணக் கட லேரி மற்றும் வளுக்கையாறு கழிமுகப் பகுதிகளுடன் தொடர் புடைய இப்பகுதி, பண்டைய காலங்களில் கடல்சார் வளங் களின் பயன்பாடு, உள்நாட்டு போக்குவரத்து மற்றும் பிராந்திய வர்த்தகத் தொடர்புகளுடன் இணைந்திருந்திருக்கக்கூடும்.

இதற்காக அகழாய்வில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில், கார்பன்-14 (AMS) காலக்கணிப்பு, சிப்பி மற்றும் கரி மாதிரிகளின் அறிவியல் ஆய்வு, விலங்கியல் தொல்லியல் (Zooarchaeology), மீன் மற்றும் பிற உயிரியல் எச்சங்களின் ஆய்வு, மட்பாண்டப் பகுப்பாய்வு, உலோகத் தொழில்நுட்பச் சான்றுகளின் ஆய்வு, தேவையான பிற ஆய்வக அடிப்படையி லான அறிவியல் பரிசோதனைகள் போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.



குறிப்பாக விலங்கு மற்றும் மீன் எச்சங்களின் ஆய்வுகள் மூலம் பண்டைய மக்களின் உணவுப் பழக்கம், வாழ்வாதாரம், கால் நடைப் பயன்பாடு, வேட்டையாடல், மீன்பிடித்தல் மற்றும் சுற்றுச் சூழலுடனான உறவு போன்ற அம்சங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

அதேவேளை, மட்பாண்டங்கள், மணிகள், சிப்பிகள், உலோகப் பொருட்கள் மற்றும் ஏனைய தொல்லியல் சான்றுகள் பற்றிய ஆய்வுகள் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைகள் மற்றும் வர்த்தகத் தொடர்புகளைப் புரிந்துகொள்ள உதவும்.

இதன் மூலம் ஆனைக்கோட்டையின் காலவரிசை, குடியிருப்பு வரலாறு மற்றும் அங்கு வாழ்ந்த மக்களின் சமூக-பொருளாதார வாழ்க்கை குறித்து புதிய அறிவியல் தகவல்களைப் பெற எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வகழாய்வு ஒரு அறிவியல் ஆய்வுத் திட்டமாக மட்டுமன்றி, எதிர்கால தொல்லியலாளர்களை உருவாக்கும் முக்கியமான கல்வி முயற்சியாகவும் அமைகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் மற்றும் நான் காம் ஆண்டு தொல்லியல் மாணவர்களும், களனிப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் பட்டப்பின்படிப்பு மாணவர்களும் இவ் வகழாய்வில் நேரடியாகப் பங்கேற்று நடைமுறைப் பயிற் சிகளைப் பெற்று வருகின்றனர்.

அகழாய்வு முறைகள், தொல்லியல் பதிவேடு, அடுக்கியல் அவ தானிப்பு, பொருட்களின் ஆவணப்படுத்தல், மாதிரி சேகரிப்பு, தொல்லியல் பொருட்களின் ஆரம்பகட்ட அடையாளம் காணல் மற்றும் அறிவியல் ஆய்வுகளுக்கான தரவுத் தயாரிப்பு போன்ற பல்வேறு துறைகளில் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப் படுகிறது.





“தொல்லியல் என்பது கடந்த காலத்தை ஆராய்வதோடு மட்டுமல் லாமல், எதிர்கால தலைமுறையினரை உருவாக்கும் கல்வித் துறையாகும்” என்ற நோக்கத்தின் அடிப்படையில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அகழாய்வு மற்றும் அறிவியல் ஆய்வுகளுடன் இணைந்து தொல்லியல் பாரம்பரியப் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் விழிப் புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் ஒரு பகுதியாக, ஆனைக்கோட்டை மற்றும் அதன் தொல் லியல் முக்கியத்துவம் தொடர்பாக உள்ளூர் சமூகத்தினர், பாட சாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசி ரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் படுகின்றன.

தளத்தின் வரலாற்று இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம், ஆனைக்கோட்டை தொல்லியல் முக்கியத்துவத்தை அறிமுகப்படுத்துதல், தொல்லியல் தளங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தல், மாணவர்களிடையே தொல் லியல் மற்றும் பாரம்பரியப் பாதுகாப்பு குறித்த ஆர்வத்தை உரு வாக்குதல், உள்ளூர் சமூகத்தின் பங்களிப்பை ஊக்குவித்தல், தொல்லியல் பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாள்வது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், வட இலங்கையின் தொன்மை வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல் லுதல் ஆகியவை முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளன.

ஆய்வுக் குழுவினர் தெரிவிப்பதாவது, தொல்லியல் பாரம்பரியத் தைப் பாதுகாப்பது தொல்லியலாளர்களின் பொறுப்பு மட்டுமல்ல; அது முழு சமூகத்தின் பொறுப்பாகும்.

மண்ணுக்குள் புதைந்திருக்கும் ஒவ்வொரு தொல்லியல் சான் றும் ஒரு பொருள் மட்டுமல்ல. அது கடந்த கால மனிதர்களின் வாழ்க்கை, அறிவு, தொழில்நுட்பம், நம்பிக்கை, பொருளாதாரம் மற்றும் சமூக உறவுகளைப் புரிந்துகொள்ள உதவும் வரலாற் றுத் தரவாகும்.

எனவே, ஆனைக்கோட்டை தொல்லியல் தளத்தில் காணப்படும் தொல்லியல் பொருட்கள் மற்றும் சான்றுகள் பாதுகாக்கப் படுவதும், அவை அறிவியல் முறையில் ஆய்வு செய்யப் படுவதும் மிகவும் அவசியமாகும்.

குறிப்பாக, தொல்லியல் தளத்தின் முக்கியத்துவத்தை உள்ளூர் சமூகத்தினரிடையே தலைமுறையினருக்காக எடுத்துச் செல் வதும், இப்பாரம்பரியத்தைப் அனைவரது கூட்டு பொறுப்பாகும். எதிர்கால பாதுகாப்பதும்.

ஆனைக்கோட்டை அகழாய்வு மூலம் கிடைக்கும் புதிய தொல் லியல் மற்றும் அறிவியல் ஆதாரங்கள், வட இலங்கையின் ஆரம்ப வரலாற்றை மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ளவும், இலங்கையின் பரந்த வரலாற்றை தென்னாசிய வரலாற்றுச் சூழலுடன் இணைத்து ஆராயவும் உதவும் என ஆய்வுக் குழு நம்புகிறது.

ஆனைக்கோட்டை ஒரு தொல்லியல் தளம் மட்டுமல்ல; அது வட இலங்கையின் தொன்மை வரலாற்றை அறிந்து கொள்ளும் ஒரு திறந்த வரலாற்றுப் புத்தகமாகும்.

இந்த மண்ணுக்குள் புதைந்திருக்கும் அடிப்படையில் வெளிக் கொணர்ந்து, வரலாற்றை அறிவியல் பாதுகாத்து, எதிர்கால தலைமுறைகளிடம் கொண்டு செல்வதே இவ்வாய்வுத் திட்டத் தின் பிரதான நோக்கமாகும்.

# அமெரிக்கா தொடரும் ஆதிக்க யுத்தம்!

# ஈரானின் வரையறுக்கப்பட்ட பதிலடிப் போர்

ஜங்கரன் விக்கினேஸ்வரா



05.08.2026

மத்திய கிழக்கு கடந்த நாற்பது ஆண்டுகளாக உலகின் மிகவும் பதற்றமான பிராந்தியமாக இருந்து வருகிறது. அந்தப் பதற்றத்தின் மையத்தில் தொடர்ந்து இடம்பெறும் இரண்டு நாடுகள் அமெரிக்காவும் ஈரானுமாகும். 1979 ஆம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு ஒருபோதும் இயல்பான நிலைக்குத் திரும்பவில்லை. பொருளாதாரத் தடைகள், மறைமுகப் போர்கள், அணுசக்தி விவகாரம், பிராந்திய செல்வாக்குப் போட்டி, இஸ்ரேலின் பாதுகாப்பு, வளைகுடா நாடுகளின் அரசியல் ஆகிய அனைத்தும் இந்த உறவை நிர்ணயித்து வருகின்றன.

## வரையறுக்கப்பட்ட போர்:

அண்மையில் ஜோர்டானில் அமைந்திருந்த அமெரிக்க இராணுவத் தளத்தின் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, அமெரிக்கா மீண்டும் ஈரானுக்குள் இலக்குகளைத் தாக்கியது. இதன் மூலம், இரு நாடுகளுக்கும் இடையே உருவாகியிருந்த குறுகிய கால பதற்றத் தளர்ச்சி முடிவுக்கு வந்தது. வெளிப்படையாகப் பார்த்தால், இந்த நடவடிக்கை ஈரானுக்கே பாதகமாகத் தோன்றலாம். ஆனால் அரசியல் ஆய்வாளர்கள் சிலர் முன்வைக்கும் கருத்து வேறுபட்டது. அவர்களின் பார்வையில், முழுமையான அமைதியை விட "கட்டுப்படுத்தப்பட்ட, வரையறுக்கப்பட்ட போர்" (Limited War) ஈரானின் நீண்டகால அரசியல் மற்றும் பாதுகாப்பு நலன்களுக்கு சில சூழல்களில் சாதகமாக இருக்கக்கூடும் என்பதே அந்த வாதமாகும்.

இந்தக் கருத்து முதலில் முரண்பாடாகத் தோன்றினாலும், மத்திய கிழக்கின் அதிகார அரசியல், உள்நாட்டு ஆட்சி, பிராந்திய செல்வாக்கு மற்றும் சர்வதேச உறவுகளின் அடிப்படையில் அதை ஆராயும்போது அதற்குப் பின்னால் உள்ள மூலோபாய சிந்தனைகள் தெளிவாகத் தெரிகின்றன.

1979 ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சிக்குப் பிறகு உருவான ஈரானிய ஆட்சியின் அரசியல் அடையாளம், அமெரிக்க ஆதிக்கத்திற்கு எதிரான எதிர்ப்பு என்ற கொள்கையுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளது. அமெரிக்கா ஒரு வெளிப்புற அச்சுறுத்தலாக தொடர்ந்து சித்தரிக்கப்படுவதன் மூலம், ஆட்சி தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தவும், தனது புரட்சிகர அடையாளத்தை நிலைநிறுத்தவும் முடிகிறது. இதனால், அமெரிக்காவுடன் முழுமையான நல்லுறவு ஏற்படுவது, ஆட்சியின் பாரம்பரிய அரசியல் கதைக்களத்தையே மாற்றக்கூடிய ஒன்றாக மாறும்.

## ஈரானின் நிழல் போர் -Shadow War

ஈரான் கடந்த பல தசாப்தங்களாக நேரடி போருக்கு பதிலாக "நிழல் போர்" (Shadow War) என்ற மூலோபாயத்தைப் பயன படுத்தி வருகிறது. லெபனானில் ஹிஸ்புல்லா, ஈராகில் ஷியா ஆயுதக் குழுக்கள், யேமனில் ஹூத்திகள், காசாவில் உள்ள சில ஆயுத இயக்கங்கள் போன்ற கூட்டாளி அமைப்புகள் மூலம் தனது செல்வாக்கை விரிவுபடுத்தியுள்ளது. இந்த அமைப்புகள் மூலம் ஈரான் தனது எதிரிகளுக்கு அழுத்தம் கொடுக்கிறது ஆனால் அதே நேரத்தில் நேரடி முழுமையான போரில் ஈடுபடுவதைத் தவிர்க்கிறது.

இந்த அணுகுமுறையில் "கட்டுப்படுத்தப்பட்ட போர்" முக்கிய பங்கு வகிக்கிறது. அதாவது, எதிரிக்கு தனது திறனை வெளிப்படுத்தும் அளவுக்கு மட்டுமே தாக்குதல் நடத்துவது; ஆனால் அது முழுமையான பிராந்தியப் போராக மாறாதபடி கவனிப்பது. இதன் மூலம், ஈரான் தனது எதிரிகளைத் தடுக்கும் (Deterrence) திறனை வெளிப்படுத்துவதோடு, மிகப் பெரிய இராணுவ மற்றும் பொருளாதார இழப்புகளையும் தவிர்க்க முயல்கிறது.

உள்நாட்டு அரசியலிலும் இந்த அணுகுமுறை முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பொருளாதாரத் தடைகள், பண வீக்கம், வேலைவாய்ப்பின்மை, நாணய மதிப்பிழப்பு மற்றும் மக்களின் அதிருப்தி போன்ற சவால்களை எதிர்கொள்ளும் அரசுகள், சில நேரங்களில் வெளிப்புற அச்சுறுத்தலை முன்னிறுத்தி தேசிய ஒற்றுமையை வலுப்படுத்த முயல்கின்றன. இது "Rally Around the Flag" என்ற அரசியல் கோட்பாட்டுடன் தொடர்புடையது. வெளிநாட்டு அச்சுறுத்தல் அதிகரிக்கும் நேரங்களில் மக்கள் அரசாங்கத்தை ஆதரிக்கும் போக்கு உருவாகலாம். ஈரானிலும் இந்த உளவியல் மற்றும் அரசியல் விளைவு ஒரு அளவுக்கு செயல்படக்கூடும்.

## அமெரிக்காவின் முழுமையான போர்:

மறுபுறம், அமெரிக்காவுக்கும் முழுமையான போர் விருப்பமான ஒன்றல்ல. மத்திய கிழக்கில் நீண்டகால போர்கள் அமெரிக்காவுக்கு பெரும் மனித மற்றும் பொருளாதாரச் செலவுகளை ஏற்படுத்தியுள்ளன. ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற அனுபவங்கள் இன்னும் அமெரிக்க அரசியலில் தாக்கம் செலுத்துகின்றன. எனவே, அமெரிக்கா ஈரானைத் தடுக்க விரும்பினாலும், ஒரு நீண்டகால தரைப்படைப் போரைத் தொடங்குவதில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுகிறது.

இந்த பரஸ்பரக் கணக்கீடுகளின் காரணமாகவே இரு நாடுகளும் பல நேரங்களில் "கட்டுப்படுத்தப்பட்ட பதிலடி" என்ற அணுகுமுறையைப் பின்பற்றுகின்றன. ஒரு தாக்குதலுக்கு பதிலடி வழங்கப்படுகிறது; ஆனால் அந்தப் பதிலடி முழுமையான போருக்கு வழிவகுக்காத அளவில் கணக்கிட்டு மேற்கொள்ளப்படுகிறது. இதை சர்வதேச உறவுகளில் "Escalation Management" என்று குறிப்பிடுகின்றனர்.

**அமெரிக்காவுடன் முழுமையான அமைதியை விட கட்டுப்படுத்தப்பட்ட போரே ஈரானுக்கு அவசியமாக உள்ளது. ஈரானின் கட்டுப்படுத்தப்பட்ட பதிலடி போர் அரசியல் ரீதியாக அமெரிக்க ட்ரம்ப் அரசுக்கு சாதக–மாக இருக்கலாம். இருப்பினும் மத்திய கிழக்கின் புதிய பாதுகாப்பு அரசியலின் ஆழமான பகுப்பாய்வில் ஈரான் அரசே கையோங்கி வருகிறதாக தெரிகிறது.**



இஸ்ரேல்–ஈரான் மோதலும் இந்தக் கணக்கீட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. அமெரிக்கா தனது முக்கிய கூட்டாளியான இஸ்ரேலின் பாதுகாப்பை முன்னுரிமையாகக் கருதுகிறது. அதே நேரத்தில், ஈரான் பாலஸ்தீன ஆதரவு மற்றும் "எதிர்ப்பு அச்சு" (Axis of Resistance) என்ற அரசியல் நிலைப்பாட்டின் மூலம் பிராந்தியத்தில் தனது செல்வாக்கைத் தக்கவைத்துக் கொள்ள முயல்கிறது. இந்தப் போட்டி தொடரும் வரை, அமெரிக்கா–ஈரான் உறவில் முழுமையான அமைதி உருவாகுவது கடினமாகவே இருக்கும்.

பொருளாதார ரீதியாகப் பார்த்தாலும், கட்டுப்படுத்தப்பட்ட மோதல்கள் சில நேரங்களில் ஈரானின் அரசியல் கணக்கீட்டுக்கு ஏற்றதாக இருக்கலாம். முழுமையான போர் நாட்டின் எண்ணெய் உற்பத்தி, அடிப்படை கட்டமைப்பு, வர்த்தகம் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை கடுமையாகப் பாதிக்கும். ஆனால் வரையறுக்கப்பட்ட மோதல்கள், உலகளாவிய கவனத்தை ஈர்ப்பதோடு, சில நேரங்களில் எதிரிகளின் அரசியல் அழுத்தத்தையும் சோதிக்க உதவுகின்றன.

## முழுமையான பிராந்திய போர்

இருப்பினும், இந்த மூலோபாயத்தில் மிகப் பெரிய அபாயமும் உள்ளது. "கட்டுப்படுத்தப்பட்ட போர்" என்ற கணக்கீடு எப்போதும் கட்டுப்பாட்டில் இருக்கும் என்ற உத்தரவாதம் இல்லை. ஒரு தவறான மதிப்பீடு, தகவல் பிழை, எதிர்பாராத தாக்குதல் அல்லது அரசியல் அழுத்தம் காரணமாக, சிறிய மோதல் மிக விரைவாக முழுமையான பிராந்தியப் போராக மாறக்கூடும். வரலாற்றில் முதல் உலகப் போர் உள்ளிட்ட பல பெரிய மோதல்கள் இத்தகைய தவறான கணக்கீடுகளின் விளைவாகவே ஏற்பட்டன.

சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், எந்த நாடும் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 51–ஆம் கட்டுரையின் கீழ் தற்காப்பு உரிமையை முன்வைக்க முடியும். ஆனால் அந்தத் தற்காப்பு நடவடிக்கை தேவையான அளவிலும் விகிதாசாரமானதாகவும் (Necessity and Proportionality) இருக்க வேண்டும். இல்லையெனில், அது சர்வதேச சட்ட மீறலாகக் கருதப்படலாம். எனவே, அமெரிக்காவும் ஈரானும் மேற்கொள்ளும் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையும் சர்வதேச சட்டத்தின் ஆய்வுக்குட்படுகிறது.

இன்றைய உலகில் போர் என்பது வெறும் இராணுவ நடவடிக்கையாக மட்டும் இல்லை. பொருளாதாரத் தடைகள், இணையத் தாக்குதல்கள், தகவல் போர், செயற்கை நுண்ணறிவு, ட்ரோன் தொழில்நுட்பம், பிரதிநிதி ஆயுதக் குழுக்கள் (Proxy Forces) ஆகிய அனைத்தும் நவீன மோதல்களின் பகுதியாக மாறியுள்ளன. இந்த புதிய சூழலில், முழுமையான போரை விட கட்டுப்படுத்தப்பட்ட மோதல்களைத் தேர்ந்தெடுப்பது சில நாடுகளின் மூலோபாயமாக மாறியுள்ளது.

எனினும், "கட்டுப்படுத்தப்பட்ட போர்" என்பது நிரந்தரத் தீர்வாக இருக்க முடியாது. அது பதற்றத்தை தற்காலிகமாக நிர்வகிக்க உதவலாம்; ஆனால் பிரச்சினைகளின் அடிப்படைக் காரணங்களைத் தீர்க்காது. ஈரானின் அணுசக்தித் திட்டம், அமெரிக்க பொருளாதாரத் தடைகள், இஸ்ரேலின் பாதுகாப்பு கவலைகள், வளைகுடா பிராந்திய அதிகாரப் போட்டி மற்றும் பிராந்திய ஆயுதக் குழுக்களின் பங்கு ஆகிய அடிப்படை விவகாரங்கள் அரசியல் பேச்சுவார்த்தை மூலமே நீண்டகால தீர்வைப் பெற முடியும்.

அமெரிக்காவுடன் முழுமையான அமைதியை விட வரையறுக்கப்பட்ட மோதல் சில சூழல்களில் ஈரானின் அரசியல் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்கு ஏற்றதாக இருக்கலாம் என்ற வாதம், ஒரு போரை ஆதரிக்கும் கருத்தாக அல்ல; மாறாக, சர்வதேச அரசியலில் நாடுகள் எவ்வாறு மூலோபாய ரீதியாக சிந்திக்கின்றன என்பதை விளக்கும் ஒரு பகுப்பாய்வாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். குறுகிய காலத்தில் இத்தகைய அணுகுமுறை சில அரசியல் இலாபங்களை அளிக்கக்கூடும். ஆனால் நீண்டகாலத்தில் அது தவறான கணக்கீடுகள், பொருளாதாரச் சீரழிவு, மனிதாபிமான நெருக்கடி மற்றும் பிராந்திய நிலையற்ற தன்மையை மேலும் தீவிரப்படுத்தும் அபாயத்தையும் கொண்டுள்ளது.

மத்திய கிழக்கின் எதிர்காலம் "கட்டுப்படுத்தப்பட்ட போர்" என்ற ஆபத்தான சமநிலையிலா அல்லது பரஸ்பர நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் பேச்சுவார்த்தையிலா அமையும் என்பது, ஈரானும் அமெரிக்காவும் மட்டுமல்லாது, உலக வல்லரசுகள் மற்றும் பிராந்திய நாடுகள் எடுக்கும் அடுத்தடுத்த முடிவுகளின் மீது பெருமளவில் சார்ந்திருக்கும்.



# எம் மண்ணின் மௌன கீதம்

தாயகக் காற்றின் தாளத்தில் மிதந்த
தாலாட்டுப் பாடல்கள் ஓய்ந்துவிட்டன...
சாயும் மாலையின் நிழல்களுக்குள்
சங்கீதமாய் இப்போது ஒரு மௌனம்!
துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த சுவர்களிலும்,
சிதைந்துபோன எம்ம வீட்டு வாசல் முற்றத்திலும்,
பேசாத வார்த்தைகள் ஆயிரம் உண்டு – அதுவே
எம் தாய் மண்ணின் மௌன கீதம்!
கடலலை வந்து உரசிச் செல்லும்
கரைமணல் ஒவ்வொன்றும் கதை சொல்லும்;
அடர்ந்த நள்ளிரவுக் காரிருளில்
அழுத கண்கள் சிந்திய கண்ணீர் சொல்லும்!
முள்ளிவாய்க்காலின் உப்புக் காற்றில்
முடிந்துபோன உயிர்களின் தேடலது...
வல்லாறுகள் பிரித்த சொந்தங்களின்
வடு மாறாத இதயத்தின் ஏங்கலது!
ஆனால்...
இந்த மௌனம் அமைதியின் குறியீடல்ல,
இது புதைக்கப்பட்ட விதைகள் சுவாசிக்கும் சத்தம்!
சாம்பலுக்குள்ளே கனன்று கொண்டிருக்கும்
தணியாத தீயின் தாகமிது!
சொல்ல முடியாத சோகங்களை எல்லாம்
சுமந்து நிற்கும் எம் ஈழத்து நிலமே...
உன் மௌனமே நாளை
எம் விடிவின் பேரொலியாகும்!

– சு.லோஜிதன் –

# ஈழ விடுதலைப் போராட்டத்தின் பாலம்: தோழர் வைகறை!
# தமிழ்த் தேசிய இலக்கிய உலகின் பேராளுமை!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

05.08.2026

ஒரு சமூகத்தின் வரலாறு அரசியல் நிகழ்வுகளால் மட்டுமல்ல; அந்த நிகழ்வுகளை ஆவணப்படுத்திய எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், கலைஞர்கள் மற்றும் சிந்தனையாளர்களாலும் கட்டமைக்கப்படுகிறது. அந்த வகையில், தமிழ்த் தேசிய சிந்தனை, முற்போக்கு இலக்கியம், கலை மற்றும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் அரசியல்-பண்பாட்டு ஆவணங்களைத் தொடர்ந்து பாதுகாத்து வந்த முக்கியமான ஆளுமைகளில் ஒருவர் தோழர் வைகறை வாணன். சென்னையில் தனது 76-ஆவது வயதில் (15.08.1950 - 01.08.2026) அவர் காலமானார். தமிழ் இலக்கிய உலகிற்கும், குறிப்பாக ஈழத் தமிழர் அரசியல் மற்றும் பண்பாட்டு வட்டாரங்களுக்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது.

## ஈழத் தமிழரின் பாலம்:

வைகறை வாணனின் மறைவு என்பது ஒரு தனிமனிதரின் வாழ்வின் முடிவாக மட்டும் கருதப்பட முடியாது. அது பல தசாப்தங்களாகத் தமிழ்த் தேசிய சிந்தனையையும், கலை இலக்கியப் பாரம்பரியத்தையும், ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆவணங்களையும் பாதுகாத்து வந்த ஒரு அறிவுசார் மரபின் முக்கியமான அத்தியாயம் நிறைவடைந்த தருணமாகும்.

தமிழ்நாடு அரியலூர் மாவட்டம் இராமநல்லூரில் பிறந்த வைகறை வாணன், தனது வாழ்நாள் முழுவதும் அமைதி, பொறுமை, எளிமை, களைப்படையாத செயல் ஊக்கம் ஆகிய பண்புகளோடு செயல்பட்டவர். அவரை நெருக்கமாக அறிந்தவர்கள் அனைவரும் ஒரே குரலில் கூறுவது, அவர் பெரிதாகப் பேசாதவர்; ஆனால் அவர் செய்த செயல்களே அவரது சிந்தனைகளின் மொழியாக இருந்தன என்பதுதான். மெல்லிய குரலில் பேசும் அவரது புன்னகை, பல நேரங்களில் நீண்ட உரைகளைக் காட்டிலும் ஆழமான கருத்துகளை வெளிப்படுத்தியதாக அவரது நண்பர்கள் நினைவுகூருகின்றனர்.

## இலக்கிய அரசியல் வாழ்க்கை

வைகறை வாணன் ஒரு பதிப்பாளர் மட்டுமல்ல. அவர் ஒரு சிந்தனையாளர், கலாசார அமைப்பாளர், இலக்கிய ஊக்குவிப்பாளர், மற்றும் தமிழ்த் தேசிய அரசியல் நினைவகத்தின் பாதுகாவலர். இலக்கியம் என்பது வெறும் கலை வெளிப்பாடு அல்ல; அது சமூக மாற்றத்திற்கான கருவி என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்தவர். அதனால் அவரது வெளியீடுகளில் சமூக நீதி, தேசிய உரிமை, மொழி, மனித உரிமைகள், இன அடையாளம், அரசியல் வரலாறு போன்ற தலைப்புகள் தொடர்ந்து இடம்பெற்றன.

தமிழகத்தில் வாழ்ந்தபோதும், இலங்கைத் தமிழர்களின் அரசியல் துயரங்களையும், அவர்களின் தேசிய உரிமைப் போராட்டத்தையும் தனது வாழ்நாள் முழுவதும் மறக்காமல் பதிவு செய்தார். தமிழக வாசகர்களுக்கும் ஈழத் தமிழர்களின் வரலாற்றையும் போராட்டத்தையும் எடுத்துச் செல்லும் பாலமாக அவர் திகழ்ந்தார்.

## பொன்னி– பதிப்பகம் தாண்டிய இயக்கம்

வைகறை வாணனின் பெயருடன் என்றும் இணைந்து நினைவுகூரப்படுவது அவரது "பொன்னி" வெளியீட்டு நிறுவனம். அது ஒரு வணிகப் பதிப்பகம் அல்ல; மாறாக சிந்தனைகளை சமூகத்துக்குக் கொண்டு செல்லும் பண்பாட்டு இயக்கமாக இருந்தது. பல புதிய எழுத்தாளர்களின் முதல் நூல்களை வெளியிட்டதோடு மட்டுமல்லாமல், தமிழ்த் தேசியம், சமூக வரலாறு, அரசியல் ஆய்வு, ஈழ விடுதலைப் போராட்டம், மனித உரிமைகள், கலை மற்றும் இலக்கியம் தொடர்பான பல அரிய நூல்களையும் வாசகர்களிடம் கொண்டு சேர்த்தது.

சந்தை நோக்கமே பதிப்புலகை நிர்ணயித்துக் கொண்டிருந்த காலகட்டத்திலும், கருத்துச் சுதந்திரம் மற்றும் சிந்தனைப் பல்வகைமைக்கு இடமளித்த பதிப்பாளராக வைகறை வாணன் தனித்துவம் பெற்றார். இன்று ஆய்வாளர்கள் பயன்படுத்தும் பல முக்கிய நூல்கள், அவருடைய அர்ப்பணிப்பின் காரணமாகவே அச்சு வடிவில் பாதுகாக்கப்பட்டுள்ளன.

வைகறை வாணனின் பணியின் தனிச்சிறப்பு, இலக்கியத்தை மட்டுமல்லாமல் ஓவியம், நாடகம், கவிதை, பண்பாட்டு ஆவணங்கள் போன்ற அனைத்து கலை வடிவங்களையும் சமூக உரையாடலின் பகுதியாக மாற்றியதில்தான் உள்ளது.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக ஓவியர் வீர சந்தானத்தின் படைப்புகளைப் பற்றிய அவரது முயற்சி அமைந்தது. அப்போது வீர சந்தானம் குறித்து பொதுமக்கள் மத்தியில் அதிக அறிமுகம் இல்லாத காலம். அந்த நிலையில், அவரது ஓவியங்களை மையமாகக் கொண்டு ஒரு நூல் உருவாக வேண்டும் என்ற எண்ணத்துடன், எழுத்தாளர்களையும் கலை விமர்சகர்களையும் இணைத்து செயல்பட்டார்.

அதன் விளைவாக வெளிவந்த "முகில்களின் மீது நெருப்பு" என்ற நூல், தமிழில் முழுமையாக ஒரு ஓவியரை மையமாகக் கொண்டு வெளியிடப்பட்ட முன்னோடியான நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அந்த நூலில் இடம்பெற்ற விரிவான கலை விமர்சனங்கள், ஓவியங்களின் அரசியல் மற்றும் மனிதநேயப் பின்னணியை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தின.

அந்த நூல் வெளியீட்டு விழாவும் ஓவியக் கண்காட்சியும் சென்னை ஜெர்மன் ஹாலில் மிகப் பெரிய அளவில் நடைபெற்றது. கலைஞர்கள், எழுத்தாளர்கள், விமர்சகர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் பங்கேற்ற அந்த நிகழ்வு, கலை உலகையும் ஈழத் தமிழர் அரசியல் துயரங்களையும் ஒரே மேடையில் இணைத்த வரலாற்றுச் சம்பவமாக அமைந்தது.

## ஈழ விடுதலை போராட்ட உறவு

வைகறை வாணனின் வாழ்வை ஈழ விடுதலைப் போராட்டத்திலிருந்து பிரித்து பார்க்க முடியாது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனவெறி, அரசியல் ஒடுக்குமுறை, மனித உரிமை மீறல்கள் குறித்து தமிழகத்தில் தொடர்ந்து குரல் கொடுத்த அறிவுஜீவிகளில் அவர் முக்கியமானவராக இருந்தார். அவரது பார்வையில், ஈழத் தமிழர்களின் தேசிய உரிமைக் கோரிக்கை என்பது ஒரு பிராந்திய அரசியல் பிரச்சினை மட்டுமல்ல; அது உலக மனித உரிமை மற்றும் தன்னாட்சி உரிமை தொடர்பான கேள்வியாகும்.

பல ஈழ எழுத்தாளர்களின் படைப்புகள் தமிழகத்தில் வெளிவர அவர் செய்த பங்களிப்பு மறக்க முடியாதது. வெளியிட முடியாத சூழலில் இருந்த நூல்களை பாதுகாத்து அச்சிடுவதிலும், அவற்றை வாசகர்களிடம் கொண்டு சேர்ப்பதிலும் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.

## கி. பி. அரவிந்தனின் கவிதை அறிமுகம்

1991ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற ஈழக் கவிஞர் கி.பி. அரவிந்தனின் முதல் கவிதைத் தொகுப்பான "இனி ஒரு வைகறை" வெளியீட்டு விழா, வைகறை வாணனின் பணியின் இன்னொரு முக்கியமான அடையாளமாகும். அந்த நிகழ்வை வெறும் நூல் வெளியீடாக அவர் கருதவில்லை. ஈழத் தமிழர் இலக்கியத்தை தமிழக வாசகர்களிடம் அறிமுகப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வாகவே அதை வடிவமைத்தார். இவ்வாறான பல முயற்சிகள் மூலம் ஈழ இலக்கியமும் தமிழக இலக்கியமும் இடையிலான உறவை வலுப்படுத்தினார்.

## "பாலம்" பண்பாட்டு இணைப்பு

வைகறை வாணன் வெளியிட்ட "பாலம்" இலக்கிய இதழ், அதன் பெயரைப் போலவே பல தலைமுறைகளையும், பல்வேறு சிந்தனைப் பள்ளிகளையும் இணைத்த ஒரு தளமாக இருந்தது. அதில் கவிதைகள், சிறுகதைகள், அரசியல் கட்டுரைகள், கலை விமர்சனங்கள், மொழிபெயர்ப்புகள், சமூக ஆய்வுகள் ஆகியவை இடம்பெற்றன. இளம் எழுத்தாளர்களுக்கும் மூத்த படைப்பாளிகளுக்கும் சமமான இடம் அளிக்கப்பட்டது.



ஒரு பதிப்பாளராக வைகறை வாணன் கொண்டிருந்த மிகப் பெரிய நம்பிக்கை, கருத்துச் சுதந்திரம். ஒரே அரசியல் கோட்பாட்டை மட்டும் முன்னிறுத்தாமல், விவாதிக்கத் தகுந்த அனைத்து கருத்துகளும் சமூகத்தில் வெளிவர வேண்டும் என்ற ஜனநாயகப் பார்வையை அவர் கொண்டிருந்தார்.

அறிவியல் ஆய்வு, வரலாற்றுப் பதிவு, மாற்றுக் கருத்து, கலை விமர்சனம் ஆகிய அனைத்திற்கும் அவர் தனது பதிப்பகத்தின் கதவுகளைத் திறந்துவைத்தார். அதுவே அவரது பதிப்புலகின் உயர்ந்த பண்பாகும்.

வைகறை வாணனைப் பற்றி அவருடன் பழகியவர்கள் அனைவரும் முதலில் நினைவுகூருவது அவரது எளிமையைத்தான். பெரிய பதிப்பாளர் என்ற பெருமிதம் அவரிடம் காணப்படவில்லை. புதிய எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளை பொறுமையாக வாசித்து, திருத்தி, ஊக்கப்படுத்தி, வெளியிடுவதில் அவர் மகிழ்ச்சி அடைந்தார். ஒரு நூல் என்பது விற்பனைப் பொருள் அல்ல; அது ஒரு சமூகப் பொறுப்பு என்ற எண்ணமே அவரது வாழ்நாள் முழுவதும் அவரை வழிநடத்தியது.

இன்று தகவல்கள் நொடிப்பொழுதில் பரவுகின்றன. ஆனால் வரலாற்றை ஆவணப்படுத்தும் பொறுப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இந்தச் சூழலில் வைகறை வாணனின் பணிகள் இன்னும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. அவர் வெளியிட்ட நூல்கள் வெறும் அச்சுப் பிரதிகள் அல்ல; அவை தமிழ்த் தேசிய அரசியல், ஈழ விடுதலைப் போராட்டம், கலை, இலக்கியம், மனித உரிமைகள் ஆகியவற்றின் உயிருள்ள ஆவணங்களாகத் தொடர்கின்றன.

தோழர் வைகறை வாணனின் மறைவு, தமிழ்ப் பதிப்புலகிற்கும், தமிழ்த் தேசிய இலக்கியத்திற்கும், ஈழ விடுதலைப் போராட்டத்தின் அறிவுசார் வரலாற்றிற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அதிகாரத்தால் அல்ல, சிந்தனையால் சமூகத்தை மாற்ற முடியும் என்பதை அவர் தனது வாழ்நாள் முழுவதும் நிரூபித்தார்.

மனிதர்கள் மறையலாம் ஆனால் அவர்கள் உருவாக்கிய சிந்தனைகள், அவர்கள் பாதுகாத்த வரலாறு, அவர்கள் ஊக்குவித்த தலைமுறைகள் ஒருபோதும் மறைவதில்லை. தோழர் வைகறை வாணனின் பெயர் தமிழர் வரலாற்றில் ஒரு பதிப்பாளராக மட்டுமல்ல; நினைவுகளைப் பாதுகாத்த காவலராகவும், கலை இலக்கியத்தின் அர்ப்பணிப்புள்ள செயல்பாட்டாளராகவும், ஈழத் தமிழர் உரிமைக் குரலின் உறுதியான துணைவனாகவும் என்றும் நிலைத்திருக்கும். ஒரு பதிப்பாளர் மறையலாம் ஆனால் அவர் உயிர்ப்பித்த சிந்தனைகள் காலத்தை வென்று வாழும்.













ஈழத் தமிழருக்கான நீதி
இன்னும்
கிடைக்கவில்லை
OSLP must report the Cycle of
Violence and Genocide since 1948
Stop Land Grab
'நீதியின் ஓலம் - 2'
WE WANT JUSTICE
யாழ். செம்மணியில்
2026 ஆகஸ்ட் 14, 15, 16, 17 ஆம்
திகதிகளில் நீதிக்கான மாபெரும்
மக்கள் எழுச்சிப் போராட்டம்
இன்றும் சர்வதேச நீதி வேண்டி நிற்கின்றோம்....
- தாயகச் செயலணி-

# மறைக்கப்படும் தியாகங்களின் வரலாறு: புகழப்படும் துரோகங்களின் அரசியல்!

## திரிபடையும் தமிழர் தேசியப் போராட்ட வரலாறு!

–நவீனன்–

05.08.2026

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று உண்மையைப் பாதுகாக்க வேண்டிய காலத்தின் கட்டாயமாகும். தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு இன்று பல்வேறு வகைகளில் திரித்தும், மறைத்தும், புதிதாக வடிவமைத்தும் சொல்லப்படுகின்ற ஒரு ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. சமூக ஊடகங்கள், சில நூல்கள், கட்டுரைகள் மற்றும் காணொளிகள் வழியாக, தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அதன் போராளிகளையும், தலைவர்களையும் கொச்சைப்படுத்தும் முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. அவர்கள் துரோகிகளாகவும், குற்றவாளிகளாகவும், வரலாற்றின் எதிர்மறைப் பாத்திரங்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்.

### வரலாற்று உண்மையை பாதுகாக்க வேண்டும்

அதேவேளை, வரலாற்றின் குறிப்பிட்ட காலகட்டங்களில் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் செயல்பட்டவர்கள், அல்லது தமிழ்த் தேசிய அரசியல் இலட்சியங்களுக்கு முரணாக இருந்தவர்கள், இன்று “தியாகிகள்”, “வீரர்கள்”, “வரலாற்று நாயகர்கள்” என்ற புதிய முகமூடிகளுடன் முன்னிறுத்தப்படுகின்றனர். இவ்வாறான வரலாற்று மாற்றியமைப்புகள், உண்மையை மங்கச் செய்து, எதிர்காலத் தலைமுறையினரிடம் தவறான புரிதலை உருவாக்கும் அபாயத்தை ஏற்படுத்துகின்றன.

வரலாறு என்பது அரசியல் வசதிக்காக எழுதப்பட வேண்டிய ஒன்று அல்ல. அது ஆதாரங்கள், சான்றுகள், சம்பவங்கள் மற்றும் உண்மைகளின் அடிப்படையில் பதிவு செய்யப்பட வேண்டிய பொது நினைவகமாகும். உண்மைகளை மறைத்து, பொய்யை வரலாறாக நிலைநிறுத்தும் எந்த முயற்சியும், ஒரு இனத்தின் அரசியல் நினைவகத்தையே சிதைக்கும்.

எனவே, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு உண்மைத்தன்மை, ஆவண ஆதாரங்கள் மற்றும் பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் பதிவு செய்யப்பட வேண்டும். தனிப்பட்ட அரசியல் விருப்பங்களோ, தற்போதைய சூழ்நிலைக்கான வசதிகளோ, அல்லது சமூக ஊடகப் பிரச்சாரங்களோ வரலாற்றின் அளவுகோலாக மாறக் கூடாது. இது ஒரு அரசியல் விவாதம் மட்டுமல்ல; ஒரு இனத்தின் வரலாற்று நினைவகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பாகும். உண்மையான வரலாறு எழுதப்படுவது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, எதிர்காலத் தலைமுறையினருக்கான வரலாற்றுப் பொறுப்பும் ஆகும். உண்மையை மறைப்பது வரலாற்றை அழிப்பதற்கு சமம் உண்மையைப் பதிவு செய்வதே வரலாற்றிற்கும், நீதிக்கும், எதிர்காலத்திற்கும் செய்யப்படும் மிகப் பெரிய பங்களிப்பாகும்.

### தியாகங்களும் துரோகங்களும்

ஒரு இனத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு என்பது வெறும் ஆயுதப் போராட்டத்தின் வரலாறு அல்ல. அது தியாகங்கள், கொள்கைகள், தவறுகள், உள்முரண்பாடுகள், அரசியல் சமரசங்கள் மற்றும் துரோகமாகக் கருதப்பட்ட செயல்கள் அனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த சிக்கலான வரலாறாகும்.

தமிழர் தேசியப் போராட்ட வரலாறும் இதற்கு விதிவிலக்கல்ல. கடந்த ஏழு தசாப்தங்களாக ஈழத் தமிழர்கள் எதிர்கொண்ட அரசியல் அனுபவங்களை ஆராயும்போது, தியாகங்களுக்கும் துரோகங்களுக்கும் இடையிலான முரண்பாடு தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உயிர்களை அர்ப்பணித்த ஒரு தேசியப் போராட்டம், அதே நேரத்தில் அரசியல் பிளவுகள், கருத்தியல் வேறுபாடுகள், உளவியல் போர்கள் மற்றும் சமூகப் பிரிவினைகளாலும் பாதிக்கப்பட்டது.

2026 யூலை 27 அன்று, யாழ்ப்பாண முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டு 51 ஆண்டுகள் நிறைவடைந்தன. அந்தச் சம்பவம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்பகால அரசியல் நடவடிக்கைகளில் மிக முக்கியமான திருப்புமுனையாகப் பரவலாகக் குறிப்பிடப்படுகிறது. அந்த நிகழ்வை நினைவுகூரும் இந்நேரம், துரோகம் என்ற கருத்து தமிழர் அரசியலில் எவ்வாறு உருவாகியது, இன்று அது எந்த வடிவத்தில் வெளிப்படுகிறது என்பதையும் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துகிறது.

### ஆயுதப் போராட்டம் ஏன் தோன்றியது?

1956 ஆம் ஆண்டின் “சிங்களம் மட்டுமே” சட்டம், 1958, 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளின் இனவன்முறைகள், கல்வி




யில் தரப்படுத்தல், அரசியல் ஒப்பந்தங்களின் தோல்வி, தமிழ் மக்களின் தன்னாட்சி கோரிக்கைகள் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டமை போன்ற காரணிகள், தமிழ் இளைஞர்களிடம் ஆயுதப் போராட்ட மனநிலையை உருவாக்கின.

பல தமிழ் இளைஞர்கள், அமைதியான ஜனநாயகப் போராட்டங்கள் பலனளிக்கவில்லை என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஆயுதப் பாதையைத் தேர்ந்தெடுத்தனர். இந்தப் பின்னணியில் பல ஆயுத இயக்கங்கள் தோன்றின. பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) மிக வலிமையான அமைப்பாக உருவெடுத்தது.

1975 யூலை 27 அன்று யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு அருகில் அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார். அக்காலத்தில் அல்பிரட் துரையப்பா படுகொலை ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாகவே கருதப்பட்டது.

அந்தக் காலத்தில் விடுதலைப் புலிகள் அவரை இலங்கை அரசுடன் இணைந்து செயல்பட்டவர் என்றும், தமிழ் மக்களின் தேசிய அரசியல் நோக்கங்களுக்கு எதிராக இருந்தவர் என்றும் கருதினர். இந்தச் சம்பவம் தமிழர் அரசியலில் “துரோகி” என்ற சொல்லுக்கு ஒரு புதிய அரசியல் பரிமாணத்தை வழங்கியது.

வரலாற்று ரீதியாக ஒவ்வொரு தேசிய விடுதலைப் போராட்டத்திலும் “ஒத்துழைப்பாளர்”, “சமரசவாதி”, “தேசியவாதி”, “துரோகி” போன்ற சொற்கள் உருவாகின்றன. ஆனால் வரலாற்று ஆய்வாளர்கள் ஒரு முக்கியமான எச்சரிக்கையை முன்வைக்கின்றனர்: அரசியல் கருத்து வேறுபாடு மற்றும் துரோகம் ஆகிய இரண்டும் எப்போதும் ஒன்றல்ல.

ஒரு தரப்பு தேசிய நலனுக்கு எதிராக நடந்ததாகக் கருதும் செயல், மற்றொரு தரப்பின் பார்வையில் அரசியல் யதார்த்தவாதமாகக் கருதப்படலாம். எனவே “துரோகம்” என்ற குற்றச்சாட்டை வரலாற்று சூழல், ஆதாரங்கள் மற்றும் அரசியல் நோக்கங்களுடன் ஆராய்வது அவசியமாகிறது.

### இன்றைய மிகப் பெரிய சவால்?

இன்றைய தமிழர் சமூகத்தின் மிகப் பெரிய சவால் யார் துரோகி - தியாகி என்பதைத் தீர்மானிப்பதல்ல. அதற்குப் பதிலாக, தமிழ் தேசிய அரசியல் இலக்குகளை எவ்வாறு பாதுகாப்பது? ஜனநாயக உரிமைகளையும் தேசிய உரிமைகளையும் எவ்வாறு சமநிலைப்படுத்துவது? தமிழர் உள்பிளவுகளை எவ்வாறு குறைப்பது?

அடுத்த தலைமுறைக்கு எந்த அரசியல் மரபை வழங்குவது? என்பதே முக்கியமான கேள்விகளாகும்.

வரலாறு ஒரு முக்கியமான உண்மையை சொல்கிறது. தமிழர் தேசியப் போராட்டத்தை பலவீனப்படுத்தியவை வெளிப்புற அழுத்தங்கள் மட்டுமல்ல; உள்முரண்பாடுகள், நம்பிக்கையின்மை, அரசியல் பிளவுகள், ஒருமித்த செயற்பாட்டின் பற்றாக்குறை ஆகியவையும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின. எனவே வரலாற்றை நினைவுகூர்வது என்பது பழைய காயங்களை மீண்டும் திறப்பதற்காக அல்ல; அதிலிருந்து அரசியல் ஞானத்தைப் பெறுவதற்காக இருக்க வேண்டும்.

எவ்வாறாயினும் தியாகங்கள் இல்லாமல் எந்த தேசியப் போராட்டமும் முன்னேறாது. அதேபோல், வரலாற்றை விமர்சன ரீதியாக ஆராயாமல் எந்த சமூகமும் தனது எதிர்காலத்தை பாதுகாக்க முடியாது. அல்பிரட் துரையப்பா முதல் முள்ளிவாய்க்கால் வரை நீளும் தமிழர் அரசியல் வரலாறு, பல்வேறு பார்வைகளைக் கொண்ட ஒரு சிக்கலான வரலாறு. அதில் வீரமும் தியாகமும் உள்ளது, வேதனையும் துயரமும் உள்ளது. அரசியல் உறுதியும் உள்ளது, ஏன் கடுமையான உள்முரண்பாடுகளும் உள்ளன என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று தமிழர் சமூகத்தின் முன்னிலையில் நிற்கும் மிக முக்கியமான பொறுப்பு, கடந்த காலத்தை மறப்பதோ அல்லது ஒரே கோணத்தில் மட்டுமே வாசிப்பதோ அல்ல. மாறாக, வரலாற்றிலிருந்து கற்றுக்கொண்டு, நீதி, மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் அரசியல் பொறுப்புணர்வு ஆகியவற்றை இணைத்துச் செல்லும் எதிர்கால அரசியல் பண்பாட்டை உருவாக்குவதே உண்மையான வரலாற்றுக் கடமையாகும்.

**ஒரு இனத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு என்பது வெறும் ஆயுதப் போராட்டத்தின் வரலாறு அல்ல. அது தியாகங்கள், கொள்கைகள், தவறுகள், உள்முரண்பாடுகள், அரசியல் சமரசங்கள் மற்றும் துரோகமாகக் கருதப்பட்ட செயல்கள் அனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த சிக்கலான வரலாறாகும். தமிழர் தேசியப் போராட்ட வரலாறும் இதற்கு விதிவிலக்கல்ல.**


'நீதியின் ஓலம் 2'
'VOICE OF JUSTICE 2'
14, 15,16, 17 ஆகஸ்ட் 2026
ஆகிய நான்கு நாட்களில்
செம்மணியில்
மாபெரும் போராட்டத்துகான
அழைப்பு
எமது உரிமைகளை மீட்க காலம் இட்ட கட்டளைப்படி
வரலாறு காட்டிய வழியில் நாமே போராடுவோம்.
சர்வதேச பன்னாட்டு விசாரணையையும்
சர்வதேச நீதியையும் வலிறுத்தி
செம்மணியில்
மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டம்
-தாயகச் செயலணி-
நாம் ஒன்றுபட்ட மக்களாக - ஒரே சக்தியாக - அணிதிரண்டு,
எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.
-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-
www.sangathamil.com

# FIFA உலகக்கோப்பை யார் வென்றாலும் சுவிற்சர்லாந்திற்கே திரும்பும் வரலாற்று இரகசியம்

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

04.08.2026




உலகின் மிகப் பிரபலமான விளையாட்டு கால்பந்து தான். மொழி, இனம், நாடு, அரசியல் எல்லைகளைத் தாண்டி மக்களை ஒன்றிணைக்கும் இந்த விளையாட்டின் உச்சமாக FIFA உலகக்கோப்பை விளங்குகிறது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தப் போட்டி, கோடிக்கணக்கான ரசிகர்களின் கனவையும், நாடுகளின் பெருமையையும் ஒரே மேடையில் கொண்டு வருகிறது.

## உலகக்கோப்பை தொடக்கம்:

ஆனால் பலருக்குத் தெரியாத ஒரு சுவாரசியமான உண்மை உள்ளது. உலகக்கோப்பையை எந்த நாடு வென்றாலும், அசல் தங்கக் கோப்பை அந்த நாட்டில் நிரந்தரமாக இருக்காது. அது மீண்டும் சுவிற்சர்லாந்திற்கே திரும்பிவிடும். இதற்குப் பின்னால் வரலாறும், பாதுகாப்பு காரணங்களும், தனித்துவமான விதி முறைகளும் உள்ளன. அந்தப் பின்னணியைப் புரிந்துகொள்ள, முதலில் உலகக்கோப்பையின் தொடக்க வரலாற்றை அறிய வேண்டியது அவசியமாகும்.

1930 ஆம் ஆண்டு உருகுவேயில் நடைபெற்ற முதல் FIFA உலகக்கோப்பையில் "ஜூல்ஸ் ரிமெட் கோப்பை" பயன்படுத்தப் பட்டது. FIFA முன்னாள் தலைவர் ஜூல்ஸ் ரிமெட்டின் பெயரில் உருவாக்கப்பட்ட இந்தக் கோப்பைக்கு ஒரு சிறப்பு விதி இருந் தது. ஒரு நாடு மூன்று முறை உலகக்கோப்பையை வென்றால், அந்தக் கோப்பை நிரந்தரமாக வைத்துக் கொள்ளலாம்.

இந்த விதியின் அடிப்படையில் பிரேசில் 1958, 1962, 1970 ஆகிய ஆண்டுகளில் வென்று கோப்பையை தன் வசமாக்கியது. ஆனால் 1983 ஆம் ஆண்டு அந்தக் கோப்பை திருடப்பட்டது. அது இன்றுவரை மீட்கப்படவில்லை. இந்தச் சம்பவம் FIFA-வை புதிய பாதுகாப்பு முறைகளை உருவாக்கத் தூண்டியது. அத னால்தான் அடுத்த கட்டமாக புதிய உலகக்கோப்பை உருவாக் கப்பட்டது.

## புதிய உலகக்கோப்பையின் பிறப்பு

1974 ஆம் ஆண்டு தற்போதைய உலகக்கோப்பை அறிமுகப் படுத்தப்பட்டது. உலகின் பல பகுதிகளில் இருந்து வந்த 53 வடி வமைப்புகளில் இருந்து இத்தாலியச் சிற்பி சில்வியோ கசானிகா வின் வடிவமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தக் கோப்பையில் இரண்டு மனித உருவங்கள் உலக உருண்டையை உயர்த்திப் பிடிப்பது போல வடிவமைக்கப்பட் டுள்ளது. இது வெற்றியை மட்டும் அல்ல, மனித முயற்சி, ஒற் றுமை மற்றும் சாதனையையும் பிரதிபலிக்கிறது. இவ்வாறு கலைநயமும் கருத்தாழமும் இணைந்த இந்த வடிவமைப்பு, உலகக்கோப்பையை வெறும் விளையாட்டு விருதாக அல் லாமல் ஒரு சிறப்புக் கலைப் படைப்பாகவும் உயர்த்தியது.

இன்றைய FIFA உலகக்கோப்பை கலைநயமும் நுட்பமும் சேர்ந்த ஒரு சிற்பமாகக் கருதப்படுகிறது. அதன் முக்கிய அம் சங்கள் பின்வருமாறு.

உயரம்: 36.5 சென்டிமீட்டர், எடை: 6.175 கிலோகிராம், பயன் படுத்தப்பட்ட தங்கம்: 18 கேரட் தங்கம், தங்கத்தின் அளவு: சுமார் 4.9 கிலோகிராம் கொண்டதாகும். கோப்பையின் உட்பகுதி வெற்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது. முழுவதும் தங்கமாக இருந்தால் அதன் எடை மிக அதிகமாகி, வீரர்கள் அதை தூக்கிக் கொண்டாட முடியாது. அடிப்பகுதியில் மலாக்கிட் (Malachite) கற்களும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த அமைப்பு கோப்பையின் அழகையும் மதிப்பையும் மேலும் உயர்த்துகிறது.

## சுவிசில் பாதுகாக்கப்படுகிறது

FIFA தலைமையகம் சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரில் உள்ளது. அங்குள்ள FIFA அருங்காட்சியகத்தில் அசல் உலகக்கோப்பை மிகுந்த பாதுகாப்புடன் வைக்கப்படுகிறது. போட்டி நடைபெறும் காலத்திலும், வெற்றிக் கொண்டாட்டத்திலும் மட்டும் அசல் கோப்பை வெளியே கொண்டு செல்லப்படுகிறது. அதன் பிறகு அது மீண்டும் சூரிச்சிற்குத் திரும்புகிறது. வெற்றி பெறும் அணி களுக்கு வழங்கப்படுவது அசல் கோப்பை அல்ல, தங்க முலாம் பூசப்பட்ட பிரதியே.

இதன் மூலம் உலகின் மிக மதிப்புமிக்க விளையாட்டு சின்னம் பாதுகாக்கப்படுகிறது. மேலும், ஜூல்ஸ் ரிமெட் கோப்பை திருடப் பட்ட அனுபவம் FIFA-வுக்கு பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தியதால், தற்போதைய கோப்பை மிகுந்த கவனத் துடன் பராமரிக்கப்படுகிறது.




உலகக்கோப்பையின் அடிப்பகுதியில் வெற்றி பெற்ற நாடுகளின் பெயர்களும் ஆண்டுகளும் செதுக்கப்பட்டுள்ளன. சிறப்பு என்ன வென்றால், அந்தப் பெயர்கள் அந்தந்த நாட்டின் மொழியிலேயே எழுதப்படுகின்றன.

உதாரணமாக 1974 - Deutschland, 2010 - España, 2022 - Argentina இவை உலகக் கால்பந்து வரலாற்றின் நிரந்தர பதிவுகளாக உள்ளன. தற்போதைய அடிப்பகுதியில் 2038 ஆம் ஆண்டு வரை மட்டுமே இடம் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்குப் பிறகு புதிய அடிப்பகுதி தேவைப்படலாம். இதுவும் உலகக்கோப்பையின் தொடர்ச்சியான வளர்ச்சியையும், அதன் வரலாற்றுப் பதிவுகளின் முக்கியத்துவத்தையும் காட்டுகிறது.

FIFA உலகக்கோப்பை வெறும் தங்கக் கோப்பை அல்ல. அது கால்பந்தின் வரலாறு, வீரர்களின் அர்ப்பணிப்பு, ரசிகர்களின் உணர்ச்சி, நாடுகளின் பெருமை ஆகிய அனைத்தையும் ஒருங்கே பிரதிபலிக்கும் சின்னம்.

இத்தாலிய கலைநயத்தில் உருவாகி, சுவிற்சர்லாந்தில் பாதுகாக் கப்படும் இந்தக் கோப்பை, ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கும் ஒருமுறை உலகம் முழுவதும் பயணித்து, புதிய சாம்பியனின் கைகளில் சில நொடிகள் ஜொலித்து, பின்னர் மீண்டும் தனது நிரந்தர இல்லத்திற்குத் திரும்புகிறது.

அதனால்தான், யார் வென்றாலும் உலகக்கோப்பை இறுதியில் சுவிற்சர்லாந்திற்கே திரும்புகிறது என்று சொல்லப்படுகிறது.

## உலக கால்பந்து வெற்றி வரலாறு:

1930 ஆம் ஆண்டு உருகுவேயில் முதல் FIFA உலகக்கோப்பை நடத்தப்பட்டது. அப்போது 13 நாடுகள் மட்டுமே பங்கேற்றன. இறுதிப் போட்டியில் அர்ஜென்டினாவை 4-2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த உருகுவே, உலகின் முதல் உலகக் கோப்பை சாம்பியனாக வரலாற்றில் இடம்பிடித்தது.

1934 ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற இரண்டாவது உலகக்கோப்பையையும், 1938 ஆம் ஆண்டு பிரான்சில் நடை பெற்ற மூன்றாவது உலகக்கோப்பையையும் இத்தாலி வென் றது. இதன் மூலம் தொடர்ந்து இரண்டு முறை உலகக்கோப் பையை வென்ற முதல் நாடாக இத்தாலி அமைந்தது. எனினும், 1939 இல் தொடங்கிய இரண்டாம் உலகப் போரின் காரணமாக 1942 மற்றும் 1946 உலகக்கோப்பைப் போட்டிகள் ரத்து செய் யப்பட்டன. உலகம் மீண்டும் அமைதிக்குத் திரும்பிய பின்னர், 1950 ஆம் ஆண்டு பிரேசிலில் உலகக்கோப்பை மீண்டும் நடத்தப்பட்டது. அந்தத் தொடரில் உருகுவே, பிரேசிலை அதன் சொந்த மண்ணில் தோற்கடித்து இரண்டாவது முறையாக உலகச் சாம்பியனானது. "மரகனாசோ" (Maracanazo) என அழைக்கப்படும் அந்தப் போட்டி, கால்பந்து வரலாற்றின் மிகப்

பலருக்குத் தெரியாத ஒரு சுவாரசியமான உண்மை உள்ளது. உலகக்கோப்பையை எந்த நாடு வென்றாலும், அசல் தங்கக் கோப்பை அந்த நாட்டில் நிரந்தரமாக இருக்காது. அது மீண்டும் சுவிற்சர்லாந்திற்கே திரும்பிவிடும். இதற்குப் பின்னால் வரலாறும், பாதுகாப்பு காரணங்களும், தனித்துவமான விதிமுறைகளும் உள்ளன.

பெரிய அதிர்ச்சிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

1954 ஆம் ஆண்டு மேற்கு ஜெர்மனி, அப்போது உலகின் சக்தி வாய்ந்த அணியாக விளங்கிய ஹங்கேரியை வீழ்த்தி உலகக் கோப்பையை வென்றது. இது “The Miracle of Bern” என உலக விளையாட்டு வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது. அதன் பின்னர் உலக கால்பந்தின் வரலாற்றில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்திய நாடு பிரேசிலாகும். 1958 உலகக்கோப்பையில் வெறும் 17 வயதான பெலே உலக அரங்கில் அறிமுகமானார். அவரது அபாரமான ஆட்டத்தால் பிரேசில் தனது முதல் உலகக் கோப்பையை வென்றது. 1962 இல் மீண்டும் சாம்பியனான பிரேசில், 1970 இல் மூன்றாவது முறையாக உலகக்கோப்பையை வென்று நிரந்தரமாக ஜூல்ஸ் ரிமே கோப்பையைத் தக்க வைத்துக் கொண்டது. பெலே உலகக்கோப்பையை மூன்று முறை வென்ற ஒரே வீரராக இன்றளவும் வரலாற்றில் திகழ்கிறார்.




1966 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கோப்பையில், போட்டியை நடத்திய இங்கிலாந்து தனது ஒரே உலகக் கோப்பையை வென்றது. ஜெஃப் ஹர்ஸ்ட் இறுதிப் போட்டியில் அடித்த ஹாட்ரிக் சாதனை இன்றளவும் உலகக்கோப்பை இறுதிப் போட்டிகளில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

1974 உலகக்கோப்பையில் மேற்கு ஜெர்மனி மீண்டும் சாம்பியனானது. 1978 இல் அர்ஜென்டினா தனது சொந்த நாட்டில் உலகக்கோப்பையை வென்றது. ஆனால் அந்தத் தொடர், இராணுவ ஆட்சியின் அரசியல் பின்னணியால் பெரும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியது. விளையாட்டும் அரசியலும் பிரிக்க முடியாதவை என்பதை உலகம் மீண்டும் உணர்ந்தது.

1982 உலகக்கோப்பையில் இத்தாலி தனது மூன்றாவது பட்டத்தை வென்றது. ஆனால் 1986 மெக்சிகோ உலகக்கோப்பை என்றாலே நினைவிற்கு வருவது டியாகோ மரடோனா. இங்கிலாந்துக்கு எதிரான “கடவுளின் கை” (Hand of God) கோலும், அதனைத் தொடர்ந்து அவர் தனியாக அடித்த “நூற்றாண்டின் கோல்” (Goal of the Century) உலக கால்பந்து வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றன. மரடோனாவின் தலைமையில் அர்ஜென்டினா இரண்டாவது உலகக்கோப்பையை வென்றது.

1990 இல் மேற்கு ஜெர்மனி மூன்றாவது முறையாக உலகக் கோப்பையை வென்றது. பின்னர் ஜெர்மனி ஒன்றுபட்டதன் பிறகு 2014 ஆம் ஆண்டு நான்காவது முறையாக உலகச் சாம்பியனானது. 1994 உலகக்கோப்பையில் பிரேசில் நான்காவது பட்டத்தை வென்றது. பெனால்டி முறையில் முடிவடைந்த முதல் உலகக்கோப்பை இறுதிப் போட்டி அதுவாகும்.

1998 ஆம் ஆண்டு பிரான்ஸ் தனது சொந்த மண்ணில் முதல் உலகக்கோப்பையை வென்றது. ஜினெடின் சிடான் தலைமையிலான அந்த அணி உலக கால்பந்தில் புதிய சக்தியாக உருவெடுத்தது. 2002 உலகக்கோப்பை முதன்முறையாக ஆசியாவில், ஜப்பான் மற்றும் தென் கொரியா இணைந்து நடத்தியது. அந்தப் போட்டியில் ரொனால்டோவின் அசத்தலான ஆட்டத்தால் பிரேசில் தனது ஐந்தாவது உலகக்கோப்பையை வென்றது. இதுவரை எந்த நாடும் ஐந்து உலகக்கோப்பைகளை வெல்லவில்லை என்பதால், பிரேசில் உலக கால்பந்தின் வெற்றிகரமான நாடாகத் திகழ்கிறது.




2006 உலகக்கோப்பையில் இத்தாலி நான்காவது பட்டத்தை வென்றது. இறுதிப் போட்டியில் ஜினெடின் சிடான் மார்கோ மாதெராச்சிக்கு தலையால் முட்டிய சம்பவம் உலகம் முழுவதும் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது. 2010 இல் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற உலகக்கோப்பை, ஆப்பிரிக்கக் கண்டத்தில் நடைபெற்ற முதல் உலகக்கோப்பையாக வரலாற்றில் இடம் பிடித்தது. அந்தத் தொடரில் ஸ்பெயின் தனது வரலாற்றின் முதல் உலகக்கோப்பையை வென்றது. டிக்கி-டாக்கா (Tiki-Taka) என்ற பந்துப் பரிமாற்ற பாணி உலக கால்பந்தில் புதிய யுகத்தை உருவாக்கியது.

2014 இல் ஜெர்மனி, பிரேசிலுக்கு எதிராக அரையிறுதியில் 7-1 என்ற அதிர்ச்சி வெற்றியைப் பதிவு செய்தது. பின்னர் இறுதிப் போட்டியில் அர்ஜென்டினாவை வீழ்த்தி நான்காவது உலகக் கோப்பையை வென்றது. 2018 இல் பிரான்ஸ் தனது இரண்டாவது உலகக்கோப்பையை வென்றது. இளம் நட்சத்திரமான கிலியன் எம்பாப்பே உலக கால்பந்தின் எதிர்கால முகமாக உருவெடுத்தார்.

2022 ஆம் ஆண்டு கத்தாரில் நடைபெற்ற உலகக்கோப்பை வரலாற்றில் மிகவும் பரபரப்பான தொடராக அமைந்தது. அர்ஜென்டினா மற்றும் பிரான்ஸ் மோதிய இறுதிப் போட்டி உலகக் கோப்பை வரலாற்றின் மிகச் சிறந்த இறுதிப் போட்டிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. லியோனல் மெஸ்ஸியின் கனவு நிறைவேறிய அந்த இரவு, அர்ஜென்டினா மூன்றாவது உலகக்கோப்பையை வென்றது. இந்த ஆண்டு கால்பந்து உலகக்கோப்பை தொடரில் ஸபெயின் வென்றது அறிந்ததே.

**தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் கலைத்து கொண்டு ஒரு புயல் எழுந்தது; சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக்கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்து கொண்டது; இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-




# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல
அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள்
செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை
பெருகச் செய்யும். அது உங்கள் வணிக
முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது
உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com

# ஆப்கான் பெண்களுக்காக உயிரைத் தியாகம் செய்த கூஷ்மிதா பானர்ஜி: அச்சத்தை மீறிய இந்தியப் பெண்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

03.08.2026



போர், மத அடிப்படைவாதம், பெண்களின் உரிமை மறுப்பு, மனித உரிமை மீறல்கள் ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கும் நாடுகளில் ஆப்கானிஸ்தான் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. அந்த நாட்டின் சமீபத்திய வரலாற்றைப் புரிந்துகொள்ள விரும்புபவர்கள், அரசியல் தலைவர்களின் வாழ்க்கையை மட்டுமல்லாமல், அங்கு வாழ்ந்த சாதாரண மக்களின் அனுபவங்களையும் அறிந்திருக்க வேண்டும். அவ்வாறான மனிதக் கதைகளில் உலகின் கவனத்தை ஈர்த்த மிக




முக்கியமான பெயர்களில் ஒன்று சுஷ்மிதா பானர்ஜி.

அவர் ஒரு அரசியல்வாதி அல்ல. ஆயுதம் ஏந்திய போராளியும் அல்ல. ஆனால், ஒரு சாதாரண இந்தியப் பெண்ணாக ஆப்கானிஸ்தானுக்குச் சென்று, தாலிபானின் கொடூர ஆட்சியை நேரடியாக அனுபவித்து, பின்னர் அந்த உண்மைகளை உலகிற்கு வெளிப்படுத்திய எழுத்தாளராகவும், ஆப்கான் பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த மனித உரிமைச் செயற்பாட்டாளராகவும் வரலாற்றில் இடம்பிடித்தார்.

அவரது வாழ்க்கை காதலால் தொடங்கி, கொடுமையால் சிதறி, எழுத்தின் மூலம் எதிர்ப்பாக மாறி, இறுதியில் உயிர்த் தியாகத்தில் முடிந்தது. அதனால்தான் சுஷ்மிதா பானர்ஜியின் வாழ்க்கை ஒரு தனிப்பட்ட சோகக் கதையாக மட்டுமல்ல; ஒடுக்கப்பட்ட பெண்களின் எதிர்ப்பின் வரலாறாகவும் பார்க்கப்படுகிறது.

## ஆப்கானில் ஓர் காதல்

சுஷ்மிதா பானர்ஜி இந்தியாவின் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர். இளமைக் காலத்தில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஜான் பாஸ் கான் என்ற தொழிலதிபரை காதலித்து 1988 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். குடும்பத்தின் எதிர்ப்புகளையும் சமூகக் கட்டுப்பாடுகளையும் மீறி நடைபெற்ற இந்தத் திருமணம், அவருடைய வாழ்க்கையின் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

திருமணத்திற்குப் பிறகு அவர் தனது கணவருடன் ஆப்கானிஸ்தானின் பக்திகா மாகாணத்தில் குடியேறினார். அப்போது சோவியத் படைகள் வெளியேறிய பின்னர் நாடு அரசியல் குழப்பத்தில் இருந்தாலும், பல கிராமப்புறங்களில் மக்களின் அன்றாட வாழ்க்கை தொடர்ந்து கொண்டிருந்தது. புதிய நாட்டில் புதிய குடும்பத்துடன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற கனவோடு அவர் வாழத் தொடங்கினார். ஆனால் அந்த அமைதி நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை.

## தாலிபான் எழுச்சி – மகளிர் இருண்ட காலம்

1990-களின் நடுப்பகுதியில் தாலிபான் அமைப்பு வேகமாக வளர்ந்து, 1996 ஆம் ஆண்டு காபூலை கைப்பற்றி ஆட்சியை நிறுவியது. அதன்பிறகு ஆப்கானிஸ்தானின் அரசியல் மட்டுமல்ல, சமூக வாழ்க்கையும் முற்றிலுமாக மாறியது. பெண்கள் பள்ளிக்குச் செல்லக்கூடாது, வேலை செய்யக்கூடாது, ஆண் உறவினர் இல்லாமல் வெளியே வரக்கூடாது, இசை கேட்கக்கூடாது, சிரித்துப் பேசக்கூடாது என வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் கட்டுப்படுத்தும் சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. புர்கா அணிவது கட்டாயமாக்கப்பட்டது. சிறிய விதிமுறைகளை மீறினாலும் பொதுமக்கள் முன்னிலையில் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

இந்த மாற்றங்கள் சுஷ்மிதாவின் வாழ்க்கையையும் நேரடியாகப் பாதித்தன. இந்தியாவில் சுதந்திரமாக வாழ்ந்த அவர், திடீரென உரிமையற்ற வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டார். ஒரு பெண்ணாக மட்டுமல்ல, வெளிநாட்டவராகவும் அவர் கூடுதல் சந்தேகத்துடன் பார்க்கப்பட்டார். தாலிபான் ஆட்சியின் அடக்குமுறைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்தபோது, அங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டும் என்ற முடிவை சுஷ்மிதா எடுத்தார். தனது நினைவுக் குறிப்புகளின்படி, 1995 ஆம் ஆண்டு அவர் தப்பிச் செல்ல முயன்றபோது தாலிபான் போராளிகளால் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும், தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு ஒரு கிராமத் தலைவரின் உதவியுடன் தப்பியதாகவும் அவர் பின்னர் எழுதியுள்ளார். இந்த நிகழ்வு அவரது வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்தது. இந்தச் சம்பவத்தின் சில விவரங்கள் குறித்து பின்னர் ஆய்வாளர்கள் கேள்விகளை எழுப்பியிருந்தாலும், தாலிபான் ஆட்சியின் கீழ் பெண்கள் எதிர்கொண்ட அடக்குமுறைகள் குறித்து அவர் பதிவு செய்துள்ளமையக் கருத்துகள் பல சர்வதேச மனித உரிமை அறிக்கைகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

> **சுஷ்மிதா பானர்ஜி ஒரு அரசியல்வாதி அல்ல. ஆயுதம் ஏந்திய போராளியும் அல்ல. ஆனால், ஒரு சாதாரண இந்தியப் பெண்ணாக ஆப்கானிஸ்தானுக்குச் சென்று, தாலிபானின் கொடூர ஆட்சியை நேரடியாக அனுபவித்து, பின்னர் அந்த உண்மைகளை உலகிற்கு வெளிப்படுத்திய எழுத்தாளராகவும், ஆப்கான் பெண்களின் உரிமைக்காக குரல் கொடுத்த மனித உரிமைச் செயற்பாட்டாளராகவும் வரலாற்றில் இடம்பிடித்தார்.**
>
> **அவரது கதை ஒரு பெண்ணின் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல் ஒடுக்குமுறைக்கு எதிராக எழுந்த மனித மன உறுதியின் அழியாத சாட்சியாகவும், உலகம் மறக்கக் கூடாத ஒரு வரலாற்றுப் பதிவாகவும் என்றும் நிலைத்திருக்கும். தாலிபானின் மரண தண்டனையில் இருந்து தப்பித்து, இறுதியில் ஆப்கான் பெண்களுக்காக உயிரைத் தியாகம் செய்த சுஷ்மிதா பானர்ஜி – அச்சத்தை மீறிய இத்திய பெண்ணாக விளங்குகிறார்.**

## எழுத்தின் மூலம் உலகை அதிர – வைத்தவர்

பின்னர் இந்தியாவிற்குத் திரும்பிய பிறகு, சுஷ்மிதா தனது அனுபவங்களை மௌனமாக வைத்திருக்கவில்லை. அவற்றை எழுத்தாக்கி "Kabuliwalar Bangali Bou" (காபுலிவாலாரின் பெங்காலி மனைவி) என்ற நினைவுக் குறிப்பை வெளியிட்டார். இந்த நூல் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பெரும் வரவேற்பைப் பெற்றது. ஏனெனில் அது வெறும் அரசியல் விமர்சனம் அல்ல; தாலிபான் ஆட்சியின் கீழ் வாழ்ந்த ஒரு பெண்ணின் நேரடி அனுபவமாக இருந்தது.

பெண்கள் எப்படி ஒடுக்கப்பட்டார்கள், அன்றாட வாழ்க்கை எவ்வாறு அச்சத்தால் நிரம்பியிருந்தது, மத அடிப்படைவாதம் மனித வாழ்க்கையை எவ்வாறு சீரழித்தது என்பதை அவர் மிகத் தெளிவாக பதிவு செய்திருந்தார்.

பின்னர் அவரது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு "நுளஉயிந கசழஅ வுயடமையெ" என்ற இந்தித் திரைப்படம் உருவாக்கப்பட்டது. இந்த திரைப்படம் அவரது வாழ்க்கைக் கதையை கோடிக்கணக்கான மக்களிடம் கொண்டு சென்றது.

## மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பிய துணிச்சல்

ஒருமுறை மரணத்தின் வாயிலிலிருந்து தப்பிய ஒருவர் மீண்டும் அதே நாட்டிற்குச் செல்வது சாதாரண முடிவு அல்ல. ஆனால் சுஷ்மிதா அப்படிச் செய்தார். 2001 ஆம் ஆண்டு அமெரிக்க தலைமையிலான படையெடுப்புக்குப் பிறகு தாலிபான் முதல் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, 2003 ஆம் ஆண்டு அவர் மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பினார்.

அவரது நோக்கம் பழைய வாழ்க்கையை மீட்டெடுப்பது மட்டுமல்ல. போர் முடிந்த பிறகும் பெண்களின் வாழ்க்கை எவ்வாறு தொடர்கிறது என்பதை உலகிற்கு எடுத்துரைப்பது. ஆவணப் படங்கள் தயாரிப்பதிலும், பெண்களின் வாழ்க்கையைப் பதிவு செய்வதிலும், உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து பணியாற்றுவதிலும் அவர் ஈடுபட்டார்.

பல ஆப்கான் பெண்கள் இன்னும் வறுமை, கல்வியறிவு பற்றாக்குறை, குடும்ப வன்முறை மற்றும் பழமைவாத சமூகக் கட்டுப்பாடுகளின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்தனர். இந்த உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பதே அவரது இலக்காக இருந்தது.

## பெண்களின் குரலாக மாறிய எழுத்தாளர்

சுஷ்மிதா பானர்ஜி வெறும் எழுத்தாளராக மட்டுமல்லாமல், ஆப்கான் பெண்களின் குரலாக மாறினார். அவரது எழுத்துகள் உலகிற்கு ஒரு முக்கியமான உண்மையை எடுத்துக்காட்டின. போர் என்பது வெறும் இராணுவங்களுக்கு இடையேயான மோதல் அல்ல; அதன் மிகப்பெரிய பாதிப்பை பெண்களும் குழந்தைகளும் தான் அனுபவிக்கிறார்கள்.

ஒரு பெண் கல்வி கற்க முடியாமல் போவது, மருத்துவ சேவையைப் பெற முடியாமல் போவது, தனது விருப்பப்படி வாழ முடியாமல் போவது, சுதந்திரமாகச் சிரிக்கக்கூட முடியாத நிலை ஏற்படுவது போன்றவை அனைத்தும் மனித உரிமை மீறல்களே

என்பதை அவரது வாழ்க்கை உலகிற்கு உணர்த்தியது.

## 2013 - மீண்டும் வன்முறை அவரைத் தேடியது

2013 செப்டம்பர் 4 ஆம் தேதி அதிகாலை, பக்திகா மாகாணத்தில் இருந்த அவரது வீட்டிற்குள் ஆயுதம் ஏந்திய நபர்கள் நுழைந்தனர். அவரது கணவர் கட்டிப்போடப்பட்டார். சுஷ்மிதா கடத்திச் செல்லப்பட்டார். சில மணி நேரங்களுக்குப் பிறகு அவரது உடல் சாலையோரத்தில் மீட்கப்பட்டது. பல துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அவர் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலையின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது இன்று வரை முழுமையாகத் தெளிவாகவில்லை. ஆப்கான் அதிகாரிகள் தாலிபான் தொடர்புடையவர்களைச் சந்தேகித்தனர். ஆனால் தாலிபான் அந்தக் குற்றச்சாட்டை மறுத்தது. எவ்வாறாயினும், மனித உரிமைகளுக்காகப் பணியாற்றியவர்களின் பாதுகாப்பு குறித்து அவரது மரணம் உலகளாவிய விவாதத்தை மீண்டும் எழுப்பியது.

சுஷ்மிதாவின் நினைவுக் குறிப்புகளில் இடம்பெற்ற சில சம்பவங்கள் குறித்து பின்னர் சில பத்திரிகையாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கேள்விகளை எழுப்பினர். குறிப்பாக அவர் தப்பித்த விதம், மரண தண்டனை சம்பவம் போன்றவற்றின் வரலாற்றுத் துல்லியம் குறித்து விவாதங்கள் நடைபெற்றன.

ஆனால் இந்த விவாதங்கள் அவரது வாழ்க்கையின் மையச் செய்தியை மாற்றவில்லை. தாலிபான் ஆட்சியின் கீழ் பெண்கள் கல்வி, வேலை, சுகாதாரம், சுதந்திரமான நடமாட்டம் போன்ற அடிப்படை உரிமைகளையே இழந்திருந்தனர் என்பது ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகளின் அறிக்கைகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## சுஷ்மிதா பானர்ஜி விட்டுச் சென்ற மரபு

சுஷ்மிதா பானர்ஜியின் வாழ்க்கை ஒரு முக்கியமான பாடத்தை நமக்கு கற்பிக்கிறது. உண்மையைச் சொல்லுவது சில நேரங்களில் உயிரைப் பணயம் வைக்கும் செயலாக இருக்கலாம். ஆனால் அந்த உண்மை உலகை மாற்றும் சக்தியைக் கொண்டிருக்கிறது. அவர் எழுதிய நூல்கள் இன்று வரலாற்று ஆவணங்களாக வாசிக்கப்படுகின்றன. ஆப்கானிஸ்தானில் பெண்கள் எதிர்கொண்ட அநீதிகளைப் புரிந்துகொள்ள விரும்பும் பல ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அவரது அனுபவங்கள் ஒரு முக்கியமான சான்றாக உள்ளன.



சுஷ்மிதா பானர்ஜியின் வாழ்க்கை காதல், துணிச்சல், தியாகம், மனித உரிமைப் போராட்டம் மற்றும் சோகமான மரணம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய அரிய வாழ்க்கைப் பயணமாகும். அவர் பாதுகாப்பான வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். இந்தியாவில் அமைதியாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் ஆப்கான் பெண்களின் குரல் உலகிற்கு சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குச் சென்றார். அந்த முடிவு இறுதியில் அவரது உயிரைப் பறித்தாலும், அவரது குரலை மௌனமாக்க முடியவில்லை.

இன்றும் சுஷ்மிதா பானர்ஜி ஒரு எழுத்தாளராக மட்டுமல்ல, அநீதிக்கு எதிராக அச்சமின்றி குரல் கொடுத்த பெண்ணாக நினைவு கூரப்படுகிறார். மனித உரிமைகள் என்பது அரசியல் கோஷமல்ல; ஒவ்வொரு மனிதனும், குறிப்பாக ஒவ்வொரு பெண்ணும், அச்சமின்றி, மரியாதையுடன், சுதந்திரமாக வாழ வேண்டிய அடிப்படை உரிமை என்பதை அவரது வாழ்க்கை நமக்கு நினைவூட்டுகிறது.

அவரது கதை ஒரு பெண்ணின் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல; ஒடுக்குமுறைக்கு எதிராக எழுந்த மனித மன உறுதியின் அழியாத சாட்சியாகவும், உலகம் மறக்கக் கூடாத ஒரு வரலாற்றுப் பதிவாகவும் என்றும் நிலைத்திருக்கும்.




www.sangathamil.com




**நாம் ஒன்றுபட்ட மக்களாக – ஒரே சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

**www.sangathamil.com**

# இலங்கையில் மரண தண்டனை

– பா. அரியநேத்திரன்–

01.08.2026

இலங்கையில் புராதன காலம் தொட்டு மரணதண்டனை நிறைவேறிய வரலாறுகள் உண்டு.

ஒல்லாந்தர் ஆட்சிகாலத்தில் 1681ஆம் ஆண்டு குற்றவாளியை யானையால் மிதித்துக் கொல்லப்பட்டு மரண தண்டனை நிறைவேறியது.

பிரித்தானியர் ஆட்சி காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின்போது, இலங்கை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 285ஆவது பிரிவின்படி, கொடூரமான முறைகளில் மரணதண்டனை விதிக்கப்படுவது தடை செய்யப்பட்டு, அப்போதைய இலங்கை ஆளநரான பிரெடரிக் நோத்தினால் தூக்கிலிடும் முறை அமுல்படுத்தப்பட்டது.

பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் பொது இடங்களிலும், கோட்டைகளிலும் குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் 1871ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள வெலிக்கடை சிறையிலும், அதனைத் தொடர்ந்து கண்டி போகம்பறை சிறையிலும் தூக்குமேடைகள் அமைக்கப்பட்டன.

1948 பெப்ரவரி 04இல், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் 1956 ஏப்ரல் 05இல் சிறீலங்கா சுதந்திரகட்சி ஆட்சியில் பிரதமராக ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்கா வினால் மரணதண்டனை நிறைவேற்றப்படுவது இல்லாமலாக்கப்பட்டது.

எனினும் 1959 செப்டம்பர் 25இல், அதே பிரதமர் பண்டாரநாயக்காவை சோமராம தேரர் என்ற பௌத்த பிக்கு கொலை செய்தார்.

அவரை கொலை செய்தமையால் 1959 செப்டம்பர் 26இல் புதிய பிரதமராகப் விஜயானந்த தகநாயக்கா பதவியேற்றபின்னர் 1959 நவம்பரில் மீண்டும் மரணதண்டனை நிறைவேற்றும் சட்டத்திருத்தம் நாடாளுமன்றில் நிறைவேறி 1962 யூலை 06இல் சோமாராம என்ற பிக்குவுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இறுதியாக மரணதண்டனை 1976 யூன் 23இல் J.M சந்திர தாச என்பவருக்கே வெலிக்கடைசிறையில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது .

இதற்கு பின்னர் எந்த குற்றவாளிகளுக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

அதற்கான காரணம்:

1978 செப்டம்பர் 07இல் புதிய அரசியலமைப்பின்படி மரண தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதியின் ஒப்புதல் அவசியமாக்கப்பட்டதுடன், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகள் எவரும் மரண தண்டனையை நிறைவேற்றும் ஆவணங்களில் கையெழுத்திடாதத்தன் காரணமாக தண்டனை நின்று போனது.

இலங்கை சட்டத்தின் அடிப்படையில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் தண்டனை சட்டத்தின் 285ஆவது பிரிவின்படி, நாட்டின் ஜனாதிபதியால் நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் இடத்தில் குற்றவாளி தூக்கிலிடப்பட வேண்டும். இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 286ஆவது பிரிவின்படி, சம்பந்தப்பட்ட தண்டனை நிறைவேற்றப்படும் வரை குற்றவாளி சிறை கண்காணிப்பாளரின் காவலில் வைக்கப்படுவார் என்பதே நடைமுறையானது.

நீதிமன்றங்கள் மரணதண்டனை தீர்ப்புகளை வழங்குகின்றன, ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் அதனை நிறைவேற்றுவதில்லை.

இலங்கை மனித உரிமைகள் ஆணையம் மரணதண்டனையை முழுமையாக நீக்கப் பரிந்துரைக்கிறது. பௌத்த துறவிகளும் இதனை எதிர்கின்றனர்.



நூற்றுக்கணக்கான கைதிகள் மரண தண்டனை விதிக்கப்பட்டுச் சிறைகளில் உள்ளனர்.

மரணதண்டனை கைதிகளுக்கான பொதுமன்னிப்பு அல்லது தண்டனை குறைப்பு என்பது நாட்டின் ஜனாதிபதி அதிஉயர் நிறைவேற்று அதிகாரத்தால் அரசியலமைப்பு விதிகளின்படி வழங்கப்படுகிறது.

இது நீதித்துறை மேல்முறையீடுகள் முடிந்த பிறகு அல்லது சிறைத்துறை பரிந்துரையின் பேரில் செயல்படுத்தப்படுகிறது.

பொதுமன்னிப்பு மற்றும் தண்டனை குறைப்பு முறைகள் நாட்டின் ஜனாதிபதிக்கு மட்டுமே மரணதண்டனையை முழுமையாக மன்னிக்கவோ அல்லது மாற்றி அமைக்கவோ அதிகாரம் உண்டு.

மரணதண்டனையானது சில சமயங்களில் வாழ்நாள் சிறைத் தண்டனையாக குறைக்கப்படும்.

கைதியின் நல்லொழுக்கம், சிறைவாசம் அனுபவித்த காலம் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகளின் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படும்.

பொதுமன்னிப்பு வழங்கும் முன் நீதி அமைச்சகம் மற்றும் சம்பந்தப்பட்ட நீதிபதிகளின் கருத்துகள் பெறப்படவேண்டும்.

**விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும், உறுதியையும் அழித்து விட சிங்கள இராணுவத்தால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும், தியாக உணர்வும், உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்கு உண்டு.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# பிரிட்டன் புதிய அரசின் மாறும் நிலைப்பாடு: பாலஸ்தீன அங்கீகார மறுப்பு, இஸ்ரேலுக்கு ஆதரவு!

-ஜங்கரன் விக்கினேஸ்வரா-

11.08.2026




**பிரிட்டனில் பல அரசியல் கட்சிகள் காசா விவகாரத்தில் அரசின் நிலைப்பாட்டை விமர்சித்துள்ளனர். அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள், காசா தொடர்பாக இனப்படுகொலை என்ற சட்ட மதிப்பீட்டை ஆதரித்தல், இஸ்ரேலுக்கு ஆயுத ஏற்றுமதி உரிமங்களை இடைநிறுத்துதல், விரிவான பொருளா-தாரத் தடைகள் விதித்தல், சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக தனிப்பட்ட தடைகள் விதித்தல், நிரந்தர போர் நிறுத்தத்தை ஆதரித்தல். இந்தக் கோரிக்கைகளுக்கு மனித உரிமை அமைப்புகள், பிரிட்டனிலுள்ள பல சமூக அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.**

மத்திய கிழக்கில் நீடித்து வரும் இஸ்ரேல்-பாலஸ்தீன் மோதல், 2023 அக்டோபர் 7ஆம் தேதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலுக்குப் பின்னர் புதிய மற்றும் மிகவும் தீவிரமான கட்டத்தை எட்டியது. அதனைத் தொடர்ந்து இஸ்ரேல் காசாவில் மேற்கொண்ட விரிவான இராணுவ நடவடிக்கைகள் உலகளாவிய மனிதாபிமான நெருக்கடியை உருவாக்கின. ஆயிரக்கணக்கான பொது மக்கள் உயிரிழப்பு, மருத்துவமனைகள், பள்ளிகள், அகதி முகாம்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் சேதமடைதல், உணவு, குடிநீர், மின்சாரம் மற்றும் மருத்துவ வசதிகளின் கடுமையான பற்றாக்குறை ஆகியவை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தன.

இந்தச் சூழலில், காசாவில் நடைபெறும் நடவடிக்கைகளை "இனப்படுகொலை" (Genocide) என அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும் என்றும், இஸ்ரேல் மீது விரிவான பொருளாதார, இராணுவ மற்றும் இராஜதந்திரத் தடைகள் விதிக்க வேண்டும் என்றும் பிரிட்டனின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் புதிய பிரதமர் ஆண்டி பேர்ன்ஹாம் தலைமையிலான புதிய பிரிட்டிஷ் அரசு, இந்தக் கோரிக்கைகளை நிராகரித்ததாக வெளியான தகவல்கள், பிரிட்டனின் வெளிநாட்டுக் கொள்கை, சர்வதேச சட்டம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக புதிய விவாதங்களை உருவாக்கியுள்ளன.

## இனப்படுகொலை: சர்வதேச சட்ட வரையறை

1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட Genocide Convention (Convention on the Prevention and Punishment of the Crime of Genocide) என்பது இனப்படுகொலை குற்றத்தை வரையறுக்கும் அடிப்படை சர்வதேச சட்டமாகும். அதன்படி, ஒரு தேசிய, இன, இனக்குழு அல்லது மதக் குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அழிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் செயல்கள் இனப்படுகொலையாகக் கருதப்படலாம்.

இந்தச் செயல்களில் குழு உறுப்பினர்களைக் கொல்வது, கடுமையான உடல் அல்லது மனரீதியான சேதத்தை ஏற்படுத்துவது,
அந்தக் குழுவின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சூழலை உருவாக்குவது,
பிறப்புகளைத் தடுக்கும் நடவடிக்கைகள், குழந்தைகளை வலுக்கட்டாயமாக வேறு குழுக்களுக்கு மாற்றுவது போன்றவை அடங்கும். ஆனால், இந்தக் குற்றத்தை நிரூபிப்பதில் மிக முக்கியமான அம்சம் அழிக்கும் நோக்கம் (specific intent) என்பதாகும். இந்த நோக்கத்தை நிரூபிப்பதே சர்வதேச நீதிமன்றங்களில் மிகவும் சிக்கலான சட்டக் கேள்வியாகும்.

## ICJ வழக்கு முக்கியத்துவம் :

2023 இறுதியிலும் 2024 ஆரம்பத்திலும் தென்னாப்பிரிக்கா, ஐக்கிய நாடுகள் இனப்படுகொலை ஒப்பந்தத்தின் அடிப்படையில், இஸ்ரேலுக்கு எதிராக International Court of Justice-இல் வழக்குத் தொடர்ந்தது.

ICJ தனது இடைக்கால உத்தரவுகளில் காசாவில் இனப்படுகொலை ஒப்பந்தத்தின் கீழ் பாதுகாக்கப்படும் உரிமைகள் தொடர்பான ஆபத்து இருப்பதை ஏற்றுக்கொண்டு, பொது மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்குமாறு, மனிதாபிமான உதவிகள் சென்றடைவதை உறுதிப் படுத்துமாறு, இனப்படுகொலையைத் தூண்டும் வகையிலான பேச்சுக்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு இஸ்ரேலுக்கு உத்தரவிட்டது.

ஆனால், ICJ இதுவரை இஸ்ரேல் இனப்படுகொலை செய்துள்ளது என்று இறுதியான தீர்ப்பை வழங்கவில்லை. வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. இதுவே பல அரசுகள் இனப்படுகொலை என்ற சொல்லைப் பயன்படுத்துவதில் எச்சரிக்கையாக இருப்பதற்கான ஒரு முக்கிய காரணமாகும்.

காசா தொடர்பாக ஐ.நா. பொதுச்சபை பல முறை உடனடி மனிதாபிமான போர் நிறுத்தத்திற்குத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அதேவேளை, பாதுகாப்பு கவுன்சிலில் பல தீர்மானங்கள் நிரந்தர உறுப்பினர்களின் அரசியல் நிலைப்பாடுகள் காரணமாக கடுமையான விவாதங்களைச் சந்தித்துள்ளன.

ஐ.நா. பொதுச் செயலாளர், பல சிறப்பு அறிக்கையிடுநர்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புகள், பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டும், மனிதாபிமான உதவிகளைத் தடையின்றி அனுமதிக்க வேண்டும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மதிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

## பிரிட்டனில் அரசியல் அழுத்தம்

பிரிட்டனில் தொழிற்கட்சி, லிபரல் டெமாக்ரட்கள், சுயேட்சை உறுப்பினர்கள் மற்றும் சில பிற அரசியல் பிரதிநிதிகள் காசா விவகாரத்தில் அரசின் நிலைப்பாட்டை விமர்சித்துள்ளனர். அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள், காசா தொடர்பாக இனப்படுகொலை என்ற சட்ட மதிப்பீட்டை ஆத ரித்தல், இஸ்ரேலுக்கு ஆயுத ஏற்றுமதி உரிமங்களை இடை நிறுத்துதல் அல்லது மறுபரிசீலனை செய்தல், விரிவான பொருளாதாரத் தடைகள் விதித்தல், சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக தனிப்பட்ட தடைகள் விதித்தல், நிரந்தர போர் நிறுத்தத்தை ஆதரித்தல். இந்தக் கோரிக்கைகளுக்கு மனித உரிமை அமைப்புகள், பிரிட்டனிலுள்ள பாலஸ்தீன ஆதரவு இயக்கங்கள் மற்றும் குடிமக்கள் சமூகத்தின் சில பிரிவுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

பிரிட்டன் அரசு, ஒரு சூழ்நிலை இனப்படுகொலையா என்பது அரசியல் அறிவிப்பின் மூலம் அல்ல் திறன்வாய்ந்த சர்வதேச நீதிமன்றங்களின் சட்டத் தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற நீண்டகாலக் கொள்கையை முன்வைக்கிறது. இந்த அணுகுமுறைக்கான காரணங்கள்: முதலாவது, சர்வதேச சட்டத்தின் நடைமுறையை அரசியல் முடிவுகளிலிருந்து பிரித்து வைத்திருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு. இரண்டாவது, இஸ்ரேலும் அரபு நாடுகளும் பிரிட்டனின் முக்கிய வெளிநாட்டு மற்றும் பாதுகாப்பு கூட்டாளிகள் என்பதால், ஒருதலைப் பட்சமான நடவடிக்கைகள் இராஜதந்திர விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். மூன்றாவது, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கூட்டாளிகளுடன் ஒருங்கிணைந்த வெளிநாட்டு கொள்கையைப் பேணும் முயற்சி.

## இஸ்ரேல் மீது தடை வேண்டுமா?

"Comprehensive Sanctions" அல்லது விரிவான தடைகள் என்பது: வர்த்தகக் கட்டுப்பாடுகள், முதலீட்டு தடைகள், நிதி பரிவர்த்தனைத் தடைகள், ஆயுத ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள், இராஜதந்திர உறவுகளின் வரம்புகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை உள்ளடக்கலாம்.

தடைகளை ஆதரிப்பவர்கள் கூறும் அவர்களின் கருத்துப்படி, சர்வதேச சட்டத்தை மீறுவோருக்கு அரசியல் மற்றும் பொருளாதாரப் பொறுப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பொதுமக்கள் உயிரிழப்பைக் குறைக்க அழுத்தம் அவசியம். மனித உரிமைகள் உலகளவில் ஒரே அளவுகோலில் பாதுகாக்கப்பட வேண்டும்.

தடைகளை எதிர்ப்பவர்கள் கூறுவது மறுபுறம், எதிர்ப்பாளர்கள் தடைகள் அமைதி பேச்சுவார்த்தைகளைப் பாதிக்கலாம். பிராந்திய பதற்றத்தை அதிகரிக்கலாம். பொதுமக்களுக்கும் எதிர்மறையான பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தலாம். என்று வாதிடுகின்றனர்.

காசா தொடர்பாக மேற்கத்திய நாடுகள் எடுத்துள்ள அணுகுமுறையை, உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்புக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டு சில விமர்சகர்கள் இரட்டை அளவுகோல் இருப்பதாகக் கூறுகின்றனர். அதே நேரத்தில், பல அரசுகள் ஒவ்வொரு மோதலுக்கும் தனித்துவமான வரலாற்று, பாதுகாப்பு மற்றும் சட்டப் பின்னணி இருப்பதால், நேரடியான ஒப்பீடுகள் எப்போதும் பொருத்தமாக இருக்காது என்று பதிலளிக்கின்றன.

## பிரிட்டனின் உள்நாட்டு அரசியலில் தாக்கம்

காசா விவகாரம் பிரிட்டனின் உள்நாட்டு அரசியலிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பல நகரங்களில் பெருமளவிலான ஆதரவு மற்றும் எதிர்ப்பு பேரணிகள் நடைபெற்றன. பல்வேறு மத மற்றும் இனச் சமூகங்கள் மத்தியில் தீவிரமான கருத்து வேறுபாடுகள் வெளிப்பட்டன. பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மக்களின் அழுத்தத்தையும், மனித உரிமை அமைப்புகளின் கோரிக்கைகளையும், வெளிநாட்டு கொள்கை யதார்த்தங்களையும் சமநிலைப்படுத்த வேண்டிய சூழ்நிலையை எதிர்கொண்டனர்.

இந்த விவகாரம், மனித உரிமைகள், தேசிய பாதுகாப்பு, சர்வதேச சட்டம் மற்றும் தேர்தல் அரசியல் ஆகியவை எவ்வாறு ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பதை வெளிப்படுத்துகிறது. காசாவில் நடைபெறும் போர் தொடர்பாக இனப்படுகொலை என்ற சட்டப்பூர்வ கேள்வி இன்னும் சர்வதேச நீதிமன்றங்களின் பரிசீலனையில் உள்ளது. அதேவேளை, பொது மக்கள் பாதுகாப்பு, மனிதாபிமான உதவிகளுக்கான அணுகல் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மதிப்பது போன்ற கடமைகள் அனைத்து மோதல் தரப்புகளுக்கும் பொருந்துகின்றன.

பிரிட்டன் அரசு, இந்த விவகாரத்தில் இனப்படுகொலை என்ற சட்டத் தீர்மானத்தை நீதிமன்றங்களுக்கே விட்டுவைக்க வேண்டும் என்ற பாரம்பரிய நிலைப்பாட்டைத் தொடர்ந்து வருகிறது. இதேவேளை, அந்த நிலைப்பாடு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அரசியல் விவாதங்களையும் விமர்சனங்களையும் உருவாக்கியுள்ளது.

எதிர்காலத்தில் ICJ மற்றும் பிற சர்வதேச நீதிமன்றங்களின் இறுதி தீர்ப்புகள், காசா போர் தொடர்பான சர்வதேச சட்டத்தின் விளக்கத்தையும், நாடுகள் மேற்கொள்ளும் வெளிநாட்டு கொள்கை முடிவுகளையும் குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கக் கூடும். எந்த அரசியல் நிலைப்பாடாக இருந்தாலும், பொது மக்களின் உயிர் பாதுகாப்பு, மனிதாபிமானச் சட்டத்தின் மதிப்பு மற்றும் நீடித்த அமைதியை நோக்கிய இராஜதந்திர முயற்சிகளே உலக சமூகத்தின் முக்கிய முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

# குற்றமும் தண்டனையும்

01.08.2026




ஜூலை 83 நடந்து 43 ஆண்டுகளாகிவிட்டன. இன்றுவரை எந்த ஒரு சிங்களத் தலைவரும் அதற்காக மன்னிப்புக் கேட்கவில்லை. 1981இல் யாழ்.நூலகம் எரிக்கப்பட்டது. அது நடந்து கிட்டத்தட்ட 35ஆண்டுகளுக்குப் பின்பு, 2016 டிசம்பரில் ரணில் விக்கிரமசிங்க அதற்காக நாடாளுமன்றத்தில் மன்னிப்புக் கேட்டிருந்தார். கடந்த சுமார் ஒரு நூற்றாண்டு கால இன முரண்பாட்டின் வரலாற்றில் ஒரு சிங்களத் தலைவர் அப்படி மன்னிப்புக் கேட்டது அதுதான் முதல் தடவை. ரணில் மீது ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் அவர் மன்னிப்பு கேட்டார். அவருக்கு முன்னரும், பின்னரும் யாரும் இதுவரை மன்னிப்புக் கேட்கவில்லை.

ஜூலை 83க்கு ரணிலும் உட்பட அவர் அங்கம் வகித்த ஜெயவர்த்தனாவின் அரசாங்கம்தான் பொறுப்பு என்று இப்போதுள்ள அரசாங்கம் கூறுகிறது. அண்மையில் நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் அதைத் தெரிவித்தார். அது மட்டுமல்ல, அது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் “அரச பயங்கரவாதம்” என்றும் அவர் சொன்னார். நாட்டின் நீதி அமைச்சர் ஒருவர் முன்னைய அரசாங்கத்தின் ஒரு நடவடிக்கையை அரச பயங்கரவாதம் என்று அழைத்தமை இதுதான் முதல் தடவை. ஆனாலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது 83 ஜூலைக்காக மன்னிப்பு கேட்கவில்லை. ஏன் கேட்கவில்லை? அவர்கள் கூறுவார்கள், அது நாங்கள் செய்யவில்லை, முன்னம் இருந்த யு.என்.பி அரசாங்கந்தான் செய்தது என்று.

இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூட்டுப் பொறுப்பு உண்டு. அவரும்கூட ஜூலை 83க்காக இன்றுவரை மன்னிப்புக் கேட்கவில்லை. கேட்கக்கூடிய பதவியில் அவர் இருந்த போதும் கேட்கவில்லை. நூலக எரிப்புக்கு அவர் மன்னிப்புக் கேட்டபோது அப்போதிருந்த கூட்டு எதிரணியை நோக்கி நீங்கள் கடந்த அரசாங்கத்தில் செய்த குற்றங்களுக்கு மன்னிப்புக் கேட்பீர்களா என்றும் கேதார். அதாவது கூட்டு எதிரணியை நெருக்கடிக்குள் தள்ளும் உள்நோக்கத்தோடுதான் அவர் அவ்வாறு மன்னிப்புக் கேட்டவரா? இப்பொழுது அவர் அநேகமாக ஓய்வு பெற்று விட்டார். அவரைப்போல அன்றைக்கு ஜேஆரின் அரசாங்கத்தில் பிரதானிகளாக இருந்த பலரும் உயிருடன் உள்ளார்கள். யாருமே யூலை 83க்கு மன்னிப்புக் கேட்கவில்லை.

இவ்வாறு நாட்டின் தலைநகரமும் உட்பட முக்கிய தென்னிலங்கை நகரங்களில் இடம்பெற்ற இன அழிப்புக்கு இதுவரை எந்த ஒரு சிங்களத் தலைவரும் மன்னிப்பு கேட்காத, அதாவது பொறுப்புக்கூறாத ஓர் அரசியல் சூழலில், ஏழு ஆண்டுகளுக்கு முன் நடந்த ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு இப்போதுள்ள அரசாங்கம் பொறுப்புக் கூறுகிறதா?



நாட்டின் 160 ஆண்டுகால போலீஸ் வரலாற்றில் ஒரு முன்னாள் பொலிஸ்மா அதிபருக்கு மரண தண்டணை விரிக்கப்பட்டது இதுதான் முதல் தடவை. அப்படித்தான் ஒரு முன்னாள் பாதுகாப்புத் துறை செயலருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஈஸ்டர் குண்டு வெடிப்பைத் தடுக்கத் தவறியதற்காக அந்தத் தண்டனை. தங்கள் பொறுப்புகளின் அடிப்படையில் அந்த குற்றச்செயல்களை தடுக்க தவறியதற்காக அவர்கள் இருவருக்கும் தண்டனை வழங்கலாம் என்றால், ஜூலை 83க்காக அப்பொழுது பொறுப்பில் இருந்தவர்களில் இப்பொழுது உயிருடன் இருக்கும் யாராவது அதற்காகத் தண்டிக்கப்படுவார்களா? அவ்வாறு தண்டிக்கத் தேவையான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தயாரா?

ஜூலை 83ல்தான் தமிழ் மக்கள் தென்னிலங்கை நகரங்களில் தாக்கப்பட்டார்கள் என்பதல்ல. அதற்கு முன்னரும் தென்னிலங்கை நகரங்களில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் தாக்கப்படுவதற்கு முன்பு கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டார்கள். அதற்கு முன்பு, அதற்கு முந்திய நூற்றாண்டில் இறுதியில் கத்தோலிக்கர்கள் தாக்கப்பட்டார்கள். கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இந்த நாடு சிறிய இனங்கள், சிறிய மதங்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் ஒரு நாடாகவே இருக்கிறது. அந்த தாக்குதல்களில் பெரும்பாலானவை திட்டமிட்டுச் செய்யப்பட்டவை. நன்கு ஒழுங்கமைக்கப்பட்டவை. அவற்றில் சிலவற்றின் பின்னணியில் அப்போது இருந்த அரசாங்கங்கள் அல்லது அரசியல்வாதிகள் இருந்ததாக தமிழ் மக்கள் குற்றம் காட்டுகிறார்கள். குறிப்பாக ஜூலை 83க்கு, நூலகம் எரிக்கப்பட்டதற்கு அப்போது இருந்த அரசாங்கமே பொறுப்பு என்று அமைச்சர் பிமல் ரட்டநாயக்க கூறுகிறார்நீதி அமைச்சர் கூறுகிறார். அதுவும் அவர்கள் அதை நாடாளுமன்றத்தில் வைத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஈஸ்டர் குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதால் பேராயர் மல்கம் ரஞ்சித்தைத் திருப்திப்படுத்தலாம். நாட்டின் 5.6 விகித கத்தோலிக்க சனத்தொகையை திருப்திப்படுத்தலாம். கத்தோலிக்க சமூகத்துக்கு மட்டுமல்ல, ஈஸ்டர் குண்டு வெடிப்பின் விளைவாக நீதியற்ற முறையில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் பொறுப்புக் கூறலாம்.

ஆனால் அதற்கு முன்னரே நடந்த 83 ஜூலைக்கு கடந்த 43 ஆண்டுகளாக யாருமே பொறுப்புக் கூறவில்லை. அந்தக் குற்றப் பழியை அப்போது இருந்த யு. என்.பி அரசாங்கத்தின் மீது போடு வதன்மூலம் இப்போதுள்ள அரசாங்கம் அந்தப் பொறுப்புக் கூறலில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் பார்க்கிறது.

83 ஜூலை, ஈஸ்டர் குண்டு வெடிப்பு, இறுதிக் கட்டப் போரில் நிகழ்ந்த இன அழிப்பு, அதற்கு முன்னர் நிகழ்ந்த இன அழிப்பு. போன்றவைகள் யாவும் அந்தக் காலங்களில் இருந்த அரசாங்கங்கள் விட்ட தவறுகளின் விளைவுகள் மட்டுமல்ல. அதைவிட ஆழமான பொருளில், அது சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பு சார்ந்த குற்றங்கள். அதாவது அதற்குப் பொறுப்பு அரசுதான். அரசாங்கங்கள் மட்டுமல்ல. அரசாங்கங்கள் அவ்வாறு சிறிய தேசிய இனங்கள், சிறிய மதப் பிரிவினர்களுக்கு எதிராக குற்றம் இழைக்கும்போது அதற்கு அரசுக் கட்டமைப்பு அனுமதித்தது. எனவே அதற்கு அரசுக் கட்டமைப்புத்தான் முழு முதல் பொறுப்பு. அரசுக் கட்டமைப்புத்தான் பொறுப்புக்கூற வேண்டும். அந்தக் கட்டமைப்பில்தான் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அரசாங்கங்களை மாற்றுவதன்மூலம் பொறுப்புக்கூற வைக்க முடியாது என்பதைத்தான் 2015இல் நிறைவேற்றப்பட்ட நிலைமாறுகால நீதிக்காண ஐநா தீர்மானத்தின் பின்னரான நிலைமைகள் நமக்கு உணர்த்துகின்றன. அக்காலகட்டத்தில்தான் ஈஸ்டர் குண்டுபிடிப்பு நிகழ்ந்தது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். நிலை மாறுகால நீதிச் சூழலில் ஈஸ்டர் குண்டுவெடிப்பை நிறுத்த முடியவில்லை என்பதே அதன் தோல்விக்குச் சான்று.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பான குற்றச்சாட்டுக்கு இலக்காக இருப்பவர்கள் இப்பொழுது தண்டிக்கப்பட்டிருப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால், அனைவருமே நாட்டின் சட்டம், ஒழுங்கு, புலனாய்வு போன்ற கட்டமைப்புகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள்.குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் சுரேஷ் சலே சக்திமிக்க புலனாய்வுக் கட்டமைப்பின் பணிப்பாளராக இருந்த மேஜர் ஜெனரல் தர தளபதி ஆகம். இப்பொழுது ஒரு முன்னாள் போலீஸ் மா அதிபரும் ஒரு முன்னாள் பாதுகாப்புத் துறைச் செயலரும் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அனைவரும் அரசுக் கட்டமைப்பின் பிரதானிகள். அரசாங்கத்தின் பிரதானிகள் அல்ல. அல்லது அவர்களை அரசாங்கங்களின் பிரதானிகளாகக் கருதும் அளவுக்கு அரசுக் கட்டமைப்பு குற்றப் பண்புடையதாக இருந்ததா? அல்லது குற்றச் செயல்களுக்கு விட்டுக் கொடுப்பதாக இருந்தது என்று எடுத்துக் கொள்ளலாமா ?

எனவே மன்னிப்புக் கேட்க வேண்டியது, பொறுப்புக்கூற வேண்டியது அரசாங்கங்கள் மட்டுமல்ல. அரசுக் கட்டமைப்பும்தான். இந்தத் தர்க்கத்தின் அடிப்படையில் கேட்டால், அந்த அரசுக் கட்டமைப்பை இப்பொழுது பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஜூலை 83க்கு மன்னிப்பு கேட்குமா? அல்லது இதற்கு முன்பிருந்த அரசாங்கங்களின் குற்றங்களுக்குத் தான் பொறுப்பில்லை என்று கூறிவிட்டுத் தப்பப் பார்க்குமா? ரணில் விக்கிரமசிங்க ராஜபக்சக்களின் மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பியதுபோல?

தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டது இன அழிப்புப் போர் அல்ல அது பயங்கரவாதத்துக்கு எதிரான ஒரு படை நடவடிக்கை என்று பேராயர் மல்கம் ரஞ்சித்தின் ஊடகத்துறை முக்கியஸ்தர் கூறுகிறார். நாட்டிலுள்ள ஒரு தேசிய இனத்துக்கு எதிராக இடம்பெற்ற குற்றச் செயல்களுக்கு நீதி தேவையில்லை என்று கருதும் ஒரு பேராயர், ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு நீதி வேண்டும் என்று கேட்கிறார். ஆனால் கடந்த வாரம் யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த மத குருக்கள் செம்மணிப் புதைகுழிக்கு அனைத்துலக விசாரணை கேட்டு ஊர்வலம் போனார்கள். நாட்டின் கத்தோலிக்கத் திருச்சபை இனரீதியாக இரண்டாக நிற்கிறதா?

ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு நீதி கிடைக்கலாம் என்றால் அதன் சூத்திரதாரிகள்-கவனிக்கவும், கருவிகள் அல்ல சூத்திரதாரிகள்- தண்டிக்கப்படுவார்களாக இருந்தால், தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களுக்கும் நாட்டின் அரசுக் கட்டமைப்பு பொறுப்புக் கூறுமா?

அல்லது அனுர பதவிக்கு வர முன்பு அசோசியேடட் நியூஸ் பிரஸ் நிறுவனத்துக்கு வழங்கிய ஒரு நேர்காணலில் கூறியதுபோல, பாதிக்கப்பட்ட மக்கள் குற்றவாளிகளை விசாரிக்க வேண்டும் என்று கேட்கிறார்களே தவிர குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று கேட்கவில்லை என்பதுதான் அரசாங்கத்தின் நிலைப்பாடா ?

நன்றி: நிலாந்தன்

# உக்கேரனில் ஜெலென்ஸ்கிக்கு எதிராக மக்கள் எழுச்சி! போர்க்கால ஜனநாயகத்திற்கான சவாலா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

02.08.2026

ரஷ்யா-உக்ரைன் போர் ஐந்தாவது ஆண்டை எட்டியுள்ள நிலையில், உக்ரைனின் தலைநகரான கீவில் (Kyiv) மீண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்ட சம்பவம் உலக அரசியலின் கவனத்தை ஈர்த்துள்ளது. சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்பட்ட காணொளிகள் மற்றும் பதிவுகள், “ஜெலென்ஸ்கி ஆட்சிக்கு எதிராக மக்கள் எழுச்சி”, “தேர்தல் நடத்த முடியாது என்று கூறும் அரசு, ஆனால் போராட்டங்களை அனுமதிக்கிறது” போன்ற அரசியல் வாசகங்களுடன் பரவின. இந்தப் பதிவுகள் பல்வேறு அரசியல் அணிகளால் தங்களது பார்வையை வலுப்படுத்தும் வகையில் பயன்படுத்தப்பட்டன.




**போர்க்கால உக்ரைனில் ஜனநாயகம், எதிர்ப்பு அரசியல் மற்றும் தேர்தல் விவாதம் ஆகிய மூன்றும் தொடர் சிக்கலில் இருக்கின்றன. தற்போது உக்ரேனில் ஜெலென்ஸ்கி எதிராக மக்கள் எழுச்சி என்பது உக்கிரமான போர் நடக்கும் உக்ரைன் நாட்டின் போர்க்கால ஜனநாயகத்திற்கான சவாலா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.**

## போர்க்கால ஜனநாயகத்தின் சவால்

கீவில் நடைபெற்ற அண்மைய போராட்டங்கள் நேரடியாக உக்ரைன் அதிபர் விலொடிமிர் ஜெலென்ஸ்கியை பதவியில் இருந்து அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையால் தொடங்கப்படவில்லை. மாறாக, அரசின் ஒரு முக்கியமான நிர்வாகத் தீர்மானம் தொடர்பாக மக்களின் அதிருப்தியே இந்தப் போராட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்தது. குறிப்பாக பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் தொடர்பான அரசின் நடவடிக்கைகள் குறித்து வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் மக்கள் நம்பிக்கை குறித்த கேள்விகள் எழுந்தன.

போரில் வெற்றி பெற வேண்டுமெனில் இராணுவ வலிமை மட்டுமல்ல, அரசியல் நம்பகத்தன்மையும் அவசியம் என்பதையே பல போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். அதாவது, போரின் நடுவிலும் அரசு மக்களிடம் பொறுப்புக்கூற வேண்டும்; விமர்சனங்களைக் கேட்க வேண்டும்; ஜனநாயக அமைப்புகளை மதிக்க வேண்டும் என்பதே அவர்களின் முக்கிய வலியுறுத்தலாக இருந்தது.

ஒரு நாடு வெளிநாட்டு படையெடுப்பை எதிர்கொள்ளும் நிலையில் இருக்கும் போது, வழக்கமான ஜனநாயக நடைமுறைகள் பல மாற்றங்களைச் சந்திக்கின்றன. உக்ரைன் 2022 முதல் தொடர்ந்து இராணுவச் சட்டத்தின் (Martial Law) கீழ் இயங்குகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் பல குடிமக்கள் உரிமைகள் தற்காலிகமாகக் கட்டுப்படுத்தப்படலாம்.

அதே நேரத்தில், இராணுவச் சட்டம் அமலில் இருக்கும் காலத்தில் தேசியத் தேர்தல்களை நடத்த முடியாது என்பதும் உக்ரைனின் சட்ட அமைப்பின் ஒரு பகுதியாகும். இதனால் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இந்த முடிவை ஆதரிப்பவர்கள், “போரில் இருக்கும் ஒரு நாட்டில் கோடிக்கணக்கான இடம்பெயர்ந்த மக்களும், வெளிநாடுகளில் தஞ்சமடைந்த குடிமக்களும், முன்களத்தில் போராடும் வீரர்களும் உள்ள நிலையில் சுதந்திரமான மற்றும் சமமான தேர்தலை நடத்த இயலாது” என்று வாதிடுகின்றனர்.

## போர்க் காலத்தில் தேர்தலா?

ஆயினும் தற்போது சமூக ஊடகங்களில் அதிகமாக முன்வைக்கப்படும் கேள்வி இதுவெ. முதல் பார்வையில் இது நியாயமான கேள்வியாகத் தோன்றலாம். ஆயிரக்கணக்கான மக்கள் தெருக்களில் கூடுகின்றனர் என்றால் தேர்தலையும் நடத்த முடியாதா என்று பலர் கேட்கிறார்கள். ஆனால் சட்ட ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் இந்த இரண்டு நிகழ்வுகளும் ஒன்றல்ல.

ஒரு போராட்டம் சில மணி நேரங்கள் அல்லது ஒரு நாளில் குறிப்பிட்ட நகரத்தில் நடைபெறலாம். ஆனால் தேசியத் தேர்தல் என்பது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் ஒரே நேரத்தில் நடைபெற வேண்டிய மிகப் பெரிய நிர்வாகச் செயல்முறையாகும்.

அதற்குத் தேவையானவை பாதுகாப்பான வாக்குச்சாவடிகள், வாக்காளர் பட்டியல், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களின் பங்கேற்பு, வெளிநாடுகளில் அகதிகளாக இருக்கும் மக்களின் வாக்களிக்கும் உரிமை, முன்களத்தில் பணியில் இருக்கும் இராணுவ வீரர்களின் வாக்குரிமை, தேர்தல் கண்காணிப்பு மற்றும் சுதந்திரமான பிரச்சாரம் ஆகிய அனைத்தும் தற்போதைய போர்நிலையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

## ஜெலென்ஸ்கி மீது அழுத்தம்

ரஷ்யா படையெடுப்பின் தொடக்கத்தில் தேசிய ஒற்றுமையின் அடையாளமாகக் கருதப்பட்ட ஜெலென்ஸ்கி, தற்போது அதிகமான அரசியல் விமர்சனங்களையும் எதிர்கொள்கிறார். போரின் நீடிப்பு, பொருளாதார சிக்கல்கள், உயிரிழப்புகள், ஊழல் குற்றச்சாட்டுகள், நிர்வாக முடிவுகள் ஆகியவை மக்களிடையே கேள்விகளை எழுப்புகின்றன.

இருப்பினும், இதனை “முழு மக்களும் ஜெலென்ஸ்கிக்கு எதிராக எழுந்துவிட்டனர்” என்று கூறுவது மிகவும் கடினமாகும். போராட்டங்களில் பங்கேற்றவர்களில் பலர் உக்ரைனின் ரஷ்யாவுக்கு எதிரான போராட்டத்தை ஆதரிப்பவர்களே. அவர்கள் அரசை விமர்சிப்பதோடு, நாட்டின் பாதுகாப்பையும் ஆதரிக்கின்றனர். இதுவே ஒரு ஜனநாயக சமூகத்தின் முக்கியமான அடையாளமாகவும் பார்க்கப்படுகிறது.

## சமூக ஊடகங்களின் தகவல் போர்

உக்ரைன் போரில் ஆயுதப் போர் மட்டுமல்ல; தகவல் போரும் தீவிரமாக நடைபெறுகிறது. ஒரே காணொளியை வெவ்வேறு அரசியல் அணிகள் முற்றிலும் மாறுபட்ட விளக்கங்களுடன் வெளியிடுகின்றன. ஒரு தரப்பு இது செலென்ஸ்கி ஆட்சிக்கு எதிரான புரட்சி என்றும் மற்றொரு தரப்பு இது ஜனநாயகத்தின் ஆரோக்கியமான வெளிப்பாடு என்றும் கூறுகின்றனர். ஆனாலும் உண்மை இவ்விரண்டிற்கும் இடையில் உள்ளது. மக்களின் அதிருப்தி உண்மையானதாக இருக்கலாம். ஆனால் அதன் அரசியல் அர்த்தத்தை மிகைப்படுத்தி விளக்குவது தவறான புரிதல்களை உருவாக்கும்.

போர் நீடிக்கும் போது அரசாங்கத்தின் மீது மக்களின் பொறுமை குறைவது இயல்பானது. உக்ரைனில் இன்று பல குடும்பங்கள் தங்களது உறவினர்களை போரில் இழந்துள்ளன. பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மின்சாரம், எரிசக்தி, வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் போன்ற துறைகளிலும் மக்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்தச் சூழலில் அரசாங்கத்தின் ஒவ்வொரு முடிவும் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகிறது.

அதேவேளை, வெளிநாட்டு இராணுவ உதவியைப் பெரிதும் சார்ந்திருக்கும் உக்ரைன், தனது ஜனநாயகப் படிமத்தை உலக அரங்கில் தொடர்ந்து பராமரிக்க வேண்டிய அவசியத்தையும் எதிர்கொள்கிறது. ஒரு நாட்டில் மக்கள் அரசைக் கண்டித்து அமைதியான முறையில் போராட்டம் நடத்த முடிவது, அந்த நாட்டில் இன்னும் ஜனநாயக இடம் இருப்பதற்கான ஒரு அறிகுறியாகவும் பார்க்கப்படுகிறது. போர்க்காலம் என்பதால் விமர்சனங்கள் அனைத்தும் அடக்கப்பட வேண்டும் என்ற கருத்து ஜனநாயகக் கொள்கைகளுடன் பொருந்தாது.

அதேநேரத்தில் தேசிய பாதுகாப்பு காரணங்களால் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது உலகின் பல நாடுகளிலும் போர்காலங்களில் நடந்துள்ள உண்மையாகும். எனவே, ஜனநாயக உரிமைகளுக்கும் தேசிய பாதுகாப்பிற்கும் இடையே சமநிலையை உருவாக்குவது எந்த அரசுக்கும் மிகவும் கடினமான பொறுப்பாகும்.

## சர்வதேச அளவில் தாக்கம்

கீவில் நடைபெற்ற இந்தப் போராட்டங்கள் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ நாடுகளாலும் கவனிக்கப்பட்டுள்ளன. உக்ரைனுக்கு தொடர்ந்து வழங்கப்படும் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகள், அந்த நாட்டின் ஜனநாயக நிறுவனங்களின் மீது உலக நாடுகள் கொண்டுள்ள நம்பிக்கையுடனும் தொடர்புடையவை. அதனால், அரசு வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வேண்டும் என்ற அழுத்தமும் அதிகரித்து வருகிறது.




கீவில் நடைபெற்ற அண்மைய மக்கள்போராட்டங்களை ஜெலென்ஸ்கி ஆட்சி வீழ்ச்சியின் தொடக்கம் என்று சுருக்கமாகச் சொல்லிவிட முடியாது. அதேபோல், அவற்றை சாதாரண நிகழ்வாகக் கருதி புறக்கணிக்கவும் முடியாது. இந்தப் போராட்டங்கள் போரின் நடுவிலும் ஜனநாயகப் பொறுப்புணர்வை மக்கள் வலியுறுத்துகின்றனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. தேர்தல் ஒத்திவைப்பு குறித்து எழும் கேள்விகளும், அரசின் முடிவுகள் குறித்த விமர்சனங்களும், வெளிப்படைத்தன்மை மீதான கோரிக்கைகளும் அனைத்தும் ஒரு சிக்கலான போர்க்கால அரசியல் சூழலின் வெளிப்பாடுகளாகும்.

எனவே, சமூக ஊடகங்களில் பரவும் அரசியல் கோஷங்களை மட்டுமே நம்பாமல், சம்பவங்களின் பின்னணியை ஆராய்ந்து, சட்டம், பாதுகாப்பு, ஜனநாயகம், மக்களின் உரிமைகள் மற்றும் போரின் யதார்த்தம் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து அணுகுவதே உண்மையைப் புரிந்துகொள்ளும் சரியான வழியாகும். உக்ரைனின் எதிர்காலம் போர்க்களத்தில் மட்டும் அல்ல; அதன் ஜனநாயக நிறுவனங்களின் நிலைத்தன்மை, மக்களின் நம்பிக்கை மற்றும் அரசியல் பொறுப்புணர்வின் மீதும் அமையும்.

# 20ஆம் ஆண்டு கண்ணீர் வணக்கம்




முல்லைத்தீவு மாவட்டத்தின்
வள்ளிபுனம் பகுதியில் உள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல
வளாகம் மீது 14.08.2006 இல் சிறீலங்கா யுத்த விமானங்கள்
திட்டமிட்டு மேற்கொண்ட கோரக் குண்டுத்
தாக்குதலில் 52 மாணவிகள் உட்பட
62 பேர் கொல்லப்பட்ட நாள்.



## ஹமாஸ் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாரா?

# காசா போரின் திருப்பமா? பாலஸ்தீன அரசியல் மாற்றமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

01.08.2026




மத்திய கிழக்கின் அரசியல் வரலாற்றில் மிகவும் நீடித்தும் சிக்கலானதுமான மோதலாக இஸ்ரேல்-பாலஸ்தீன மோதல் கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக உலக அரசியலின் மையக் கவனத்தை ஈர்த்து வருகிறது. இது வெறும் எல்லைத் தகராறு அல்லது இராணுவ மோதல் மட்டுமல்ல; தேசிய அடையாளம், நில உரிமை, அகதிகள், சுயநிர்ணய உரிமை, பாதுகாப்பு, சர்வதேச சட்டம் மற்றும் பெரும் சக்திகளின் புவிசார் அரசியல் போட்டி ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ள ஒரு சிக்கலான அரசியல் பிரச்சினையாகும்.

குறிப்பாக 2023 அக்டோபரில் ஹமாஸ் இஸ்ரேல் மீது மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து வெடித்த காசா போர், மனிதாபிமானப் பேரழிவை உருவாக்கியதோடு, மத்திய கிழக்கின் அரசியல் சமநிலையையும் மாற்றியமைத்துள்ளது. ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள், இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்த நிலை, மருத்துவமனைகள், பள்ளிகள், குடிநீர் மற்றும் மின்சார வசதிகள் உள்ளிட்ட அத்தியாவசிய உள்கட்டமைப்புகளின் அழிவு ஆகியவை, இந்த மோதலின் தீவிரத்தை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளன.

இந்தப் பின்னணியில், அண்மையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள ஹமாஸ் அதிகாரி காசி ஹமாத், ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம், ஒரு புதிய “அமைதிக் கட்டமைப்பு” உருவாக்கப்பட்டு அதன் கீழ் பாலஸ்தீன தேசியக் குழு நிறுவப்பட்டால், ஹமாஸ் தனது ஆயுதங்களை அந்த அமைப்பிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக தெரிவித்திருப்பது, காசா போரின் எதிர்காலம் குறித்த விவாதங்களில் ஒரு முக்கிய திருப்பமாகக் கருதப்படுகிறது. இருப்பினும், இந்த அறிவிப்பு ஹமாஸ் உடனடியாக ஆயுதங்களை கைவிடுகிறது என்ற பொருளில் புரிந்துகொள்ளப்பட முடியாது.

மாறாக, இது இஸ்ரேலியப் படைகள் காசாவிலிருந்து வெளியேறுதல், நிரந்தர போர் நிறுத்தம் அமலுக்கு வருதல், சர்வதேச கண்காணிப்பு ஏற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படுதல் மற்றும் புதிய பாலஸ்தீன இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படுதல் போன்ற பல நிபந்தனைகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட அரசியல் முன்மொழிவாகும்.

### 1987 முதல் இன்தி:.பாதா

1987 ஆம் ஆண்டு முதல் இன்திஃபாதா காலத்தில் உருவான ஹமாஸ், ஆரம்பத்தில் இஸ்லாமிய சமூக இயக்கமாகத் தோன்றி பின்னர் அரசியல் மற்றும் ஆயுத எதிர்ப்பை இணைத்த அமைப்பாக வளர்ச்சி பெற்றது. 2006 ஆம் ஆண்டு பாலஸ்தீன சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஹமாஸ், 2007 ஆம் ஆண்டு ஃபதா இயக்கத்துடனான உள்நாட்டு மோதலுக்குப் பிறகு காசாவின் நிர்வாகத்தை முழுமையாகக் கைப்பற்றியது. அதன் பின்னர் காசா மற்றும் மேற்குக் கரை ஆகியவை தனித்தனி அரசியல் நிர்வாகங்களின் கீழ் இயங்கி வருகின்றன. இந்தப் பிரிவு, பாலஸ்தீன அரசியலில் நீண்டகால பிளவை ஏற்படுத்தியதுடன், ஒருங்கிணைந்த தேசியத் தலைமையை உருவாக்குவதிலும் தடையாக இருந்து வருகிறது.

இஸ்ரேல், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள் ஹமாஸை பயங்கரவாத அமைப்பாக வகைப்படுத்தியுள்ளன. மறுபுறம், பாலஸ்தீன சமூகத்தின் ஒரு பகுதியும் சில நாடுகளும், அதை இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்புச் சக்தியாகக் கருதுகின்றன. இந்த இரு முரண்பட்ட பார்வைகளே, ஹமாஸை உள்ளடக்கிய எந்த அரசியல் தீர்வையும் மிகவும் சிக்கலான ஒன்றாக மாற்றுகின்றன.

காசி ஹமாத் குறிப்பிட்டுள்ள பாலஸ்தீன தேசியக் குழு என்பது, ஹமாஸ் அல்லது ஃபதா ஆகியவற்றில் ஏதாவது ஒரு தரப்பின் முழுமையான கட்டுப்பாட்டில் இல்லாத, பல்வேறு பாலஸ்தீன அரசியல் மற்றும் சமூகப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இடைக்கால நிர்வாக அமைப்பாகக் கருதப்படுகிறது. இந்த அமைப்பு காசாவின் சிவில் நிர்வாகத்தை மீளமைத்தல், மனிதாபிமான உதவிகளை ஒருங்கிணைத்தல், மறுசீரமைப்புப் பணிகளை முன்னெடுத்தல், பாதுகாப்பு அமைப்புகளை மறுவடிவமைத்தல் மற்றும் எதிர்கால ஜனநாயகத் தேர்தல்களுக்கு அடித்தளம் அமைத்தல் போன்ற பொறுப்புகளை ஏற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம், ஹமாஸ் நேரடி ஆட்சியிலிருந்து விலகினாலும், பாலஸ்தீன அரசியல் செயல்முறையில் ஒரு பங்காளியாகத் தொடரும் வாய்ப்பைத் தக்கவைத்துக்கொள்ள முயல்கிறது என பல அரசியல் ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

### ஆயுத ஒப்படைப்பு சாத்தியமா?

ஆயுத ஒப்படைப்பு தொடர்பாக ஹமாஸ் முன்வைத்துள்ள நிபந்தனைகள், இந்த முன்மொழிவு வெறும் ஆயுதக் கைவிடல் அல்ல, மாறாக பரந்த அரசியல் உடன்பாட்டின் ஒரு பகுதியாக இருப்பதை வெளிப்படுத்துகின்றன. ஹமாஸ் கூறுவதன்படி, இஸ்ரேலிய இராணுவம் காசாவிலிருந்து முழுமையாக வெளியேற வேண்டும் போர் நிறுத்த ஒப்பந்தம் முழுமையாக அமலுக்கு வர வேண்டும்; சர்வதேசப் படைகள் அல்லது கண்காணிப்பு அமைப்புகள் காசாவிற்குள் நுழைந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்ய வேண்டும் மேலும் ஆயுதமுள்ள அனைத்து தரப்பினருக்கும் ஒரே விதமான நடைமுறைகள் அமல்படுத்தப்பட வேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேறிய பின்னரே ஆயுதங்களை ஒப்படைக்கும் செயல்முறை குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என ஹமாஸ் வலியுறுத்தியுள்ளது.

இந்தச் சூழலில் சர்வதேசப் படைகளின் பங்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அவை போர் நிறுத்தத்தை கண்காணிப்பதோடு மட்டுமல்லாமல், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், மனிதாபிமான உதவிகள் தடையின்றி சென்றடைவதை உறுதி செய்தல், புதிய இடைக்கால நிர்வாகத்திற்கு பாதுகாப்பு வழங்குதல் மற்றும் ஆயுதக் குழுக்களின் செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற பொறுப்புகளையும் ஏற்க வேண்டியிருக்கும். இருப்பினும், எந்த நாடுகள் அல்லது எந்த சர்வதேச அமைப்புகள் இந்தப் பொறுப்பை ஏற்கும் என்பது குறித்து இன்னும் தெளிவான ஒப்புதல் உருவாகவில்லை.

### இஸ்ரேல் கடும்போக்கு

ஆனாலும் இஸ்ரேல் தொடர்ந்து தனது பாதுகாப்பு அக்கறைகளை வலியுறுத்தி வருகிறது. ஹமாஸ் மீண்டும் ஆயதப் படையாக உருவாகக் கூடாது; காசா இனி இஸ்ரேலுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலாக மாறக் கூடாது; எல்லைப் பகுதிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதே அதன் அடிப்படை நிலைப்பாடாகும். எனவே, ஹமாஸ் முன்வைக்கும் நிபந்தனைகளையும், ஆயுத ஒப்படைப்பின் நடைமுறைகளையும் இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளுமா என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை.

**நெடுங்காலமாக தொடரும் பாலஸ்தீன பிரச்சினையில் அரசியல் மாற்றம் நிகழ்வது போல ஹமாஸ் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயார் என்று அமெரிக்க தரப்புடன் தெரிவித்து இருப்பது, காசா போரின் புதிய திருப்பமாக அமைந்துள்ளது. இதனால் மத்திய கிழக்கின் எதிர்காலம் மாற்றமுறுமா அல்லது இஸ்ரேலிய ஆதிக்கம் இன்னும் தொடருமா என்பதை எதிர்வரும் காலங்களில் காணலாம்.**



தற்போது இந்த அமைதி முன்மொழிவு வெற்றியடைந்தால், பாலஸ்தீன அரசியலில் கடந்த இருபது ஆண்டுகளாக நிலவி வந்த பிளவு குறையக்கூடும். மேற்குக் கரையில் பாலஸ்தீன அதிகாரசபையும், காசாவில் ஹமாஸ்ும் தனித்தனி நிர்வாகங்களை மேற்கொண்டுள்ள நிலை மாறி, ஒருங்கிணைந்த தேசிய நிர்வாகம் உருவாகும் வாய்ப்பு ஏற்படலாம். அதன்மூலம் புதிய தேர்தல்கள் நடத்தப்படலாம்; சர்வதேச அங்கீகாரம் அதிகரிக்கலாம் காசாவின் மறுசீரமைப்பிற்குத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளும் மேம்படலாம்.

காசாவின் மறுசீரமைப்பு என்பது மிகப்பெரிய சவாலாகும். போர் காரணமாக ஆயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன் மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன் மின்சாரம், குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகள் சீர்குலைந்துள்ளன. இவற்றை மீளமைப்பதற்கு பல பில்லியன் டாலர் நிதி மட்டுமல்லாமல், நீடித்த பாதுகாப்பு, அரசியல் நிலைத்தன்மை, வெளிப்படையான நிர்வாகம் மற்றும் சர்வதேச நம்பிக்கை ஆகியவை அவசியமாகின்றன.

சர்வதேச சட்டத்தின் பார்வையில், பொதுமக்களின் பாதுகாப்பு, மனிதாபிமான உதவிகளின் தடையற்ற அனுமதி மற்றும் அரசியல் தீர்வை நோக்கிய பேச்சுவார்த்தைகள் ஆகியவை அனைத்தும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதேவேளை, எந்தத் தரப்பினராலும் மேற்கொள்ளப்படும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள், தனித்தனியாக விசாரிக்கப்பட வேண்டிய சட்டப் பிரச்சினைகளாகவே தொடர்கின்றன. எனவே, காசா மோதலின் அரசியல் தீர்வு, பாதுகாப்பு ஏற்பாடுகள் மட்டுமின்றி, சட்டரீதியான பொறுப்புக்கூறலையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

மத்திய கிழக்கின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை, இந்த முன்மொழிவின் வெற்றி அல்லது தோல்வி, காசாவை மட்டுமல்லாமல் முழு பிராந்திய அரசியலையும் பாதிக்கக்கூடும். எகிப்து, கத்தார், ஜோர்டான், சவுதி அரேபியா போன்ற நாடுகளின் நடுவர் முயற்சிகள், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதரகப் பங்கு, ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான முயற்சிகள் மற்றும் பிற பிராந்திய சக்திகளின் அணுகுமுறைகள் அனைத்தும் இந்தச் செயல்முறையின் வெற்றியை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாக இருக்கும்.

ஹமாஸ் தனது ஆயுதங்களை பாலஸ்தீன தேசியக் குழுவிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக வெளியிடப்பட்டுள்ள தகவல், பல ஆண்டுகளாக நீடித்து வரும் மோதலின் மத்தியில் ஒரு புதிய அரசியல் வாய்ப்பை உருவாக்கியிருக்கிறது. ஆனால் இது இன்னும் பேச்சுவார்த்தை நிலையிலுள்ள முன்மொழிவு மட்டுமே. அதன் வெற்றி, அனைத்து தரப்பினரும் பரஸ்பர நம்பிக்கையுடன் செயல்படுவதையும், பொதுமக்களின் பாதுகாப்பை முன்னுரிமைப் படுத்துவதையும், நீடித்த அரசியல் தீர்வை நோக்கி நகர்வதையும் சார்ந்துள்ளது. ஆயுதங்களின் வழியே அல்ல, அரசியல் சமரசம், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர அங்கீகாரத்தின் வழியே மட்டுமே இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்கும் நிலையான அமைதி கிடைக்க முடியும். இந்த புதிய முன்மொழிவு அந்தப் பாதைக்கான ஒரு தொடக்கமாக மாறுமா என்பது வரவிருக்கும் பேச்சுவார்த்தைகளின் முடிவுகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

# 15.08 1977

# ஈழத் தமிழ் இனப்படுகொலை



**1500க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை**
**10,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் காயமடைந்தனர்**
**80,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் சொத்துக்களை இழந்தனர்**
**70 கோடிக்கு மேல் மதிப்புள்ள சேதமடைந்த தமிழர் சொத்துக்கள்**
**இதனால் பல இலட்சம் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்**

கொழும்பு –இரத்தினபுரி – களுத்துறை – காலி – மாத்தறை
அம்பாந்தோட்டை – மொனராகலை – பதுளை – மட்டக்களப்பு
யாழ்ப்பாணம் – அனுராதபுரம் – வவுனியா – மன்னார் – முல்லைத்தீவு
கண்டி – குருநாகல் – கேகாலை –திருகோணமலை – நுவரெலியா
மாத்தளை